கழக வெளியீடு: ௨௩௧

பதினெண் கீழ்க்கணக்கு

# காஞ்சி யேலாதி கோவை

பதவுரை விளக்கவுரைகளுடன்

UNIVERSITY EXTENSION LIBRARY
22 FEB 1961
MADURAI

முதுமொழிக்காஞ்சி
ஏலாதி
ஆசாரக்கோவை

கிடைக்குமிடம்
பாரதி புத்தக நிலையம்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Sep., 1939.
Reprints: Aug., 1954; Nov., 1956.

# KANCHI - ELATHI - KOVAI

[Copy Right]

*Published by*

**THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, MADRAS-1.**

*Head Office:*

**98, EAST CAR STREET, TIRUNELVELI.**

ApparAchakam, 2/140, Broadway, Madras-1. C. 1000.

# பதிப்புரை

சங்க காலத்து நல்லிசைப் புலவர்களாற் பாடப்பெற்ற நூல்கள் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என வகுக்கப் பெற்றுள்ளன. கீழ்க்கணக்கு நாலடியார், திருக்குறள் முதலிய பதினெட்டு நூல்களாம். அவற்றுள் இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகிய நான்கு நூல்களையும் பதவுரை விளக்கவுரைகளுடன் "நானாற்பது" என்ற தலைப்பில் ஒன்றாய்க் கட்டடஞ் செய்து வெளியிட்டுள்ளோம். அதன் பின் ஐந்திணையைம்பது, ஐந்திணையெழுபது, திணைமாலை நூற்றைம்பது, திணைமொழியைம்பது என்ற நான்கு நூல்களையும் பதவுரை, பழைய பொழிப்புரை, விளக்கவுரைகளுடன் "நாலைந்திணை" என்ற தலைப்பில் ஒன்றாய்க் கட்டடஞ்செய்து வெளியிட்டுள்ளோம். பின்னர், திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம் ஆகிய மூன்று நூல்களையும் "கடுகங் கடிகை மாமூலம்" என்ற தலைப்பில் பதவுரை விளக்கவுரைகளுடன் ஒரு சேரக் கட்டடஞ் செய்து வெளியிட்டுள்ளோம்.

இப்போது முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, ஆசாரக் கோவை ஆகிய மூன்று நூல்களையும் பதவுரை,

பழைய பொழிப்புரை, விளக்கவுரைகளுடன் ஒருசேரக் கட்டடஞ்செய்து "**காஞ்சி யேலாதி கோவை**" என்ற தலைப்பில் வெளியிடுகின்றோம். திருக்குறள், **நாலடியார்** ஆகிய இரண்டும் உரையுடன் கழகப் பதிப்பில் முன்னமே வெளிவந்துள்ளன.

இனி, பதினெண் கீழ்க்கணக்கில் **பழமொழி நானூறும்** கைந்நிலையுமே கழகப் பதிப்பில் ஒரே அளவில் வெளிவர வேண்டியனவா யிருக்கின்றன. இறைவனருளால் அவையும் விரைந்து வெளியிடப்பெறும் என நம்புகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

கழக வெளியீடு: உகஅ

மதுரைக் கூடலூர்க் கிழார்

இயற்றிய

# முதுமொழிக் காஞ்சி

மறைமலையடிகள் மாணவரும், கழகத் தமிழ்ப்
புலவராயிருந்தவருமாகிய

**திரு. தி. சு. பாலசுந்தரம் பிள்ளை அவர்கள்**

(இளவழகனார்)

எழுதிய

விருத்தியுரையுடன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை - 1.

First Edition: Sep., 1938.
Reprints: March, 1954; Nov., 1958.

MUTHUMOZHI-K-KANCHI

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office*:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.—C. 1600.

# முகவுரை

செந்தமிழ் நூல்களால் நுவலப்படும் அறம் பொருள் இன்ப மாகிய முப்பொருளில் அறமும் பொருளும் புறமென்றும், இன்பம் அகமென்றும் கூறப்படும். உள்ளத்தின்கண் நிகழும் ஒழுக்கமே அகம். புறம்பே நிகழும் ஒழுக்கம் புறம். அகப் பொருள் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை என எழுவகைப் படுத்துரைக்கப்படுவதுபோல, புறப் பொருளும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என எழுவகைப் படுத்துரைக்கப்படும். இவற்றுள்—'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே'—(தொல் புறத்திணை, சூத்திரம்: உஉ) என்றமைக் கிணங்கப் பெருந்திணைக்குப் புறமானது காஞ்சி என்க. மேலும் (மேற்படி இயல் உரு-ஆம் சூத்திரம்.)

'பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றனும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே'

என்பதன் உரையில் வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் சாற்றும் குறிப்பினது காஞ்சியாயிற்று என நச்சினார்க்கினியர் கூறியிருப்ப தறிக.

முதுமொழிக் காஞ்சி யென்பது காஞ்சித்திணையின் துறைகளில் ஒன்று. முதுமொழிக் காஞ்சியாவது: 'பலர்புகழ் புலவர் பன்னின தெரியும், உலகியல் பொருள்முடி புணரக் கூறின்று' என்ற புறப்பொருள் வெண்பாமாலை—காஞ்சிப் பொதுவியற் படலம் க-ஆம் சூத்திரப்படி அறிவுடையோர் குற்றம்நீக்கி ஆராயும் உலகத்தியலுள் முடிந்த பொருளாகிய அறம், பொருள், இன்பங் களை அறியச் சொல்லுதல்.

இத்துறைப் பெயரையே பெயராகக் கொண்ட இந் நூல் பத்ததிகாரமுடையது. ஒவ்வோரதிகாரமும் பத்துச் செய்யுட் கொண்டது. ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வொரு முதுமொழியை உட்கொண்டிருப்பது. இம் முதுமொழிகள் தனித்தனி குறட்டாழிசையில் அமைந்துள்ளன. வகுத்துக் கொண்ட அதிகாரங்கட் கேற்ப, அறம், பொருள், இன்பம் ஆகிய மும்முதற் பொருளும் விரவி உரைக்கப்பட்டுள்ளன. இன்பத்துக்குரிய முதுமொழிகள் மிகச் சில.

இத்தகைய முதுமொழிக் காஞ்சியை இயற்றிய பெரியார் **மதுரைக் கூடலூர்க் கிழார்**. இவர் புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார் எனவும் படுவர். இவரே எட்டுத் தொகையுள் ஒன்றான **ஐங்குறுநூறு** தொகுத்தவர். இதனைத் தொகுப்பித்தோனாகிய **கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை** இறந்த பொழுது, இவர் பாடிய 'ஆடிய லழற் குட்டத்து' என்ற புறநானூற்று உஉகூ-ஆம் பாடலொன்றே இவருடைய வானநூற் புலமையையும், நுண்கருத்தைப் புலப்படுத்தும் மாண்பையும் நன்கு விளக்குவதாம். இச் சேரலிரும்பொறை தொண்டி மன்னரும், கபில நண்பரும் ஆவர். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இட்ட தளைநீக்கிப் புகழுற்றோர்.

இக் காஞ்சி மூலம் மட்டும் இற்றைக்கு அறுபான்மும்மை ஆண்டுகட்குமுன் வெளியிடப் பெற்றுள்ளது. பின் பழைய பொழிப்புரையுடனும் சிறப்புரையுடனும் சென்னை ரிப்பன் அச்சுக் கூடத்தினரும், திருமணம் - செல்வக்கேசவராய முதலியார் எம். ஏ., அவர்களும், வெளியிட்டுள்ளார்கள். தமிழ் நூல்களைச் செம்மையாகவும் திருத்தமாகவும் அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழ் நூல்களைப் பலரும் பயிலும்படி செய்ய முயற்சித்து வரும் **திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்** பதினெண் கீழ்க்கணக்கு நூல்களையும் தக்காரைக் கொண்டு ஆராய்ந்து வெளிப்படுத்தி வருகின்றார்கள். அம் முறையில் இதுவும் வெளியிடப் பெறுவதாகும். கழகத் தமிழ்ப் புலவராயிருந்த காலத்தில் **திரு. இளவழகனார்** அவர்கள் எழுதிய உரை, பழைய பொழிப்புரையுடனும் எம்மால் எழுதப்பெற்ற குறிப்புக்களுடனும் வெளிவருவதாயிற்று. முற்பதிப்புக்களிற் காணாத பாடபேதங்களும் குறிப்புக்களும் இதனைக் கற்பவர்க்கும் பயன் விளைப்பனவாகும். ஆன்றோர் இத்தகைய உரைநூலிற் காணுங் குற்றங்களைந்து தமிழுரை நல்வழிப் படுத்த வேண்டுவம்.

புலவரகம்,
16-9-1938.

அன்புள்ள,
**பு. சி. புன்னைவனநாதன்,**
தலைமைத் தமிழாசிரியர்,
அர்ச். சவேரியர் கல்லூரி, பாளையங்கோட்டை.

UNIVERSITY UNION LIBRARY MADURAI

உ

# முதுமொழிக் காஞ்சி

## மூலமும் விருத்தியுரையும்

### க. சிறந்த பத்து

சிறந்ததென்று கூறப்படும் பத்துப்பொருளைத் தன்னிடத்திற் கொண்டிருப்பது.

**க. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**
**ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.**

(பதவுரை.) ஆர்கலி - கடல் (சூழ்ந்த), உலகத்து - இவ்வுலகத்திலுள்ள, மக்கட்கு எல்லாம் - மக்களெல்லார்க்கும், ஓதலின் - கற்றலைப் பார்க்கிலும், ஒழுக்கம் உடைமை - நன்னடக்கையோடிருப்பது, சிறந்தன்று - மேலானது.

(பழைய பொழிப்புரை.) கடல் சூழ்ந்த உலகத்து மக்கட்கெல்லாம் ஓதலினும் மிக்க சிறப்புடைத்து ஆசாரமுடைமை.

(கருத்துரை.) கற்றலினும் நன்னடக்கையோ டிருத்தல் மேலானது.

(விளக்கவுரை.) ஆர்கலி - நிறைந்த ஓசை, நிறைந்த ஓசையுடைய கடலுக்கு, அன்மொழித்தொகை. சிறந்தன்று - உடன்பாட்டு இறந்தகால வினைமுற்று; சிற - பகுதி, று - விகுதி, த் - இடைநிலை, த் - சந்தி, அன் - சாரியை, சந்தியால் வந்த தகரம் நகரமானது விகாரம். ஒழுக்கம் - அம் விகுதிபெற்ற தொழிற்பெயர். ஓதலின் - இன், ஐந்தனுருபு, எல்லைப்பொருள். ஓதல் ஒழுக்கத்துக் காதலின், 'ஓதலிற் சிறந்தன் றொழுக்கமுடைமை' என்றார். ஒழுக்கம் - சீலம், விலக்கியன ஒழித்து விதித்தன செய்தல். இச்செய்யுட் கருத்து 'ஓதலி னன்றே வேதியர்க்

கொழுக்கம்' என்று ஔவையாரும், 'மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்' என்று திருவள்ளுவரும் கூறியிருக்கும் செய்யுட்களில் அமைந்திருத்தல் காண்க.

இச்செய்யுள் வெண்செந்துறைப்பாட்டு. "ஒழுகிய ஓசையின் ஒத்தடி இரண்டாய், விழுமிய பொருளது வெண்செந்துறையே" என்னும் யாப்பருங்கலச் சூத்திரத்துக் கிணங்க விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையுமாய் வருவது குறள் வெண்செந்துறை என்க.

## உ. காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.

(ப - ரை.) காதலின் - பிறரால் அன்பு செய்யப்படுவதைக் காட்டிலும், கண்ணஞ்சப்படுதல் - தன் மதிப்பினுல் பிறர் அஞ்சி நடத்தல், சிறந்தன்று - சிறப்புடையது.

(ப - பொ.) பிறர் தன்மேற் செய்யுங் காதலினும் சிறந்தது கற்றவரால் கண்ணஞ்சப்படுதல்.

(க - ரை.) பிறர் அன்பு பாராட்டும்படி நடத்தலைவிட அவர் மதிக்கும்படி நடத்தல் மேலானது.

(வி - ரை.) கண்ணஞ்சப்படுதல் என்பதற்குத் தன்கண் அஞ்சப்படும்படி தான் ஒழுக்க முதலியவற்ருல் நடந்துகொள்ளுதல் என்றும், அவர் வருந்துவதைக் கண்டு தான் அஞ்சுதல் என்றும் பொருளுரைப்பதுமாம். காதல் - விருப்பம்.

## ௩. மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை.

(ப - ரை.) மேதையின் - அறிவு நுட்பத்தைவிட, கற்றது - கற்ற பொருளை, மறவாமை - மறவாதிருத்தல், சிறந்தன்று - மேலானது.

(ப - பொ.) தானுகப் புதிது ஒன்றையும் மதியுடைமையான் அறியும் அறிவினும் மிக்க சிறப்புடைத்து, தான் கற்றதனைக் கடைப்பிடித்திருத்தல்.

(க - ரை.) அறிவு நுட்பத்தினுங் கற்றது மறவாமை மேலானது.

(வி - ரை.) மேதை - அறிவு நுட்பம். இதற் கெதிர்மொழி பேதை. அறிவு நுட்பமென்றது, புதுப்பொருளை யாராய்ந்தறியும்

நுழை புலம். அந்நுழைபுலத்தை வளர்ப்பது பழமை மறவாமை யாதலின் இங்ஙனம் கூறப்பட்டது. கற்றது - வினையாலணையும் பெயர். மறவாமை - எதிர்மறைத் தொழிற் பெயர். "வருந்தித் தாங்கற்றன வோம்பாது மற்றும் பரிந்துசில கற்பான் றொடங்கல்" என்ற நீதிநெறி விளக்க அடிகள் ஈண்டு நினைவுகூரற்பாலன.

## ௪. வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை.

(ப - ரை.) வண்மையின் - வளமையோ டிருத்தலை விட, வாய்மை உடைமை - உண்மையோடிருத்தல், சிறந்தன்று - மேலானது.

(ப - பொ.) செல்வத்தினும் மிக்க சிறப்புடைத்து மெய் யுடைமை.

(க - ரை.) செல்வ வாழ்க்கையைவிட உண்மை வாழ்க்கை மேலானது.

(வி - ரை.) வாய்மை, திருவருட் குறிப்புக்கு மாறுபடாத அறவழியினின்றொழுகும் மெய்ம்மை. பெரும்பான்மையுங் காமமும் பொருளும் பற்றி நிகழ்வதாகிய பொய்ம்மையை விலக்கும் மெய்ம்மை யென்று கருதினர், ஆசிரியர் பரிமேலழகரும் (திருக் குறளுரை - வாய்மை). வாய்மை - மை பகுதிப்பொருள் விகுதி. வண்மையின் என்பதற்கு ஈகையுடையவனாயிருத்தலைப் பார்க்கி னும் என்பாருமுளர். 'வளமையிற் சிறந்தன்று' என்றும் பாடம்.

## ௫. இளமையிற் சிறந்தன்று மெய்பிணி யின்மை.

(ப - ரை.) இளமையின் - இளமையைக் காட்டிலும், மெய் - உடம்பு, பிணி இன்மை—நோயில்லாமலிருத்தல், சிறந்தன்று - மேலானது.

(ப - பொ.) இளமையினும் மிக்க சிறப்புடைத்து உடம்பு நோயின்மை.

(க - ரை.) இளமையினும் நோயின்மை மேலானது.

(வி - ரை.) 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற முதுமொழி ஈண்டு நோக்கத்தக்கது. மெய் என்பது மங்கல வழக்கமாய் உடம்பின்மே னின்றது. அன்றி மெய்யாகிய உயிரிருத் தற்கிடமாயிருத்தலின் தானியாகு பெயர் எனலுமாம். பிணி -

வினைமுதற் பொருளை யுணர்த்தும் இகர விகுதி புணர்ந்து கெட்ட தொழிற்பெயர். இன்மை - எதிர்மறைப் பண்புப் பெயர்.

## சு. நலனுடை மையி னாணுச் சிறந்தன்று.

(ப - ரை.) நலன் உடைமையின் - அழகுடைமையை விட, நாணு - நாணமுடைமை, சிறந்தன்று - மேலானது.

(ப - பொ.) அழகுடைமையினும் மிக்க சிறப்புடைத்து நாணுடைமை.

(க - ரை.) அழகைக் காட்டினும் நாணம் மேலானது.

(வி - ரை.) நலன் - நலம் என்பதின் இறுதிப்போலி. நாணு- உ சாரியை. நாணுவது செய்யத் தகாதனவற்றின்கண் உள்ள மொடுங்குதல். நாணுவின் பயன் நலன். "நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும்" (திருக்குறள், குடிமை: க0). நாணுச் சிறந்தன்று என்ற தொடரில் சகரவொற்றிரட்டியது. "இயல் பினும் விதியினும்" என்ற (நன். மெய். கடு.) விதிப்படி என்க.

## எ. குலனுடை மையிற் கற்புச் சிறந்தன்று.

(ப - ரை.) குலன் உடைமையின் - நல்ல குலத்தையுடைமை யினும், கற்பு - கல்வியுடைமை, சிறந்தன்று - மேலானது.

(ப - பொ.) நல்ல குலமுடைமையினும் கல்வியுடைமை சிறப்புடைத்து.

(க - ரை.) உயர்ந்த குலனுடைமையினுங் கல்வியுடைமை மேலானது.

(வி - ரை.) குலன் - குலம் என்பதின் போலி. குலம் - தொன்று தொட்டே ஒழுக்கத்தாற் சிறந்துவரும் இயல்பு. இவ் வியல்பு கற்றடங்குதற்குப் பயன்படும் அத்துணையேயன்றி மற்று இதுதானே பெருமை தருமாறில்லை யென்க. எனவே கல்வியில் லாது வெறுங் குலமே யுடையான் குலமில்லாது கல்வியுடையா னினுந் தாழ்ந்தவனேயாவன் என்பது ;

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே."

என்னும் புறநானூற்று அடிகளையும், "மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்தும், கற்றா ரனைத்திலர் பாடு" என்ற திருக்குறளையும் காண்க. கற்பு என்ற தொழிற் பெயர்க்குக் கற்புடையவளாயிருத்தல் என வேறு பொருள் கூறுதலுமாம். ௬-ஆம் செய்யுளில் வரும் நாணு என்பதைப் பெண்பாற் குணமாகக் கொள்ளின் இவ்விரண்டு செய்யுள்களும் பெண்பால் குறித்து வந்தவையென்க.

## ௮. கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.

(ப - ரை.) கற்றலின் - அரிய உண்மைகளைக் கற்றலைவிட கற்றாரை - கற்ற பெரியாரை, வழிபடுதல் - போற்றி யொழுகுதல், சிறந்தன்று - மேலானது.

(ப - பொ.) தான் ஒன்றைக் கற்கு மதனினும் சிறப்புடைத்துக் கற்றாரை வழிபடுதல்.

(க - ரை.) கற்றலைவிடக் கற்றாரை வழிபட்டொழுகுதல் மேலானது.

(வி - ரை.) வழிபாடு - வழிநிற்றல்; கற்றார் கருத்துவழி நிற்றல். இங்ஙனம் நிற்பார்க்குக் கற்றலின்பயன் எளிதிற் கைவருமாதலின், வழிபடுதல் சிறந்ததாயிற்று. கற்றலின் பயனு மன்றிக் கற்றலும் அவர்க்கு எளிதி லுண்டாகுமென்க. வழிபாடு செய்தலால் குருவருள் உண்டாகும். அஃதுண்டாகவே தாங்கள் கற்கலுற்றது கைகூடும். இந்நூல் தண்டாப்பத்திலும் "கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்" என்றுரைப்பது காண்க. "கற்றன்னர் கற்றாரைக் காதலவர்" என்பது நான்மணிக்கடிகை. துரோணரது சிலையை நிறுவி வழிபட்டுவந்த ஏகலைவ வேடனுக்குக் குருபத்தியால் வில்வித்தை முழுவதும் கைகூடியமை பாரதச் சான்று.

## ௯. செற்றாரைச் செறுத்தலிற் றற்செய்கை சிறந்தன்று.

(ப - ரை.) செற்றாரை - பகைவரை, செறுத்தலின் - ஒறுத்தலினும், தன்செய்கை - தன்னை அவனினும் பெருகச் செய்து கொள்ளல், சிறந்தன்று - மேலானது.

(ப-பொ.) பகைவரைச் செறுத்தலினும் மிக்க சிறப்புடைத்து தன்னைப் பெருகச் செய்தல்.

(க-ரை.) பகைவரை ஒறுத்தலைப் பார்க்கிலும் தன்னை மேம்படுத்திக் கொள்ளுதல் மேலானது.

(வி-ரை.) "செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும், எஃகதனிற் கூரிய தில்" (திருக்குறள்-எ௫௯) என்னும் பெருநாவலர் மொழிப்படி பொருளை யுண்டாக்கவே, அதுவே தம் பகைவர் தருக்கினை அறுக்கும் படைக்கலமாம். செற்றார் - செறு என்னும் பகுதி ஒற்று இரட்டிக் காலங்காட்டிற்று. தற்செய்கை- இரண்டாம் வேற்றுமைத் தொகை. தன் செல்வ முதலியவற்றைப் பெருக்கிக் கொள்ளுதல். இனி, தற்செய்கை என்பதற்குத் தன்னைச் செப்பமுடையவனாக்கிக் கொள்ளுதல் என்பாருமுளர். ஈண்டுச் செப்பமுடைமையாவது தன்னை வருத்தினவரை வருத்தாது அவர்க் கினியனவற்றைப் புரிந்து நாணுமாறு செய்வித்தலாம்.

## ௧0. முற்பெரு கலிற்பின் சிறுகாமை சிறந்தன்று.

(ப-ரை.) முன் பெருகலின் - முன்பு பெருகிப் பின்பு அடியோடு அழிதலைக் காட்டிலும், பின் - பிற்காலத்தில், சிறுகாமை - நின்ற நிலையிற் குறையாதிருத்தல், சிறந்தன்று - மேலானது.

(ப-பொ.) செல்வம் முற்காலத்துப் பெருகிப் பின் அழிதலின் நின்ற நிலைமையிற் சிறுகாமை சிறப்புடைத்து.

(க-ரை.) முன்பு பெருகிப் பின்பு அழிதலைவிட முன்பு பெருகாவிடினும் பின்பு நின்ற நிலையிற் சிறுகாமையே மேலானது.

(வி-ரை.) இவ்வியல்பைச் செல்வம் முதலிய எல்லாவற்றிற்குங் கொள்க. 'முற் பெருகலின்' என்பதாற் பிற்சிறுகலும், பிற் சிறுகாமை என்பதால் முற்பெருகாமையும் பெறுதும். முன் பின் காலமுணர்த்திய இடைச்சொற்கள். நின்ற நிலையிற்றாழாதபடி முயற்சி செய்தல்வேண்டும் என்பது பெறப்படும். சிறுகாமை- எதிர்மறைத் தொழிற்பெயர், சிறுகு - பகுதி.

சிறந்த பத்து முற்றும்.

# உ. அறிவுப்பத்து

'அறிப' என்ற சொல்லை அடிகள் ஒவ்வொன்றும் பெற்று வந்தமையால் அறிவுப்பத்து என்று பெயர். முதலதிகாரத்திற் சிறந்தன இவையெனக் கூறியவர் அப்படிச் சிறந்தவற்றை யறிய வேண்டியது இன்றியமையாததாதலால் இன்னவகையா லறியக் கடவரென முதலதிகாரத்தோடு இயையப் பின் வைத்தார்.

**க. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**
**பேரிற் பிறந்தமை ஈரத்தின் அறிப.**

(ப - ரை) ஆர்கலி - கடல் சூழ்ந்த, உலகத்து - இவ்வுலகத்திலுள்ள, மக்கட்கு எல்லாம் - மக்களெல்லாருள்ளும், பேர் இல் பிறந்தமை - ஒருவன் உயர்ந்த குலத்திற் பிறந்தமையை, ஈரத்தின் - அவனுக்குள்ள அருட்டன்மையினால், அறிப - அறிஞர் அறிந்து கொள்வர்.

(ப - போ.) கடல் சூழ்ந்த உலகத்து மக்களெல்லாருள்ளும் ஒருவன் பெருங்குடியிற் பிறந்தமையை அவன் ஈரமுடைமையானே அறிவர்.

(க - ரை.) அன்பும் அருளும் உடைமையே உயர்குலத்தைக் காட்டும்.

(வி - ரை.) மக்கட்கு - எழனுருபுமயக்கம். இல் - குடிக்கு இலக்கணை. ஈரத்தின் - இன் ஐந்தனுருபு ஏதுப்பொருளது. அறிஞர் என்ற வினைமுதலை ஏனையடிப் பொருள்களிலும் வருவித்துரைக்க. "நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக், குலத்தின்கண் ஐயப் படும்" (திருக்குறள், குடிமை: அ) என்றமைக் கிணங்க, ஒருவன் உயர்குடியிற் பிறந்தவன் என்பதற்கு அவனிடத்துள்ள அருளே அறிகுறி. பேரில் - பண்புத்தொகை.

**உ. ஈர முடைமை ஈகையி னறிப.**

(ப - ரை.) ஈரம் உடைமை - அருளுடைமையை, ஈகையின் - அவன் கொடைத்தன்மையினால், அறிப - அறிவர்.

(ப - பொ.) ஒருவன் நெஞ்சின்கண் ஈரமுடையான் என்பதனை அவன் பிறர்க்குக் கொடுக்கும் கொடையினுனே அறிவர்.

(க - ரை.) இரக்கமுண்மையைக் கொடையினு லறிவர்.

(வி - ரை.) "அறனும் அருளுடையான் கண்ணதே யாகும்" என்றபடி அருளுடையவரே அறஞ் செய்வர். ஈகை - கை விகுதி பெற்ற தொழிற் பெயர்.

## ௩. சோரா நன்னட் புதவியி னறிப.

(ப - ரை.) சோரா - நெகிழாத, நல்நட்பு - உயர்ந்த நட்புடைமையை, உதவியின் - உதவிசெய்யு மியல்பினுல், அறிப - அறிவர்.

(ப - பொ.) ஒருவன் தப்பாத கடைப்பிடியுடைய நல்ல நட்பினையுடையன் என்பது அவன் நட்பார்க்குச் செய்யும் உதவியினுலே அறிவர்.

(க - ரை.) நட்புண்மையை உதவியினு லறியலாம்.

(வி - ரை.) சோரா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நல் - மிகுதிப் பொருளதாகலின் இங்கு உயர்வை யுணர்த்திற்று. "உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே, இடுக்கண் களைவதாம் நட்பு" என்ருர் திருவள்ளுவனாரும். நட்பு - நள் - பகுதி, பு - விகுதி, தொழிற்பெயர்.

## ச. கற்ற துடைமை காட்சியி னறிப.

(ப - ரை.) கற்றது உடைமை - கற்ற கல்வியுடைமையை காட்சியின் - அறிவினுல், அறிப - அளந்தறிவர்.

(ப - பொ.) ஒருவனது கல்வியை அவன்றன் அறிவினுனே அறிவர்.

(க - ரை.) கல்வியை அறிவினுல் அளந்தறிவர்.

(வி - ரை.) காட்சி, அறிவாற் காணுதலாதலின் அஃதறிவெனப்பட்டது. "கற்ற நூலளவே யாகும் நுண்ணறிவு" என்பதற்கிணங்க எத்தனைக் கல்வியோ அத்தனையே அறிவென்க. "மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" என்ருர் வள்ளுவரும்.

## ரு. ஏற்ற முடைமை எதிர்கோளி னறிப.

(ப - ரை.) ஏற்றம் உடைமை-ஆராய்ச்சியுடைமையை, எதிர் கோளின் - இடையூறுகள் வருவதற்கு முன்னே அவன் செய்யும் முன்னேற்பாடுகளால், அறிப - அறிவர்.

(ப - பொ.) ஒருவன் ஆராய்ந்து துணியவல்லவன் என் பதனை அவன் முற்கொண்டு பாதுகாக்கும் காப்பானே அறிவர்.

(க - ரை.) ஒருவனது ஆராய்ச்சி யறிவு அவன் முற்கொண்டு செய்யுஞ் செயல்களாற் றுணியப்படும்.

(வி - ரை.) ஏற்றம் - உய்த்தல், எனவே உய்த்தறியும் ஆராய்ச்சியறிவு என்று பொருள். எதிர்கோள் - எதிர் - முன். கோள்-கொள்ளுதல். கொள் என்னும் முதனிலை கோளெனத் திரிந்தது, தொழிற்பெயர். ஏற்றம் என்பதற்கு மேன்மை யென்று பொருளுரைப்பர், ஈண்டைக்குச் சிறப்பன்று. "எதிரதாக், காக்கும் அறிவுடைமையே ஈண்டு ஏற்றமாம்."

## சா. சிற்றிற் பிறந்தமை பெருமிதத்தி னறிப.

(ப - ரை.) சிற்றில் பிறந்தமை - தாழ்ந்த குலத்திற் பிறந்தமையை, பெருமிதத்தின் - செருக்கினால், அறிப - அறிவர்.

(ப - பொ.) சிறுமையுடைய குடியின்கண் பிறந்தான் என் பதனை அவன் செருக்கினாலே அறிவர்.

(க - ரை.) தாழ்குலத்திற் பிறந்தமையைச் செருக்கினால் அறிந்து கொள்வர்.

(வி - ரை.) சிற்றில், பேரில் என்பதற்கு எதிர்மொழி. பெருமை - பெருமிதமின்மை, இதனை "பெருமை பெருமித மின்மை சிறுமை, பெருமிதம் ஊர்ந்து விடல்" என்ற (திருக்குறள், பெருமை: கூ.) செய்யுளானறிக. "முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை, இந்திரனா வெண்ணி விடும்" என்ற நாலடி யும் நினைவுகூரற் பாலது.

## எ. குத்திரஞ் செய்தலிற் கள்வனாத லறிப.

(ப - ரை.) குத்திரம் செய்தலின் - வஞ்சனை செய்தலால், கள்வன் ஆதல் - திருடனாதலை, அறிப - அறிந்துகொள்வர்.

(ப - போ.) ஒருவனை யொருவன் படிறு செய்யும் படிற்றால் அவன் கள்வனாதல் அறிவர்.

(க - ரை.) வஞ்சகச் செயல் திருடனாதலைத் தெரிவிக்கும்.

(வி - ரை.) குத்திரம் - படிறு. கள்வன் - கள் என்னும் வினையடியாகப் பிறந்த பெயர். 'அளவறிந்தார் நெஞ்சத் தறம் போல நிற்கும், களவறிந்தார் நெஞ்சிற் கரவு"—(திருக்குறள், கள்ளாமை: அ.) என்றார் செந்நாப்போதார்.

## அ. சொற்சோர் வுடைமையின் எச்சோர்வு மறிப.

(ப - ரை.) சொல்சோர்வு உடைமையின்-சொல்லில் தளர்ச்சியுடைமையால், எ சோர்வும் - எனை எல்லாச் சோர்வுகளையும் அறிப - அறிவர்.

(ப - போ.) சொற் சோர்வுபடச் சொல்லுதலான் அவனுடைய எல்லாச் சோர்வையும் அறிவர்.

(க - ரை.) சொற்றளர்ச்சி எனைத் தளர்ச்சிகளையும் விலக்கி விடும்.

(வி - ரை.) ஒருவனின் தவறுகளை அவனது மாறுபாடுள்ள சொல்லா லறியலா மென்பதாம். "ஆக்கமுங் கேடும் அதனால்வருதலாற், காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு" (திருக்குறள் - சொல் வன்மை: உ) "சொல்லுங்காற் சோர்வின்றிச் சொல்லுதல் மாண்பினிது" (இனியவை நாற்பது) "சொற்சோர்வு படேல்" என்ற (ஆத்திசூடி) உரைகள் கவனிக்கற்பாலன. எச்சோர்வு மென்றது, கருத்து, முனைப்பு, முயற்சி, செயல் முதலிய சோர்வுகளை யென்க. சோர்வும், உம்-இறந்தது தழீஇய எச்சப்பொருள். சோர்வு - தொழிற்பெயர்.

## ௯. அறிவுசோர் வுடைமையிற் பிறிது சோர்வு மறிப.

(ப - ரை.) அறிவு சோர்வு உடைமையின் - அறிவு மழுக்கமுடைமையினால், பிறிது சோர்வும் - செயல் மழுக்கமும், அறிப - அறிவர்.

(ப - பொ.) ஒருவன் தன்னறிவின்கண் சோர்வுடைமையின் எல்லாச் சோர்வுமுடையன் என்பதறிவர்.

(க - ரை.) அறிவு மழுக்கத்தாற் செயல் மழுக்கமும் உணரப் படும்.

(வி - ரை.) பிறிது - காரணகாரிய இயைபுபற்றிச் செயலை புணர்த்திற்று. உம்மை - எச்சம். பிறாது இனம்பற்றி யுடம்பை புணர்த்தியதாகக் கொண்டு உடம்பின் தளர்ச்சி யென்பாருமுளர்.

## கo. சீருடை யாண்மை செய்கையி னறிப.

(ப - ரை.) சீர்உடை ஆண்மை - புகழ்பொருந்திய ஆள்வினைத்தன்மையை, செய்கையின் - எடுத்து முடிக்குஞ்செய்கையினல், அறிப - அறிவர்.

(ப - பொ.) ஒருவன் புகழுடைய ஆள்வினைத் தன்மையை அவன் செய்கையான் அறிவர்.

(க - ரை.) முயற்சியின் திறம் முடிக்குஞ் செயலா னறியப் படும்.

(வி - ரை.) ஆண்மை - ஆண்மை, ஆளுந்தன்மை அஃதாவது ஆள்வினைத்தன்மை. உடை - ஈறு தொக்கது.

அறிவுப்பத்து முற்றும்.

## ௬. பழியாப்பத்து

பழியாமை கூறும் பத்துமொழிகளை நுவலுதலின் இவ் வோத்துப் பழியாப் பத்தென்னும் பெயர்த்தாயிற்று.

க. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
யாப்பி லோரை இயல்புகுணம் பழியார்.

(ப - ரை.) ஆர்கலி - கடல் சூழ்ந்த, உலகத்து - இவ்வுலகத்திலுள்ள, மக்கட்கு எல்லாம் - மக்கள் எல்லாருள்ளும், யாப்பு இலோரை - யாதொன்றிலும் உறுதியில்லாதவர்களின், இயல்பு குணம் - இயல்பாகிய தன்மையை, பழியார் - அறிஞர் பழித்துரையார்.

(ப - பொ.) கடல்சூழ்ந்த உலகத்து மக்களெல்லாருள்ளும் ஒரு செய்கையின்கண்ணும் நிலையில்லாதார் இயற்கையாகிய குணத்தை யாவரும் பழியார்.

(க - ரை.) ஒன்றிலும் உறுதியில்லாதவரது இயற்கைத் தன்மையை அறிஞர் பழியார்.

(வி - ரை) பழித்தலால் அவரியல்பு மாறுமைபற்றிப் பழியாரென்றார். யாப்பு - பு விகுதிபெற்ற தொழிற்பெயர்; கட்டு என்பது பொருள், ஈண்டு உறுதியை உணர்த்திற்று. யாப்பிலோரியல்பு குணத்தைப் பழியார் என்று ஐயுருபை மாற்றியமைத்துக் கொள்க. இதனை "முதற்சினைக் கிளவிக் கதுவென் வேற்றுமை முதற்கண் வரினே சினைக்கை வருமே" என்ற தொல்காப்பியம் சூ.-௯௪-இன்படி முடிக்க. யாப்பிலோரை என்பதற்குக் கட்டுப்பாட்டிற் கடங்காது நடப்பவரை என்பாருமுளர். பழியார் - எதிர்மறை ஆகாரம் புணர்ந்துகெட்டது.

உ. மீப்பி லோரை மீக்குணம் பழியார்.

(ப - ரை.) மீப்பு இலோரை - பெருந்தன்மை யில்லாதவர்களின், மீக்குணம் - பெருமிதத் தன்மையை, பழியார் - பழித்துரையார்.

(ப - பொ.) மேன்மைக்குணம் இல்லாரை மேன்மைசெய் யாமையை யாவரும் பழியார்.

(க - ரை.) கீழ்மக்களின் பெருமிதத்தை அறிஞர் பழியார்.

(வி - ரை.) மீக்குணம் - மீச்செலவி னியல்பு. நிலைக்கு மேலாய்ப் பெருமை படைத்துக்கொண்டு செருக்கித் திரியு மியல்பு. 'சிறுமை பெருமித மூர்ந்துவிடல்' என்ற பொதுமறை காண்க.

## ந. பெருமை யுடையதன் அருமை பழியார்.

(ப - ரை.) பெருமையுடையதன் - பெருமையுடையதொரு பொருளை, அருமை - முடித்துக்கொள்ளும் அருமையை, பழியார் - பழித்து முயற்சி செய்யாமலிரார்.

(ப - பொ.) பெருமையுடைய தொன்றை முடித்துக் கொள்கை அரிதென்று அதனைப் பழித்து முயற்சி தவிரார்.

(க - ரை.) பெருமையுள்ள தொன்றை முடித்துக்கொள்ளும் அருமையை அறிஞர் பழியார்.

(வி - ரை.) பெருமையுடையது பெறுதற்கு அருமையாகவே யிருக்கும். எனவே அவ்வருமை கருதி முயலாதார் எஞ்ஞான்றும் பெருமையெய்தாராதலால், அருமை பழியாரென்றார். "அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்," (ஆள்வினையுடைமை-க.) என்பது தேவர் பொருள்மொழியாகும். உடையதன் - உடைய அதன். உடையது - உடைமை என்னும் பண்படியாகப் பிறந்த குறிப்பு வினையாலணையும் பெயர்.

## ச. அருமை யுடையதன் பெருமை பழியார்.

(ப - ரை.) அருமை யுடையதன் - அடைதற்கருமையான பொருளின், பெருமை - உண்மைப் பெருமையை, பழியார் - முயற்சியுடையோர் பழித்துரையார்.

(ப - பொ.) அருமையுடைய தொன்றினை முடித்துக்கொள் ளும்பொழுது அரிதென்று பழித்து அதின்கண் உள்ள முயற்சிப் பெருமையைத் தவிரார்.

(க - ரை.) அடைதற் கருமையா யிருத்தல்பற்றி அவ்வரும் பொருளின் பெருமையைப் பழித்துரையார்.

(வி - ரை.) பெருமையைப் பழிப்பது கீழோர் செயலென்க. பெருமை என்பதற்கு முயற்சிப் பெருமையெனவும் பொருளுரைப்பர். அது முன்மொழியில் அடங்கி விளங்குகின்றமை காண்க. பெருமை கண்டாருங் கேட்டாரும் விரும்பும் மகிமை.

## ரு. நிறையச் செய்யாக் குறைவினை பழியார்.

(ப - ரை.) நிறைய செய்யா - முழுதும் செய்யப்படாத, குறைவினை - குறைவான வேலையை, பழியார் - பழித்துரையார்.

(ப - பொ.) ஒரு வினையை நிரம்பச் செய்யாதவர்க்கு முன் போய் அக்குறை வினையை யாவரும் பழியார்.

(க - ரை.) ஒரு வேலை அரைகுறையா யிருக்கும்போது அதனை அறிஞர் பழித்தல் செய்யார்.

(வி - ரை.) என்னை? பழித்தல் செய்வாராயின், அது திருத்தமாய் முற்றுப் பெறுமையோடு, ஒருகால் இடையற்று நின்று விடுதலுங் கூடுமாதலின் என்பது. செய்யா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நிறைய - முற்றுப்பெற.

## சா. முறையி லரசர்நாட் டிருந்து பழியார்.

(ப-ரை.) முறைஇல்-செங்கோன் முறையில்லாத, அரசர் - அரசரது, நாடு இருந்து நாட்டிலிருந்து கொண்டு, பழியார் - அவர் கொடுங்கோன்மையை அறிஞர் பழித்துரையார்

(ப - பொ.) நடுவு செய்யாத அரசர் நாட்டின்கண் இருந்து அவ்வரசர் நடுவு செய்யாமையை யாவரும் பழியார்.

(க - ரை.) நடுவில்லா அரசனது நாட்டிலிருந்துகொண்டே அவனியல்பை அறிஞர் பழித்துரையார்.

(வி - ரை.) நாடு என்னும் நெடிற்றொடர்க் குற்றியலுகர மொழி வேற்றுமையில் டகரவொற் றிரட்டியது. அவ்வரசன் ஒறுப்பானாதலின் நாட்டிலிருந்து பழியார் என்றார். நடுவு நிலைமை

யாவது பகை நொதுமல் நண்பு என்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை.

## எ. செய்தக்க நற்கேளிர் செய்யாமை பழியார்.

(ப - ரை.) செய்தக்க - உதவி செய்யவல்ல, நல்கேளிர் - நல்ல இயல்புடைய சுற்றத்தாரை, செய்யாமை - ஒரு கால் அவர் செய்யாமையை, பழியார் - அறிஞர் பழித்துரையார்.

(ப - போ.) தமக்கு உதவி செய்தற்குத் தக்க நல்ல கேளிர் உதவி செய்திலரென்று பிறர்க்குச் சொல்லிப் பழியார்.

(க - ரை.) உதவி செய்யவல்ல நல்லியல்புடைய சுற்றத்தார் அது செய்யாமையைப் பழித்துரையார்.

(வி - ரை.) கேளிர் - இர், பலர்பால் விகுதி. கேளிர் நண்பராயின் நட்பினர் உதவி செய்திலரென்று பழியாமல் நட்பிற் பிழைபொருத்தலே சிறப்புடைத்தென்பதாம் 'செயத்தக்க' என்றும் பாடம்.

## அ. அறியாத் தேசத் தாசாரம் பழியார்.

(ப - ரை.) அறியா தேசத்து - தான்முன் அறியாத நாட்டினது, ஆசாரம் - வேறுபட்ட வழக்க ஒழுக்கங்களை, பழியார் - அறிஞர் பழித்துரையார்.

(ப - போ.) தான் அறியாத தேசத்தின்கண் சென்று அங்குள்ளார் ஒழுகும் ஒழுக்கத்தைப் பழியார்.

(க - ரை.) முன்னறியாத அயல் நாட்டின் வழக்க ஒழுக்கங்களை அறிஞர் பழியார்.

(வி - ரை.) நாட்டின் தட்ப வெப்ப முதலிய நிலைகட்கேற்ப வழக்க ஒழுக்கங்களும் வேறுபடுதலின் பழித்தல் முறையாகாமை யுணர்க. ஆசாரம் - ஒழுக்கம். "அறியாத தேயத்தான் ஆதுலன் மூத்தான், இளையான் உயிரிழந்தான் அஞ்சினன் உண்பான், அரசர் தொழில்தலை வைத்தான் மணாளன்என்று, ஒன்பதின்மர் கண்டீர் உரைக்குங்கால் மெய்யான, ஆசாரம் வீடு பெற்றார்." என்ற ஆசாரக்கோவைச் செய்யுள் இங்குக் கருதத் தக்கது.

## கூ. வறியோன் வள்ளிய னன்மை பழியார்.

(ப-ரை.) வறியோன் - பொருளில்லாதவன், வள்ளியன் அன்மை - ஈகையுடையன் அல்லனுயிருத்தலை, பழியார் - அறிஞர் பழித்துரையார்.

(ப-போ.) வறுமை யுடையானை வண்மையுடையானல்ல னென்று பழியார்.

(க-ரை.) பொருளில்லாதவன் ஈயாமையை எவரும் பழித் துரையார்.

(வி-ரை.) "இசையா வொருபொருள் இல்லென்றல் யார்க்கும், வசையன்று வையத் தியற்கை" என்ற நாலடிச் செய்யுட் பொருள் கருதத்தக்கது. வறியோன் - வறுமை என்னும் பண்படியாய்ப் பிறந்த பெயர். வள்ளியன் - வண்மை என்னும் பண்படியாகப் பிறந்த பெயர். வண்மை - ஈகை.

## கய. சிறியா ரொழுக்கம் சிறந்தோரும் பழியார்.

(ப-ரை.) சிறியார் ஒழுக்கம் - கீழ்மக்களின் ஒழுக்கத்தை, சிறந்தோரும் - ஒழுக்கத்தின் மிக்காரும், பழியார் - பழித்துரையார்.

(ப-போ.) சிறுமைக் குணம் உடையாருடைய கீழ்மைக் குணத்தை ஒழுக்கத்தான் மிக்காரும் கண்டால் பழியார்.

(க-ரை.) ஒழுக்கத்திற் சிறந்த பெரியாரும் கீழோரொழுக் கத்தைப் பழியார்.

(வி-ரை.) கீழோ ரொழுக்கத்தைக்கண்டு அவரொத்த கீழோர் மழ்கிவரேயன்றிப் பழியார்; மற்று அவரொழுக்கத்தைப் பழித் தொறுத்தற்குரிய மேலோரும் அவர்க்கஃதியல்பாதல்பற்றிப் பழியாரென்க. உம்மை உயர்வு சிறப்பு.

பழியாப்பத்து முற்றும்.

---

## ௬. துவ்வாப் பத்து

என்றது துவ்வாமை கூறும் பத்து முதுமொழிகளை யுடையது என்பது.

க. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பழியோர் செல்வம் வறுமையிற் றுவ்வாது.

(ப-ரை.) ஆர்கலி - கடல் சூழ்ந்த, உலகத்து - இவ்வுலகத்திலுள்ள, மக்கட்கு எல்லாம் - மக்கள் எல்லாருள்ளும், பழியோர் செல்வம் - பழியுடையோர் செல்வம், வறுமையின் - வறுமையினின்றும், துவ்வாது - நீங்கி யொழியாது.

(ப-பொ.) ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து எல்லா மக்களுள்ளும் பழியுடையோர் செல்வம் வறுமையின் நீங்கி யொழியாது.

(க-ரை.) பழியுடையோர் செல்வம் இருந்தும் இல்லாமையேயாகும்.

(வி-ரை.) பழியோர் தீயவழியிற் பொருள்தேடிப் பழிப்புடையராயினர். அவர் 'உடாஅதும் உண்ணாதும் தம்முடம்பு செற்றும் கெடாஅத நல்லறமுஞ் செய்யாத' வியல்பினர். இவர் தம்பாற் செல்வமிருந்தும் வறியரேயாதல் காண்க. வறுமையேயாமென்பதை வறுமையின் துவ்வாதென்றார். வறுமையின் வேறாகாதென்பது பொருள். துவ்வாது வெறுக்கத்தக்கது என்றும், வறுமையின் - வறுமையைப் பார்க்கிலும் என்றும் பொருளுரைப்பாருமுள்ர். துவ்வாது - து பகுதி. ஒன்றன்பால் எதிர்மறை வினைமுற்று. தூவ்வாது என்பது துவ்வாது என விகாரப்பட்டு வந்ததாகக் கொள்ளலாம். "கருமஞ்செய வொருவன் கைதூவே னென்னும், பெருமையிற் பீடுடைய தில்" என்ற (திருக்குறள் குடிசெயல்வகை: க) குறளில் கைதூவேன் என்பதற்குக் கையொழியேன் என்று பொருள் கூறியிருப்பதுணர்க.

## உ. கழிதறு கண்மை பேடியிற் றுவ்வாது.

(க - ரை.) கழி - அளவின் மிக்க, தறுகண்மை - வீரம், பேடியின் - பேடித்தன்மையின், துவ்வாது - நீங்காது.

(ப - பொ.) இடமுங் காலமு மறியாது மிக்க தறுகண்மை பேடித் தன்மையின் நீங்கியொழியாது.

(க - ரை) அளவின் மிக்க வீரம் பேடித்தன்மையை யொக்கும்.

(வி - ரை.) அஞ்சத்தக்க விடத்து அஞ்சாது பிறரை வருத்துவோர் பேடியினும் இழிந்தவராவர். "அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ, தஞ்சல் அறிவார் தொழில்" (திருக்குறள் - அறிவுடைமை: அ). பேடி - பெண் தன்மையின் மிக்கு ஆண்டன்மையின் வழீஇயது ; பொருளாகுபெயர். கழி - உரிச்சொல்.

## ௩. நாணில் வாழ்க்கை பசித்தலிற் றுவ்வாது.

(ப - ரை.) நாண் இல் வாழ்க்கை - நாணமில்லாது உண்டு உயிர் வாழும் வாழ்க்கை, பசித்தலின் - பசித்தலினின்றும், துவ்வாது - நீங்கியொழியாது.

(ப - பொ.) நாணழிந்துண்டு வாழும் வாழ்க்கை பசித்தலின் நீங்கி யொழியாது.

(க - ரை.) நாணத்தை யிழந்து பசியைத் தீர்த்துக்கொண்டாலும் அது பசித்திருத்தலையே யொக்கும்.

(வி-ரை.) நாணங்கழன்று உயிர் வாழும் வாழ்க்கை ஓர் அமைதி தராமையின் இங்ஙனம் கூறினர். "நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால், நாண் துறவார் நாணாள் பவர்" (திருக்குறள் - நாணுடைமை: எ) எனத் திருவள்ளுவரும், 'உயிரினுஞ் சிறந்தன்று நாணே' எனத் தொல்காப்பியனாரும் கூறியிருத்தல் நோக்குக.

## ச. பேணி லீகை மாற்றலிற் றுவ்வாது.

(ப - ரை.) பேண் இல் ஈகை - விருப்பமில்லாத ஈகை, மாற்றலின் - ஈயாமையின், துவ்வாது - நீங்காது.

(ப - பொ.) விருப்பமில்லாத கொடை கொடையை நீக்குதலின் ஒழியாது.

(க - ரை.) விருப்பமில்லாத ஈகை ஈயாமையின் வேறாகாது.

பேண் - முதனிலைத் தொழிற் பெயர். மாற்றல் என்றது ஈயாமையைக் குறித்தது. அதாவது ஈகை மாறுதல் என்க. "குறிப்பறிந் தீதலே கொடைமற் றின்றெனா, மறுத்தலே கேட்டபின் வழங்கல்" என்ற நைடதச் செய்யுட்பொருள் கவனிக்கத் தக்கது.

## ரு. செய்யாமை மேற்கோள் சிதடியிற் றுவ்வாது.

(ப - ரை.) செய்யாமை - செய்யத்தகாத செயல்களை, மேற்கோள் - செய்தற்கு மேற்கொள்ளுதல், சிதடியின் - மூடத்தன்மையின், துவ்வாது - வேறாகாது.

(ப - பொ.) செய்யத்தகாதனவற்றை மேற்கொண்டு செய்யத் தொடங்குவது மையற்றன்மையின் நீங்கி யொழியாது.

(க - ரை.) செய்யத்தகாத செயல்களைச் செய்தற்கு மேற்கொள்ளுதல் பேதைமையாகும்.

(வி - ரை.) செய்யாமை செய்யத்தகாத செயல்களை யுணர்த்துதலின். எதிர்மறைத் தொழிலாகுபெயர். சிதடி - அறிவிலன்; ஈண்டுமுதலாகு பெயராய்த் அவன்றன் அறியாமை யியல்பை யுணர்த்திற்று. செய்யாமை மேற்கோள் என்பதற்குப் பிறர் செய்து முடித்தற்கரிய காரியத்தை யாம் செய்து முடிபோமென்று உறுதிமொழி கூறல் என்றுரைப்பதுமாம்.

## சு. பொய் வேளாண்மை புலைமையிற் றுவ்வாது.

(ப - ரை.) பொய் வேளாண்மை - போலியான ஈகை, புலைமையின் - கீழ்மையின், துவ்வாது - நீங்காது.

(ப - பொ.) பொய்பட்ட உபகாரம் புலைமையின் நீங்கி யொழியாது.

(க - ரை.) பொய்பட்ட ஈகை கீழ்மைத் தன்மையாகும்.

உண்மை யன்பினால் ஈயாமல் மேலாடம்பரத்துக்காக ஈதல் போல நடித்தலை ஈண்டுப் பொய்வேளாண்மை என்றார். புலைமை-

இழிந்த இயல்பு. வேளாண்மை-உபகாரம், இதனை 'வேளாண்மை யென்னுஞ்செருக்கு' என்ற குறளடிக்கு எல்லார்க்கும் உபகாரஞ் செய்தல் என்னும் மேம்பாடு எனப் பரிமேலழகர் கூறுமாற்ரு னறிக. இனி வேளாண்மை என்பதற்கு விரும்பி யுபசரிக்குந் தன்மை என்று பொருளுரைப்பாரு முளர்.

## எ. கொண்டுகண்மாறல் கொடுமையிற் றுவ்வாது

(ப - ரை.) கொண்டு - ஒருவனை நட்புக்கொண்டு, கண்மா றல்-பின்பு அவன்பாற் கண்ணோட்டம் இலனுதல், கொடுமையின் - கொடுமை செய்தலினும், துவ்வாது - வேருகாது.

(ப - போ.) ஒருவனை யொருவன் நட்பாகக் கொண்டு வைத்துக் கண்ணோட்டத்தை மாறுதல் கொடுமையின் நீங்கி யொழியாது.

(க - ரை.) நண்பன்பாற் கண்ணோடாமை கொடுமை செய் ததுபோலாம்.

(வி - ரை.) கண் - கண்ணோட்டத்துக்கு ஆகுபெயர். தன் ஞெடு பழகினவரைக் கண்டவிடத்து அவர் விரும்பும் உதவிகளை மறுக்க மாட்டாமை கண்ணோட்டமாம். தன்பால் கண்ணோடா மையை நண்பன் கொடுமையாய் நினைக்கும் இயல்பினனுதலின், கொடுமையின் துவ்வாது என்றனர்.

## அ. அறிவிலி துணைப்பாடு தனிமையிற் றுவ்வாது.

(ப - ரை.) அறிவிலி - அறிவில்லாதவனை, துணைப்பாடு - துணையாகக் கொள்ளுதல், தனிமையின் - தனிமையாயிருத்தலி னும், துவ்வாது - வேருகாது.

(ப - போ.) அறிவில்லாதா னொருவனோடு துணைப்பாடு தனி மையின் நீங்கியொழியாது.

(க - ரை.) அறிவில்லாதவனைத் துணைக்கொள்ளுதல் தனி மையா யிருத்தலுக்கு நேர்.

(வி - ரை-) அறிவிலி : இ பெயர்விகுதி. துணைப்பாடு : பாடு ஈற்றுத் தொழிற்பெயர். அறிவிலான் துணையினுற் பயன் சிறிது மில்லை யென்றபடி.

## கூ. இழிவுடை மூப்புக் கதத்திற் றுவ்வாது.

(ப - ரை.) இழிவு உடை மூப்பு - இழிவினையுடைய கிழத்தனம், கதத்தின் - சினத்தின், துவ்வாது - வேறாகாது.

(ப - போ.) இழிவினையுடைய மூப்புப் பிறர் வெறுத்து வெகுளும் வெகுட்சியின் நீங்கி யொழியாது.

(க - ரை.) கிழத்தனமும் சினமும் ஒன்று.

(வி - ரை.) இழிவு : வுவ்வீற்றுத் தொழிற் பெயர். மூப்பு - கிழத்தனம்: தொழிலாகு பெயர். வெறுத்து வெகுளும் வெகுட்சியின் நீங்கியொழியா தென்றுரைத்து வெறுக்கும் ஏதுப்பற்றி இரண்டும் ஒப்பு என்க. 'மூப்புரகத்தின்' என்ற பாடங் கொள்வார், கிழத்தனம் பாம்போடு வாழ்தலினும் என்று பொருளுரைப்பர்.

## கo. தானோ ரின்புறல் தனிமையிற் றுவ்வாது.

(ப - ரை.) தான் - தானொருவனே, இன்புறல்-தனது செல்வத்தால் இன்பமடைந்து கொள்ளுதல், தனிமையின் - வறுமையின், துவ்வாது - நீங்கி யொழியாது.

(ப - போ.) தானே ஒருவன் இன்புறுதல் வறுமையில் நீங்கி யொழியாது.

(க - ரை.) ஒருவன் தானே இன்பம் அடைந்து கொள்வனாயின் அவன் செல்வனாயினும் வறியனே யாவன்.

(வி - ரை.) இன்னோரன்ன என்பதிற்போல ஓர் - இசைநிறையென்க. ஓர் - ஒப்பற்ற என்பதுமாம். தனிமை - வறுமை. வறியரே தனித்துண்ப ராதலால் தனிமை வறுமையை யுணர்த்திற்று. "இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய, தாமே தமியருணல்" என்ற (திருக்குறள் ௬௬௯ : க) குறளுரையில் இரத்தற்குள்ளது அப்பொழுதை இளிவரவே, பின் நல்குரவில்லை, தமியருண்டற்கு அவை யிரண்டு முளவா மாகலின் இரத்தலி னின்னாது என்று கண்டிருப்பது காண்க.

துவ்வாப்பத்து முற்றும்.

---

## ரு. அல்ல பத்து

அல்லாதனவாகிய பத்து முதுமொழிகளுடைய ஓத்து. அல்ல : சாரியை பெருத எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும் பெயர்.

**க. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
நீரறிந் தொழுகாதாள் தார மல்லள்.**

(ப - ரை.) ஆர்கலியுலகத்து - கடல் சூழ்ந்த இவ்வுலகத்தி லுள்ள, மக்கட்கு எல்லாம் - மக்களெல்லாருக்கும், நீர் அறிந்து - கணவனியல்பை அறிந்து, ஒழுகாதாள் - நடவாதவள், தாரம் அல்லள் - மனைவியாகாள்.

(ப - போ.) ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து மக்கட்கெல் லாம் கொழுநனது குணமறிந் தொழுகாதாள் மனையாளல்லள்.

(க - ரை.) கணவன் குறிப்பறிந் தொழுகாதாள் உண்மை மனைவியாகாள்.

(வி-ரை.) நீர்-நீர்மை யென்னும் பண்பினடி. நீரறிந் தொழுகாக் கால் இல்லறம் முட்டுப்படுதலின் இவ்வாறு கூறினர். ஒழுகாதாள்-எதிர்மறை வினையாலணையும் பெயர். "கொண்டான் குறிப்பறி வாள் பெண்டாட்டி" என்பது திரிகடுக அடி. அல்லள் : எதிர் மறைக் குறிப்பு வினைமுற்று.

**உ. தாரமா ணாதது வாழ்க்கை யன்று.**

(ப - ரை.) தாரம் மாணாதது - மனை மாட்சிமைப் படாத இல்வாழ்க்கை, வாழ்க்கை அன்று - இல்வாழ்க்கை யன்று.

(ப - போ.) மனையாள் மாட்சிமைப்படாத மனை வாழ்க்கை மனைவாழ்க்கை யன்று.

(க - ரை.) மனைமாட்சிமை யில்லாத இல்லறம் நல்லற மாகாது.

(வி-ரை.) மாணுமை யென்பது விருந்து புறந்தரல், குடித்தனத் திற் றிறம், குழந்தைகளின் உடம்பைப் போற்றல், கணவன் மேற் கொள்ளும் உயர்ந்த செயல்களுக்கு உதவியாயிருந்து அவற்றை

முற்றுவித்தல் முதலிய நல்லியல்புகளுடைய வாழ்க்கைத் துணையா யில்லாமை யென்க. "மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை, எனைமாட்சித் தாயினும் இல்" என்ற (திருக்குறள் - வாழ்க்கைத் துணைநலம்: ௨) குறட் பொருளுணர்க. மாணாதது எதிர்மறை வினையாலணையும் பெயர்; மாண் - பகுதி.

## ௩. ஈரமில் லாதது கிளைநட் பன்று.

(ப - ரை.) ஈரம் இல்லாதது - அன்பில்லாத தொடர்பு, கிளை - சுற்றமும், நட்பு - நட்பும், அன்று - ஆகாது.

(ப - போ.) மனத்தின்கண் ஈரமில்லாதது கிளையுமன்று, நட்புமன்று.

(க - ரை.) அன்பில்லாத தொடர்பு உறவுமாகாது, நட்புமாகாது.

(வி-ரை.) இல்லாதது: வினையாலணையும் பெயர், ஆ - சாரியை. உறவென்பதும் நட்பென்பதும் வெறும் உடம்புத் தொடர்பாகா, மற்று அன்பின் தொடர்பென்றே அறிதல்வேண்டும். கிளை நட்பு: உம்மைத்தொகை. கிளைநட் பென்பதை வினைத்தொகையாகக் கொண்டு கிளைக்கும் நட்பெனக் கூறுவாருமுளர். "விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா, ஆக்கம் பலவுந் தரும்" (திருக்குறள்-சுற்றந்தழால்-௨), "அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின், வழிவந்த கேண்மை யவர்"—(திருக்குறள்-பழைமை-௨) என்னும் வள்ளுவர் வாய்மொழிகளை நோக்குக.

## ௪. சோராக் கையன் சொன்மலை யல்லன்.

(ப - ரை.) சோராக் கையன் - ஈயாத கையையுடையவன், சொன்மலை அல்லன் - புகழ்மலையை யுடையவன் ஆகான்.

(ப - போ.) பிறர்க்கு ஒன்றை யுதவாத கையுடையோன் புகழைத் தாங்கமாட்டான்.

(க - ரை.) ஈயாதவனுக்குப் புகழில்லை.

(வி-ரை.) சோரா-நெகிழாத. அஃதாவது கைநெகிழ்ந்து ஒன்று ஈயாத என்பது கருத்து. சொல்மலை யென்றது குணமென்னுங் குன்றென்றாற்போல வந்தது. 'அறிந்தோர் சொன்மலை' என்ற

திருமுருகாற்றுப்படை - உகூரு - ஆம் அடிக்குச் 'சான்றோர் புகழ்ந்து சொல்லப்படும் சொற்களின் ஈட்டமா யிருப்பாய்' என நச்சினார்க்கினியர் உரைத்திருப்பது காண்க. சொல் - புகழ். இனி, சோரக்கையன் என்ற பாடங்கொள்வோர், களவொழுக்கமுடையோன் சொல்லில் மாறுபாடா யிருத்தலாகான் என்று பொருள் கூறுவர். இப்பொருளில், கை - ஒழுக்கமாம்.

## ரு. நேரா நெஞ்சத்தோன் நட்டோ னல்லன்.

(ப - ரை.) நேரா - ஒற்றுமைப் படாத, நெஞ்சத்தோன் - உள்ளத்தை யுடையவன், நட்டோன் அல்லன் - நண்பனல்லன்.

(ப - பொ) வேறாய் உடன்படாத நெஞ்சத்தோன் நட்டோனல்லன்.

(க - ரை.) உள்ள வொற்றுமை யில்லாதவன் நண்பனாகான்.

(வி - ரை.) "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான், நட்பாங் கிழமை தரும்" (திருக்குறள் - நட்பு : ரு) என்ற செய்யுளை நோக்குக. நேரா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நெஞ்சு அங்குள்ள மனதிற்காதலின் இடவாகுபெயர்.

## சு. நேராமற் கற்றது கல்வி யன்று.

(ப - ரை.) நேராமல் - ஆசிரியற்கு ஒன்றும் உதவாமல், கற்றது - படித்தது, கல்வி அன்று - கல்வியாகாது.

(ப - பொ.) கற்பிக்கும் ஆசிரியனுக்கு ஒன்றைக் கொடாது கற்குமது கல்வியன்று.

(க - ரை.) ஆசிரியனுக்கு ஒன்றும் உதவாமற் கற்குங் கல்வி நல்ல கல்வி யாகாது.

(வி - ரை.) 'தேராமற் கற்றது' என்றும் பாடம். அற்றாயின் தெளியாமற் கற்றதென்று கொள்க. நேராமல் : வினையெச்சம்.

## எ. வாழாமல் வருந்தியது வருத்த மன்று.

(ப - ரை.) வாழாமல் - தான் வாழ்வதை வேண்டாமல், வருந்தியது - பிறர் வாழ்வுக்காக வருந்தியது, வருத்தம் அன்று - வருத்தத்திற் சேர்ந்ததன்று.

(ப - பொ.) தன்னுயிர் வாழாமை வருந்தியது வருத்தமன்று.

(க - ரை.) தன் வாழ்வுக்காக வன்றிப் பிறர் வாழ்வுக்காக வருந்துதல் வருத்தத்தோடு சேர்ந்ததாகாது.

(வி - ரை.) 'தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம் வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்' ஆதலால் பொதுமக்கள் நன்மையை வேண்டி யுழைப்பவர்க்கு அதிலுள்ள வருத்தம் வருத்தமாகத் தோன்றாது. இனி ஒருவன் செல்வத்தோடு வாழ்ந்திருக்காமல் தனக்குச் செல்வங் கிடைக்கவில்லையே என்று வருத்தப்படுவதானது வருத்தத்தோடு சேர்ந்த தாகமாட்டாது எனப் பொருள் கூறுவாருமுளர்.

## அ. அறத்தாற்றி னீயாத தீகை யன்று.

(ப - ரை.) அறத்து ஆற்றின் - அறவழியில், ஈயாதது - கொடாதது, ஈகை அன்று - கொடையாகாது.

(ப - பொ.) அறத்தின் நெறியின் ஈயாதது ஈகையன்று.

(க - ரை.) அறவழியில் ஈயாதது ஈகையன்று.

(வி - ரை) அறத்தாறு: வறியார்க் கொன்றீதல், அறச்சாலைகட்குப் பயன்படுத்தல், அறிவு முறைகட்கு வழங்கல் முதலாயின. இனி இதனை நல்லொழுக்கத்தின் நின்று ஈயாதது ஈகையன்றென்றலுமொன்று. தீயொழுக்கத்தினின்று ஈயும் ஈகை ஈகையாகாதென்பது கருத்து. ஆறு - வழி. பசுவைக்கொன்று செருப்பைத் தானஞ்செய்வது போன்றது தீயொழுக்கத்தினின் றீவது.

## கூ. திறத்தாற்றி னோலா தநோன் பன்று.

(ப - ரை.) திறத்து ஆற்றின் - தனது தகுதிக்கேற்ற வகையில், நோலாதது - தவம்புரியாமை, நோன்பு அன்று - தவமன்றாம்.

(ப - பொ.) தன் குலத்துக்கும் நிலைமைக்கும் நோலாதது தவமன்று.

(க - ரை.) தகுதிக்கேற்றவகையில் தவஞ்செய்ய வேண்டும்.

திறம் - நெஞ்சுறுதியுமாம். இனமெனவும் உரைப்பர். எம் முயற்சிகளையுமே தனது தகுதிக்கேற்பக் கொள்க என்பதற்கும் இதுவே இடமெனக்கொள்க. நோலாதது நோன்பு: நோல் முதனிலை, “நோரா நோன்பு சீராகாது” என்பது ஒளவை மொழி.

## ௯0. மறுபிறப் பறியா ததுமூப் பன்று.

(ப - ரை) மறுபிறப்பு அறியாதது - மறுமை யுண்மை யுணர்ந்து அதற்கேற்ப ஒழுகாது முதிர்ந்த முதுமை, மூப்பு அன்று - சிறந்த முதுமையாகாது.

(ப - பே.) மறுபிறப்பை யறிந்து அறத்தின்வழி யொழு காதே மூத்த மூப்பு மூப்பன்று.

(க - ரை.) மறுமைக்குரிய அறவொழுக்கங்களை ஒழுகா மலே அடைந்த மூப்புச் சிறப்புடையதாகாது.

(வி - ரை.) மூப்பு : மூ-பகுதி, தொழிற்பெயர். ஒருவன் வீழ் நாள் படாமை நன்றாற்றின் அதுவே வாழ்நாள் வழியடைக்குங் கல்லாதலின் எடுத்த பிறவியிலேயே மறுமைக்காவனவற்றை விரைந்தறிந்து ஆற்றவேண்டுமென்பதாம். இக்கருத்து:

‘இறந்த பிறப்பிற்றாஞ் செய்த வினையைப்
பிறந்த பிறப்பா லறிக—பிறந்திருந்து
செய்யும் வினையா லறிக இனிப்பிறந்
தெய்தும் வினையின் பயன்.’

என்ற அறநெறிச்சார வெண்பாவாலும் வலியுறுத்தப்படும்.

அல்லபத்து முற்றும்.

---

## ௬. இல்லைப் பத்து

அஃதாவது இல்லை (இன்மை) கூறும் பத்து முதுமொழிகளை யுடைய ஒத்து.

**௧. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**
**மக்கட் பேற்றிற் பெறும்பே றில்லை.**

(ப - ரை) ஆர்கலி உலகத்து - கடல் சூழ்ந்த இவ்வுலகத்தி லுள்ள, மக்கட்கெல்லாம் - மக்களெல்லார்க்கும், மக்கட்பேற்றின் - மக்கட் பேற்றைவிட, பெறும்பேறு - அடையத் தக்க பேறு, இல்லை - வேறில்லை.

(ப - பொ.) ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து மக்கட் கெல்லாம் புதல்வரைப்பெறும் பேற்றிற் பெறும் பேறில்லை.

(க - ரை.) மக்கட்பேறே சிறந்த பேறு.

(வி - ரை.) ஏனையவற்றினும் இஃதொன்றே இம்மையிற் சிறத்தலின், இங்ஙனம் கூறினர். என்னை ? திருவருட் குறிப்புக்கு இயைந்த தாகலின், சிறந்ததாயிற்றென்பது. இன் என்னும் ஐந்த னுருபு எல்லைப் பொருளது; ஒப்புப்பொருளும் ஓதுப. பேறு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்; ஆகுபெயராய்ப் பெறப்படுவதை புணர்த்தும். "பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த, மக்கட்பேறலல் பிற" என்ற பெருநாவலர் மொழியும்.

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும்.........
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைதாம் வாழும் நாளே."

என்ற புறநானூற்றுச் செய்யுளும் இங்கு உற்றுநோக்கற்பாலன.

**௨. ஒப்புர வறிதலிற் றகுவர வில்லை.**

(ப - ரை.) ஒப்புரவு - செய்யத்தக்க செயல்களை, அறிதலின் - செய்தலைவிட, தகு வரவு - தக்க செயல், இல்லை - வேறில்லை.

(ப - பொ.) செயக்கடவன செய்கையோடொக்கும் தகுதி யில்லை.

(க - ரை.) செய்யவேண்டிய கடமைச் செயல்களைச் செய் தலைவிடத் தக்க செயல் வேறில்லை.

(வி - ரை.) ஒப்புரவு என்பது ஒப்பது. அஃதாவது, உலக நடையை ஒப்பதுமட்டுமன்று, நூலுண்மையோடுந் தனது பழக்க வழிவோடும் உலக நடையோடும் ஒப்ப உள்ள செய்யத்தக்க செய லென்று கொள்க. தகுவரவு-தகுதியாய் வருவது; தகுதி யென்பது பொருள், "புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே ஒப்புரவின் நல்லபிற" என்பது பொதுமறை.

## ரு. வாய்ப்புடை விழைச்சி னல்விழைச்சு இல்லை.

(ப - ரை.) வாய்ப்பு உடை - மக்கட்பேறு வாய்க்கும், விழைச்சின் - கலவியின், நல்விழைச்சு - நல்ல கலவி, இல்லை - வேறில்லை.

(ப -பொ.) மக்கட்பேறு வாய்த்த கலவி போலும் கலவியின் நல்லதில்லை.

(க - ரை.) மக்கட்பேறு வாய்த்தலான கலவியே கலவியாம்.

(வி-ரை.) வாய்ப்பு-பேறு. விழைச்சு-இணைவிழைச்சு, கலவி. இது மயக்கத்தால் நிகழ்வதன்றி அறிவாலும் உணர்வாலும் நிகழ் தலின், மற்றதனிலும் மேலானதாயிற்று. வாய்ப்புடை வழக்கின நல் வழக்கில்லை யென்ற பாடங் கொள்வார் தகுதியுடைய வழக் கினை மேற்கொள்ளுதலைப் பார்க்கினும் சிறந்த வழக்கு இல்லை யென்று பொருளுரைப்பர். இனி வழக்கு என்பதற்குப் பிறப்பு என்றுரைகூறுவாரு முளர்.

## சு. வாயா விழைச்சிற் றீ விழைச் சில்லை.

(ப - ரை.) வாயா - மக்கட்பேறு பொருந்தாத, விழைச்சின்- கலவியைவிட, தீவிழைச்சு - தீமையான கலவி, இல்லை - வேறில்லை.

(ப - பொ.) மக்கட்பேற்றின் பொருட்டன்றிக் கலக்கு கலவிபோலத் தீயதில்லை.

(க - ரை.) மக்கட்பேறு வாயாத கலவி தீய கலவியாம்.

(வி - ரை.) அறிவும் உணர்வுமின்றி உடம்புங் கெட்டுப் பயனுமின்றிப் போதலின் இது கூறினர். வற்புறுத்துவான் கருதி இதனை எதிர்மறையானுங் கூறினரென்க. திருக்குறளிற் 'கல்வி' யென்றும், 'கல்லாமை' என்றும் இரண்டு தலைப்புகள் நிறுத்தப் பட்டவாறு போலவென்பது. "வாயா வழக்கிற் றீவழக் கில்லை" என்ற பாடத்துக்கு, சாட்சி முதலியன நன்கு பொருந்தாத வழக்கைப்போல் கெட்ட வழக்கு வேறில்லை யென்றுரைக்க. வாயா - பொருந்தாத.

## ரு. இயைவது கரத்தலிற் கொடுமை இல்லை.

(ப - ரை.) இயைவது - கொடுத்தற்கு இயலுமானதை கரத்தலின் - கொடாது ஒளித்தலினும், கொடுமை - கொடுமை யானது, இல்லை - வேறில்லை.

(ப - போ.) தான் பிறர்க்குப் கொடுக்க இயலும் பொருளை இல்லையென்று கரக்கும் கரப்பிற் கொடுமையில்லை.

(க - ரை.) இயலுவதைக் கரத்தல் பெருங்கொடுமையாம்.

(வி - ரை.) இல்லாது ஈயாமையினும் இருந்தும் ஈயாமை பெருங் கொடுமை யாதல்பற்றி இங்ஙனங் கூறினர். "யாதுங் கரவன்மின் கைத்துண்டாம் போழ்து" என்றார் நாலடியாரிலும். திருவள்ளுவரும் "இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும், பார்தாக்கப் பக்கு விடும்" என்று இரவச்சம் அ-ஆம் குறளிற் கூறியிருத்தல் காண்க. ஒளவையாரும் 'இயல்வது கரவேல்' என்றார். இயல்வது வினையாலணையும் பெயர். கரத்தல் - கர: பகுதி.

## சா. உணர்வில னாதலிற் சாக்கா டில்லை.

(ப - ரை.) உணர்வு - மெய்யுணர்வு, இலன் ஆதலின் - இல்லாதவனாயிருத்தலினும், சாக்காடு - இறப்பு, இல்லை - அவனுக்கு வேறில்லை.

(ப - போ.) ஒருவற்கு அறிவின்மையோ டொக்கும் சாக்கா டில்லை.

(க - ரை.) உணர்வில்லாதவன் பிணத்துக்கு ஒப்பாவான்.

(வி - ரை.) 'உரையிலனாதலின்' என்ற பாடங் கொள்வோர், புகழில்லாதவனா யிருத்தலைக் காட்டினும் என்று பொருள் கூறுவர். பிறத்தலின் பயன் உணர்வாதலின், அவ்வுணர்வைப் பெறாதான் பிறந்தும் பிறவாதவனாவ னென்றார். சாக்காடு என்பதில் காடு தொழிற்பெயர் விகுதி. இனி, உரை இலன் என்பதற்குக் கேள்விக்குத் தக்க விடை அளிக்கும் அறிவு ஒருவ னுக்கு இல்லை யென்றால் என்றும் பொருள் கூறப்படும்.

## எ. நசையிற் பெரியதோர் நல்குர வில்லை.

(ப - ரை.) நசையின் - அவாவினும், பெரியதோர் - மிக்க தொரு, நல்குரவு - வறுமை, இல்லை - வேறில்லை.

(ப - பொ.) ஆசையின் மிக்கதொரு வறுமையில்லை.

(க - ரை.) ஒருவனுக்கு அவாவே வறுமை யென்பதாம்.

(வி - ரை.) பொருள்களிடத்து நசையுடையானுக்கு அப் பொருள்கள் இல்லாமையே ஒரு பெருங் குறையாய்த் தோன்று தலின், அவனுக்கு நசையே வறுமையாய் முடிதல் காண்க. மேலும், பொருண்மேல் நசையுடையான் அந்நசையையே எண்ணிக் கொண்டிருத்த லல்லாமல் அதனை யடைதற்குரிய முயற்சிகளை ஒழுங்காகச் செய்யமாட்டா னாதலின், அவனுக்கு நசையே வறுமை விளைத்தமையுங் காண்க. "நல்குரவென்னும் நசை" (நல்குரவு-௩) என்னும் திருவள்ளுவர் பொன்மொழி இங்குப் பெரிதும் நினைவுகூரற்பாலது. நசை - விருப்பம், பண்புப்பெயர்.

## அ. இசையிற் பெரியதோ ரெச்ச மில்லை.

(ப - ரை.) இசையின் - புகழுடைமையின், பெரியது ஓர் - மிக்கதொரு, எச்சம் - மிச்சப்படுத்தும் பொருள், இல்லை - இவ் வுலகத்தில் வேறில்லை.

(ப - பொ.) புகழுடைமையின் மிக்குப் பிறர் பயப்பதோர் ஆக்கம் ஒருவர்க் கில்லை.

(க - ரை.) புகழே இவ்வுலகத்திற் சேர்த்து வைக்கும் வைப்பாகும் என்பது.

(வி - ரை.) எச்சம் - எஞ்சி நிற்பது; தொழிற்பெயர். அஃதாவது ஒருவன் தான் இறந்த ஞான்றும் அவன்பாலதாய் எஞ்சி நிற்பது. அது புகழையன்றி வேறாகாமையின் அங்ஙனங் கூறினர். எச்சம் - சந்ததியுமாம். இசை என்பதற்கு எதிர் மொழி வசை. திருவள்ளுவரும் "வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும், எச்சம் பெறாஅ விடின்" என்றார்.

## ௯. இரத்தலி னூஉங் கிளிவர வில்லை.

(ப - ரை.) இரத்தலின் ஊங்கு - இரத்தலைவிட, இளி வரவு - இகழ்ச்சி, இல்லை - வேறில்லை.

(ப - போ.) இரந்து உயிர் வாழ்தலின்மேல் கீழ்மை இல்லை.

(க - ரை.) ஒருவனுக்கு இரத்தலைவிட இகழ்ச்சி வேறில்லை.

(வி - ரை.) இளிவரவு-ஏளனம். ஊங்கு - மிகுதிப் பொருள் தருவதோர் இடைச்சொல். "ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற், கிரவின் இளிவந்த தில்" என்பது (இரவச்சம் - ௬) பொய்யா மொழி.

## ௧௦. இரப்போர்க் கீதலின் எய்துஞ் சிறப்பில்லை.

(ப - ரை.) இரப்போர்க்கு - பிச்சை யெடுப்பவர்கட்கு, ஈதலின் - ஒன்று கொடுப்பதைவிட, எய்தும் சிறப்பு - அடையும் மேன்மை, இல்லை - வேறில்லை.

(ப - போ.) இரப்போர்க்குக் கொடுப்பதின் மிக்கதாய் எய்தும் மேன்மை இல்லை.

(க - ரை.) ஈதற்சிறப்பினும் பெருஞ்சிறப்பு வேறில்லை.

(வி - ரை.) இம்மைக்குப் பெரும்புகழும் மறுமைக்குத் திருவருளும் விளைதலின், 'ஈதலின் எய்துஞ் சிறப்பில்லை' என்றார். ஔவையாரும் "இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தார்" என்றார். செந்நாப்போதாரும் "உரைப்பார் உரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன், றீவார்மேல் நிற்கும் புகழ்" என்றனர்.

இல்லைப்பத்து முற்றும்.

## எ. பொய்ப் பத்து

அஃதாவது பொய்ம்மை கூறும் பத்து முதுமொழிகளை யுடையதென்பது.

க. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பேரறிவி ளேனினிது வாழா மைபொய்.

(ப - ரை.) ஆர்கலி - கடல்சூழ்ந்த, உலகத்து - இவ்வுலகத்தில், மக்கட்கு எல்லாம் - மக்களெல்லார்க்கும், பேர் அறிவினேன் - பேரறிவுடையவன், இனிது வாழாமை - இன்பமாய் வாழானென்பது, பொய் - பொய்யாகும்.

(ப - போ.) ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து எல்லா மக்களுள்ளும் ஒருவன் பேரறிவுடையனுயின், அவன் மனத்தால் இன்புற் றொழுகாமை பொய்.

(க - ரை.) பேரறிவுடையான் இன்பமாய் வாழ்வான் என்பதே உண்மையாம்.

(வி - ரை.) பேரறிவென்பது நூலறிவும் உத்தியுணர்வும் உலக நடையும் அளந்துணரவல்ல அகலவறிவு. இனிது: வினையுரிச்சொல். பொய் என்பதன் ஈற்றில் ஆக்கவினை தொக்கு நின்றது.

உ. பெருஞ்சீ ரோன்றன் வெகுளியின் மைபொய்.

(ப - ரை.) பெரும் சீரோன் - மிக்க செல்வமுள்ளவன், தன் - தன்னிடத்தில், வெகுளி இன்மை - சினமில்லா திருத்தல் பொய் - அரிது.

(ப - போ.) பெருஞ் செல்வத்தைப் பெற்றா னொருவன் வெகுளாமை பொய்.

(க - ரை.) மிக்க செல்வமுள்ளவன் சினமில்லா திருத்தல் அரிது.

(வி - ரை.) சினத்தை யடக்குவது அறிவே யல்லாமற் பொருளன்றாதலால் "சீரோன் வெகுளியின்மை பொய்" என்றார்.

பொருள் சினத்தைப் பெருக்கும் இயல்பின தென்றும், ஈண்டுணர் தல் வேண்டும். வெகுளி : வெகுள் பகுதி, இ : தொழிற்பெயர் விகுதி. தன் : சாரியை யெனலுமாம். சீர் - செல்வம் ; காரிய வாகுபெயர்.

## ௩. கள்ளுண் போன்சோர் வின்மை பொய்.

(ப - ரை.) கள் உண்போன் - கள்ளைக் குடிப்பவன், சோர்வு இன்மை - ஒழுக்கங்களில் வழுவா திருத்தல், பொய் - இல்லையாம்.

(ப - பொ.) கள்ளையுண்போன் ஒழுக்கஞ் சோர்வின்மை பொய்.

(க - ரை.) கட்குடியன் அறிவு ஒழுக்கங்களால் வழுவி விடுவான்.

(வி - ரை.) சோர்வு - நெகிழ்ச்சி, அஃதாவது, நினைப்புஞ் சொல்லுஞ் செயலுந் தன்னடக்கத்தில் நில்லாமையும், அவ்வாற்றல் அறிவும் ஒழுக்கமும் நிலையாமையும் என்க. "கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால், உள்ளான்கொல் உண்டதன் சோர்வு" என்றார் திருவள்ளுவர்.

## ௪. காலமறி யாதோன் கையுறல் பொய்.

(ப - ரை.) காலம் - முயற்சி செய்தற்குரிய காலத்தை, அறி யாதோன் - அறிந்து முயலாதவன், கை உறல் - செயல் முடியப் பெறுதல், பொய் - இல்லை.

(ப - பொ.) காலமறிந்து முயலாதோன் கருமமுடிதல் பொய்.

(க - ரை.) காலமறிந்து செய்வோன் முயற்சி கைகூடும்.

(வி - ரை.) கை - செயல், அன்றிக் கையுறல் என்பதை ஒரு சொல் எனக்கொண்டு அடைதல் என்றுரைப்பினும் அமையும். 'கைத்துறல்' என்ற பாடமோதுவாரு முளர். "அருவினை யென்ப உளவோ கருவியாற், கால மறிந்து செயின்" என்றார் வள்ளுவரும்.

576

## ரு. மேல்வர வறியாதோன் தற்காத் தல்பொய்.

(ப - ரை.) மேல் வரவு - எதிர் காலத்தில் வருதலை, அறியாதோன் - அறிந்து அதற்கேற்ப ஒழுகாதோன், தன் காத்தல் - தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்ளல், பொய் - இல்லை.

(ப - பொ.) எதிர்காலத்து வரும் இடையூறு அறியாதான் தனக்கு அரண் செய்து காத்தல் பொய்.

(க - ரை.) வருவ தறிவோனே தற்பாதுகாப் புடையவனும்.

(வி - ரை.) மேல், காலத்தின்மே னின்றது. அறியாதோன் என்றது அறிந்து முன் முயற்சி செய்யாதான் என்றற்கு. "அறிவுடையாராவ தறிவார்" (அறிவுடைமை - எ) என்றூர் தேவரும். அறியாதோன் : வினையாலணையும் பெயர். வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர், வைத்தூறுபோலக் கெடும்" (குற்றங் கடிதல் - ரு) என்ற திருக்குறளுங் காண்க.

## சு. உறுவினை காய்வோன் உயர்வுவேண் டல்பொய்.

(ப - ரை.) உறு வினை - தக்க செயலை, காய்வோன் - செய்யாமல் வெறுத்துச் சோம்பியிருப்பவன், உயர்வு - மேன்மை, வேண்டல் - தேடுதல், பொய் - இல்லை.

(ப - பொ.) மிக்க கருமம் செய்கைக்கு மடிந்திருப்போன் தனக்கு ஆக்கம் வேண்டுதல் பொய்.

(க - ரை.) சிறந்த செயல்களைச் செய்யாமற் சோம்புவானுக்கு மேன்மையில்லை.

(வி - ரை.) உறு வினை - செயற்கரிய செயல். உறு - மிகுதிப் பொருள் குறித்த உரிச்சொல். காய்தல் - மடியினல் வெறுத்தல். உயர்வு - கல்வி, செல்வம், புகழ் முதலியன. 'உறுவினைக் கயர்வோன்' என்றும் பாடம்.

## எ. சிறுமைநோ னுதோன் பெருமைவேண் டல்பொய்.

(ப - ரை.) சிறுமை - சிறியனு யிருக்கும் அடக்கத்தை, நோனுதோன் - பொறுதவன், பெருமை வேண்டல் - பெருமையை விரும்புதல், பொய் - இல்லை.

(ப - போ) பிறர்க்குத் தான் செய்யும் பணிவினைப் பொறு தோன் தனக்குப் பெருமை வேண்டுதல் பொய்.

(க - ரை.) பெருமைச் செருக்கில்லாதவன் இழிந்த இயல் புகளை வேண்டான்.

(வி - ரை.) பெருமை, ஈண்டுப் பெருமை படைக்குஞ் செருக்கு. அஃதில்லாத பெரியோர் மாட்டுப் பிறரைக் கீழ்ப் படுத்தொழுகுஞ் சிறுமையின்மையின், இங்ஙனங் கூறப்பட்டது. இனிப் பிறர் செய்யும் பெருமையை விரும்பாதவனுக்கு எஞ்ஞான் றும் சிறுமை சேரல் இல்லையெனப் பொருள் கூறுவாருமுளர். சிறுவர் பெருமை முரண்தொடை.

அ. பெருமைநோ னுதோன் சிறுமைவேண் டல்பொய்.

(ப - ரை.) பெருமை - பிறர்க்கு அரியனுயிருக்கும் பெரு மைச் செருக்கை, நோனுதோன் - பொறாதவன், சிறுமை வேண்டு தல் - கீழ்மையை விரும்புதல், பொய் - இல்லை.

(ப - போ.) பிறர்க்குத் தான் அரியனுகும் பெருமை வேண் டாதான் தனக்குச் சிறுமைக் குணம் வேண்டுதல் பொய்.

(க - ரை) பெருமைச் செருக்கில்லாதவன் இழிந்த இயல்பு களை வேண்டான்.

(வி - ரை.) பெருமையில்லாத பெரியோர் மாட்டுப் பிறரைக் கீழ்ப்படுத்தொழுகுஞ் சிறுமையின்மையின் இங்ஙனம் கூறப் பட்டது. இனிப் பிறர் செய்யும் பெருமையை விரும்பாதவனுக்கு எஞ்ஞான்றும் சிறுமை சேரல் இல்லை யெனப் பொருள் கூறுவாரு முளர். நோனு தான் - நோன் : பகுதி, நோன்றல் - பொறுத்தல்.

௯. பொருணசை வேட்கையோன் முறைசெயல் பொய்.

(ப - ரை.) பொருள் நசை வேட்கையோன் - பொருள் விருப்பத்தாலுண்டாகும் பற்றுள்ள முடையவன், முறை செயல் - அறநெறிப்படி முறை செய்தல், பொய் - இல்லை.

(ப - போ.) பொருள் நசையால் வரும் வேட்கையை யுடை யான் முறைசெய்தல் பொய்.

(க - ரை.) பொருட்பற் றுடையவன் நடுவு நின்று முறை செய்த லில்லை.

(வி - ரை.) நசை யென்பது விருப்பமென்றும், வேட்கை யென்பது பற்றுள்ளம் என்றும் பொருளாமாற்றை, வேட்கை யாவது பொருள்கள்மேற் றோன்றும் பற்றுள்ளம் என்றும், அவா வாவது அப்பொருள்களைப் பெறவேண்டுமென்று மேல்மேல் நிகழும் ஆசை யென்றும் **தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர்** கூறி யிருப்பதால் அறிக. வேட்கை : தொழிற் பெயர் ; வேள் : பகுதி.

## கo. வாலிய னல்லாதோன் தவஞ்செய் தல்பொய்.

(ப - ரை). வாலியன் அல்லாதோன் - உள்ளத்தின்கண் தூயனல்லாதவன், தவம் செய்தல் - தவஞ்செய்தல் என்பது, பொய் - இல்லை.

(ப - பொ.) மனத்தின்கண் தூயனல்லாதோன் தவஞ் செய்தல் பொய்.

(க - ரை.) உள்ளத்தின்கண் தூய்மை யில்லாதவன் தவஞ் செய்தல் இயலாது.

(வி - ரை.) வால் - தூய்மை. இஃது இப்பொருட்டாதலை, "வெண்ணிறம் பெருமை தூய் தோகையும் வாலே" என்னும் (சoருஅ) **பிங்கலந்தை**யிற் காண்க. வாலி-எதிர்மொழி வாலாமை. தவம் நெஞ்சழுக்கின்மையால் நிகழ்வதாதலின் இங்ஙனம் கூறப் பட்டது. அல்லாதோன் : எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும் பெயர். "மனத்தது மாசாக மாண்டார் நீராடி, மறைந்தொழுகு மாந்தர் பலர்" என்ற வள்ளுவர் வாய்மொழி காண்க.

**பொய்ப்பத்து முற்றும்.**

---

## அ. எளிய பத்து

என்றது எளிமை கூறும் பத்து முதுமொழிகளை யுடையது என்பது.

### க. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
### புகழ்வெய் யோர்க்குப் புத்தேணா டெளிது.

(ப-ரை) ஆர்கலி - கடல் சூழ்ந்த, உலகத்து - இவ்வுலக கத்திலுள்ள, மக்கட்கு எல்லாம் - மக்கள் எல்லாருள்ளும், புகழ் வெய்யோர்க்கு - புகழப்படும் அறச்செயல்களைச் செய்ய விரும்பி னார்க்கு, புத்தேள் நாடு - தேவர்கள் வாழும் விண்ணாடு, எளிது - கிடைத்தல் எளிதாம்.

(ப-போ.) ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து மக்க ளெல்லாருள்ளும் ஒருவர்க்குப் புகழ்விருப்பின் கடவுளர் வாழு நாடு பெறுதல் எளிது.

(க-ரை.) புகழ்மிக்க அறச்செயல்களை விரும்பினோர் விண்ணாடு பெறல் எளிது.

(வி-ரை.) புகழ்-அறச்செயல்களைச்செய்வதனா லுண்டாகும் புகழ். வெய்யோ ரென்பதில் வெம்மை - பகுதி; விரும்புத லென்பது பொருள். "வெம்மை வேண்டல்" (தொல்காப்பியம் - அகூசு உரியியல்), என்றார் தொல்காப்பியனாரும். புகழுடையார் மேனாடு பெறு முண்மையை,

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
எய்துப என்பதம் செய்வினை முடித்து"

என்னும் புறநானூற்று உஎ-ஆம் செய்யுளடிகளிலுங் காண்க.

### உ. உறழ்வெய் யோருக் குறுசெரு வெளிது.

(ப-ரை.) உறழ் - கலகத்தை, வெய்யோருக்கு - விரும்பின வர்களுக்கு, உறு செரு - மிக்க போர், எளிது - எளிதிலுண்டாகும்.

(ப - போ.) பிறரோடு கலகம் விரும்புவார்க்கு மிக்க செரு எளிது.

(க - ரை.) கலகத்தின்மேல் விருப்ப முடையார்க்குப் போர் உண்டாதல் எளிது.

(வி - ரை.) உறழ்-பகை, முதனிலைத் தொழிற் பெயர். அஃதிங்குக் கலகத்தின்மேல் நின்றது. உறு: உரிச்சொல். செரு: முதனிலைத் தொழிற்பெயர்.

## ௩. ஈரம்வெய் யோர்க்கு நசைகொடை எளிது.

(ப - ரை.) ஈரம் - அன்பை, வெய்யோர்க்கு - விரும்பினார்க்கு, நசை - பிறர் விரும்பிய பொருளை, கொடை - கொடுத்தல், எளிது - எளிதாகும்.

(ப - போ.) மனத்துள் ஈரத்தை விரும்பி யிருப்பார்க்குப் பிறனொருவன் கேட்கக் கொடுத்தல் எளிது.

(க - ரை) அன்பை விரும்புவோர் ஈதலிலும் எளியரா யிருப்பர்.

(வி - ரை.) நசை: ஆகுபெயர். அன்பியல் புடையவன் பிறர் இன்பத்தை விரும்புவானாதலின், அவற்குக் கொடை எளிதென்றார் "மூன்னும், ஈரமுடைமை ஈகையினறிப" (அறிவுப்பத்து-அ) என்றார். 'நாமம் வெய்யோர்க்கு' என்றும் பாடம். "அன்பிலாரெல்லாம் தமககுரியர் அன்புடையார், என்பு முரியர் பிறர்க்கு" என்றார் திருவள்ளுவரும்.

## ௪. குறளைவெய் யோர்க்கு மறைவிரி யெளிது.

(ப - ரை.) குறளை - கோட் சொற்களை, வெய்யோர்க்கு, விரும்புகின்றவர்க்கு, மறைவிரி - மறையை வெளிப்படுத்தல்- எளிது - எளிதாகும்.

(ப - போ.) குறளைச்சொல்லை விரும்புவார்க்கு ஒருவன் மறையச்செய்த தொன்றனை வெளிப்படுத்திப் பிறரை யறிவித்தல் எளிது.

(க - ரை.) கோட்சொற்களில் பழகுவார்க்கு மறையை வெளிப்படுத்தாம லிருத்தல் அரிது.

(வி-ரை.) மறை, விரி: முதனிலைத் தொழிற் பெயர்கள். குறளை-புறங்கூறல். குறள் (பேய்) போல் பிடித்துத் துன்பஞ் செய்தலால் குறளை யெனப்பட்டது போலும்

## ரு. துன்பம் வெய்யோர்க் கின்பம் எளிது.

(ப - ரை.) துன்பம் - முயற்சியால் வருந்துன்பங்களை, வெய்யோர்க்கு - விரும்புவார்க்கு, இன்பம் எளிது - இன்பம் எளிதாகும்.

(ப - பொ.) ஒன்றனை முயன்று வருந் துன்பத்தை வெறாதார்க்கு இன்பம் எய்தல் எளிது.

(க - ரை.) ஒன்றனை முயலுங்கால் எதிருந் துன்பத்தை விரும்புவார்க்கு இன்பம் எளிதிலுண்டாகும்.

(வி - ரை.) முயற்சித் துன்பங்களை விரும்புவார் முயற்சி தளரார் ஆதலின், அம்முயற்சியை அவர் முற்றமுடித்து எளிதில் இன்பம் எய்துவர் என்க. "இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான், துன்பம் உறுதல் இலன்", (திருக்குறள், இடுக்கணழியாமை - அ.)

## ௬. இன்பம்வெய் யோர்க்குத் துன்பம் எளிது.

(ப - ரை.) இன்பம் - முயற்சியின் பயனாகிய இன்பத்தை, வெய்யோர்க்கு - முயலும்போதே விரும்புவார்க்கு, துன்பம் எளிது - துன்பங்களே எளிதில் மிகும்.

(ப - பொ.) முயன்றுவருந் தன்மையால் வரும் இன்பத்தை விரும்புவார்க்குப் பொரு ளில்லாமையால் வரும் துன்பம் எளிது.

(க - ரை.) இன்பமென்னும் பயனை விரும்பி முயல்வார்க்குத் துன்பம் மிகும்.

(வி - ரை.) இன்பமே நினைவா யிருப்பவர்க்குத் துன்பத்தைப் பொருட்படுத்தாது ஏற்று முயலுந் திறங் கூடாமையின், அம் முயற்சி செவ்வையாய் முற்றுப்பெறாது இடைமுறிதலும், அவ்வாற்றால் அவர்க்குத் துன்பம் விளைதலும் எளிதாகுமென்பது

"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர், துன்பந் துடைத்தூன்றுந் தூண்" (திருக்குறள், ஆள்வினையுடைமை, - ரு) என்னும் நாயனர் திருமொழி இங்கு உற்றுநோக்கத்தக்கது.

## எ. உண்டி வெய்யோர்க் குறுபிணி யெளிது.

(ப - ரை.) உண்டி - மிக்க உணவை, வெய்யோர்க்கு - விரும்புகின்றவர்க்கு, உறு பிணி - மிகுந்த நோய், எளிது - எளிதி லுண்டாகும்.

(ப - பொ.) உண்டி மிக விரும்பினர்க்கு மிக்க பிணி எளிது.

(க - ரை.) அளவுக்குமே லுண்கின்றவர்களுக்கு மிகுதியாய் நோயுண்டாகும்.

(வி - ரை.) உண்டி - உண்ணப்படுவது; இது செயப்படு பொருளில் வந்த இகரவீற்றுத் தொழிற்பெயர். ட்: எழுத்துப்பேறு; பிணி முதனிலைத் தொழிற்பெயர். இகர விகுதி புணர்ந்து கெட்டது. அளவின்றி யுண்பார்க்குக் கரையின்றி நோயுளதாம் என்பது, 'இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும், கழிபேரிரையான்கண் நோய்', "தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின், நோயள வின்றிப் படும்" என்ற நாயனர் மொழி களால் நன்கு வலியுறும்.

## அ. பெண்டிர்வெய் யோர்க்குப் படுபழி யெளிது.

(ப ரை-) பெண்டிர் - பெண்மக்களை, வெய்யோர்க்கு - விரும்பி யொழுகுகின்றவர்கட்கு, படுபழி - உண்டாகும் பழி, எளிது - எளிதாகும்.

(ப - பொ.) பெண்டிரை மிக விரும்பினர்க்கு உண்டாகும் பழி எளிது.

(க - ரை.) பெண்டிரை விரும்பி யொழுகுவார்க்குப் பழிகள் எளிதில் விளையும்.

(வி - ரை.) காம மிகுதியாற் பெண்வழிச் சேறலால், ஆண்மையிழந்து கடமை நழுவல் முதலியன நேர்தலின், ஆள்வினை கெட்டுப் பழியுண்டாகு மென்க. இனிப் படுபழி யென்பதைப்

படுபாழ், படுநீலி யென்பவற்றைப் போல மிக்க பழி யென்றுரைத் தலுமாம். பெண்டிர் : பெண்மை என்னும் பண்படியாகப் பிறந்த பலர்பாற் பெயர். பெண்மை, அமைதித்தன்மை.

**கூ. பாரம்வெய் யோர்க்குப் பாத்தூ ணெளிது.**

(ப - ரை.) பாரம் - பிறர்சுமையை, வெய்யோர்க்கு - தாம் ஏற்றுக்கொள்ள விரும்புவார்க்கு, பாத்து ஊண் - தமக்கு உள்ள தைப் பகுத்துக் கொடுத்து உண்ணல், எளிது - எளிதாகும்.

(ப - பொ) பிறர் பாரத்தைத் தாங்குதலை விரும்புவார்க் குப் பகுத்துண்டல் எளிது.

(க - ரை.) பிறர்பாற் கவலையுற்றவர்களுக்குப் பகுத்துண் ணுதல் எளிது.

(வி - ரை.) 'பாரம் வெய்யோர்' என்றது, பிறர்க்கு ஆக வேண்டிய செயல்களைத் தாம் தாங்கிச் செய்வோர். அவ்வியல் பினர் பிறர் பசித்திருக்கப் பொறாராதலின், பாத்தூ ணெளி தென்றார். பாத்து, பகு என்பதன் மரூஉவாகிய பா : பகுதி. பெருமையை விரும்பினார்க்கு என்ற பாடமும் உண்டு. ஊண் - முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

**கo. சார்பி லோருக் குறுகொலை யெளிது.**

(ப - ரை.) சார்பு இலோருக்கு - நல்வினத்தார் சேர்க்கை இல்லாதவர்கட்கு, உறு கொலை - உள்ள கொலைத் தொழில், எளிது - எளிதாகும்.

(ப - பொ.) நன்னட்பைச் சாராதோருக்குப் பொருந்திய கொலைத்தொழில் செய்தல் எளிது.

(க - ரை.) நல்வினத்தார் சேர்க்கையில்லாதவர் கொலைத் தொழிலை எளிதாய்ச் செய்வர்.

(வி - ரை.) சார்பு - தொழிற்பெயர். கொலை யென்பது தனக்கின மாகிய புலை முதலிய தீய செயல்களையுந் தழுவிற்று. திருவள்ளுவரும், "மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும், இனந் தூய்மை தூவா வரும்" என்றது கருதற்பாலது.

எளிய பத்து முற்றும்.

## ௬. நல்கூர்ந்த பத்து

என்றது நல்கூர்தல் கூறும் பத்து முதுமொழிகளை யுடைய தென்றவாறு.

**௧. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**
**முறையி லரசனாடு நல்கூர்ந் தன்று.**

(ப - ரை.) ஆர்கலி-கடல் சூழ்ந்த, உலகத்து-இவ்வுலகத்தி லுள்ள, மக்கட்கு எல்லாம் - மக்களெல்லார்க்கும், முறை யில் - முறைமை யில்லாத, அரசன் நாடு - அரசனது நாடு, நல்கூர்ந் தன்று - வறுமையுறும்.

(ப - பொ.) ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்துள் எல்லா மக்கட்கும் முறைமை செய்யா அரச னாடு வறுமையுறும்.

(க - ரை.) முறை செய்யாத அரசனுடைய நாடு எந்நாளும் வறுமையுடையதாகும்.

(வி - ரை.) நல்கூர்ந்தன்று - உடன்பாட்டுவினை. அரசன் முறையின்மையால் அவன் நாடு பெயல் குறைந்து வறக்குமென்க. நாடு : நாட்டிலுள்ளாரை யுணர்த்துகையில் இடவாகுபெயர்.

"முறை கோடி மன்னவன் செய்யின் உறைகோடி, ஒல்லாது வானம் பெயல்"

"நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன், நாடொறு நாடு கெடும்" என்று திருவள்ளுவர் கூறியிருத்த லுணர்க.

**௨. மிகமூத் தோன்காம நல்கூர்ந் தன்று.**

(ப - ரை.) மிக மூத்தோன் - இளமை கடந்து மிகவும் மூத்து உடல் தளர்ந்தவன், காமம் - காமநுகர்ச்சி, நல்கூர்ந்தன்று - வறுமையுறும்.

(ப - பொ.) மிக மூத்தான் காமத்திற் றுய்க்கும் நுகர்ச்சி வறுமையுறும்.

(க - ரை.) இளமை கடந்தவன் நுகருங் காமநுகர்ச்சி இன்பம் வற்றும்.

(வி - ரை.) கட்டிளமையுடன் நுகரும் காமவின்பம்போல, அது கடந்தமுதியவன் நுகரும் இன்பம் சிறவாதாகலின் இங்ஙனங் கூறினர். வறுமையுறும் என்றது இல்லையா மென்றற்கு. ஏனைய வற்றிற்கும் அதுவே கொளக. இதனை அகம் வறியோன் என்று இப்பத்தினிறுதியில் வருந் தொடர்ப்பொருளானுமுணர்க.

௩. செற்றுட னுறைவோனைச் சேர்தனல் கூர்ந்தன்று.

(ப - ரை.) செற்று - உட்பகை கொண்டு, உடன் உறை வோனை - அது தெரியாமல் உடன் வாழ்பவனை, சேர்தல் - நண்ப ராய்க் கொண்டொழுகுதல், நல்கூர்ந்தன்று - வறுமையுறும்.

(ப - போ.) தன்னைச் செறுத்தொழுகுவானைச் சென்றடை தல் வறுமையுறும்.

(க - ரை.) உட்பகை யுடையோரை நண்பராய் மேற்கொண் டொழுகல் வறுமைக்கிடமாம்.

(வி - ரை.) உட்பகை யுடையோர் வெளிப்பகை காட்டாமல் நண்பராய் உடன் உறைதலானமை, பிறர் மறையை உளவா யறிந்து அவரைச் செல்வம் செல்வாக்கு முதலியவற்றிற் கீழறுத் தலுடைமையின், அவருடனுறைவு வறுமையை விளக்கு மென் றனர். "உடன்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள், பாம்போ டுடனுறைந் தற்று" (திருக்குறள் உட்பகை: ரு.) என்பார் வள்ளுவனர்.

செற்று : வினையெச்சம். செறு : பகுதி, ஒற்று இரட்டி இறந்தகாலங் காட்டியது.

ச. பிணிகிடந் தோன்பெற்ற வின்பநல் கூர்ந்தன்று.

(ப - ரை.) பிணிகிடந்தோன் - நோயடைந்து உடம்பு மெலிந்தவன், பெற்ற இன்பம் - அடைந்த உலக இன்பங்கள், நல்கூர்ந்தன்று - வறுமையுறும்.

(ப - போ.) பிணிபட்ட உடம்பை யுடையான் நுகரும் காமவின்பம் வறுமையுறும்.

(க - ரை.) நோயாளர்க்கு உலகத்தில் ஏதும் இன்பமில்லை.

(வி - ரை.) பிணிகிடந்தோன் - பிணிபட்டுக் கிடந்தவன்; அவன் எத்துணைச் செல்வங் கல்வி முதலான இனிய வாழக்கையிலிருந்தாலும், உணவு, உடை, நகை, பெண்டிர், மக்கள்முதலான நலங்களை நிரம்பத் துய்த்தாலும், அவற்றாற் பெறற்குரிய இன்பம் அத்தனையும் அவற்கு வற்றியதாகவே காணப்படுமாதலின் இங்ஙனங் கூறப்பட்டது. பிணித்தல் - கட்டுதல், நோயால் கட்டுப்படுதல்; பிணி - முதனிலைத் தொழிற்பெயர்.

ரு. தற்போற் றுவழிப் புலவிநல் கூர்ந்தன்று.

(ப - ரை.) தன் போற்றுவழி - தன் மேல் அன்புடையராய்த் தன்னைப் போற்றுதாரிடத்து, புலவி - பிணங்குதல், நல்கூர்ந்தன்று - வறுமையுறும்.

(ப - போ.) தன்மே லன்பாற் போற்றுதார் திறத்துப் புலக்கும் புலவி வறுமையுறும்.

(க - ரை.) அன்பிலார் மாட்டுப் புலத்தல் இன்பம் பயவாது.

(வி - ரை.) இன்பம் பயவாமையோடு ஒருகால் பகைமையை விளைத்தலுங் கூடுமென்க. மேலும் அன்பிலார் புலவியை நிலை புணர்ந்து தீர்த்தல் செய்யார். அன்புடையார் உணர்ந்துசெய்வார். நாயனார், "நீரும் நிழல தினிதே புலவியும், வீழுநர் கண்ணே யினிது" (திருக்குறள்-புலவி, க) என்றார். போற்று: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். தற்போற்று: இரண்டாம் வேற்றுமைத் தொகை.

சு. முதிர்வுடை யோன்மேனி யணிநல் கூர்ந்தன்று.

(ப - ரை) முதிர்வு உடையோன் - முதுமைப் பருவம் அடைந்தவனது, மேனி அணி - உடம்பிலணியும் அணி வகைகள், நல்கூர்ந்தன்று - வறுமையுறும்.

(ப - போ.) மூத்த உடம்பினையுடையான் அணியுமணி வறுமையுறும்.

(க - ரை.) கிழப்பருவத்தோன் அணியும் அணிகலன்கள் அழகுதரா.

(வி-ரை.) அணி-அணியப்படுவது, ஏதுக்குறி. முதிர்வு: முதிர் என்னும் பகுதியடியாகப் பிறந்த தொழிற்பெயர். முதிர்வாவது திரைதல், கூனுதல், நரைத்தல், பற்கழலுதல், தலை நடுங்கல், ஒளி மழுங்கல் முதலிய செயல். செயற்கை நலங்கள் இயற்கை நலங் கிளர்ந் தொளிரும் இளமைக்கே மேன்மை தருமல்லது அந் நலங் கள் ஒருங்கவிந்து முதிர்ந்த முதுமைக்கு அங்ஙனம் மேன்மை தாராவென்க. அணி - அழகுமாம்.

எ. சொற்செல் லாவழிச் சொலவுநல் கூர்ந்தன்று.

(ப - ரை.) சொல் - தன் சொல், செல்லாவழி - மதிக்கப் படாவிடத்து, சொலவு - ஒன்றைச் சொல்லுதல், நல்கூர்ந்தன்று - வறுமையுறும்.

(ப - போ.) தன் சொல் செல்லாவிடத்துச் சொல்லிய சொல் வறுமையுறும்.

(க - ரை.) தன் சொல்லை மதியாதாரிடையில் ஒன்றைச் சொன்னால் அது பயன் படாது.

(வி-ரை.) சொலவு : செலவு என்பதுபோல் அகரச் சாரியை யேற்ற உகரவீற்றுத் தொழிற் பெயர். நல்கூர்தலாவது ஈண்டுப் பயன் குன்றுதல். செல்லாவழி : வழி வினையெச்ச விகுதி.

அ. அகம்வறி யோனண்ண னல்கூர்ந் தன்று.

(ப - ரை.) அகம்வறியோன் - உள்ளத்தில் நன்மையில்லா தவனை, நண்ணல் - சேர்தல், நல்கூர்ந்தன்று - வறுமையுறும்.

(ப - போ.) மனத்தில் நன்மையின்றி வறியோ னொருவ னைச் சென்று நண்ணுதல் வறுமையுறும்.

(க - ரை.) உள்ளநலம் இல்லாதவனைச் சேர்தலால் ஏதும் பயன் விளையாது.

(வி-ரை.) அகம்வறியோன் என்றது நன்மையான கருத்துக் கள் சிறிதும் இல்லாது பாழ்பட்ட உள்ள முடையோனை. வறியோ னண்ணல் : வேற்றுமைத்தொகை ; வந்த நகரம் திரிந்த விடத்து நிலைமொழி யீறுகெட்டது. நண்ணல் நல்கூர்ந்தன்று

என்பதும் அது. உள்ள நலமுடையோன் வெளிநலங்கள் பல உடையனாயினும், எதும் பயன் ஆகாதாகலின் இங்ஙனங் கூறப் பட்டது.

### கூ. உட்கில் வழிச்சின நல்கூர்ந் தன்று.

(ப - ரை.) உட்கு - மதிப்பு, இல்வழி - இல்லாவிடத்து, சினம் - மேற்கொள்ளும் சினம், நல்கூர்ந்தன்று - தன் பயனில் வறுமையுறும்.

(ப - பொ.) மதியாதார்முன் வெகுளும் வெகுட்சி வறுமை யுறும்.

(க - ரை.) மதியார்முன் வெகுளும் வெகுட்சி பயன்படாது.

(வி - ரை.) உட்கு - தன்னைக் கண்டு அச்சத்தால் மதிக்கும் மதிப்பு. அஃதில்லார்மாட்டுத் தான் சினங்கொள்ளுதலால், எதும் பயன் விளையாமையோடு ஒரோவொருகால் அவரதனைப் பிழையுட் படுத்து வெகுண்டு செய்யுந் தீமையையும் எதிர்பயக்கும் என்க. உட்கு: முதனிலைத் தொழிற்பெயர்.

### க0. நட்பில் வழிச்சேறல் நல்கூர்ந் தன்று.

(ப - ரை.) நட்பு - நட்பியல்பு, இல்வழி - இல்லாவிடத்து, சேறல் - ஒருதவியை நாடிப்போதல், நல்கூர்ந்தன்று - வறுமை யுறும்.

(ப - பொ.) தன்னொடு நட்பில்லாதார் மாட்டு ஒன்றனை நச்சிய நசை வறுமையுறும்.

(க - ரை.) நட்பியல் பிலார்மாட்டு ஒன்றை நாடிப்போதலிற் பயனில்லை.

(வி - ரை.) சேறல்: செல் என்ற பகுதி முதனீண்டது. நட் பியல்பாவது, பிறர்க்குதவல். அஃதிலார்பால் அதை நச்சிப் போத லால் யாதும் பயனின்மையின் இங்ஙனங் கூறினார். நட்பு: பண் பாகு பெயர்.

நல்கூர்ந்த பத்து முற்றும்.

## கo. தண்டாப் பத்து

அஃதாவது தண்டாமையைக் குறித்த பத்து மொழிகளை யுடைய ஒத்து.

**க. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**
**ஓங்கல் வேண்டுவோன் உயர்மொழி தண்டான்**

(ப - ரை.) ஆர்கலி உலகத்து-கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் மக்கட்கு எல்லாம் - மக்களெல்லாருள்ளும், ஓங்கல் - தான் உயர் வடைதலை, வேண்டுவோன் - விரும்புவோன், உயர்மொழி - பிறரை யுயர்த்துச் சொல்லும் மொழிகளை, தண்டான் - தவிரான்.

(ப - போ.) ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து எல்லா மக்களுள்ளும் உயர்வு வேண்டுவோன், பிறரை யுயர்த்துச் சொல்லும் மொழிகளை மாறான்.

(க - ரை.) உயர்வு வேண்டுவோன் பிறர்பாற் காணப்படும் சிறந்த இயல்புகளையே எடுத்துப் பேசப் பழகுதல் வேண்டும்.

(வி-ரை.) அங்ஙனம் பழகப் பழகத் தன் மாட்டும் அவ்வுயரிய இயல்புகள் படியப்பெற்று, அம்முகத்தால் உயர்வடைவான் என்க. உயர்மொழி : வினைத்தொகை. தண்டாமை - நீங்காமை என்று பொருள் படுமாற்றைத் "தண்டாச் சிறப்பு" (சினமின்மை - உ) என்னும் நாலடி காண்க. தண்டுதல் - மறுத்தல்.

**உ. வீங்கல் வேண்டுவோன் பல்புகழ் தண்டான்.**

(ப - ரை.) வீங்கல்-செல்வம் பெருகுதலை, வேண்டுவோன் - விரும்புகின்றவன், பல்புகழ் - பல புகழ்ச்செயல்களை, தண்டான் - தவிரான்.

(ப - போ.) ஆக்கத்தை வேண்டுவோனொருவன் தனக்குப் பல புகழ்வரும் செய்கை களையான்.

(க - ரை.) ஆக்கம் விரும்புவோன் புகழ்க்குரிய பல நற் செயல்களைச் செயல்வேண்டும்.

(வி - ரை.) வீங்கல் - பெருகல், ஈண்டுச் செல்வம் பெருகல். புகழ் - ஆகுபெயராய்ப் புகழுக்குரிய செயல்களை யுணர்த்திற்று. புகழ்ச் செயல்களெல்லாம் நற்செயல்களாதலின் நற்செயல்க ளென்றற்கு அது கூறினர். "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல, தூதியம் இல்லை உயிர்க்கு." "ஒன்ரு உலகத் துயர்ந்த புகழல்லாற், பொன்ருது நிற்பதொன் றில்" என்னும் குறள்களைக் காண்க.

## ங. கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்.

(ப - ரை.) கற்றல் வேண்டுவோன் -அறிவு நூல்கள் கற்றலை விரும்புகின்றவன், வழிபாடு - ஆசிரியர்க்குச் செயற்பாலதான வழி பாட்டை, தண்டான் - தவிரான்.

(ப - பொ.) ஒன்றனைக் கற்றல் விரும்புவான் தன்னைக் கற்பிக்கும் ஆசிரியருக்குச் செய்யும் வழிபாடு ஒழியான்.

(க - ரை.) ஆசிரியனை வழிபடும் மாணக்கனது கல்வியே சிறக்கும்.

(வி - ரை.) வழிபாடு - வழிபடு என்பதன் திரிபு; வழிநிற்றல் என்பது பொருள். வழிபாடு செய்வான் உள்ளம் மேன்மேலும் கல்விப் பொருளை அறிதல்வேண்டும் என்னும் வேட்கையாற் கவர்ந்து முனைப்புடன் விளங்குதலின், அவனுக்கு அரிய கல்வியும் எளிதாய்ப் பெருகுமென்பது. இதுபற்றியே 'கற்றலிற் கற்ருரை வழிபடுதல் சிறந்தன்று' (சிறந்த பத்து) என்று முன்னுங் கூறினர்.

## ச. நிற்றல் வேண்டுவோன் தவஞ்செயல் தண்டான்.

(ப - ரை.) நிற்றல் வேண்டுவோன்-ஒரு நிலையில் நிலைத்தலை விரும்புகின்றவன், தவம்செயல் - நோன்பு செய்தலை, தண்டான்- தவிரான்.

(ப - பொ.) பிறப்புக் கெடுத்துத் தன்னை நிலைப்பிக்க வேண்டுவோன் தவஞ்செய்தல் ஒழியான்.

(க - ரை.) வீடுபேற்றை விரும்புகின்றவன் நோன்பு செயல் தவிரான்.

(வி - ரை.) நிற்றல் - பிறந்தும் இறந்தும் உழலாமல் அவ் விரண்டும் அற்றதோர் அழியாத நிலையிற் பெயராது நிற்றல்;

அஃதாவது வீடு பேறு. தவமென்பது நெஞ்சொருமைக்கு ஊறு பயக்குந் துன்பங்களைப் பொறுத்தல். வீடு விரும்புவான் எத்துணைத் துன்பந் தருவதாயினும் அத்துன்பத்தின் பொருட்டுத் தவம் தவிரான் என்பது இங்குக் கூறப்பட்டது. தவஞ்செய்தல் - இரண்டாம் வேற்றுமைத்தொகை.

ரு. வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்.

**(ப - ரை.)** வாழ்க்கை -செல்வாக்குடன் வாழ்தலை, வேண்டுவோன் - விரும்புவோன், சூழ்ச்சி - மேற்கொண்ட செயலை நன்காராய்தல், தண்டான் - தவிரான்.

**(ப - பொ.)** வாழ்தலை மேன்மேலும் விரும்பிய ஒருவன் தான் எடுத்த தொழிலை ஆராய்தல் ஒழியான்.

**(க - ரை.)** செல்வாக்குடன் வாழ்தலை விரும்புகின்றவன் தான் எடுத்துக்கொண்ட செயலை நன்ருய் ஆராய்தல் வேண்டும்.

**(வி-ரை.)** எடுத்துக்கொண்ட செயலைத் திறமாய் ஆராய்ந்து ஒழுங்காய் முயல்கின்றவன் கட்டாயம் ஆக்கம்பெற்று இன்ப வாழ்விலிருப்பனுதலின், சூழ்ச்சி தண்டான் என்ருர்.

“தெரிந்த இனத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க், கரும் பொருள் யாதொன்று மில்”—**திருக்குறள் : சசூஉ.**

## சூ. மிகுதி வேண்டுவோன் வருத்தந் தண்டான்.

**(ப - ரை.)** மிகுதி வேண்டுவோன் - செல்வ மிகுதியை விரும்புவோன், வருத்தம் - அதற்கு ஏதுவான முயற்சி வருத்தத்தை, தண்டான் - தவிரான்.

**(ப - பொ.)** அளவுமிக்க பொருள் வேண்டுவோன் முயற்சி வருத்தமென நீக்கான்.

**(க - ரை.)** செல்வ மிகுதியை விரும்புகின்றவன் எவ்வளவு வருத்தமான முயற்சிக்கும் பின்வாங்கான்.

**(வி - ரை.)** முயற்சியின் வருத்தமே பொருளின் இன்பத்துக்கு ஏதுவென்க. இனி “மிகுதி வேண்டுவோன் தகுதி தண்டான்” என்பதும் பாடம்; அஃதாயின், பெருமை வேண்டுவோன் அதற்குரிய தகுதியான ஒழுக்கத்தைத் தவிரான் என்றுரை கொள்க.

## எ. இன்பம் வேண்டுவோன் துன்பந் தண்டான்.

(ப - ரை.) இன்பம் வேண்டுவோன் - இன்ப நிலையை விரும்பி நிற்பவன், துன்பம் - அதற்குரிய முயற்சிகளிடையே நேருந் துன்பங்களை, தண்டான் - பொருட்படுத்தமாட்டான்.

(ப - போ.) இன்பத்தை விரும்பிய ஒருவன் துன்பத்தைத் துன்பமென்று களையான்.

(க - ரை.) இன்பத்தை விரும்புகின்றவன் துன்பத்தைப் பாராமல் முயலல் வேண்டும்.

(வி - ரை.) உலக இயற்கையில் துன்பமில்லா விடத்து இன்பமில்லாமையின், இன்பம் விரும்புவோன் அதற்குரிய முயற்சித் துன்பத்திலும் ஈடுபட்டே தீரல் வேண்டினமை அறிக. தண்டான்-துன்பமென்று கருதி நீங்கான் என்பது.

'தோட்டிபோலுழைத்துத் துரைபோற் சாப்பிடவேண்டும்,' என்பது மறிக. 'துன்புள தெனினன்றோ சுகமுளது' இராமாயணம்.

## அ. துன்பம் வேண்டுவோன் இன்பந் தண்டான்.

(ப - ரை.) துன்பம் வேண்டுவோன் - பின்பு துன்பத்தை ஏற்றுக்கொள்பவன், இன்பம் தண்டான் - முன்பு இன்பப்பட்டிருத்தலைத் தவிரான்.

(ப - போ.) துன்பத்தை விரும்பிய ஒருவன் இன்பத்தை இன்பமென்று களையான்.

(க - ரை.) முன்பு சிற்றின்பத்தால் மதிப்புண்டிருப்பவன் பின்பு பெருந் துன்பத்தால் வருந்துவன்.

(வி - ரை.) முயற்சித் துன்பத்துக்கு அஞ்சி வாளாகிடப்பதனுல் வரும் சிற்றின்பத்தை விரும்பியவனுக்குப் பின்பு கல்வி செல்வம் புகழ் முதலியவற்ருல் ஏதொரு நற்பயனும் இல்லாமையால் அவன் பெருந் துன்பமுறுதலின் இங்ஙனங் கூறப்பட்டது.

## கூ. ஏமம்வேண்டுவோன் முறைசெயல்தண்டான்

(ப - ரை.) ஏமம் வேண்டுவோன்-குடிமக்களின் இன்பத்தை விரும்பும் அரசன், முறை செயல் - முறையோடு அரசாட்சி செய்தலை, தண்டான் - தவிரான்.

(ப - பொ.) குடிகளைக் காக்க விரும்பிய அரசன் முறைமைப்படி நடத்தலொழியான்.

(க - ரை.) குடிமக்களின் இன்பத்தை விரும்பும் அரசன் முறைமையோடு அரசாட்சி செய்வான்.

(வி - ரை.) ஏமம்-இன்பம், ஈண்டு அரசனது பாதுகாவலால் விளையும் குடிமக்களின் இன்பத்தை யுணர்த்தலின் அரசன் முறைமையோடு நடுவாய் அரசு புரிதல் வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. "ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்து யார்மாட்டும், தேர்ந்துசெய் வஃதே முறை"—திருக்குறள்-செங்கோன்மை - க.

கய. காமம் வேண்டுவோன் குறிப்புச்செயல் தண்டான்.

(ப - ரை.) காமம் வேண்டுவோன் - காம இன்பத்தை விரும்புகின்றவன், குறிப்புச்செயல் - குறிப்பறிதலை, தண்டான் - தவிரான்.

(ப - பொ.) காமத்தை விரும்பிய ஒருவன் குறிப்பறிதல் ஒழியான்.

(க - ரை.) காமத்தை விரும்புவான் குறிப்பறிதலில் வல்லவனாயிருத்தல் வேண்டும்.

(வி - ரை.) குறிப்பறிதலாவது தலைவன் தலைவி குறிப்பையும், அவள் தோழி குறிப்பையும், குறிப்பிற் குறிப்பினாலறிதலாம். குறிப்பறிந்தொழுகாவிடத்துத் தலைமகனுக்குக் காமவின்பம் நேர்தலின்மையின், 'குறிப்புச்செயல் தண்டான்' என்றார். இனிக் 'காமம் வேண்டுவோன் இன்பந்தண்டான்' என்று பாடமுரைத்துப் புணர்ச்சி இன்பத்தை விரும்புகின்றவன் அவ்வின்பத்தினின்றும் நீங்கான் என்று பொருள் கூறுவாருமுளர்.

**தண்டாப் பத்து முற்றும்.**

**முதுமொழிக் காஞ்சி முற்றும்.**

---

# பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|---|---|
| அகம் வறி | ௪௫ | ஒப்புர | ௨௭ | நட்பில் | ௪௬ |
| அருமை | ௧௩ | கழிதரு | ௧௮ | நலனுடைமை | ௪ |
| அறத்தாற்றி | ௨௫ | கள்ளுண் | ௩௩ | நாணில் | ௧௮ |
| அறியாத் | ௧௫ | கற்ற துடைமை | ௮ | நிறையச் | ௧௪ |
| அறிவிலி | ௨0 | கற்றலிற் | ௫ | நிற்றல் | ௪௮ |
| அறிவுசோர் | ௧0 | கற்றல் | ௪௮ | நேரா | ௨௪ |
| ஆர்கலி...அறிப | ௭ | காதலிற் | ௨ | நேராமற் | ௨௪ |
| ஆர்கலி...டெளி | ௩௭ | காமம் வேண்டு | ௫௧ | பாரம் வெய் | ௪௧ |
| ஆர்கலி...தண் | ௪௭ | காலமறியா | ௩௩ | பிணிகிடந் | ௪௩ |
| ஆர்கலி...தன்று | ௪௨ | குத்திரஞ் | ௧0 | பெண்டிர் வெய் | ௪0 |
| ஆர்கலி...பழியா | ௧௨ | குலனுடை | ௪ | பெருஞ்சீ | ௩௨ |
| ஆர்கலி...பொய் | ௩௨ | குறளை வெய் | ௩௮ | பெருமை | ௧௩ |
| ஆர்கலி...பல்ல | ௨௨ | கொண்டு கண் | ௨0 | பெருமை நோ | ௩௫ |
| ஆர்கலி...முடை | ௧ | சார்பி | ௪௧ | பேணிலீகை | ௧௮ |
| ஆர்கலி...றில்லை | ௨௭ | சிறியா | ௧௬ | பொய்வே | ௧௬ |
| ஆர்கலி...றுவ்வா | ௧௭ | சிறுமை நோ | ௩௬ | பொருணசை | ௩௫ |
| இசையிற் | ௩0 | சிற்றிற் | ௯ | மறுபிறப் | ௨௬ |
| இயைவது | ௨௯ | சீருடை | ௧௧ | மிகமூத் | ௪௨ |
| இரத்தலி | ௩௧ | செய்தக்க | ௧௫ | மிகுதிவேண் | ௪௯ |
| இரப்போர்க் | ௩௧ | செய்யாமை | ௧௯ | மீப்பிலோரை | ௧௨ |
| இழிவுடை | ௨௧ | செற்றாரைச் | ௫ | முதிர்வுடை | ௪௪ |
| இளமையிற் | ௩ | செற்றுட | ௪௩ | முறையி | ௧௪ |
| இன்பம் வெய் | ௩௯ | சொற்செல் | ௪௫ | முற்பெரு | ௬ |
| இன்பம் வேண்டு | ௫0 | சொற்சோர் | ௧0 | மேதையிற் | ௨ |
| ஈரமில் | ௨௩ | சோராக்கை | ௨௩ | மேல்வர | ௩௪ |
| ஈர முடைமை | ௭ | சோரானன் | ௮ | வண்மையிற் | ௩ |
| ஈரம் வெய் | ௩௮ | தற்போற் | ௪௪ | வறியோன் | ௧௬ |
| உட்கில் | ௪௬ | தாரமா | ௨௨ | வாயா | ௨௮ |
| உணர்வில | ௨௯ | தானே | ௨௧ | வாய்ப்புடை | ௨௮ |
| உண்டி வெய் | ௪0 | திறத்தாற்றி | ௨௫ | வாலிய | ௩௬ |
| உறழ் வெய் | ௩௭ | துன்பம் வெய் | ௩௯ | வாழாமல் | ௨௪ |
| உறுவினை | ௩௪ | துன்பம் வேண்டு | ௫0 | வாழ்க்கை | ௪௯ |
| எமம் வேண்டு | ௫0 | நசையிற் | ௩0 | வீங்கல் | ௪௭ |
| எற்ற முடைமை | ௯ | | | | |

கழக வெளியீடு: உ௨௨

கணிமேதையார்

இயற்றிய

# ஏலாதி

மறைமலையடிகள் மாணவரும், கழகத்தமிழ்ப்
புலவராயிருந்தவருமாகிய

திரு. தி. சு. பாலசுந்தரம் பிள்ளை அவர்கள்
[இளவழகனார்]
எழுதிய
விருத்தியுரையுடன்

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition : Nov., 1939.
Reprint : February, 1953.

[All Rights Reserved]

Published by :

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY :: MADRAS-1.

*Head Office :*

24, EAST CAR STREET, :: THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.

# முன்னுரை

'ஏலாதி' என்னும் இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இவை என்பது இதற்கு முன் யாங்கள் வெளியிட்ட **சிறுபஞ்சமூல** முகவுரையான் அறியப்படும். இந் நூல் கடைச்சங்க மருவிய நூல்களுள் ஒன்றாகலான், இதனாசிரியரது காலம் அச்சங்க காலத்திற்குப் பிற்பட்டதன்றென்பது போதரும். இதில் தற்சிறப்புப்பாயிரச் செய்யுள் ஒன்றும், சிறப்புப்பாயிரச் செய்யுள் ஒன்றும் உள்பட எண்பத்திரண்டு செய்யுட்களிருக்கின்றன. இந் நூலினிறுதியில் "தமிழாசிரியர் மகனார் மாக்காயனார் மாணாக்கர்—கணிமேதையார் செய்த ஏலாதி முற்றிற்று," என்றிருத்தலின், இதனாசிரியர் **மாக்காயனார்** என்பவருடைய மாணாக்கர் என்பதில் ஐயமில்லை. அது நிற்க, சிறுபஞ்ச மூலத்தின் இறுதியிலுள்ள "மல்லிவர்தோண் மாக்காயன் மாணாக்கன்......................மாக்காரியாசான், சிறுபஞ்சமூலஞ் செய்தான்" என்னுஞ் சிறப்புப்பாயிரச் செய்யுளால் அந்நூலின் ஆசிரியராகிய **காரியாசான்** என்பவரும் **இம்மாக்காயனார்** மாணாக்கரே என்பது பெறப்படுகின்றது. எனவே ஏலாதி யாசிரியரும், சிறுபஞ்சமூலவாசிரியரும் ஒருசாலை மாணாக்கராவர்.

"மல்லிவர்தோண் மாக்காயன்" என்றமையால் அம்மாக்காயனார் போர்த்தலைவராயும், இவ்விரு நூலாசிரியருக்கும் ஆசிரியராயிருந்தமையால் தமிழ்ப் பெரும் புலவராயும் விளங்கியவர் என்பது அறியற்பாலது. ஏலாதி என்னும் இந்நூலாசிரியருக்குக் 'கணிமேதாவியார்' என்ற மற்றொரு பெயருமுண்டு.

கழகத் தமிழ்ப் புலவராயிருந்த காலத்தில் திருவாளர் **தி. சு. பாலசுந்தரம் பிள்ளை** என்னும் **இளவழகனாரவர்கள்** இந்நூலுக்கு எழுதிய உரையைப் பழைய பொழிப்புரையுடனும், பாளையங்கோட்டை அர்ச் சவேரியர் கல்லூரி, தலைமைத் தமிழாசிரியர் வித்துவான் திருவாளர் **பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்** எழுதிய சிற்சில குறிப்புக்களுடனும் வெளியிடுகின்றோம். தமிழறிஞர்கள் இப் பதிப்பினை வாங்கிப் போற்றி எங்கட்கு ஊக்கமளிப்பார்**களாக.**

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# ஏலாதி

## மூலமும் விருத்தியுரையும்

### சிறப்புப் பாயிரம்

இல்லறநூ லேற்ற துறவறநூ லேயுங்கால்
சொல்லறநூல் சோர்வின்றித் தொக்குரைத்து - நல்ல
அணிமேதை யாய்நல்ல வீட்டு நெறியுங்
கணிமேதை செய்தான் கலந்து.

**(இதன் பொருள்.)** நல்ல - சிறந்த, அணி மேதையாய் - அழகிய அறிவினையுடையவளே! கணிமேதை - கணிமேதை யென்னும் புலவர், இல்லறநூல் - இல்லறவொழுக்கங் கூறும் நூலையும், ஏற்ற துறவறநூல் - பொருத்தமான துறவற வொழுக்கங்கள் கூறும் நூலையும், ஏயுங்கால் - ஏற்ற விடங்களில், வீட்டுநெறியும் கலந்து-வீடெய்தும் நெறிபற்றிய உரைக்கூறுகளையும் ஆராய்ந்து, நல்ல - மேலான, சொல் அறநூல் - பாராட்டப்படும் 'ஏலாதி' யென்னும் இவ் வறநூலை, சோர்வு இன்றி - குற்ற மில்லாமல், தொக்கு உரைத்து - தொகுத்துக் கூறி, செய்தான் - இயற்றினன்.

**(பழைய பொழிப்புரை.)** சிறந்த அழகாகிய அறிவை யுடையாளே! கணிமேதை என்னும் புலவர் இல்லற நூலும் ஞான மடைதற்குரிய துறவற நூலும் ஆகிய கடவுளாற் சொல்லப்பட்ட அற நூல்களின் பொருள்களையும் தளர்ச்சியின்றித் தொகுத்துக் கூறி ஏற்றவிடத்தில் வீடடைதற்குரிய ஞானவழியையும் உடன் கூட்டி அந்நூலை யியற்றி யருளினர்.

**(கருத்து.)** கணிமேதை 'ஏலாதி' யென்னும் உயர்ந்த அறநூலை இயற்றினன்.

சோர்வு, குற்றம். கணிமேதை, அன்மொழித்தொகைக் காரணப்பெயர். கலந்து, ஈண்டு ஆராய்ந்து என்னும் பொருட்டு.

அறநூல் - அறநூலால் உணர்த்தப்படும் அறமாகிய பொருட்குக் கருவியாகுபெயர். கணித்தல் - மேலாக மதித்தல். இச்சிறப்புப் பாயிரச் செய்யுளில் ஆக்கியோன் பெயர், வழி, யாப்பு, நுதலிய பொருள் இந்நான்கும் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளன.

---

## தற்சிறப்புப் பாயிரம்

### கடவுள் வணக்கம்

அறுநால்வ ராய்புகழ்ச் சேவடி யாற்றப்
பெறுநால்வர் பேணி வழங்கிப் - பெறுநால்
மறைபுரிந்து வாழுமேன் மண்ணொழிந்து விண்ணோர்க்
கிறைபுரிந்து வாழ்த லியல்பு.

(இ - ள்.) அறுநால்வர் - இருபத்துநான்கு பேர், ஆய்புகழ் - ஆராயும் புகழமைந்த, சேவடி ஆற்றப்பெறு நால்வர் - திருவடித் தொண்டு செய்யப்பெறும் நான்கு பேரும், பேணி வழங்கி-போற்றி வழங்குதலால், பெறுநால்மறை - பெறப்படும் நான்மறைகளை, புரிந்து - விரும்பி, வாழுமேல் - ஒருவன் ஒழுகுவனுயின், மண் ஒழிந்து - மண்ணுலகினின்றும் நீங்கி, விண்ணோர்க்கு - தேவர் களுக்கு, இறை புரிந்து - தலைமைபூண்டு, வாழ்தல் இயல்பு - இன்பத்துடன் வாழ்தல் உண்மையாகும்.

(ப-பொ-ரை.) மந்திரி முதலிய இருபத்துநால்வரும் குற்ற மற்ற புகழமைந்த தனது சிவந்த பாதங்களாலிட்ட பணியைச் செய்யா நிற்க, ஒழுக்கத்தின் பயனைப்பெறுகின்ற பிரமச்சாரி முதலிய நால்வர் விரும்பிய பொருளைக்கொடுத்துக் கற்றுணர்ந் தடைந்த நான்மறை யொழுக்கத்தை விரும்பி நடந்து ஒருவன் வாழ்வானுனல், பூமியினின்று நீங்கித்தேவர்க்கு அரசனுகிய இந்திர னுல் விரும்பப்பட்டு வாழ்தல் உண்மையாம்.

'விண்ணோர்க்கு இறைபுரிந்து' என்பதற்குத் தேவர்க்கு அரச னுல் விரும்பப்பட்டு என்பதுமாம். அறுநால்வர் - மந்திரி முதலிய இருபத்து நால்வர். அவர்கள் ஐம்பெருங்குழு, எண்பேராயம்,

ஐவகைச்சுற்றம், ஆறங்கம் இவற்றைச் சேர்ந்தவர்கள். மந்திரி எண்பேராயம் முதலிய கூட்டங்களிலும் இருப்பவன். அறுநால்வர்- மிகுதிபற்றிவந்த திணை வழுவமைதி. நால்வர் - தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் என்பவருமாம். பேணி - தொழிலடி யாகப் பிறந்த பெயர் ; இ - செயப்படு பொருண்மை விகுதி.

இறை - இற, பகுதி ஐ - வினைமுதற் பொருண்மை விகுதி ; யாவற்றிற்கும் மேலாய் நிற்பவன். திருமாலாகிய இறையின் கூறுள்ளவன் அரசனாதலின் அரசனை இறை என்றார்.

---

## நூல்

சென்ற புகழ்செல்வ மீக்கூற்றஞ் சேவகம்
நின்ற நிலைகல்வி வள்ளன்மை—என்றும்
வழிவந்தார் பூங்கோதா யாறு மறையின்
வழிவந்தார் கண்ணே வனப்பு.

(இ - ள்.) பூங்கோதாய் - பூக்களை யணிந்த கூந்தலையுடைய பெண்ணே! சென்ற புகழ் - யாவரானும் ஒப்புக்கொள்ளப்பட்ட புகழும், செல்வம் - செல்வமும், மீக் கூற்றம் - பெருந்தகைமையாக மதிக்கப்படும் சொல்லும், சேவகம் நின்றநிலை - நின்ற நிலையினின் றும் வழுவாத ஆண்மையும், கல்வி - கல்வியறிவும், வள்ளன்மை - ஈகைத் தன்மையும், ஆறும் - ஆகிய இவ்வாறு இயல்புகளும், வழி வந்தார் - உயர்குடியின் வழிப்பிறந்து, மறையின் வழி வந்தார் கண்ணே - திருநான்மறை வழியில் ஒழுகுபவரிடத்திலேயே, என் றும் வனப்பு - எந்நாளும் அழகாவனவாம்.

(ப-போ-ரை.) நிறைந்த பூவையணிந்த கூந்தலையுடையாய்! திசையெங்கும் பரந்த புகழ், செல்வம், மேன்மையாகக் கொள்ளுஞ் சொல், வீரத்தில் அசையாது நின்ற நிலை, கல்வி, வரையாது கொடுத்தல் ஆகிய இவ்வாறும் தொன்மையுடைய குடிப்பிறந்து திருநான்மறை நெறியி லொழுகுவோரது இலக்கணம்.

(க - து.) புகழ் முதலிய ஆறும் நற்குடியிற் பிறந்து நான் மறையொழுக்கம் உடையாரிடத்திலேயே அழகுபெறும்.

'என்றும் வழிவந்த ஆர்பூங்கோதாய்' என்று கூட்டி, 'எப்பொழுதும், நல்ல குடியிற் பிறந்த தேன் நிறைந்த மலரையணிந்த கூந்தலையுடையாள்' எனலுமாம். செல்லல் - யாவரும் ஒப்புக்கொள்ளல். பூங்கோதாய் - மகடூஉ முன்னிலை. கூற்றம் - கூறு என்னும் தொழிலடியாகப் பிறந்த பெயர்ச்சொல். வள்ளன்மை, இதன்கண் அல் பகுதிப்பொருள் விகுதி; வழிவந்தார் இரண்டனுள் முன்னது 'முற்றெச்ச'மெனவும், பின்னது 'வினையாலணையும் பெய'ரெனவுங் கொள்க. வழி - உயர்குடி. ஏகாரம், பிரிநிலை. (1)

கொலைபுரியான் கொல்லான் புலான்மயங்கான் கூர்த்த
அலைபுரியான் வஞ்சியான் யாதும்—நிலைதிரியான்
மன்னவர்க்கு மன்றி மதுமலிபூங் கோதாய்
விண்ணவர்க்கு மேலாய் விடும்.

(இ - ள்.) மதுமலி பூ கோதாய் - தேன் நிரம்பிய பூவையணிந்த கூந்தலையுடையவளே, கொலை புரியான்-கொலைத்தொழிலை விரும்பான், கொல்லான் - ஏதோருயிரையுங் கொல்லான், புலால் மயங்கான் - புலாலை அறிவுகலங்கித் தின்னான், கூர்த்த - மிக்க, அலை - அலைத்தற்றொருலை, புரியான் - பிறர்க்குச் செய்யான், வஞ்சியான் - எவரையும் வஞ்சனை செய்யான், யாதும்-சிறிதும், நிலை திரியான்-நிலைவழுவான் ஆன ஒருவன், மண்ணவர்க்கும் அன்றி - மண்ணுலகத்தார்க்கும் அல்லாமல், விண்ணவர்க்கும் - தேவர்க்கும், மேல் ஆய்விடும் - மேலானவனாய்விடுவான்.

(ப-போ-ரை.) தேன் பொழியும் பூவை யணிந்த கூந்தலையுடையாய்! பிறர் புரியுங் கொலைத்தொழிலை விரும்பாதவனும், கொல்லாதவனும், தசையை அறிவு மயங்கித் தின்னாதவனும், மிகுந்த வருத்துந் தொழிலைச் செய்யாதவனும். பொய்யொழுக்கமில்லாதவனும், யாது காரணம் பற்றியும் தன்னிலைமையினின்று விலகாதவனும், பூவுலகத்தாரது வணக்கத்துக் குரியனாவதுடன் வானுலகத்தார் வணக்கத்துக்கும் உரியனாவது திண்ணம்.

(க - து.) கொலை விரும்பாமை முதலிய ஆறு நல்லியல்புகளையுமுடையவன் மக்கட்குந் தேவர்க்குந் தலைவனாவான்.

'கொலைபுரியான்' முதலிய அறுதொழிலுக்கும் வினைமுதல் ஒருவனே யாதலின், பெயர்ச்செவ்வெண். கொலைபுரியான் என்

பதில், புரிதல் விரும்புதலின் மேல் வந்தது. 'ஐயம்புரிதுறை யுநர்' (கசரு) என்னும் புறநானூற்றிற்போல. அலே, முதனிலைத் தொழிற்பெயர்: ஈண்டு வருந்துதலென்க. மண்ணவரென்றது, மக்களே. மேல், பண்பாகு பெயர். 'பசைதல் பரியாதாமேல்' (துறவு-கO) என்றார் நாலடியாரிலும். விடும் - செய்யுமென்னும் முற்று ஆண்பாலுக்கு வந்தது. 'கோதாய்' என்றமையின், இப் பாட்டை மகடூஉ முன்னிலையென்ப. முன் வந்த பாட்டும் இது. இன்னன வருமிடங்களில் இதுவே உரைத்துக்கொள்க. (2)

தவமேளிது தான மரிதுதக் கார்க்கேல்
அவமரி தாத லெளிதால்—அவமிலா
இன்பம் பிறழி னியைவெளிது மற்றதன்
துன்பந் துடைத்த லரிது.

(இ - ள்.) தவம் எளிது - தவஞ் செய்தல் ஒருவற்கு எளி தாம், தானம் அரிது - ஆனல், ஈகையுடையனுயிருத்தல் அரிது, தக்கார்க்கேல் - தகுதியுடைய சான்றோர்க்கானல், அவம் அரிது - குற்றஞ்செய்தல் அரிதாம், ஆதல் எளிது - நல்வழியைச் சார்தல் எளிதாம், அவம் இலா - தாழ்வில்லாத, இன்பம் பிறழின் - வீட்டின் பம் தவறுமாயின், இயைவு எளிது - பிறவி தொடர்தல் எளிதாகும்; மற்று - ஆனல், அதன் துன்பம் துடைத்தல் - அப்பிறவித் தொடர் பின் துன்பத்தை நீக்குதல், அரிது - அரிதாகும்.

(ப-பொ-ரை) யாவர்க்குந் தவஞ் செய்தல் எளிது, கைப் பொருள் வழங்கல் அரிது. பெரியோர்க்குக் குற்றத்துக்குள்ளாதல் அரிது: நன்னெறியி லொழுகுதல் எளிது, கெடுதலில்லாத இன்ப நெறி தடுமாறிச் சென்றால் பிறப்பிற் பொருந்துதல் எளிது, அவ் வாறு பிறந்ததின்க ணுண்டாகுந் துன்பத்தை நீக்கிக் கொள்ளுதல் அரிது.

(க - து.) மக்கட்குத் தவம் எளிது, ஈகை அரிது; தக்கார்க் குத் தீமை அரிது, நன்மை எளிது; திருவருள் நெறி தவறின் பிறவி எளிது; ஆனல் அதன் நீக்கம் அரிது.

தவம், தந்நன்மைக்கும், ஈகை பிறர் நன்மைக்கு மாகலின் முன்னது எளிதும், ஏனையது அரிதுமாயின. 'தக்கார்க்கு ஆதல் எளி' தென்க. ஆல், அசை. இன்பத்துக்கு அவமென்றது, நிலை

யாமையுந் தாழ்வையுமுடைய குற்றத்தை. இயைவு, தொழிற்பெயர். மற்று வினைமாற்றின்கண் வந்தது. எளிது - எண்மை யென்னும் பகுதி யடியாகப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினை முற்று. (3)

இடர்தீர்த்த லெள்ளாமை கீழினஞ் சேராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பின்—நடைதீர்த்தல்
கண்டவர் காமுறுஞ்சொற் காணிற் கலவியின்கண்
விண்டவர்நூல் வேண்டா விடும்.

**(இ-ள்.)** இடர் தீர்த்தல் - பிறருக்கு இடுக்கண் நீக்குதலும், எள்ளாமை - பிறரை இகழாமையும், கீழ் இனம் - கீழ்மக்களின் கூட்டத்தோடு, சேராமை - இணங்காமையும், யார்க்கும் - எல்லார்க்கும், படர் தீர்த்தல் - பசித்துன்பத்தை நீக்குதலும், பழிப்பின் நடை - சான்றோர் பழித்தற்குரிய ஒழுக்கத்தை, தீர்த்தல் - நீக்குதலும், கண்டவர் - தன்னோடு பழகுவார், காமுறும் சொல் - விரும்புதற்குரிய மொழிகளைப் பேசுதலும், காணின் - ஒருவன் மேற்கொள்வானாயின், கலவியின்கண் - உலகப்பற்றினின்றும், விண்டவர் நூல் - நீங்கிய சான்றோரின் அறிவு நூல்கள், வேண்டாவிடும் - வேண்டாதனவாய் விடும்.

**(ப-பொ-ரை.)** பிறர்க்கு நேரிட்ட துன்பந் துடைத்தலும், பிறரை இகழாமையும், கீழ் மக்களோடு பழகாமையும், யாவர்க்கும் பசித்துன்பம் போக்குதலும், உலகம் பழிக்கும் நடையினின்று நீங்குதலும், தன்னை யெதிர்ப்பட்டவர் விரும்பும் இன்சொல்லும் ஒருவன் தானே கண்டுகொண்டானெனில் கற்றறிந்தோராற் சொல்லப்பட்ட நூல்களைப் பார்த்து அறியவேண்டிய பொருள் ஒன்றுமில்லாதவன் ஆவன்.

**(க-து.)** இடர் தீர்த்தல் முதலிய ஒழுக்கங்களையுடையவன் கற்றவர்க்கு ஒப்பாவான்.

ஆன்றோரருளிய அறிவு நூல்களைக் கற்றலின் பயன் இவ்வொழுக்கங்களாகலின், இங்ஙனங் கூறப்பட்டது. இடர் தீர்த்தல் இடுக்கண் தீர்த்தலெனவும், படர்தீர்த்தல் வறுமையினால் விளையுந் துன்பத்தைத் தீர்த்தலெனவுங் கொள்க. என்னை, இடுக்கண் செல்வர்களுக்கும் ஒரோவொருகால் நேருகின்றமையினென்பது. பழிப்பின்நடை தீயவொழுக்கம். 'பேசுத' லெனவொன்று சொல்

லெச்சமாய் வருவித்துக்கொள்க. கலவியின்கண் என்பதில் இன் சாரியை ; கண் வேற்றுமை மயக்கமென்க. கீழ் - பண்பாகு பெயர். எள்ளாமை - எள் என்னும் பகுதியடியாகப் பிறந்த எதிர் மறைத் தொழிற்பெயர். விண்டவர் - விள், நீங்கு - பகுதி, "கல்வியின்கண் விண்டவர்" என்று கொண்டு கல்வியிற் றெளிந்தவர்கள் என்பதுமாம். (4)

தனக்கேன்று மோர்பாங்கற் போய்யான் மேய்யாக்கும்
எனக்கேன் றியையான் யாதோன்றும்—புனக்கோன்றை
போலு மிழையார்சோற் றேருன் களியானேல்
சாலும் பிறநூலின் சார்பு.

(இ - ள்.) தனக்கு என்றும் - தனக்கெனவும், ஓர் பாங்கன் என்றும்-தன்னைச் சார்ந்தவனுக்கெனவும் வேறுபட்டு, பொய்யான்-பொய் சொல்லாமலும், மெய் ஆக்கும் - உண்மையே சொல்லிக் கொண்டும், எனக்கு என்று - தனக்கு வேண்டுமென்று, யாதொன்றும் - யாதொரு பொருண்மேலும், இயையான் - பற்றுவையாமலும், புனக்கொன்றைபோலும் - முல்லை நிலத்தின்கண்ணுள்ள கொன்றைப் பூவைப்போன்ற, இழையார்-நகைகளையணியும் பெண்களின், சொல்தேருன் - சொற்களைப் பின்பற்ருமலும், களியானேல்-செருக்குக் கொள்ளாமலுமிருப்பனுயின், நூலின் பிற சால்பு - அறிவுநூல்களா லறிதற்குரிய ஏனைய பண்புகளும், சாலும் - தாமே வந்து நிரம்பும்.

(ப - போ - ரை.) தனக்கென்றும் தன்னைச் சார்ந்தவனுக்கென்றும் பொய்யுரையாதவனுய், உண்மையையே யுரைப்பவனுய், யாதொரு பொருளையும் எனக்குரியதென அன்பு வையாதவனுய், முல்லைநிலத்திலுள்ள கொன்றை மலரை ஒக்கும் அணிகளையணியும் மாதர் சொல்லைப் பேணுதவனுய், செல்வச்செருக்கில்லாதவனுய் ஒருவன் வாழ்வானுயின் ; அவனிடத்து அறநூல்களிற் கூறப்பட்ட மேன்மையான பொருள்களெல்லாம் வந்து நிரம்பும்.

(க - து ) பொய்யாமை முதலியன உடையானுக்கு நூல்களால் உணர்தற்குரிய ஏனைய நல்லியல்புகளுந் தாமே வந்து நிரம்பும்.

முற்றுக்களை எச்சமாக்கிக்கொள்க. சால்பென்றவிடத்து எச்சவும்மை தொக்கது. சால்பு, ஈண்டு மெய்யுணர்வு முதலியன.

'இழையார் சொற்றேரு' என்றது, பெண்வழிச்சேறுமையை யென்க. இனிப் பிறவென்பது அசைநிலைச் சொல்லெனின், வாளா நூலின் சால்பு சாலுமென் றுரைத்துக்கொள்க.

கொன்றை - கொன்றை மலர்க்கு முதலாகுபெயர். கடையில் நின்ற 'எல்' என்பதனைப் பொய்யான் முதலியவற்றோடும் கூட்டுக; கடைநிலைத் தீவகம். நூல் - உவமையாகுபெயர். (5)

நிறையுடைமை நீர்மை யுடைமை கோடையே
பொறையுடைமை பொய்மை புலாற்கண் - மறையுடைமை
வேயன்ன தோளா யிவையுடையான் பல்லுயிர்க்குந்
தாயன்ன னென்னத் தகும்.

(இ - ள்.) வேய் அன்ன தோளாய் - மூங்கிலை யொத்த தோள்களையுடைய பெண்ணே, நிறை உடைமை - நெஞ்சடக்கமுடைமையும், நீர்மை உடைமை - நல்லியல்புடைமையும், கொடை உடைமையே - வறியார்க்கு ஒன்று கொடுத்தலுடைமையும், பொறை உடைமை - பிறர் தனக்குத் தீங்கு செய்யுங்காற் பொறுத்தலுடைமையும், பொய்மை - பொய் கூறுதலிலும், புலாற்கண் - ஊனுண்ணுதலிலும், மறை உடைமை - மறுத்தலுடைமையும், இவை உடையான் - என்றிவ் வியல்புகளையுடையவன், பல் உயிர்க்கும் - பலவகைப்பட்ட எல்லா உயிர்களுக்கும், தாய் அன்னன் என்னத்தகும் - தாயை யொத்தவன் என்று புகழ்தற்குரியவனாவான்.

(ப-பொ-ரை.) மூங்கிலை யொத்த தோளை யுடையவளே! புலன்வழி போகாது தன் மனதை நிறுத்தலுடைமையும், நற்குணமுடையனாதலும், ஈதலும், பொறுமையோ டிருத்தலும், பொய் கூற விடாது தன்னை யடக்குதலும், ஊன் தின்ன விடாது தன்னை யடக்குதலும் ஆகிய இவ்வாறும் பொருந்திய ஒருவன், பல உயிர்கட்கும் தாயினது அன்பு போலும் அன்பினை யுடையவன் என்று யாவருஞ் சொல்லத் தகுந்தவன் ஆவன்.

(க - து.) நிறையுடைமை முதலியன உடையவன் பல்லுயிர்கட்கும் நன்மை செய்பவனாவான்.

ஒருயிர்க்கே தாயாந் தன்மை தரும் உடலுறவு போல்வதன்றி, இயல்புறவு பல உயிர்கட்குந் தாயாந்தன்மை தரவின், இங்ஙனங் கூறப்பட்டது. ஏகாரம், எண்; ஏனையவற்றோடும் ஒட்டுக. நிறை,

பொறை, மறை என்பன தொழிற் பெயர்கள். நிறை, உள்ளத்தைத் தீய வழிகளிற் செல்லவொட்டாமல் நிறுத்துதல். பொய்ம்மையும் புலாலும் அவைதம்மைப் பயிறலின்மே னின்றன. (6)

இன்சொ லளாவ லிடமினிதூண் யாவர்க்கும்
வன்சொற் களைந்து வகுப்பானேல்—மென்சொல்
முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து.

(இ - ள்.) முருந்து எய்க்கும் - மயிலிறகின் அடியை ஒக்கும், முள் எயிற்றினாய் - கூரிய பற்களையுடைய பெண்ணே! யாவர்க்கும் - விருந்தாய் வருவா ரெல்லாருக்கும், இன்சொல்-இன்சொல்லும், அளாவல் - உள்ளங்கலந்த உறவும், இடம் - தங்குமிடமும், இனிது - ஆடையணி முதலிய பொருளும், ஊண் - உணவும், வன்சொல் களைந்து - கடுஞ்சொற்களை நீக்கி, மென்சொல் - பணிவுமொழியும், நாளும் வகுப்பானேல்-என்றும் முறையே வழங்குவானால், விண்ணோர் - தேவர்கள், விரைந்து - முன்வந்து, விருந்து ஏற்பர் - அவனை விருந்தினனாய் ஏற்றுக்கொள்வர்.

(ப - பொ - ரை.) மிருதுவாகிய சொல்லையும் மயிற்பீலியினது அடியை யொத்து விளங்கும் கூரிய பல்லையுமுடையாய்! தன்னை நோக்கி வரும் விருந்தினர் யாவரிடத்தும் இன்சொற் கூறலும், கலந்துறவாடலும், இருக்கை யுதவுலும், அறுசுவை யுண்டியளித்தலும் செய்து, கடுஞ்சொ லொழித்து மென்சொல் வழங்கிச் சிறப்பிப்பானாயின் எக்காலமும் அவனை வானோர் விருந்தினனாய் ஏற்றுக்கொள்வர்.

(க - து.) விருந்தினனுக்கு இன்சொல் முதலியன வழங்குவானுக்கு மறுமையில் இன்பமுண்டாம்.

விருந்தினராய், எதிர்வார்க்கு முறையே ஒருவன் செய்யற்பாலவான கடமைகள் ஈண்டு எடுத்தோதப்பட்டன. இன்சொல் முதலிற் கூறும் வரவேற்புமொழியெனவும், மென்சொல் இறுதியிற் கூறும் பணிவுமொழியெனவுங் கொள்க. இம்மையிற் சிறந்தாரை மறுமைக்கண் விண்ணுலகோர் வரவேற்ப ரென்பதைப் "புகழுடையோர், விசும்பின் வலவ னேவா வானவூர்தி யெய்துப" (உ௭) என்னும் புறநானூற்றினுங் காண்க. அளாவல் - அளாவ, பகுதி. (7)

உடன்படான் கொல்லா னுடன்றார்நோய் தீர்த்து
மடம்படான் மாண்டார்நூன் மாண்ட—இடம்பட
நோக்கும்வாய் நோக்கி நுழைவானேன் மற்றவனை
யாக்குமவர் யாக்கு மணைந்து.

(இ - ள்.) உடன்படான் - பிறர் கொலை செய்தற்கு உடம்படாமல், கொல்லான் - தானும் ஒருயிரைக் கொல்லாமல், உடன்றார் நோய் - பிணிப்பட்டு வருந்துகின்றவர்களின் நோயை, தீர்த்து- மருந்து முதலியன உதவி நீக்கி, மடம்படான் - அறியாமையில் மயங்கானாய், மாண்டார் நூல் - அறிவு மாட்சிமைப்பட்ட சான்றோருடைய நூல்களை, மாண்ட இடம்பட-சிறந்த கருத்துக்கள் புலனும் படி, நோக்கும் வாய் நோக்கி - ஆராய்வதற்குரிய இடத்தில் ஆராய்ந்து, நுழைவானேல் - அதற்குத் தக ஒழுகுவானேல், அவனை - அவ்வியல்பினனை, யாக்குமவர் - நண்பராக்கிக் கொள்வாரை, அணைந்து - மேற்கூறிய ஒழுக்கங்களெல்லாம் பொருந்தி, யாக்கும் - மேம்படுத்தும்.

(ப - போ - ரை.) ஒன்றினைப் பிறர்கொல்ல உடன்படாது, தானுங்கொல்லாது, பிணியால் வருந்தினார் நோயைத் தீர்த்து, பேதைமையின்கட் படாதே, மாட்சிமைப்பட்டார் நூல்களின் மாட்சிமைப்பட்ட குணங்க டனக்குப் பெருகும்படி யாராயுமாயின், தானாராய்ந்தவற்றின்க ணுள்புக்கொழுகுவனாயின், அவனை யணைந்தார்க்கு நெறியெல்லாங் கூடியாக்கும்.

(க - து.) நல்லாரோடு இணங்குவார்க்கும் அந்நல்லன உண்டாகும்.

உடன்படான், கொல்லான் முதலியவற்றை முற்றெச்சமாக்கிக் கொள்க. 'இடம்பட' வென்றவிடத்து இடமும், 'நோக்கும்வாய்' என்றவிடத்து வாயும் ஈண்டுக் கருத்தென்னும் பொருள் மேலன. இதில் உடன்படாமை, கொல்லாமை, தீர்த்தல், மடம்படாமை, நோக்கல் நுழைதல் என்ற ஆறு பொருளும் அமைந்திருத்தல் காண்க.

கற்றாரைக் கற்ற துணரா ரேனமதியார்
உற்றாரை யன்னண மோராமல்—அற்றார்கட்
குண்டி யுறையு ளுடுக்கை யிவையீந்தார்
பண்டிதராய் வாழ்வார் பயின்று.

(இ - ள்.) கற்றாரை - கற்று வல்ல சான்றோரை, கற்றது - தாங் கற்ற கல்விப் பொருளை ; உணரார் என - அறியமாட்டா ரென்று, மதியார் - நினையாமலும், உற்றாரை - உறவினர் நண்பரை யும், அன்னணமும்-அவ்வகையாக, ஓராமல்-அன்பில் உயர்வு தாழ் வுகள் எண்ணாமலும், அற்றார்க்கு - பொருளற்ற வறிஞர்க்கும் பற் றற்ற துறவிகட்கும், உண்டி உறையுள் உடுக்கை - உணவும், இட மும், உடையும், இவை ஈந்தார் - என்றிவற்றைக் கொடுக்கின்றவர் கள், பண்டிதராய் - அறிஞர்களாய், பயின்று - யாவரானும் மதிக்கப் பட்டு, வாழ்வார் - இனிது வாழ்வார்கள்.

(ப - போ - ரை.) கற்றாரைக் கற்றிலரென்று மனதிற்கொள் ளாதே, உற்றாரையு முற்றாரென்று கொள்ளாதே, பொருளற்றார்க் குணவும், மருந்தும், உறையிடமும், உடுக்கையும் பயின்று கொடுத்தா ரறிவுடையாரென்று பிறரான் மதிக்கப்படுவர்.

(க - து.) பிறரெவரையும் தாழ்வென்று கருதாமல் அற் றார்க்கு வேண்டுவன உதவுவார், அறிவுடையராய்க் கருதப்படுவார்.

உற்றாரையும் அற்றாரையும் இரட்டுற மொழிந்துகொள்க. அன்னவண்ண மெனற்பாலது அன்னணமென மரீஇயது. கற்றது- வினையாலணையும்பெயர். உண்டி - உண் பகுதி, து - சாரியை, இ - செயப்படுபொருண்மை விகுதி. உறையுள் - தொழிலாகு பெயர். (9)

சேங்கோலான் கீழ்க்குடிகள் செல்வமுஞ் சீரிலா
வேங்கோலான் கீழ்க்குடிகள் வீந்துகவும்—வேங்கோல்
அமைச்சர் தொழிலு மறியலமோன் றாற்ற
எனைத்து மறியாமை யான்.

(இ - ள்.) செங்கோலான் - முறை செய்யும் அரசனும், கீழ்க்குடிகள் - அவன் கீழ் வாழும் குடிகளும், செல்வமும்-அவர்தஞ் செல்வங்களும், சீர்இலா - முறைமை இல்லாத, வெம்கோலான் - கொடுங்கோலரசனும், கீழ்க்குடிகள்-அவன் கீழ் வாழுங் குடிகளும், (செங்கோல்) வெங்கோல் அமைச்சர் - இவை தமக்கெல்லாம் ஏது வான செங்கோ லமைச்சர்களுங் கொடுங்கோ லமைச்சர்களும், தொழிலும் - அவரவர் தொழில்களும், வீந்துகவும்-ஒருங்கே அழிந் தொழியவும், எனைத்தும் அறியாமையான் - சிறிதும் அறிய முடி

யாமையினுல், ஒன்று - இவை தமக்குரிய ஏதுவை, ஆற்ற அறிய லம் - முற்றத் தெரிகின்றிலம்.

(ப - போ - ரை.) செங்கோலானது செல்வமும், அவன் கீழ் வாழுங் குடிகளது செல்வமும், வெங்கோலானது கேடும், அவன் கீழ் வாழுங் குடிகளது கேடும், வெங்கோலமைச்சரது கேடும், அவர் தொடங்கிய வினை முடியாது கெடுதலும், இவ்வாறினையுமோர் திற னறிய மாட்டோம், யாது மெமக்கறியப் பொருந்தாமையின்.

(க - து.) நல்லோரும் வீழ்கின்றார், தீயோரும் வீழ்கின்ரு ரானமையின், இவற்றின் ஏது ஏதோ அறிகின்றிலமென்பது.

அறியலம் என்ருர், உலக நிலையாமைக்குரிய மலத்தின் வலி யைச் சுட்டி; மலத்தின் பரப்பும் ஆற்றலும் வரம்பிட்டுணர வாகா மையின், 'ஆற்ற அறியல' மென்று அறியாமை கூறுமுகத்தால் அவை தம்மை விளங்கவைத்தா ரென்க. ஈண்டுக் கூட்டி யுரைக்க வேண்டுவன வெல்லாங் கூட்டிக்கொள்க. 'வீந்துகவும்' என்பதை 'உக்குவீயவு' மென்று விகுதி பிரித்து மாற்றுக. இதன் உம்மை வினையெச்சப் பொருளது. (10)

அவாவறுக்க லுற்ருன் றளரானவ் வைந்தின்
அவாவறுப்பி னுற்ற வமையும்—அவாவருன்
ஆகு மவனுயி னைங்களிற்றி ஞட்டுண்டு
போகும் புழையுட் புலந்து.

(இ - ள்.) அவா அறுக்கல் உற்ருன் - அவாவினைக் கெடுத் தற்குக் கருதியவன், தளரான் - உறுதி தளராமல், ஐந்தின் - ஐம் பொறிகளின் வழிச்செல்லும், அவா அறுப்பின்-அவாவினைக் கெடுப் பானுயின், ஆற்ற அமையும் - அவன் கருத்து மிகவும் நிரம்பும், அவன்-மற்று அவன், அவா அருன் ஆகுமாயின்-ஐம்பொறி அவா வினைக் கெடுத்துக்கொள்வானுனல், அவ் ஐங்களிற்றின் - அவ்வைம் பொறிகளென்னும் யானைகளால், ஆட்டு உண்டு - அலைப்புண்டு, புழையுள்-அவற்றின் புழையாகிய புலமென்னும் வாயிலில், புலந்து போகும் - சென்று துன்புறுவான்.

(ப - போ - ரை.) மனத்தின்க ணவாவினை யறுப்பான் ருெடங்கியவன் றன்னவா வின்றியே நிற்கும். பொறி புலனுகிய நிலங்களாலேமெய்ப்பொருள் மேம்படலென ஐவகைப்பட்டபொருட்

கட் செல்லு மவாவினை மிகவு மறுப்பவ னெல்லாக் குணங்களாலு மிக வமைவுடையனுமன்றி யவாவரு தொழியுமாயினைம்பொறியென் னுங் களிற்று லலைப்புண்டு நரகவாயிலுட் டுன்பமுற்றுச் செல்லும்.

(க - து.) அவா வறுத்தலாவது, ஐம்பொறி யடக்கமாகும்.

'அவ்வைந்தி' னென்பதன் அகரச் சுட்டை 'ஐங்களிற்றி' னென்பதோடு சேர்த்துரைக்க. தளரான் - முற்றெச்சம். பொறி களைக் களிறென்றமையின், அவற்றின் புலன்களை அக் களிறுகளின் றுதிக்கைப் புழைகளென்று ரென்க. 'புலந்து போகு' மென்பதைப் போய்ப் புலக்குமென மாற்றி யுரைக்க. ஐம்புலன்கள் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். ஆட்டு - முதனிலை திரிந்த தொழிற் பெயர். (11)

கோலைக்களம் வார்குத்துச் சூதாடு மெல்லை
அலைக்களம் போர்யானை யாக்கு—நிலைக்களம்
முச்சா ரிகையோதுங்கு மோரிடத்து மின்னவை
நச்சாமை நோக்காமை நன்று.

(இ - ள்.) கொலைக்களமும் - கொலை பயிலுமிடமும், வார் குத் தும் - வெள்ளம் பெருகிச் சுழியும் நீர் நிலைகளும், சூது ஆடும் எல்லை யும் - சூதாடு கழகமும், அலைக்களமும் - பிறரை வருத்துஞ் சிறைச் சாலையும், போர்யானை - போர் செய்ய வல்ல யானைகளை, யாக்கும் நிலைக்களம் - பழக்குகின்ற இடமும், முச்சாரிகை ஒதுங்கும் - யானை, தேர், குதிரையென்னும் மூன்றும் ஓட்டம் பயிலுகின்ற, ஓர் இடத்தும்-ஒருவகை இடமும், இன்னவை-என இவை தம்மை, நச் சாமை - விரும்பாமையும், நோக்காமை - போய்ப் பாராமையும், நன்று - நல்லது.

(ப-போ-ரை.) பொருது கொல்லுங்கொலைக்களமும், வார்க் குத்துமிடமும், சூதாடுமிடமும், தண்ட முதலாயினவற்றாலலைக்குஞ் சிறைக்களமும், போர்யானைகளைக் கொலை கற்பிப்பானுக்கு நிலை யிடங்களும், யானை, தேர், குதிரையான மூன்று திறமுஞ் சாரியை யாக வோடு மோரிடத்துஞ் செல்லுதற் குடன்படாமையும் அவை சென்று நோக்காமையும் நல்வினையாம்.

(க - து.) கொலைக்களம் முதலியவற்றை நச்சாமையும் நோக்காமையும் நன்று.

வார்குத்து, ஒழுகிச் சுழியும் இடமென்க; வார்க்குத்தென்பது பாடமாயின், ஒழுகுதலையுடைய சுழியுமிட மென்றுரைக்க. நீர் நிலைகளிற் சுழிதலுடைய இடங்களே தீமை விளைப்பனவாகலின் அதனை யுணர்த்தற்கு 'வார்குத்' தென்னுஞ் சொற்பெய்தார்; குத்து-தொழிலாகு பெயர். வார்க்குத்து - பெரிய மற்போர் செய்யுமிடம் எனவுமுண்டு, முச்சாரிகை - மூன்றினது சாரிகை, ஆறும் வேற்றுமைத் தொகை; மூன்றாகிய சாரிகை யெனின் பண்புத் தொகை. சாரிகை - சுற்றியோடி வருதல். ஓரிடத்து மென்புழி வரும் எண்ணும்மையை ஏனையவற்றோடுங் கூட்டுக. நன்று, குறிப்பு வினை முற்று; ஈண்டுப் பன்மையினொருமை வந்த வழுவமைதி. (12)

விளையாமை யுண்ணாமை யாடாமை யாற்ற
உளையாமை யுட்குடைத்தா வென்று—களையாமை
நூற்பட்டார் பூங்கோதாய் நோக்கி னிவையாறும்
பாற்பட்டாற் கொண்டொழுகும் பண்பு.

(இ - ள்.) நூல்பட்டு ஆர் - நூலினாற் கோக்கப்பட்டு நிரம்பிய, பூ கோதாய் - மலர்மாலை யணிந்த கூந்தலை யுடைய பெண்ணே, நோக்கின் - ஆராயின், விளையாமை - உழவாற் பயிர் விளைக்காமையும், உண்ணாமை - ஐம்பொறிகள் களிப்புற வுண்ணாமையும், ஆடாமை - பயனில் சொற்களைப் பேசாமையும், ஆற்ற உளையாமை - பிறரால் விளையுந் தீமைகட்கு மிகவும் வருந்தாமையும், உட்கு உடைத்தா - நாணந் தருவனவற்றை, வென்று - வெல்லுதலும், களையாமை - மேற்கொண்ட ஒழுக்கங்களை விட்டு விடாமையும், இவை ஆறும் - ஆகிய இவை ஆறு ஒழுக்கங்களும், பால்பட்டார் - துறவின்பாற்பட்டார், கொண்டு ஒழுகும் பண்பு - மேற்கொண்டு ஒழுகும் இயல்புகளாம்.

(ப - பொ - ரை.) உழவாற்பயிர் விளைக்காமையும், ஐம்பொறிகள் களிப்புற உண்ணாமையும், நீடாடாமையும், பிறர் சொன்ன கடுஞ்சொற்களுக்கு மிக உளையாமையும், உட்குடைய வருத்தங்களை வேறலும், மேற்கொண்ட சீலங்களை யரிதென்று களையாமையுமாகிய இவ்

வாறும் துறவின்பாற் பட்டார் கொண்டொழுகு மொழுக்கங்கள் நூற் பட்டார் பூங்கோதாய்!

(க - து.) விளையாமை முதலியன துறவற வழிப்பட்டா ரொழுகும் பண்புகளாம்.

விளையாமை - பிறர்க்கு ஊறு செய்யாமை; உண்ணுமை - எதனையும் பற்றோடு நுகராமை என்பாருமுளர். வென்று, ஈண்டுத் தொழிற் பெயராகக் கொள்க. இது முதனிலைத் தொழிற்பெயராது, புடைபெயர்ச்சி விகுதி. 'உட்குடைத்தாவன' வென்பது கடை குறைந்து உட்குடைத்தாவென நின்றது. உட்கு - முதனிலைத் தொழிற் பெயர். நூலிற் கோக்கப்படுங்காற் பேரரும்பாய்க் காணப் பட்டுப் பின் மலர்தலின், 'நூற்பட்டார் பூ' எனப்பட்டது. நூல் பட்டு என்பதற்குச் சாமுத்திரிகை நூலின் இலக்கணம் அமைந்து எனவுமாம். (13)

போய்யான் புலாலோடு கட்போக்கித் தீயன
செய்யான் சிறியா ரினஞ்சேரான்—வையான்
கயலியலுண் கண்ணுய் கருதுங்கா லென்றும்
அயல வயலவா நூல்.

(இ - ள்.) கயல் இயல் - கயல்மீனின் இயல்பினையுடைய, உண் கண்ணுய் - மையணிந்த கண்களையுடைய பெண்ணே! என்றும் - எப்பொழுதும், பொய்யான் - பொய் சொல்லாமல், புலாலொடு - ஊனுண்ணலும், கள் - கள்ளுண்ணலும், போக்கி-ஒழித்து, தீயன செய்யான் - தீய செயல்களைச் செய்யாமலும், சிறியார் இனம் சேரான் - சிறியாரது கூட்டத்தைச் சேராமலும், வையான் - பிறரை நிந்தியாமலும் ஒருவன் ஒழுகுவானுயின், கருதுங்கால்-உற்றுநோக்கு மிடத்து அவனுக்கு, நூல் - அறிவு நூல்கள், அயல அயல - வேண்டு வனவல்ல.

(ப-போ-ரை.) பொய்யுரையாது புலாலையுங் கள்ளையுமுண் டல் களைந்து தீவினைகளைச் செய்யாது சிறியாரினத்தைச் சேராது பிறர்க்கின்னுதன ஒருவன் சொல்லானுயினென்று மாராயுங்காலவற் குப் பிறராய்ந்த நூலினறிவால் பயனில்லை கயலுண் கண்ணுய்!

(க - து.) பொய்யாமை முதலிய இயல்புகளை யுடையவன் அறிவு நூல்கள் ஆராய்ந்தவனை ஒப்பான்.

கயலியலுண்கண் என்றவிடத்துப் பிறழ்ச்சியாகும் பொதுத் தன்மை தொக்குநிற்றலின் **தொகையுவமையணி.** கயலினியல்பு, பிறழ்தல், மகளிர் கண்கள் நிலை பிறழ்ந்து நோக்கும் இயல்பினவாத லுங்காண்க. ஒடு, எண்ணுப் பொருளில் வரும் இடைச்சொல். அயலென்பது வேண்டாமை மேனின்றது. அடுக்கு துணிவுப் பொருளதென்க. ஆம், அசை. சிறியராவார் - இருவினைப் பயனு மில்லை யென்பார், மோசஞ்செய்வார், காமநூ லுணர்ந்தொழுகுவார்.

கண்போல்வார்க் காயாமை கற்ரு ரினஞ்சேர்தல்
பண்போல் கிளவியார்ப் பற்ருமை—பண்போலும்
சொல்லார்க் கருமறை சோராமை சிறிதேனினும்
இல்லார்க் கிடர்தீர்த்த னன்று.

(**இ - ள்.**) கண்போல்வார் - கண்போன்ற நண்பரை, காயாமை- தவறுசெய்த விடத்துச் சினவாமையும், கற்ருர் இனம் - கற்று வல்ல பெரியார் கூட்டத்தை, சேர்தல் - சேர்ந்து இணங்குதலும், பண்போல் கிளவியார் - யாழிசை போன்ற மொழிகளை யிசைக்கின்ற பெண்டிரை, பற்ருமை - பின் பற்ருமையும், பண்போலும் சொல் லார்க்கு - இசைபோலு மொழியையுடைய மாதர்க்கு, அருமறை - அருமையான மறைபொருள்களை, சோராமை - மறந்துஞ் சொல்லா மையும், சிறிது எனினும் - சிறிதாயினும், இல்லார்க்கு - இல்லை யென்பார்க்கு, இடர்தீர்த்தல் - கொடுத்து இடுக்கண் நீக்குதலும், நன்று - நல்லவாம்.

(**ப-பொ-ரை.**) ஒருவன் றனக்குக் கண்போலு நட்டாரைக் காயாமையும், கற்ருரினஞ் சேர்தலும், அரிவையரை மிக அன்பு செய்யாமையும், அவர்க்கு மறை யுரையாமையும், வறியார்க்குச் சிறி திடராயினுந் தீர்த்தலுமாகியவாறும் நல்ல குணம்.

(**க - து.**) கண்போல்வார்க் காயாமை முதலியன நல்லவாம்.

கண்கள் தம்மை யுடையானுக்குக் கதிரொளியினை அறிவித்து வழி காட்டுமாறு போல, சிறந்த நண்பன் ஒருவனுக்குத் திருவரு ளொளியினைப் புலப்படுத்தி நல்லொழுக்க நெறியினைக் காட்டுதலின் அவன் 'கண்போல்வா' னெனப் பட்டானென்க. அன்றி வானா அருமையுடையா னெனினுமாம். காயாமை, பழமை நினைந்தென்க.

"பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்."

என்பர் (பழைமை-டு) திருவள்ளுவனாரும். மென்மையும் இனிமை யுங் கருத்தைப் புலப்படுத்திப் பிறருள்ளத்தைப் பிணிக்கும் ஆற்ற லும் பொருந்திய கிளவி, 'பண்போற் கிளவி' யென்க. யாழினி சைக்கு இவையனைத்தும் உண்மையாதலுங் காண்க. கிளவி - தொழிற்பெயர். கிள - பகுதி. மறை - மறு என்னும் வினையடியா கப் பிறந்த பெயர்; ஐ - செயப்படு பொருண்மை விகுதி. (15)

துறந்தார்கட் டுன்னித் துறவார்க் கிடுதல்
இறந்தார்க் கினிய விசைத்தல்—இறந்தார்
மறுதலை சுற்ற மதித்தோம்பு வானேல்
இறுதலில் வாழ்வே யினிது.

(இ - ள்.) துறந்தார்கண் துன்னி - துறந்தார் நிலையிற் பொருந்தி, துறவார்க்கு - அங்ஙனந் துறவாமல் இரப்பவர்க்கு, இடுதல் - வேண்டுவன கொடுத்தலும், இறந்தார்க்கு - கல்வி முதலிய வற்றாற் சிறந்தவர்க்கு, இனிய இசைத்தல் - நன்மொழிகளைச் சொல்லுதலும், இறந்தார் - துணையற்று இறந்தவர்களையும், மறுதலை- தனக்குத் தீமை செய்தவர்களையும், சுற்றம் - உறவினரையும், மதித்து ஓம்புவானேல் - கருத்து வைத்துப் பாது காப்பானாயின், இறுதல் இல் - நன்மை அழிதலில்லாத, வாழ்வே - இல்லற வாழ்க் கையே, இனிது - துறவறத்தினும் நல்லது.

(ப-பொ-ரை.) மனைத் துறந்த வருந்தவரைச் சேர்ந்து, துற வார்க் கீதலைச்செய்து கல்வியில் மிக்கார்க்கினியவற்றை மருவிச் செய்து, தான் குடிப்பிறந்த வருந்தவரைச் சேர்ந்து, குடியு ளிறந் தாரையுங், தனக்கின்னாதாரையு மதித் தவர்க்கு வேண்டுவன செய் வானாயி னிறுதலில் வாழ்வே துறவறத்தினு மினிது.

(க - து) துறவறவொழுக்கத்தை இல்வாழ்க்கையினின்றே செய்யின், அவ்வில்வாழ்க்கை புறத்துறவினுஞ் சிறந்தது.

ஐம்பொறிகளானும் நுகர்தற்குரிய எல்லாப் பொருள்களு மிருந்துந், துறவறத்தோடு பொருந்தினா ரென்பார், 'துறந்தார்கட் டுன்னி' யெனவும், அங்ஙனம் அவ்வைம்பொறி நுகர்ச்சிக்குரிய

பொருள்கள், எதுமில்லாராயிருந்துந் துறவாது நிற்பாரென்பார், 'துறவா' ரென்றுங் கூறினர். இறந்தார் - கடந்தவர்; ஈண்டு மேம்பட்டவரென்பது கருத்து. இனிய, குறிப்புவினையாலணையும் பெயர். மறுதலை - பகைமை, இங்குப் பண்பாகு பெயராய் நின்றது; தலை - பகுதிப் பொருள் விகுதி. சுற்றம் - அம் வினைமுதற்பொருள் விகுதி.

"அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்"

(இல்வாழ்க்கை - சு) என்னுஞ் **செந்நாப்புலவர்** கூற்றோடு இச் செய்யுட்பொருள் ஒத்து நிற்றல் காண்க. (16)

குடியோம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்
மடியோம்பு மாற்ற லுடைமை—முடியோம்பி
நாற்றஞ் சுவைகேள்வி நல்லா ரினஞ்சேர்தல்
தேற்றானேற் றேறு மமைச்சு.

(இ - ள்.) குடி ஓம்பல் - குடிகளைப் பாதுகாத்தலும், வன் கண்மை - தொழின் முகத்தில் ஆண்மையும், நூல்வன்மை - நூற் புலமையிற் கலங்காத அறிவும், கூடம் மடி - கரவுஞ் சோம்பலும், ஓம்பும் - தன்மாட்டு நிகழாதவாறு பாதுகாக்கும், ஆற்றல்உடைமை- வன்மை யுடைமையும் பொருந்தி, முடி ஓம்பி - அரசாட்சியைப் பாதுகாத்து, நாற்றம் - மணத்தையும், சுவை - சுவைக்கினிய உண வையும், கேள்வி - இசைக் கேள்வியையும், நல்லார் இனம் சேர்தல்- மாதர் கூட்டத்தைச் சேர்ந்து மெய்யுறுதலையும், தேற்றானேல் - நன்மை தருவனவென்று துணியானாயின், அமைச்சு - அவன் அமைச்சனாதற் குரியானென்று, தேறும் - தெளியப்படுவன்.

(ப-பொ-ரை.) குடிகளைப் பாதுகாத்தலும், வன்கண்மை யுடையனாதலும், பல நூலுங் கற்ற வன்மையும், வஞ்சனை யுடைய னாதலும், சோம்பு தன்மாட்டு வாராமையும், பாதுகாக்கு மாற்ற லுடைமையு மென்கின்ற வைந்து முடையனாய் முடியுடை யரசனை லோம்பி விரும்பப்படு நாற்றமுஞ் சுவையுங் கேள்வியும் விரும்பி நல்லாரினத்தைச் சேர்தல் செய்யானாயி னவன் அரசர்க்கமைச்ச னாகத் தேறப்படுவான்.

(க - து.) குடியோம்பல் முதலியன அமைச்சர்க்குரிய இயல்புகளாகும்.

'பொருந்தி' யென ஒரு சொல் வருவித்துக்கொள்க. 'நாற்றஞ் சுவைகேள்வி நல்லாரினஞ் சேர்தல் தேற்று' னென்றது, ஐம்புல வடக்கமுடையா னென்றற்கு. (17)

போகம் பொருள்கேடு மான்வேட்டம் பொல்லாக்கள்
சோகம் படுஞ்சூதே சொல்வன்மை—சோகக்
கடுங்கதத்துத் தண்ட மடங்காமை காப்பின்
அடுங்கதமி லேனை யரசு.

(இ - ள்.) போகம் - இன்ப நுகர்ச்சியும், பொருள்கேடு - பொருளழிதலும், மான்வேட்டம் - விலங்குகளை வேட்டையாடுதலும், பொல்லா கள் - தீமையைத் தருங் கள்ளுண்ணலும், சோகம் படும் சூது- துன்பம் விளைக்கின்ற சூதாடலும், சொல்வன்மை - வன்சொற் கூறலும், சோகம் கடும் கதத்து - வருத்தந் தருகின்ற மிக்க சினத்தினால், தண்டம் - போர் செய்தலும், அடங்காமை காப்பின் - தன் மாட்டுப் பொருந்தாமல் அரசன் பாதுகாப்பானானால், ஏனை அரசு - மற்ற அரசர்கள், அடும் கதம் இல் - இவ்வரசனோடு போர் செய்யுஞ் சினமிலராவர்.

(ப. பொ-ரை.) மகளிரோடு நுகரும் போகமும், தான் தேடிய பொருளைப் பாதுகாவா தழித்துக் கெடுத்தலும், மான்வேட்டையாடுதலும், பொல்லாக் கள்ளினை நுகர்தலும், துன்பம் விளையப்படும் சூதாடுதலும், வன்சொற் சொல்லுதலும், துன்பத்தைச் செய்யும் மிக்க கோபத்தாற் பிறந்த தண்டஞ் செய்தலுமென்கிற இவ்வேழுமாறு வின்ப வரசன் பகையரச ரடுங்கோப முளவாகான்.

(க - து) போகம் முதலியவற்றிற் கருத்தீடுபடாத அரசனுக்குப் பகை யரசர்கள் ஏற்படார்.

பொருள்கேடு, எழுவாய்த் தொடர். சூதே என்பதன் ஏகாரம் எண்ணேகாரமாகலின், ஏனையவற்றிற்குங் கூட்டுக. இச்செய்யுள் போன்று சில செய்யுள்களில் ஆறுக்கு மேல் ஏழு பொருளும் வரும். வந்தால் ஏலாதி ஆறு பொருளுடன் கண்ட சருக்கரை யொன்று கூட்டுதலுண்மையின் ஏழாவது பொருளும் கூறப்பட்டதென்க-(18)

கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்மனைமேல்
செல்லான் சிறியா ரினஞ்சேரான்—சொல்லும்
மறையிற் செவியிலன் றீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியாற் கிவை.

(இ - ள்.) கொல்லான் - ஒருயிரையுங் கொலைசெய்யான், கொலைபுரியான் - பிறர் கொலைசெய்தலையும் விரும்பான், பொய் யான் - பொய் சொல்லான், பிறர் மனைமேல் - பிறர்க்குரிய மனைவி மேல், செல்லான் - தனக்குரிமை விரும்பான், சிறியார் இனம் - கீழ் மக்கள் கூட்டத்தை, சேரான் - இணங்கான், சொல்லும் - மறை வாய்ச் சொல்லப்படுகின்ற, மறையில் - மறைபொருள்களில், செவி இலன் - செவிகொடான், தீச் சொற்கள் - தீய சொற்களைப் பேசுத வில், மூங்கை - ஊமை, இவை - ஆகிய இவ்வியல்புகள், இறையில் - பெருந் தன்மையில், பெரியாற்கு - பெரியவனுக்கு (உரியவாம்).

(பொ. ப-ரை.) தானொன்றனைக் கொல்லான், பிறர் கொன்ற கொலையினை விரும்பான், பொய் சொல்லான், பிறர் மனையாண்மேற் செல்லான், கீழ்மக்க ளினஞ் சேர்தலை மாட்டான், பிறர் மறை கூறு மிடத்தின் செவி கொள்ளானாய், பிறரைத் தீச்சொற் செல்லுமிடத்து மூங்கைபோலொழுகு முதன்மையிற் பெரியார்க் கிவ்வேழ் திற முமாம்.

(து - க.) கொல்லாமை முதலியன பெருந்தன்மையுடைய யான்பாற் காணப்படும்.

புரிதல், விரும்புதல்; இஃதிப்பொருட்டாதலை "நயம் புரிந் துறையுநர்" (145) என்னும் புறப்பாட்டினுங் காண்க. சிறியா ரினம், ஒன்றன்கூட்டத் தற்கிழமைப் பொருளதான ஆறும் வேற்று மைத் தொகைநிலைத் தொடரென்க. இறையிற் பெரியான், தலை மைத் தன்மையிற் பெரியானென்பது. மறை - தொழிலடியாகப் பிறந்த பெயர்; ஐ - செயப்படுபொருண்மை விகுதி, மறுக்கப்பட் டது என்பது பொருள். 'பிறர் பொருள்மேல் செல்வான்', 'பல்லார் மறையில்' என்றும் பாடம். (19)

மின்னே ரிடையாற்சொற் றேருன் விழைவோரான்
கொன்னே வெகுளான் கொலைபுரியான்—பொன்னே
உறுப்பறுத் தன்ன கொடையுவப்பான் றன்னின்
வெறுப்பறுத்தான் விண்ணகத்து மில்.

(இ - ள்.) பொன்னே - திருமகளை யொத்த பெண்ணே! மின்நேர் - மின்னலுக்கு ஒப்பான, இடையார் - இடையையுடைய மகளிரின், சோல்தேருன் - மொழியை நம்பான், விழைவு ஓரான் - அவர்கள்பாற் கல்வி விருப்பத்தைக் கருதான், கொன்னே - பயனில்லாமல், வெகுளான் - ஒருவரையுஞ் சினவான், கொலைபுரியான் - ஒருயிரையுங் கொலைசெய்யான், உறுப்பு அறுத்தால் அன்ன - தன் உடம்பின் உறுப்புக்களை அறுத்துக் கொடுத்தாற் போன்ற, கொடை உவப்பான் - ஈகையை விரும்பிச் செய்வான், தன்னின் - தனதுளத்தில், வெறுப்பு - பிறர்மேல் வெறுப்புக் கொள்ளுதலை, அறுத்தான் - நீக்கினுனை ஒருவன், விண் அகத்தும் இல் - விண்ணுலகத்தின் கண்ணும் இல்லை.

(ப. போ-ரை.) பொன்னேயனையாய்! மின்போலு நேரிடையார் சொல்லைத் தேருது, காமநுகர்ச்சியை நினையாது, பயனன்றியே மிக வெகுளாது, ஒருயிரைக் கொலைமேவாது, தன்றுப்பறுத்துக் கொடுப்பது போலுங் கொடையுவந்து, தன்மனத்திலுள்ள செருக்கையுமறுத்தான் விண்ணகத்துமிலன்.

(க - து.) மகளிரின் மழலையை நம்பாமை முதலியன உடையவன் தேவரினுஞ் சிறந்தானென்க.

மின், தொழிலுவமம்; தெரிந்துந் தெரியாமலும் வளைந்து வளைந்து காண்டலுணர்த்திற்று. 'உறுப்பறுத்தன்ன கொடை' - சிபிச்சோழன் செய்தமை போன்றது; அவன்றன் கொடைமையை,

"புறவு நிறைபுக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்"

என்று **சிலப்பதிகாரங்** கூறும். உறுப்பு - சினையாகு பெயர். கொன் - இடைச்சொல். (20)

இளமை கழியும் பிணிமூப் பியையும்
வளமை வலியிவை வாடும்—உளநாளால்
பாடே புரியாது பால்போலுஞ் சொல்லினய்!
வீடே புரிதல் விதி.

(இ - ள்.) பால்போலும் - பாலைப்போன்ற, சொல்லினய் - மொழியினையுடைய பெண்ணே! இளமை கழியும் - இளம்பருவம்

நிலைபெறு தொழியும்; பிணி மூப்பு - நோயுங் கிழத்தனமும், இயையும் - வந்து சேரும், வளமை - செல்வமும், வலி - உடம்பின் வலிமையும், இவை வாடும் - ஆகிய இவை குன்றும், உளநாளால் - கழிந்ததுபோக எஞ்சி யிருக்கும் வாழ்நாளில், பாடே புரியாது - துன் பந்தருஞ் செயல்களையே செய்து கொண்டிருக்க விரும்பாமல், வீடே புரிதல் - வீடுபேற்றிற்கான தவவொழுக்கங்களையே விரும்புதல், விதி - முறைமையாம்.

(ப. போ-ரை.) பால்போலுஞ் சொல்லினாய்! இளமை நில் லாது கழியும், பிணியும் மூப்பும் வந்தடையும், செல்வமும் வலியும் வாடும், தானுள்ள நாளின்க ணிவ்வைந்தானும் வருந்துன்பத்தையே நுகரவிரும்பாது, வீடுபெறுதலையே விரும்புத லொருவர்க்கு நெறி யாவது.

(க - து.) இளமை கழிந்து பிணி மூப்புகள் உண்டாதலின், மக்கள் வீடுபேற்றை விரும்பி நிற்றலே கடமையா மென்பது.

மூப்புக் காலத்திற் றோன்றும் பிணியே தீராது மிகுதலின், அதனை மூப்பொடுவைத் தெண்ணினர். நாளால், வேற்றுமை மயக்கம். பாடென்றது ஈண்டு வயிற்றுப்பிழைப் பொன்றையே கருதிச் செய்யும் முயற்சித் துன்பத்தைக் குறித்தது. ஏகாரங்க ளிரண்டும் பிரிநிலை. இளமை, மூப்பு - பண்பாகு பெயர். (21)

வாளஞ்சான் வன்கண்மை யஞ்சான் வனப்பஞ்சான்
ஆளஞ்சா னும்பொரு ளானஞ்சான் - நாளேஞ்சாக்
காலன் வரவொழிதல் காணின்வீ டெய்திய
பாலினூ லெய்தப் படும்.

(இ - ள்.) வாள் அஞ்சான் - பகைவனது வாட்படைக்கு அஞ்சான், வன்கண்மைஅஞ்சான் - கண்ணோட்டமின்மையை அஞ் சான், வனப்பு அஞ்சான் - ஆண்மைத் தோற்றத்தை அஞ்சான், ஆள் அஞ்சான் - ஆட்சியை அஞ்சான், ஆய்பொருள் அஞ்சான் - தெரிந்து தேடிய செல்வப் பொருளை அஞ்சான், (ஆயினும்) நாள் எஞ்சா-நாள் குறையாத, காலன் - கூற்றுவனது, வரவு ஒழிதல் - வருகை நீங்கு தலை, காணின் - ஒருவன் அடைய விரும்புவனாயின், வீடு எய்திய - வீடுபேற்றை அடையும்பொருட்டு ஏற்பட்ட, பாலின் நூல் - அருட்

டன்மை பொருந்திய அறிவுநூல் ஒழுக்கங்களை, எய்தப்படும்-அடைதல் வேண்டும்.

**(ப. போ-ரை.)** வாள் வென்றியையஞ்சான், தறுக்கண்மையை யஞ்சான், தோற்றப்பொலிவினை யஞ்சான், படையாளனென் றஞ் சான், செல்வமுடைய னென்றஞ்சான், நாளினை மறந்தொழியாத காலன் தன்மேல் வரும் வரவினை யொழிதலொருவன் காண்பனு யின், வீட்டுநெறியைப் பொருந்திய தன்மையையுடைய நூல்களைச் சாரத்தகும்.

**(க - து.)** வீடுபேறு அடைவதற்கு நல்லொழுக்கங்களே யல்லாமல் அகவழிபாடு முதலியனவும் வேண்டப்படும்.

வாள் முதலியவற்றிற்கு அஞ்சுதல் ஓரச்சமன்று; மற்றுக் காலன் வரவுக்கு அஞ்சி முயறலே அஞ்சாமையா மென்பதுந் துணைக்கருத்தென்க. காலன் குறித்த நாள் தவறாது வருதலின், 'நாளெஞ்சாக் கால' னெனப்பட்டான். இனி 'எஞ்சா' வென்பதை ஈறுகெட்ட வினையெச்சமெனினும் ஆம். காலன் அறக்கடவுட்குத் தூதன். வீடு, காரணவாகு பெயர். ஆல்-உருபு மயக்கம். (22)

குணநோக்கான் கூழ்நோக்கான் கோலமு நோக்கான்
மணநோக்கான் மங்கலமு நோக்கான்—கணநோக்கான்
கால்காப்பு வேண்டான் பெரியார்நூல் காலற்கு
வாய்காப்புக் கோடல் வனப்பு.

**(இ - ள்.)** கால் காப்பு - காலுக்கு இடுந் தளை போன்றதான இல்வாழ்க்கையை, வேண்டான் - விரும்பாத ஒருவன், குணம் நோக்கான் - நல்லியல்பினைப் பொருட்படுத்தாமல், கூழ்நோக்கான் - செல்வத்தை மதியாமல், கோலமு நோக்கான் - அழகையு மதியாமல், மணம் நோக்கான் - திருமணத்தை மதியாமல், மங்கலமும் நோக்கான்-புண்ணியத்தையு மதியாமல், கணம் நோக்கான் - சுற்றத்தாரை மதியாமல், காலற்கு வாய்காப்பு - காலனுக்கு வாயிற்காப்பாக, பெரியார் நூல் - சான்றோருடைய அறிவு நூல்களைக்கொள்ளுதல், வனப்பு - அழகாம்.

**(ப-போ-ரை.)** குணமுடையானென்று பாரான், செல்வமுடையானென்று பாரான், தோற்றப் பொலிவுடையானென்று

பாரான், கலியாணஞ் செய்ய நின்றானென்று பாரான், புண்ணியஞ் செய்ய நின்றானென்று பாரான், சுற்றமுடையானென்று பாரான், ஆதலால் தன்னகர்க்குத் துணையாகிய மனைவாழ்க்கையை வேண்டானுய்ப் பெரியோராற் செய்யப்பட்ட ஆகமத்தைக் காலற்கு வாய்ப்பாகக் கோடல் ஒருவற் கழகாவது.

(க - து.) துறவொழுக்கத்தை விரும்புகின்றவன் இயல்பு முதலியவற்றைப் பொருட்படுத்தாமற் பிறப் பிறப்புக் கெடுதற்கான ஆன்றோ ரறிவு நூல்களைக் கற்றொழுகுதலே அழகாகும்.

நோக்கான் முதலியன முற்றெச்சம்; உம்மைக ளிரண்டும் முற்றெச்சம். கால்காப்பு - வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. 'காதலற்கு வாய்காப்புக்கோடல்' என்ற பாடங்கொண்டு, கால்காப்பு வேண்டான் என்பதைத் தந்தை யெனலுமாம். காலன் வருகின்ற வழிக்கு ஒருகாப்பாக வென்க. வாய்-வழி.

பிணிபிறப்பு மூப்பொடு சாக்காடு துன்பம்
தணிவி னிரப்பிவை தாழா—அணியின்
அரங்கின்மே லாடுநர்போ லாகாம னன்றாம்
நிரம்புமேல் வீட்டு நெறி.

(இ - ள்.) பிணி - நோயும், பிறப்பும் - பிறத்தலும், மூப்பொடு - கிழத்தனமும், சாக்காடு - இறத்தலும், துன்பம் - முயற்சித் துன்பமும், தணிவு இல் - போதுமென்னும் அமைதியில்லாத, நிரப்பு - வறுமையும், இவை - ஆகிய இவைகள், தாழா - உடனே அடையும்; ஆதலால், அரங்கின்மேல் - ஆட்ட மேடையின்கண், அணியின் - மாறிமாறிப்புனையுங் கோலத்தினையுடைய, ஆடுநர்போல் - ஆடுகின்றவரைப்போல, ஆகாமல் - மாறிமாறிப் பிறந்திறவாமல், வீட்டுநெறி - துறவொழுக்கம், நிரம்புமேல் - ஒருவன் நிரம்புவானாயின், நன்று ஆம் - அவனுக்கு இன்பம் உண்டாகும்.

(ப-பொ-ரை.) பிணியும், பிறப்பும், மூப்பும், சாக்காடும் இழவினான் வருந் துன்பமும், தேடுதலானே வருங் குறையாத விடும்பையுமென் றிவையாறு மதிட்டியாது வருமாயிற் சொல் வேறுபாட்டினு னரங்கின்கண் வந்தாடும் கூத்தரைப்போலப் பிறந்திறந்துழலாதே வீட்டுநெறியே யொருவற்கு வந்து நிரம்புமாயினன்றாம்.

(க - து) ஒவ்வொரு பிறப்பிலும் பிணி முதலான துன்பங்க ளுண்மையின், வீடுபேற்றிற்குரிய துறவொழுக்கத்தை மேற் கோடலே நன்மையாம்.

ஒடு, எண்ணுப்பொருள் பயக்கும் இடைச்சொல், பிறவற்றிற் குங் கூட்டுக. ஆடுநர், நகரவொற்று - பெயரிடை நிலை. ஒருவனே பல்வகைக் கோலங்கொண்டு நாடகமேடையில் நடித்தல்போல, ஒருயிரே வேறுவே றுடம்புடையதாய் உலகிற் பல்பிறப்பும் பிறந்து நிலவுதலின், 'அரங்கின் மேலாடுநர்போ' லென்ருர். சாக்காடு - காடு விகுதிபெற்ற தொழிற்பெயர். (24)

பாடகஞ் சாராமை பாத்திலார் தாம்விழையும்
நாடகஞ் சாராமை நாடுங்கால்—நாடகம்
சேர்ந்தாற் பகைபழி தீச்சொல்லே சாக்காடே
தீர்ந்தாற்போற் றீரா வரும்.

(இ - ள்.) பாத்து இலார் - ஒருவர் வகையில் உரிமையில்லாத பொதுமகளிர், பாடுஅகம் - பாடுகின்ற இடத்தில், சாராமை - அணுகாதொழிக ; தாம் விழையும் நாடகம் - அவர்கள் விரும்பியாடு கின்ற நாடகத்தை, சாராமை - சேராதொழிக ; நாடுங்கால்-ஆராயுங் கால், (பாடகம்) நாடகம் சேர்ந்தால் - அப்பாடுமிடத்தையும் நாடகத் தையும் அணுகினுல், பகைபழி - பகையும் பழியும், தீச்சொல்லே - கடுஞ்சொல்லும், சாக்காடே - சாவும், தீர்ந்தால்போல் - இல்லாதன போலிருந்து, தீரா வரும் - ஒழியாமல் வரும்.

(ப-போ-ரை.) (ஒருறுதி படாத போது) மகளிர் விரும்பு கின்ற பாடுமிடஞ் சாராதொழிக, அவர்களாடு நாடகஞ் சேர்ந்து காணுதொழிக, அவர்களாடுமிடஞ் சார்ந்து காணுமாயிற் பகையும், பழியும், பிறர் சொல்லுந் தீச்சொல்லும், சாக்காடுமென்று சொல்லப் பட்ட நான்கு மவர்க்கு நீங்கினபோல நீங்காவாய் வரும்.

(க - து.) பொதுமகளிருடைய பாட்டையும் ஆட்டத்தையுங் கேட்டலுங் காண்டலும், பகையும் பழியுங் கடுஞ்சொல்லுஞ் சாவும் விளைக்கும்.

சாராமை, வியங்கோட் பொருள்பட நின்றது ; பாத்து-பாகம் ; பலர்க்கும் பொதுமையுடையரே யல்லாமல் ஒருவர்க்கே பிரிவினை

யுடைய ரல்லரென்பது கருத்து. 'நாடுங்கால் நாடக' மென்றவிடத்துப் 'பாடக' மென்பதையுங் கூட்டியுரைக்க. ஏகாரம், எண்; தீரா - வினையெச்ச விகுதி தொக்கது. (25)

மாண்டமைந்தா ராய்ந்த மதிவனப்பே வன்கண்மை
ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல்—பூண்டமைந்த
கால மறிதல் கருதுங்காற் றூதுவர்க்கு
ஞால மறிந்த புகழ்.

(இ - ள்.) மாண்டு அமைந்து-ஒழுக்கத்தில் மாட்சிமைப்பட்டு, ஆராய்ந்த மதி - பல நூல்களை ஆராயப்பெற்ற அறிவும், வனப்பு - தோற்றப்பொலிவும், வன்கண்மை - பகைவர்க்கு அஞ்சாமையும், ஆண்டு அமைந்த - பயின்று நிரம்பிய, கல்வி - கல்வி யறிவும், சொல் ஆற்றல் - மாற்றுரையையும் வழிப்படுத்துஞ் சொல்வன்மையும், பூண்டு அமைந்த - தகுதி பொருந்திய, காலம் அறிதல் - காலமறிதலும், கருதுங்கால் - ஆராயுமிடத்து, தூதுவர்க்கு - தூதர்களுக்கு, ஞாலம் அறிந்த - உலகறிந்த, புகழ் - புகழை விளைப்பனவாம்.

(ப-பொ-ரை.) மாட்சிமைப் பட்டமைந்தாராய்ந்த மதியுடைமையும், தோற்றப் பொலிவுண்டதாலும், தறுகண்மையும், தன்னுளாளப்பட் டமைந்த கல்வியுடைமையும், சொல்வன்மையும், பொருந்தியமைந்த காலமறிதலுமெனவிவை யாராயுங்கால் தூதுவர்க் குலகறிந்த புகழாவது.

(க - து.) அறிவு அழகு முதலியன தூதுவருக்கு இயல்பாவனவாம்.

தூதர் இருவகையர். தாம் வகுத்துச் சொல்வோர், பிறர் சொல்லியதைச் சொல்லுவோர்.

ஏகாரம், எண். ஞாலம், உயர்ந்தார் மேனின்றது; இடவாகு பெயர். (26)

அஃகுநீ செய்ய லெனவறிந் தாராய்ந்தும்
வெஃகல் வெகுடலே தீக்காட்சி—வெஃகுமான்
கள்ளத்த வல்ல கருதி னிவைமூன்றும்
உள்ளத்த வாக வுரை.

(இ - ள். வெஃகல் - பிறர்பொருள்கள் கவர விரும்புதலை, அஃகு - குறைக்க ; வெகுடல் - சினத்தலை, நீ - விடுக, தீக்காட்சி - தீய காட்சிகளை, செய்யல் - காணற்க ; எனவு - என்று அறிஞர் சொல்லுதலை, ஆராய்ந்து அறிந்தும்-எண்ணித் துணிந்தும், வெஃகு மான் - அவற்றை விரும்புவானாயின், இவை மூன்றும் - வெகுளல் முதலான இம்மூன்று செயல்களும், கருதின - ஆராயுமிடத்து, கள்ளத்த அல்ல - கரவுடையனவல்ல, உள்ளத்த ஆக - உள்ளத்தி னளவினவாக, உரை - நீ சொல்வாயாக.

(ப-பொ-ரை.) வெஃகுதலை யஃகு, வெகுடலைநீக்கு, தீக் காட்சியைக் கருதிச் செய்ய லென்றறிந்தா னொருவன் சொல்லி, நீடுமின் மனத்தின் கருதற்றொழிலாக வேண்டின் வினையாக் கள்ளத் தனவல்ல.

(க - து.) சினத்தல் முதலான செயல்களை ஒருவன் தீய வென்று அறிந்துஞ் செய்வனாயின், அவன் அவற்றை ஒரு செயல் முடிதற் பொருட்டுச் செய்கின்றானாதலால் நன்மையேயாம்.

உள்ளத்தில் அறிந்தே வைத்திருக்கின்றா னென்றும், ஓரே துவின் பொருட்டே செய்கின்றா னென்றும், எனவே அவை தீயவல்ல வென்றுங் கொள்க வென்பது. கள்ளத்த, உள்ளத்த வினையாலணையும் பெயர்கள். ஆன், ஆயினென்பதன் மரூஉவென்க. வெகுளலாகாது என்பது முதலான மூன்று கருத்துக்களும் உள்ளத் தினளவினவாக உள்ளனவென்று கொள்க. அஃகு, நீ, செய்யல் - ஏவலொருமை வினை, - இவை முறைநிரனிறைப் பொருள்கோளில் வந்தன. (27)

மையேர் தடங்கண் மயிலன்னாய் சாயலே
மெய்யே யுணர்ந்தார் மிகவுரைப்பர்—பொய்யே
குறளை கடுஞ்சொற் பயனிலசொ னான்கும்
மறலையின் வாயினவா மற்று.

(இ - ள்.) மை ஏர் - மைதீட்டிய அழகான, தடம்கண் - பெரிய கண்களையுடைய, மயில் அன்னாய் - மயிலைப்போன்ற பெண்ணே! உணர்ந்தார் - சான்றோர், சாயலே - மேன்மையான நற்சொற்களையும், மெய்யே - மெய்யையும், மிகஉரைப்பர் - மிகவும்

பேசுவார், பொய்யே - பொய்யும், குறளை - புறங்கூறலும், கடுஞ் சொல் - வன்சொல்லும், பயனிலசொல் - பயனில்லாத சொற்களும், நான்கும் - ஆகிய இவை நான்கும், மறலையின்வாயின - புல்லறிவுடையான் வாயில் வருவனவாம்.

(ப-போ-ரை.) மையேர் தடங்கண் மயிலன்ன சாயலாய்! அறிவுடையார்தா மெய்யுரையே யுரைப்பார், பொய்யும், வடுச்சொல்லும், குறளையும், கடுஞ்சொல்லும், பயனில சொல்லுமென்று சொல்லப்பட்ட வைந்து மறலையின் வாயின் கண்ணே பிறக்கும்.

(க - து.) பெரியோர் வாய் நன்மொழிகளும், சிறியோர் வாய்த் தீச்சொற்களும் பிறக்கும்.

ஏகாரம், எண் ; பிருண்டும் இங்ஙனமே கொள்க. மற்று பிறிதென்பதன்மேல் வந்தது. மறல் - அறியாமை, பண்பாகு பெயராய்ப் பேதையரை யுணர்த்தியது. வாயின - இடமடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. 'சாயலாய்' என்று பாடங்கொள்ளுதலுமாம். ()

நிலையளவி னின்ற நெடியவர்தா நேரா
கொலைகளவு காமத்தீ வாழ்க்கை—அலையளவி
மையெனநீள் கண்ணாய்! மறுதலைய விம்மூன்றும்
மெய்யள வாக விதி.

(இ - ள்.) அலை அளவி - அலைத்தலைப் பொருந்தி, மை என நீள்கண்ணாய் - கரிய நெடிய கண்களையுடைய பெண்ணே! நிலை அளவின் நின்ற - தத்தம் நிலைக்கேற்ப ஒழுகாநின்ற, நெடியவர்தாம் - சான்றோர்க்கு, கொலை-ஒருயிரைக் கொல்லுதலும், களவு-திருடுதலும், காமம் தீ வாழ்க்கை - கொடிய காமவாழ்க்கையும், நேரா - உண்டாகா ; மறுதலைய - இவற்றிற் கெதிராவனவாகிய கொல்லாமை, கள்ளாமை, காதல் வாழ்க்கையென்னும், இம்மூன்றும் - இந்த மூன்று செயலும், மெய் அளவு ஆக-உண்மை நிலைக்கு ஏற்றனவாக, விதி - அறிந்துகொள்க.

(ப-போ-ரை.) தங்கட்குச் சொன்ன நிலையளவின் கண்ணே நின்ற நெடியவர்க ளுடன்படாத கொலையும், களவும், காமத்தீ வாழ்க்கையுமென்னு மூன்றும், இவற்றுக்கு மறுதலையாகிய கொல்லா

மையும், களவு காணாமையும், காமவாழ்க்கைப் படாமையுமென்னு மிம்மூன்று முடம்பின்றொழிலாக அலைத்தலைமேவி மையென நீண்ட கண்ணாய் விதிப்பாயாக.

(க - து.) கொல்லாமை முதலியனவே நிலைபிறழாத சான்றோரொழுக்கங்களாம்.

மெய்யளவாக விதி - உயிருள்ள உடலின் தொழிலாக விதிப்பாயாக எனலுமாம். 'நெடியவர்பாற் கொலை முதலாயின நேரா; கொல்லாமை முதலாயினவே அவரொழுக்கங்களா' மென்று பொருள் கூறுக. நெடியவர்தா மென்றற்கு நான்கனுருபு விரித்துக் கொள்க. ஏழாவது விரிக்கவெனினும் பொருந்தும். கண்கள் கடை நீண்டு கண்டாரை வருத்துதல்பற்றி, 'அலையளவி மையென நீள் கண்' என்றார். அலை, முதனிலைத் தொழிற்பெயர். 'காமத் தீ வாழ்க்கையைத் தீய காமவாழ்க்கை யென்று கொள்க. அன்றிக் காமமென்னுந் தீயைப் பொருந்திய வாழ்க்கையெனினுமாம். இதற்கு மறுதலையான வாழ்க்கை 'காதல் வாழ்க்கை' யென்பது. மறுதலைய என்பதில் மறுமை என்னும் பண்பு ஈறு கெட்டுத் தலைய என்னும் இடமடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சத்தின் பகுதியாகிய தலை யென்னும் பெயரோடு பண்புத்தொகையாக நின்றது. (29)

மாண்டவர் மாண்ட வறிவினான் மக்களைப்
பூண்டவர்ப் போற்றிப் புரக்குங்கால்—பூண்ட
ஔரதனே கேத்திரசன் கானீனன் கூடன்
கிரிதன்பௌ நற்பவன் பேர்.

(இ - ள்.) மாண்டவர் - சான்றோர், மாண்ட அறிவினால் - தமது சிறந்த அறிவினால், மக்களை - தம் மக்களை, பூண்டு - காத்தல் மேற்கொண்டு, அவர்ப் போற்றி - அவர்களை விரும்பி, புரக்குங்கால் - வளர்க்குங்கால், ஔரதனே - ஔரதனும், கேத்திரசன் - கேத்திரசனும், கானீனன் - கானீனனும், கூடன் - கூடோத்துபன்னனும், கிரிதன் - கிரிதனும், பௌநற்பவன் - பௌநற்பவனும் என்பன, பூண்டபேர் - அம்மக்கள் பெறும்பேராகும்.

(ப-போ-ரை.) மாட்சிமைப்பட்ட வறிவுடையார், மாட்சிமைப் பட்ட தம் மறிவினாற் புதல்வரைப் பொருந்தியவகை யுரைக்கு

மிடத்து, தனக்குப் பிறந்தவ னுரதனென்றும், தன்னேவலாலா தல், தானிறந்ததற்பின்பு குருக்களாலாதல் தன் மனையாள் வயிற்றே பிறனொருவற்குப் பிறந்தவனைக் கேத்தினனென்றும், தீவேட்டு மணம்புரியுமுன் தாய் வீட்டிற் பெற்ற பிள்ளையைக் கானீனனென்றும், மணம் புரிந்தபின் கணவன் வீட்டில் அவனுக் கொளித்துப் பிறனொருவனிடத்துப் பெற்ற பிள்ளையைக் கூட னென்றும், கணவனிறந்த பின்னர் வேறொருவனுக்குத் தான் மனை யாளா யவனொடு பெற்ற பிள்ளையைப் புநர்ப்பவனென்றும் கூறுப.

(க - து.) மக்கள் ஔரதன் முதலாகப் பலவகைப்படுவர்.

ஔரதன், கணவனுக்குப் பிறந்தவன்; கேத்திரசன், கணவ னிருக்கையிற் பிறனுக்குப் பிறந்தவன்; கானீனன், திருமண மாகாதவட்குப் பிறந்தவன்; கூடோத்துபன்னன், களவிற் பிறந்த வன்; கிரீதன், விலைக்கு வாங்கப்பட்டவன்; பௌநற்பவன், கணவ னிறந்தபின் அவன் மனைவி இரண்டா முறையாய்ப் பிறனை மணஞ் செய்துகொண்டு பெற்றமகன். மாண்டவர், அ - சாரியை. (30)

மத்த மயிலன்ன சாயலாய் மன்னியசீர்த்
தத்தன் சகோடன் கிருத்திரமன்—புத்திரி
புத்ரனப வித்தனொடு போய்யி லுபகிருதன்
இத்திறத்த வெஞ்சினர் பேர்.

(இ - ள்.) மத்தம் - களிப்புப் பொருந்திய, மயில் அன்ன சாயலாய் - மயிலை யொத்த சாயலையுடைய பெண்ணே! மன்னிய சீர் - நிலையான சிறப்பினையுடைய, தத்தன் - தத்தனும், சகோடன்- சகோடனும், கிருத்திரமன் - கிருத்திரமனும், புத்திரி புத்திரன் - மகள் மகனும், அபவித்தனொடு - அபவித்தனென்பவனும், பொய் இல் - பொய்மையில்லாத, உபகிருதன் - சுவயந்தத்தனும், இத் திறத்த - ஆக இவ்வகையன, எஞ்சினர்பேர் - மேற் கூறினருள் ஏனையோர் பெயராம்.

((ப - போ - ரை.) களிப்பு மிக்க மயிலையொத்த சாயலை யுடையவளே! கூறாது மீந்தவர்களுடைய பெயர்களும் தத்தன், சகோடன், கிருத்திரமன், தௌத்திரன், அபவித்தன், உபகிருதன் என்னும் இவ்வகையே யுள்ளனவாம்.

(க - து.) மக்கள் தத்தன் முதலாகப் பின்னும் பலவகைப் படுவர்.

தத்தன், பெற்ரோரிருவராலாயினும் அன்றி அவருளொருவரா லாயினும் மற்ரொருவருக்கு விதிமுறையிற் கொடுக்கப்பட்டவன். இவனைச் 'சுவீகார புத்திர' னென்ப. சகோடன், திருமணத்தின் போதே கருவிருந்து பின்பிறந்தவன்; கிருத்திரமன், கண்டெடுத்து வளர்த்துக்கொள்ளப்பட்டவன்; புத்திரிபுத்திரன், மகளுக்குப் பிறந்த வன்; அபவித்தன், பெற்ரோர்களாற் காப்பாற்ற முடியாமையால் விடப்பட்டுப் பிறனொருவனல் வளர்த்துக்கொள்ளப்பட்டவன்; உப கிருதன், காணிக்கைபோல வந்து சேர்ந்தவன்; இவனுக்குச் 'சுவயந் தத்த' னென்பதும் பெயர். (31)

உரையான் குலன்குடிமை யூனம் பிறரை
உரையான் பொருளோடுவாழ் வாயு—உரையானய்ப்
பூவாதி வண்டுதேர்ந் துண்குழலா யீத்துண்பான்
தேவாதி தேவனத் தேறு.

(இ - ள்.) வண்டு - வண்டுகள், பூஆதி - மலர்கள் முதலிய வற்றை, தேர்ந்து உண் - ஆராய்ந்து மொய்த்துண்ணுகின்ற, குழ லாய் - கூந்தலையுடைய பெண்ணே! குலன் - தன் குலத்தின் உயர் வையும்; குடிமை - குடிப்பிறப்பின் உயர்வையும், உரையான் - பெருமை பாராட்டிச் சொல்லிக்கொள்ளாமல், பிறரை - அவ் விரண்டுவகையான உயர்வுமில்லாத மற்றவரை, ஊனம் உரையான்- குற்றஞ் சொல்லாமல், பொருளொடு வாழ்வு-தன் பொருளும் வாழ் வும், ஆயு - வாழ்நாளெல்லையும், உரையானய்-வெளிப்படுத்தாஞகி, ஈந்து உண்பான் - வறியார்க்குக் கொடுத்துத் தானும் உண்பவன், தேவ ஆதி தேவனு - தேவர்கள் தலைவனுக, தேறு - தெளிவாயாக.

(ப-போ-ரை.) மலர் முதலியவற்றை வண்டுகள் மொய்த் துண்கின்ற கூந்தலையுடையாளே! தன் குலத்தினுயர்வையும் குடிப் பிறப்பி னுயர்வையும் சொல்லாமல், அவ்விரண்டு மில்லாத மற்றவர் மேல் குற்றங் கூருமல், தனது பொருளினளவோடு அநுபவிக்குஞ் செல்வத்தையும் ஆயுளையும் வெளிப்படுத்தாஞகி, இரப்பவர்க்குக் கொடுத்துத் தானும் அநுபவிப்பவனைத் தேவர்களிற் சிறந்த தேவனுகத் தெளியாய்.

(க - து.) தன்னுயர்வு கருதிப் பிறரை இழித்துரையாமலும் உடைமை விளம்பாமலும் ஒழுகி, வறியார்க்கு இட்டுண்பவன், தேவர் தலைவனாவான்.

குலனுங் குடிமையும் ஆகுபெயர். ஒடு - எண் ; ஆயு, ஆயுள் ; கடைக்குறை. பூவாதி, மலரும் மருவும் முதலாயின. உண்பா னென்பது நுகர்தன்மேலது. தேவாதிதேவன், இந்திரன் ; ஆக, கடை குறைந்தது. ஈத்து - ஈந்து என்பதன்வலி. (32)

பொய்யுரையான் வையான் புறங்கூறான் யாவரையும்
மெய்யுரையா னுள்ளனவும் விட்டுரையான்—எய்யுரையான்
கூந்தன்மயி லன்னாய் ! குழீஇயவான் விண்ணோர்க்கு
வேந்தனா மிவ்வுலகம் விட்டு.

(இ - ள்.) கூந்தல் மயில் அன்னாய் - மயிற்றோகையைப் போன்ற கூந்தலையுடைய பெண்ணே! பொய் உரையான் - பொய் சொல்லான் ; வையான் - எவரையும் இகழான் ; யாவரையும் - ஒருவரையும், புறங்கூறான் - புறம்பாக இழித்துப் பேசான் ; மெய் உரையான் - பிறர் துன்பத்தை நீக்குதற்காக நடந்த உண்மையைச் சொல்லான், உள்ளனவும் - தன்மாட்டு உள்ளபொருள்களையும், விட்டு உரையான் - வெளிப்படுத்துச் சொல்லான், எய் உரையான் - நண்பன்மாட்டுந் தன் வறுமையை வெளிப்படுத்தானாகிய இவன், இவ் உலகம் விட்டு - இம்மண்ணுலகத்தைவிட்டு நீங்கி, வான் குழீஇய - மேலுலகத்திற் கூடியுள்ள, விண்ணோர்க்கு - தேவர்களுக்கு, வேந்தன் ஆம் - தலைவனாவான்.

(ப-பொ-ரை.) விரி தோகையன்ன கூந்தலையுடையாளே ; பிறர் தீங்கு கருதி யுண்மையும் பேசானாகியும் இகழானாகியும், தனக்குத் தீமை செய்தாரையும் புறத்தில் அவமதித்துப் பேசானாகியும், ஒருவருக்கு நேர்ந்த இடுக்கண்களை யொழிக்கும்பொருட்டு நடந்த உண்மையைச் சொல்லானாகியும், தன்னிடத்திலுள்ள பொருள்களை வாய்விட்டுச் சொல்லானாகியும், நண்பனிடத்தும் தன் வறுமைத் துன்பத்தைச் சொல்லானாகியும் உள்ள ஒருவன் இந்த உலகத்தைவிட்டு வானுலகிற் கூடியுள்ள தேவர்கட்குத் தலைவனாகிய இந்திரனாவான்.

(க - து.) பொய்யாமை முதலியன உடையான் இந்திர வாழ்வில் வைகுவான்.

உள்ளனவும் என்பதன்கண் உம்மை இறந்தது தழீஇய எச்ச வும்மை. கூந்தலே மயிற்றேருகைக்கே ஆக்கியுரைப்பினுமாம். அள பெடை, இன்னிசை நிறைத்தது. எய் - முதனிலைத் தொழிற் பெயர். (33)

சிதையுரையான் செற்ற முரையான் சீறில்லான்
இயல்புரையா னீன முரையான்—நசையவர்க்குக்
கூடவே தீவானைக் கோவ்வைபோல் செவ்வாயாய்
நாடுவர் விண்ணோர் நயந்து.

(இ - ள்.) கொவ்வைபோல் - கோவைக்கனியைப் போன்ற, செவ்வாயாய் - சிவந்த வாயையுடைய பெண்ணே! சிதை உரையான் - கீழ்மை பேசாமலும், செற்றம் உரையான் - பகைமை பேசாமலும், சீறு இல்லான் - பிறர்மேற் சினத்தல் இல்லாமலும், இயல்பு உரை யான் - தனது நல்லியல்பினைப் புகழாமலும், ஈனம் உரையான் - குற்றஞ் சொல்லாமலும், நசையவர்க்கு - தன்னை விரும்பி வந்தவர் கட்கு, கூடுவது ஈவானை - இயல்வதுகொடுத்துதவுவா னொருவனை, விண்ணோர்கள் - தேவர்கள், நயந்து நாடுவர் - விரும்பி மகிழ்வார்.

(ப-பொ-ரை.) கோவம்பழம் போன்ற சிவந்த வாயினை யுடையாய்! கீழ்மையான சொற்களைப் பேசாமலும், சினமூட்டுஞ் சொற்களைக் கூறாமலும், சீறுதலில்லாமலும், தன்னுலியலக்கூடிய மேம்பாட்டை எடுத்துப் பாராட்டாமலும், பிறர் குற்றங்களைச் சொல்லாமலும், தன்னிடத்து வந்து ஏற்றோர்க்கு இல்லையென்னுது இசைந்தமட்டு முதவுவோனைத் தேவர்கள் தங்களுடனிருந்து மகிழ விரும்புவர்.

(க - து.) கீழ்மைபேசாமை முதலியன உடையானைத் தேவ ரும் விரும்புவார்.

நசையவர், வினையாலணையும் பெயர். 'நயந்து நாடுவ' ரென் பதை 'நாடிநயப்ப' ரென விகுதி பிரித்து மாற்றிக் கொள்க. சிதை - பண்பாகுபெயர். செற்றம் - காரியவாகுபெயர். சீறு - முத னிலைத் தொழிற்பெயர். கொவ்வை முதலாகுபெயர். (34)

துறந்தார் துறவாதார் துப்பிலார் தோன்ரு
திறந்தா ரீடற்ரு ரிளையர்—சிறந்தவர்க்கும்
பண்ணளுஞ் சொல்லாய் பழியிலூண் பாற்படுத்தான்
மண்ணளு மன்னனய் மற்று.

(இ - ள்.) பண் ஆளும் - பண்ணிசையைப் போன்ற, சொல்லாய் - சொல்லையுடைய பெண்ணே! துறந்தார் - கைவிடப்பட்டவர்களுக்கும், துறவாதார் - விருந்தினர்க்கும், துப்பிலார் - வறியவர்க்கும், இறந்து தோன்ருர் - காணப்படாத தென்புலத்தார்க்கும், ஈடு அற்ருர் - தனக்கொப்பில்லாத ஏழைகட்கும், இளையர் - துணையற்ற சிறுவர்கட்கும், சிறந்தவர்க்கும் - சான்ருேர்க்கும், பழிஇல் ஊண் - பழிக்கப்படுதலில்லாத உணவை, பால் படுத்தான் - பகுத்துக் கொடுத்தவன், மன்னன் ஆய் - மறுமையில் அரசனய், மண் ஆளும் - உலகத்தை ஆள்வான்.

(ப-பொ-ரை.) பண்ணின் இனிமையை வென்ற சொல்லையுடையவளே! துறந்தவர்க்கும், துறவாதவராகிய பிரம்மச்சாரி வானப்பிரத்த னிவர்க்கும், வறியார்க்கும், தென்புலத்தார்க்கும், பல மற்றவர்க்கும், இவர்போல்வராகிய மற்றுஞ்சிறந்த தக்கார்க்கும் நல் வழியிலீட்டிய உணவை யளித்தன்புசெய்தவன் மறு பிறப்பில் பூமண்டலத்தை யாளுமன்னனவான்.

(க - து.) துறந்தார் முதலானவர்கட்கு ஊண் கொடுப்பவன் மறுமையில் அரசனவான்.

இல்வாழ்வுடையவரே ஒரோவொருகால் பிறர் மனைக்கண் துறந்தார்போல் விருந்தினராய் வரலின், அவரை அத்துறவறத்தாரினின்றும் பிரித்தல் கருதித் 'துறவா' ரென்ருர். பழியில் ஊண், அன்போடு இடும் ஊண். செல்வம் பெருகுமென்றற்கு 'மண்ணளு மன்னனய்' என்ருர். பண் ஆளும் என்பதற்கு இசையைக் கீழ்ப் படுத்தும் எனலுமாம். துப்பு—ஐம்பொறிகளால் நுகரும் இனிய பொருளுக்குத் தொழிலாகு பெயர்.

" வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம் " (விருந்தோம்பல் - ௫)

என்ருர் பொய்யில் புலவரும். இனையர் என்றும் பாடம். (35)

காலில்லார் கண்ணில்லார் நாவில்லார் யாரையும்
பாலில்லார் பற்றிய நூலில்லார்—சாலவும்
ஆழப் படுமூ ணமைத்தா ரிமையவரால்
வீழப் படுவார் விரைந்து.

(இ - ள்.) கால் இல்லார் - முடவர்களுக்கும், கண் இல்லார் - குருடர்களுக்கும், நா இல்லார் - ஊமைகளுக்கும், யாரையும் பால் இல்லார் - ஒருவரையும் தஞ்சார்பில் உடையராயில்லாதவர்கட்கும், பற்றிய நூல் இல்லார் - பதிந்த நூலறிவு இல்லாதவர்கட்கும், சால வும் - மிகவும், ஆழப்படும் - உண்டபின் வயிற்றில் தங்குதற்குரிய, ஊண் அமைத்தார் - உணவைப் படைத்தவர், இமையவரால்-தேவர் களால், விரைந்து வீழப்படுவார் - விரைவாக விரும்பப்படுவார்.

(ப-பொ-ரை.) நொண்டிகளுக்கும், குருடர்களுக்கும், ஊமை களுக்கும், எவரையும் தம்பக்கம் துணையாக இல்லாதவர்களுக்கும், பதிந்த நூலறிவில்லாதவர்க்கும் நீரிளுற் சமைக்கப்பட் டாழ்ந்த உணவை விரும்பி யளித்தவர், தேவர்களால் விரைவாக விரும்பப் படுவார்.

(க - து.) முடவர் முதலாயினருக்கு வயிறு நிறைய உணவு படைத்தல் வேண்டும்.

காலில்லார் என்பதற்கு இனம்பற்றிக் கையில்லார் முதலியோ ரையுங் கொள்க. இல்லார், குறிப்புவினையாலணையும் பெயர். பால், பக்கம், ஈண்டுச் சார்பு. ஆழப்படும் ஊண் கண்ணுக்கு அருவருக்கத் தக்கதும், மூக்குக்கு நறுமண மில்லதும், நாவுக்குச் சுவையில்லது மல்லாமையால் உண்டபின் வயிற்றிற் றங்குதற்குரிய ஊண். இனி வயிற்றின் ஆழத்தில் நிறையும் ஊணென்பதுமாம். கண் - கட் புலன், பொருளாகுபெயர். இமையவர் - மங்கல வழக்கு. (36)

அழப்போகா னஞ்சா னலறினுற் கேளான்
எழப்போகா னீடற்ற ரேன்றும்—தொழப்போகான்
என்னேயிக் காலனீ டோரான் தவமுயலான்
கொன்னே யிருத்தல் குறை.

(இ - ள்.) அழ போகான் - தன்னைக் கண்டஞ்சி அழவும் போகான், அஞ்சான் - வீர முதலியனவுடையானென்று பயப்ப

டான், அலறினுல் - கதறினுலும், கேளான் - கேட்கமாட்டான், எழ போகான் - எழுந்து உபசரித்தாலும் அப்பாற் செல்லான், ஈடு அற்ருர் என்றும் - தன்னைக் கடக்கும் வலியற்றவரென்றும் (போகான்), தொழ போகான் - வணங்கவும் போகான், என்னே - யாது எண்ணியோ, இ காலன் - இந்த எமனது, ஈடு - பெருமையை, ஓரார் - உணராமல், தவம் முயலார் - தவஞ் செய்யாதிருக்கின்ருர்கள், கொன்னே இருத்தல் - தவஞ்செய்யாது வாளா இருத்தல், குறை - குறையாம்.

(ப-பொ-ரை.) காலனுனவன் ஒருவன் இறுதிக்காலம் வந்து விட்டால், அழுதாலும் விட்டுப் போகின்றவனல்லன், ஓ என அலறிக் கூவினுங் கேட்டிரங்குகின்றவனல்லன், எழுந்தெங்கேனுஞ் செல்வதற்கும் விடாதவன், இழந்து வலியற்றிருப்போர் நின்னையே குலதெய்வமாக வழிபடுவோம் என்று வணங்கவும் விட்டுச் செல்கின்றவனல்லன், இக்காலன் என்ன தன்மையனு யிருக்கின்ருன், ஆதலின், காலனது வரவுக்கோர் உபாயஞ் சூழாது, தவம்புரியாது வீணுட் கழித்துக் கொண்டிருப்பது தகாத செய்கை.

(க - து.) காலனைக் கடக்க விரும்புவோர் வாணுளை வீணுக்காமல் விரைவாகத் தவ முயலவேண்டும்.

என்னே - ஏகாரம் ஐயப் பொருட்டு. காலன் - ஒன்றையுங் கருதாது குறித்த காலத்தில் உயிரைக் கொண்டுபோகின்றவன். தவம் - மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயிலில் நிற்றலும், மாரியிலும் பனியிலும் நீரில் நிற்றலு முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்ருல் தம் முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களைக் காத்தல்.

இனி இச்செய்யுளில் 'காலனீடோரான்' என்ற பாடங் கொண்டு வேறு பொருள்கூறுவது முண்டு. அதனை அடியிற் காண்க.

வேறுவிதமாயுரைக்கப்படுவது

(இ - ள்.) ஈடு அற்ருர் - தனக்கு ஒப்புவமை யில்லாத ஏழைகள், அழ-வறுமைத் துன்பத்தால் அழுதுகொண்டிருக்க, போகான்-போய் யாதுங் கேளான் ; அஞ்சான் - அவர்களுக்குத் தீமை செய்

தற்கு அஞ்சான், அலறினல் - இடுக்கண் நேரிட்டு அவர்கள் கூவியழு தால், கேளான் - அதற்குச் செவிசாயான்; எழப்போகான் - அவ் விடுக்கணினின்றும் அவர் நீங்கி யெழும்படி போய்ப் பாரான்; தொழ-ஏழைகள் வணங்கும்படி, என்றும்-எப்பொழுதும், போகான்- வெளியிற் செல்லான், என்னே - யாது நினைந்தோ, இகாலம் நீடு - இந்தக்காலம் வீணே கழிதலை, ஓரான் - ஆராயாமல், தவம் முயலான் - தவமுயற்சியுஞ் செய்யாமல், கொன்னே - வீணுக, இருத் தல் - உயிர்வாழ்ந்து கொண்டிருத்தல், குறை - குற்றமாகும்.

(க - து.) முடிசார்ந்த மன்னனும் தன் வாழ் நாட்காலத்தி லேயே அருமையானவற்றைச் செய்தல் வேண்டற்பாலது.

அரசன் புறத்தே வருங்காலங்களின் மட்டுமே ஏழைகள் அவனைக் காணும் வாய்ப்புப்பெற்று வணங்கித் தத்தங் குறைகளைக் கூறிக் கொள்வாராகலின், அங்ஙனம் அவர்தங் குறைகளைக் கேட்டுக் களைதற்கு இடம் வைத்துக் கொள்ளானென்றற்குத் 'தொழப் போகா' னெனப்பட்டது. ஆண்டு மிகுதியாதலை இங்குக் 'கால நீடு' என்ருர். ஈடு - இடு என்னும் முதனிலை யடியாகப் பிறந்த பெயர். நீடு - காலத்தின்மேனின்ற முதனிலைத் தொழிற்பெயர். கொன் - இடைச்சொல். தவமுமென எச்சவும்மை விரித் துரைக்க. (37)

எழுத்தினு னீங்காதெண் ணுலொழியா தேத்தி
வழுத்தினுன் மாருது மாண்ட—ஒழுக்கினுல்
நேராமை சால வுணர்வார் பெருந்தவம்
போகாமை சாலப் புலை.

(இ - ள்.) சால உணர்வார் - அறிவுநூல்களை மிகவும் உணர்ந் தவர், எழுத்தினுல் நீங்காது - மந்திர எழுத்தை உருச் செய்தலி னின்று நீங்காமலும், எண்ணுல் ஒழியாது - அகநினைவால் எண் ணுதலின்று ஒழியாமலும், ஏத்தி வழுத்தினுல் - புகழ்ந்து வணக்க வுரை கூறுதலினின்று, மாருது - மாருமலும், மாண்ட ஒழுக்கத்தி னுல் - சிறந்த நல்லொழுக்கத்தில், நேராமை - சேராமையும், பெரு தவம் - பெரிய தவவழியில், போகாமை - செல்லாமையும், சால புலை - மிகவும் இழிவாம்.

(ப-பொ-ரை.) இறப்பும் பிறப்புமாகிய துன்பம் கல்வியறிவினளவே நீங்காது, தியான அளவிலே நீங்காது, துதிக்குந் தோத்திரத்தினுலும் நீங்காது, இவை முதலாகிய மாட்சிமைப்பட்ட ஒழுக்கங்களினுலேயும் அவை தீர்த்துப் பேரின்பம் வாயாமை முற்றுங் கண்ட துறந்தோரது மாதவத்தை அடையாதிருத்தல் மிக்க அறியாமையாம்.

(க - து.) உணர்ந்தோரெல்லாரும் ஒழுக்கமுந் தவமுங் கெட்டு வெறும் பொருளற்ற வழிபாடுகள் செய்தல் பெரிதுந் தவருகும்.

எழுத்தினுல் முதலியன வேற்றுமை மயக்கம். நேராமையும் போகாமையுமென உம்மை விரித்துக்கொள்க. புலை - பண்புப் பெயர், ஐ பகுதிப் பொருள் விகுதி. எழுத்து - இது கருவியாகு பெயராய் ஒலிவடிவை யுணர்த்தியது. இனி இச் செய்யுளில் எழுத்தினுல் நீங்காது என்பதற்குக் கல்வியறிவினளவே நீங்காது, எண்ணுல் ஒழியாது - தியான அளவிலே நீங்காது, எத்தி வழுத்தினுல் மாருது - துதிக்குந் தோத்திரத்தினுலும் நீங்காது என்று பொழிப்புரைக் கிணங்கப்பொருள் கூறுதலுமுண்டு. (38)

சாவ தெளிதரிது சான்ருண்மை நல்லது
மேவ லெளிதரிது மெய்போற்றல்—ஆவதன்கண்
சேற லெளிது நிலையரிது தெள்ளியராய்
வேற லெளிதரிது சொல்.

(இ - ள்.) சாவது - உயிர் விடுதல், எளிது - எளிதாம்; (ஆனுல்) சான்ருண்மை - கல்வி கேள்விகளால் நிறைந்து ஒழுகுதல், அரிது - அரிதாகும்; நல்லது - மனைவாழ்க்கையை, மேவல்-சார்தல், எளிது - எளிதாம்; மெய்போற்றல் - ஆனுல் அதன்கண் நின்று பற்றற்ற ஒழுக்கத்தைக் காத்தல், அரிது - அரிதாகும்; ஆவதன்கண் - துறவறத்தில், சேறல்எளிது - செல்லுதல் எளிதாம்; நிலை அரிது - ஆனுல் அதன்கண் நீளநிலைத்தல் அரிதாகும்; சொல் - எதனையும் சொல்லுதல், எளிது - எளிதாம்; தெள்ளியராய் - ஆனுல் தெளிந்த அறிவுடையராய், வேறல் - அதனைச் செயலால் வெல்லுதல், அரிது - அரிதாகும்.

(ப-போ-ரை.) இறத்தல் எளியது, அதற்கு முன் நல்லோன் எனப் பெயர்படைத்தல் அரியது, நல்ல பொருளை விரும்பி யதனை யடைதல் எளியது, வாய்மையைத் தனக்குக் காப்பாகக்கொண் டொழுகுவது அரியது, தனக்குத் துணையாவதாகிய பெருந்தவத்திற் குச் செல்வது எளியது, நிட்டை கைகூடும் வரை நிலைத்தல் அரியது, தெளிந்த ஞானியரான விடத்தும் ஐம்புலன்களையும் வென்று அவித் தலை எளிய காரியமாகச் செய்தல் அரியதாகுமெனச் சொல்.

(க - து.) கல்விகேள்விகளால் நிறைந்தொழுகுதல் முதலா யின அருமையாகும்.

இல்லறம் துறவறம் இரண்டினும் நல்லது இல்லறமாகலின் அதனை 'நல்ல' தென்னுஞ் சொல்லானும், முயற்சியினாற் றலைக் கூடு வது துறவறமாகலின், அதனை ஆவதென்னுஞ் சொல்லானும் உரைத் தார்; ஆவது, வினைமுதல் வினையைக் கருவியின் மேலேற்றிக் கூறும் எதிர்கால வினையாலணையும் பெயர். சேறல் - செல் பகுதி, தல் புடைபெயர்ச்சி விகுதி. எளிது அரிது என அடிதொறும் வருவது முரண்தோடை. (39)

உலையாமை யுற்றதற் கோடி யுயிரை
அலையாமை யையப் படாமை—நிலையாமை
தீர்க்கும்வாய் தேர்ந்து பசியுண்டி நீக்குவான்
நோக்கும்வாய் விண்ணி னுயர்வு.

(இ - ள்.) உற்றதற்கு - நேர்ந்த இடுக்கணைப் போக்குதற்கு, ஓடி - பல விடங்களிலும் விரைந்துபோய், உலையாமை - வருந்தாம லும், உயிரை - பிறவுயிர்களை, அலையாமை - வருத்தாமலும், ஐயப் படாமை - மறுமையை ஐயப்படாமலும், நிலையாமை தீர்க்கும் வாய் - பிறப் பிறப்புகளை நீக்கவல்ல அருள்வழியை, தேர்ந்து - தெளிந்து, பசி - அவாவையும், உண்டி - நுகர்பொருள்களையும், நீக்குவான் - நீக்குகின்றவன், நோக்கும் வாய் - செல்லும் இடம், விண்ணின் உயர்வு - விண்ணுலகத்துக்கு மேலிடமாகும்.

(ப-போ-ரை.) தனக்குற்ற துன்பத்துக் கோடித் தளராது, பிறருயிரை வருந்த அலையாது, மறுமையை ஐயப்படாது, நிலையாத பிறப்பைத் தீர்க்கும் வா யாராய்ந்து, பசியினையு முண்டியினையு நீக்கித் தவஞ் செய்தா னுறைதற்கே யாராயுமிடம் விண்ணினுச்சி.

(க - து.) உலையாமை முதலியன உடையான் விண்ணுலக நிலைக்கும் மேல் நிலையை அடைவான்.

உலைதலும் அலைதலும் வருந்துதலாகும்; பசியும் உண்டியும் இடத்திற்கேற்பப் பொருள் செய்யப்பட்டன. விண்ணின் உயர்வு - மகேசுரமண்டில முதலாயின வென்க. விண்ணின் உயர்வு நான்காம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, காரணப்பெயர். நிலையாமை எதிர்மறைத் தொழிற் பெயர். நிலையாமையையுடைய பிறப்பை நிலையாமை என்றது மரபு வழுவமைதி. உலையாமை அலையாமை ஐயப்படாமை - எதிர்மறை வினையெச்சங்கள். (40)

குறுகான் சிறியாரைக் கொள்ளான் புலால்பொய்
மறுகான் பிறர்பொருள் வெளவான்—இறுகானாய்
ஈடற் றவர்க்கீவா னாயி னெறிநூல்கள்
பாடிறப்ப பன்னு மிடத்து.

(இ - ள்.) சிறியாரைக் குறுகான் - கீழ்மக்களை நெருங்காமலும், புலால் கொள்ளான் - ஊனுண்ணாமலும், பொய் மறுகான் - பொய்யுரையைக் கொண்டொழுகாமலும், பிறர் பொருள் வெளவான் - பிறர் பொருளைக் கவர விரும்பாமலும், இறுகானாய் - செல்வப்பொருளை இறுக்கிப் பிடியாமலும், ஈடு அற்றவர்க்கு - மாட்டாதவர்க்கு, ஈவான் ஆயின் - கொடுப்பானானால், பன்னுமிடத்து - சொல்லுங்கால், நெறிநூல்கள் - அறிவுநூல்கள், பாடு இறப்ப - அவனுக்குப் பயன்படுதலில்லாதனவாம்.

(ப-பொ ரை.) சிற்றினத்தைக் குறுகாது, புலாலை விரும்பாது, பொய்யுரையைக் கொண்டொழுகாது, பிறர் பொருளை விரும்பாது, பற்றுள்ளத்தா லிறுகாது தளர்ந்தார்க்கொன் றீவனாயினறஞ்சொல்லு நூல்கள் சொல்லுமிடத்துப் பயனற்றன.

(க - து.) கீழ்மக்களை இணங்காமை முதலியன உடையானுக்கு அறிவுநூல்கள் வேண்டா.

மறுகல், மயங்கல். ஈடு அற்றவரென்பதைத் திரும்ப ஈடு செய்தல் அற்றவரென்றுரைப்பினுமாம். நெறிநூல்கள் என்றார். அவை அறவழியை யுணர்த்துகின்றமையினென்பது. இறப்ப - பலவின் படர்க்கைவினைமுற்று; இறத்தல் - அப்புறப்படுத்தல். (41)

கொல்லா னுடன்படான் கொல்வா ரினஞ்சேரான்
புல்லான் பிறர்பாற் புலான்மயங்கல்—செல்லான்
குடிப்படுத்துக் கூழீந்தான் கொல்யானை யேறி
அடிப்படுப்பான் மண்ணாண் டரசு.

(இ - ள்.) கொல்லான் - ஒருயிரைக் கொல்லாமலும், உடன் படான் - பிறர் கொல்வதற்கு உடன்படாமலும், கொல்வார் இனம்- கொலைத் தொழில் பயில்வார் கூட்டத்தை, சேரான் - சேராமலும், பிறர் பால் - அயலார் பால், புல்லான் - இணங்காமலும், புலால் மயங்கல் - ஊனுண்ணுதலை, செல்லான் - மேற் கொள்ளாமலும், குடி படுத்து - தனது குடும்பத்தை நன்னிலைமையில் வைத்து, கூழ் ஈந்தான் - பிறர்க்கும் உணவு அளிப்பவன், மண் ஆண்டு-உலகத்தை அரசாண்டு, கொல்யானை ஏறி - கொலைபயிலும் யானை மேலேறி, அரசு - ஏனை அரசர்களை, அடிப்படுப்பான் - தனக்கு அடங்கச் செய்பவனாவான்.

(ப-பொ-ரை.) பிறிதோருயிரைக் கொல்லாது, கொல்லுதற் குடன்படாது, கொல்லவா ரினத்தைச் சேராது, பிறர் மனையாளை விரும்பாது, ஊனுண்டலோடு, கலவாது, பிறருடைய குடிகளை நிறுத் திக் கூழையீந்தவன் கொல்யானையேறி மண்ணை யாண்டிடப்படுவன்.

(க - து) கொல்லாமை முதலியன உடையான் உலக முழுவதும் அரசாளு நிலைமையை யடைவானென்க.

ஏறியென்றது, ஏறிப் போர் செய்தற்குறிப்பினது. மண் - கருவி யாகுபெயர். அரசு பண் பாகுபெயர். படுத்து, படுப்பான் - பிறவினை. (42)

சூதுவவான் பேரான் சுலாவுரையான் யார்திறத்தும்
வாதுவவான் மாதரார் சொற்றேறான்—காதுதாழ்
வான்மகர வார்குழையாய் மாதவர்க் கூணீந்தான்
தான்மகர வாய்மாடத் தான்.

(இ - ள்.) காதுதாழ் - காதின்கண் தொங்குகின்ற, வான் - பெரிய, மகரம் - மகரமென்னும் பெயரினையுடைய, வார்குழையாய்- நீண்ட குண்டலங்களையணிந்த பெண்ணே! சூது உவவான் - கவறு

டலை விரும்பாமலும், பேரான் - நன்னிலைமையிலிருந்து நீங்காமலும், சுலாவு உரையான் - பிறர் நெஞ்சங் கலங்கும் படியான சொற்களைச் சொல்லாமலும், யார் திறத்தும் - யாரிடத்திலும், வாது உவவான் - வாதுபேசுதலை விரும்பாமலும், மாதரார் சொல் - மகளிர் மழலைகளை, தேருன்-நம்பாமலும், மாதவர்க்கு-பெருந்தவத்தினர்க்கு, ஊண் ஈந்தான் - உணவு கொடுத்தவன், மகரவாய் - முதலையைப் போன்ற உருவமைக்கப்பட்ட வாயிலையுடைய, மாடத்தான் - மாளிகையிடத்திலிருப்பவனுவான்.

(ப-போ-ரை.) சூதினைக் காதலியாது, ஒன்றினுன் மறைந்து வஞ்சியாது, பயனில்லாவற்றைப் பரக்கவுரையாது, ஒருவர் திறத்து மாறுபட்டுரைத்தலைக் காதலியாது, மாதரார் சொல்லு மின்சொல்லைத் தேருது, காது தாழாச் செய்யாநின்ற வாபரணங்களார் குழையாய்! மாதவர்க் கூணீந்தவன்ருன் மகரத்தொழிலையுடைய வாயின் மாடத்து வாழ்வான்.

(க - து) கவருடாமை முதலியன உடையான் பெரிய மாளிகையிலிருக்கும் வாழ்வு பெறுவான்.

சுலாவு - சுழலல்; மனங்கலங்குதல்; ஈண்டு இது தொழிலாகு பெயரென்க. காதுதாழ் - காதுதாழ்கின்ற எனின் எழுவாய்த் தொடராம். குண்டலங்களில் ஒருவகை முதலைவடிவாய்ச் செய்யப் படுதலின், அது மகர குண்டலம் எனப்பட்டதென்க. மகரம்-முதலை. மாதரார் - மாது - விருப்பம்; காரிய வாகுபெயராய்ப் பெண்களை யுணர்த்தியது. (43)

போய்யான்போய் மேவான் புலாலுண்ணுன் யாவரை
வையான் வழிசீத்து வாலடிசில்—நையாதே [யும்
ஈத்துண்பா ளுகு மிருங்கடல்சூழ் மண்ணரசாய்ப்
பாத்துண்பா னேத்துண்பான் பாடு.

(இ - ள்.) பொய்யான்-பொய்சொல்லாமலும், பொய் மேவான்-பிறர்பேசும் பொய்க்கு உடன்படாமலும், புலால் உண்ணுன் - ஊனுண்ணுமலும், யாவரையும் வையான் - எவரையும் இகழாமலும், நையாது - விருந்தினர் முதலியோர் வருந்தாமல், வழிசீத்து - வழி திருத்தி, வால் அடிசில் - தூய்மையான உணவை, ஈத்து உண்பான்-பகுத்துக்கொடுத்துண்பவன், இரு கடல்சூழ் - பெரிய கடல்சூழ்ந்த,

மண் அரசு ஆய் - உலகத்துக்கு அரசனுகி, பாத்து உண்பான் - ஐவகைப் புலன்களை நுகர்வானும், பாடுஎத்துஉண்பான் - பெருமையும் புகழும் அடைவானும், ஆகும் - ஆவான்.

**(ப-போ-ரை.)** தான் பொய்யுரையாது, பிறர் சொல்லும் பொய்க் குடன்படாது, புலாலுண்ணுது, யாவரையும் வையாது, பலர் போம் வழிகளையுந் திருத்தி, நல்ல வடிசிலை யொழியாதே யீத்துண் பானுகு மிருங்கடல்சூழ் மண்ணரசாய்ப்பகுத்துண்பான் பிறராற்றன் பெருமையேத் துண்பானும்.

**(க - து.)** பொய்யாமை முதலியன உடையவன் பெருமையும் புகழும் ஐம்புலவின்பங்களும் நுகரும் அரசனுவான். வழி சீத்தல், வரும் வழியைத் துப்புரவு செய்தல்; பாத்து, ஐம்புலப் பகுப்புகள். எத்து, முதனிலைத் தொழிற் பெயரென்க. வால் - வெண்மை, தூய்மைக்கானது. (44)

இழுக்கா னியனெறி யின்னுத வெஃகான்
வழுக்கான் மனைபொருள் வௌவான்—ஒழுக்கத்தால்
செல்வான் செயிரில்லூ ணீவா னரசாண்டு
வெல்வான் விடுப்பான் விரைந்து.

**(இ - ள்.)** இயல்நெறி - வழிபாட்டு நெறியிலிருந்து, இழுக்கான் - வழுவாமலும், இன்னுத வெஃகான் - துன்பந்தரும் தீய செயல்களை விரும்பாமலும், மனைவழுக்கான் - இல்லற வாழ்க்கையினின்று தவருமலும், பொருள்வௌவான் - பிறர் பொருளைக் கவராமலும், ஒழுக்கத்தால் செல்வான் - நன்னடக்கையிலொழுகி, செயிர் இல்லூண் - குற்றமில்லாத உணவை, ஈவான் விருந்தினர் முதலானவர்கட்குக் கொடுப்பவன், அரசு ஆண்டு - அரசாட்சி செய்து, விரைந்து விடுப்பான் - பகைவர்கள் விரைவாய் நீங்கும்படி, வெல்வான் - அவர்களை வெற்றிகொள்வான்.

**(ப - போ - ரை.)** தானெழுகு நெறியைத் தப்பாது பிறர்க்கின்னுதனவற்றைச் செய்ய விரும்பாது, பிறன் மனை பிழையாது, பிறர் பொருள் வௌவாது தானெழுகுங்கா லொழுகி, குற்றமில்லாத வுணவினையீவான், அரசாண்டு பகைவரை விரைந்து நீக்கி வெல்வான்.

(க - து.) ஒழுக்கம் வழுவாமை முதலியன உடையவன் உலகத்திற் பலரையும் வென்று அரசனுவான்.

மேலே 'ஒழுக்கத்தால் செல்வா' னென்று வருதலின், 'இய னெறி' யென்பது வழிபாட்டு நெறியென் றுரைக்கப்பட்டது. மனே, ஆகுபெயர், ஒழுக்கத்தால், வேற்றுமை மயக்கம். விடுப்பான் பானீற்று வினையெச்சம். இன்னுத - இன்னு என்னும் பகுதியடி யாகப் பிறந்த பலவின் படர்க்கைப்பெயர். (45)

களியான்கள் ளுண்ணுன் களிப்பாரைக் காணுன்
ஒளியான் விருந்திற் குலையான்—எளியாரை
எள்ளானீத் துண்பானே லேதமின் மண்ணுண்டு
கோள்வான் குடிவாழ்வான் கூர்ந்து.

(இ - ள்.) களியான் - செருக்காமலும், கள் உண்ணுன் - கள்ளுண்ணுமலும், களிப்பாரை - கள்ளுண்பவரை, காணுன் - அடுக் காமலும், விருந்திற்கு - விருந்தினனுக்கு, ஒளியான் - பொருள்களை மறையாமலும், உலையான் - ஒழுக்கத்தில் நழுவாமலும், எளியாரை எள்ளான் - வறியவரை இகழாமலும், ஈந்து உண்பானேல்-பிறர்க்கு அளித்துத் தானும் உண்பானுனல், ஏதம் இல் மண் கொண்டு - குற்றமில்லாத நாட்டைப் பெற்று, ஆள்வான் - ஆட்சி செய்வான், குடிகூர்ந்து வாழ்வான் - குடும்பம் பெருகியும் வாழ்வான்.

(ப - போ - ரை.) கள்ளையுண்டு களியாமலும், கள்ளையுண்ணு மலும், களிப்பாரைக் காணுமலும், வந்த விருந்ினரை ஓம்புதற்குப் பயந்து ஒளியாமலும், விருந்தினரை ஓம்பி மனநோகாமலும், ஏற் ருேர்க்குக் கொடுத்துத் தானும் உண்பாணுயின்; தானே மண் அனைத் தும் ஆண்டுகொள்வதுமன்றித் தன் இல்லற வாழ்க்கையினும் ஓங்கி வாழ்வான்.

(க - து.) செருக்காமை முதலியன உடையான், குடி பெருகி நாடாள்வான்.

நாட்டுக்கு ஏதமின்மையாவது நல்ல விளையுளும் நற்குடி களுமுடைமையாகும். மண்ணுண்டுகொள்வானென்பதை 'மண் கொண்டு ஆள்வா' னென்று மாற்றிக்கொள்க. கூர்ந்துமென எச்ச வும்மை விரித்துரைக்க. விருந்து-விருந்தினன்-பண்பாகுபெயர்.(46)

பெரியோர்சொற் பேணிப் பிறழாது நின்று
பரியா வடியார்ப் பறியான்—கரியார்சொல்
தேறு னியையான் தெளிந்தடிசி லீத்துண்பான்
மாறுன்மண் ணாளுமா மற்று.

(இ - ள்.) *பெரியோர்சொல் பேணி-சான்றோரறிவுரைகளைப் போற்றி, பிறழாது நின்று - அவற்றின்படி தவறாமலொழுகி, அடியார் பரியா - பணி செய்வார் மேல் விருப்பங்காட்டாமலும், பறியான் - வெறுத்து நீக்காமலும், கரியார் சொல் - வஞ்சர் சொற்களை, தேறான் - நம்பாமலும், இயையான் - அவரோடு நட்புக் கொள்ளாமலும், தெளிந்து - வாழ்க்கையின் பயனை ஆராய்ந்துணர்ந்து, அடிசில் ஈந்து உண்பான் - விருந்தினர் முதலியவர்க்குப் படைத்துத் தானும் உண்பவன், மாறான் மண் ஆளும் - தவறாமல் நாடாள்வான்.*

(ப - பொ - ரை.) *ஒழுக்கத்திற் பெரியோரது உறுதிமொழியைப் போற்றி, அவ்வொழுக்குக்குத் தக வழுவாது நிலைத்து, அன்பு நிறைந்த அடியவரை விட்டு நீங்காது, மருள் நீங்காரது சொல்லைக் கொள்ளாது, அவரோடு பொருந்தாது, வேள்வியின் பயனறிந்து பகுத்துண்பவன், நீங்காதவனாய்ப் பூமி முழுதும் ஆளும் அரசன் ஆவான்.*

(க - து.) *பெரியார் சொற்பேணல் முதலியன உடையவன் கட்டாயம் மண்ணாள்வான்.*

*பரியா, மல்லீறு தொக்க வினையெச்சம். கரியார், உள்ளத்திற் கருமை யுடையவர்; ஆவது, கரவுடையாரென்க. ஆமும் மற்றும் அசைகள். "மாறுமை மண்ணாலு மற்று" என்றும் பாடம்.* (47)

வேற்றரவஞ் சேரான் விருந்தொளியான் தன்னில்லுள்
சோற்றரவஞ் சொல்லியுண் பானாயின்—மாற்றரவங்
கேளான் கிளையோம்பிற் கேடி லரசனாய்
வாளான்மண் ணாண்டு வரும்.

(இ - ள்.) *வேறு அரவம் சேரான் - தீச்சொற்களைப் பேசாமலும், விருந்து ஒளியான் - விருந்தினர்க்குப் பொருளை மறையாமலும், தன் இல்லுள்-தன் வீட்டில், சோறு அரவம் சொல்லி - உண*

விடுதற்குரிய இன்சொற்களைப் பசித்தவர்களுக்குச் சொல்லி யழைத்து, உண்பான்ஆயின் - அவர்களுக்கிட்டுத் தானும் உண்பானுயினும், மாறு அரவம் கேளான் - பகைவர் சொற்களைக் கேளாமல், கிளை ஓம்பின்-தனக் குறவினரைப் பாதுகாப்பானுயினும், கேடு இல் அரசனுய் - அழிதலில்லாத (நிலையான) அரசனுய், வாளால் - வாள் வலத்தோடு, மண் ஆண்டு வரும் - நாட்டை அரசாண்டு வருவான்.

(ப - பொ - ரை.) பழிதருஞ் செயலை விரும்பாளுகி, வந்த விருந்தினர்க் கஞ்சி ஒளியாமல் தன் இல்லத்தில் பிறர் வந்துண்ணும் படியாகத் தான் உண்ணுஞ் செய்தியை யறிவித்துப் பின் ஒருவன் உண்பானுயின், பகையரசர் சொல்லுங் கேட்க வேண்டானுய்த் தன் குடும்பத்தைப் பேணி அழிவில்லாத அரசுரிமையுடையவனுய் வாளால் வெல்லும் பூமியினை ஆண்டுகொண்டிருப்பான்.

(க - து.) தீய சொற்களைப் பேசாமை முதலியன உடையவன் என்றும் நாடாள்பவனுவான்.

அரவம் - ஒலி; ஈண்டு பேச்சொலிகளை யுணர்த்துதலின், அதற்குச் சொற்களென்று பொருளுரைக்கப்பட்டது. விருந்திடும்போது உரையாடும் உரையைச் 'சோற்றரவம்' என்ருர். 'சொல்லி' யென்றது அழைத்தலின் குறிப்பினது. அரசனுவானென்றது, மறுமையிலென்க. மீண்டும் இங்ஙனம் வருவனவற்றிற்கெல்லாம் இதுவே கருத்தாகக் கொள்க. மாறு - பண்பாகு பெயர். (48)

யானை குதிரைபொன் கன்னியே யானிரையோ
டேனை யொழிந்த விவையெல்லாம்—ஆனெய்யால்
எண்ணனுய் மாதவர்க் கூணீந்தான் வைசிர
வண்ணனுய் வாழ்வான் வகுத்து.

(இ - ள்.) எண்ணன் ஆய் - அறிவாராய்ச்சி யுடையானுய், யானை - (தவஞ் செய்வா ரல்லாதார்க்கு) யானையும், குதிரை - குதிரையும், பொன் - பொன்னும், கன்னி - கன்னிகையும், ஆன் நிரையோடு - ஆன் கூட்டமும், ஏனை ஒழிந்த - மற்றை ஈகைப் பொருள்களும், இவை யெல்லாம் - ஆகிய இப்பொருள்களெல்லா வற்றையும், மாதவர்க்கு - பெருந் தவத்தினர்க்கு, ஆன் நெய்யால் -

ஆவின் நெய்யோடு, ஊண் ஈந்தான் - உணவளித்தவன், வைசிர வண்ணன் ஆய் - குபேரனாய், வகுத்து வாழ்வான் - தனியாய் மதிக்கப்பட்டு வாழ்வான்.

(ப - போ - ரை.) யானையும் குதிரையும் பொன்னும் கன்னிகையும் பசுவின் கூட்டமும், மற்றப்பொருள்களும் வேண்டிய அவரவர்க்கு வகையறிந்து ஈந்தவனும், மாதவர்க்குப் பசுவினெய்யுடன் உணவளித்து அன்பு செய்தவனும் ஆகிய ஒருவன், குபேரப் பட்டம் பெற்று வாழ்வான்.

(க - து.) தவத்தோர்க்கு ஆவின்நெய் பெய்த உணவும், ஏனையோர்க்கு யானை, குதிரை முதலானவைகளும் வழங்குகின்றவன், குபேரனைப்போற் பெருஞ் செல்வமுந் தனிமதிப்பும் உடையவனாவான்.

எண்ணேகாரத்தைப் பிறவற்றிற்கு மொட்டுக. மாதவர்க்கு யானையுங் குதிரையும் முதலாயின வேண்டாமையின், அவை ஏனையோர்க்கென் றுரைக்கப்பட்டன. ஒழிந்த, பலவின் படர்க்கை வினையாலணையும் பெயர். ஒழிந்தவை யாவன, நிலமும் ஆடையும் முதலாயினவென்க. நெய்யால், உருபு மயக்கம். எதனையுங் கருவி யறிந்து வழங்கல் வேண்டுமென்றற்கு வழங்குவானை 'எண்ணன் ஆய்' என்று விதந்துரைத்தார். வைசிர வண்ணன், குபேரன் ; விசிரவசுவின் புதல்வனாகலின் அவன் அப்பெயர் பெற்றான். வகுத்தென்பதற்குச் செயப்பாட்டு வினைப்பொருள் கொள்க. (49)

எள்ளே பருத்தியே யெண்ணே யுடுத்தாடை
வள்ளே துணியே யிவற்றோடு—கொள்ளென
அன்புற் றசனங் கொடுத்தான் றுணையினோ
டின்புற்று வாழ்வா னியைந்து.

(இ - ள்.) எள்ளே - எள்ளும், பருத்தியே - பஞ்சினாலாகிய அரைஞாணும், எண்ணெய் - எண்ணெயும், உடுத்து ஆடை - உடுத்தும் ஆடையும், வள்ளே - பணமும், துணியே - போர்வையும், இவற்றோடு - ஆகிய இவற்றுடன், அசனம் - உணவும், கொள் என்ன - ஏற்றுக் கொள்வீர்களாக வென்று சொல்லி, அன்புற்று கொடுத்தான் - அன்புகூர்ந்து கொடுத்தவன், துணையினோடு இயைந்து-தன்

மனைவி முதலிய சுற்றத்தாரோடு கலந்து, இன்புற்று வாழ்வான் - இன்பம் பொருந்தி வாழ்வான்.

(ப - போ - ரை.) அன்புடன் உணவினையும் எள்ளினாகிய எண்ணெயையும் பருத்தியினாகிய உடுக்கையையும் கொடுத்து, கணக்கு நூலையும் இலக்கண நூலையும் பயன்படும் நுட்பத்தோடும் தெளிந்த அறிவோடும் கொள்வோர்க்கு உளமார உதவியவன், தன் மனைவியுட னின்புற்று அளாவி வாழ்வான்.

(க - து.) மாதவர்க்கு எள் முதலியவற்றை அன்புடன் ஈவான், தன் மனைவி மக்களோடு இன்பமாய் வாழ்வான்.

பருத்தி - நூல், கருவியாகு பெயர். துணி - துணிக்கப்பட்டது. எள் இனிப்புச் சேர்த்த எள்ளெனவும், எண்ணெய் தேய்த்துக்கொள் வார்க்கு முன்பு வெல்லங்கலந்த எள்ளைக் கொடுத்துப் பின்பு எண் ணெய் கொடுத்தல் வேண்டுமென்பது அறநூல் வழக்கெனவுங் கூறுப. எள் முதலாக இங்குக் கூறப்பட்டவை மக்கள் வாழ்நலத்திற்கு ஏற்ற பொருள்களாயிருத்தல் கண்டுகொள்க. வள், வளமையாற் பணமெனப்பட்டது. வள்-தோல் வார் எனக்கொண்டு இலக்கணை யாகச் செருப்பு என்றுமாம். எனவென்னுஞ் செயவெனெச்சத்தைச் செய்தெனெச்சமாகத் திரித்துக்கொள்க. துணை-பண்பாகுபெயர்.

உண்ணீர் வளங்குளங் கூவல் வழிப்புரை
தண்ணீரே யம்பலந்தான் பாற்படுத்தான்—பண்ணீர
பாடலோ டாடல் பயின்றுயர் செல்வனாய்க்
கூடலோ டூடலுளான் கூர்ந்து.

(இ - ள்.) உண்ணீர் வளம் - பருகுநீர் வளத்தினையும், குளம்- குளத்தையும், கூவல் - கிணற்றையும், வழிப்புரை-வழிகளிற் பலருந் தங்குதற்குரிய இலைக் குடில்களையும், தண்ணீரே - தண்ணீர்ப் பந்தர் களையும், அம்பலம் - மண்டபங்களையும், பாற் படுத்தான் - வகை வகையாய் அமைப்பித்தவன், செல்வனாய் - மிகுந்த செல்வமுடையவ னாய், பண்ணீர-இசையி னியல்பினவான, பாடலொடு - பாடலையும், ஆடல் - ஆடலையும், பயின்று-பலகாலுங் கேட்டுங் கண்டும் நுகர்ந்து, ஊடலொடு கூடல் - உள்ளன்பு மிக்க பெண்ணினல்லாளின் ஊட லோடு கூடலையும், கூர்ந்து உளான் - மிக்குள்ளவனாவான்.

(ப-போ-ரை.) நாட்டினுள் நீர்வளத்தையும் குளத்தையும் கிணற்றையும் பலருஞ் செல்லும் வழியிற் றங்குதற்குரிய சிறுவீடுகளையும், தண்ணீர்ப் பந்தல்களையும் மண்டபங்களையும் வகையினால் அமைப்பித்தவன், சிறந்த செல்வமுடையவனாய், இசையோடு பொருந்தின இயல்புடைய பாடலையும் ஆடலையும் பன்முறை கேட்டுங் கண்டும் அநுபவித்து உள்ளன்புடைய மாதர்களின் ஊடலோடு கூடுதலை மிகுந்துள்ளவன் ஆவான்.

(க - து.) உலகத்துக்கு உண்ணீர் வளம் முதலியன அமைத்துக் கொடுப்பவன், இம்மை யின்பங்களை நன்கு நுகர்வான்.

பருகுதற்குரிய இன்சுவை நீர் எங்குங் கிடைப்பது அருமையாகலின், வாய்க்கால் வெட்டுதல், ஊற்றுக்குழி தோண்டுதல் முதலியவற்றால் அதனை ஆங்காங்கும் வளம்படுத்தித் தருதலைக் குறித்தற்கு 'உண்ணீர் வள' மெனப்பட்டது. உண்ணீர் என்பதை உள்நீர் எனப் பிரித்து நாட்டினுள் நீர் எனலுமாம். புரை - குடில். பால், பகல் என்பதன் மரூஉ ; பகுத்தல் என்பது பொருள். 'ஊடலொடு கூட' லென்று மாற்றுக. நீர - குறிப்பு வினையாலணையும் பெயர்.

இல்லிழந் தார் கண்ணிழந்தா ரீண்டியசெல் வம்மிழந்தார்
நெல்லிழந்தா ரானிரை தானிழந்தார்க்—கெல்லுழந்து
பண்ணியூ ணீய்ந்தவர் பல்யானை மன்னராய்
எண்ணியூ ணார்வா ரியைந்து.

(இ - ள்.) இல் இழந்தார்க்கு - தமது இருப்பிடத்தை இழந்தவர்களுக்கும், கண் இழந்தார்க்கு - கண்ணை இழந்தவர்களுக்கும், ஈண்டிய - பெருகியிருந்த, செல்வம் இழந்தார்க்கு - செல்வத்தை இழந்தவர்களுக்கும், நெல் இழந்தார்க்கு - விளைந்த நெல்லை இழந்தவர்களுக்கும், ஆன் நிரை இழந்தார்க்கு - ஆன்மந்தையை இழந்தவர்களுக்கும், எல் உழந்து-வெயிலில் உழன்று பொருளீட்டி, ஊண் பண்ணி ஈந்தவர் - உணவுகள் சமைத்துக் கொடுத்தவர், பல் யானை மன்னராய் - பலப்பல யானைகளையுடைய அரசர்களாய், எண்ணி - எல்லாராலும் மதிக்கப்பட்டு, இயைந்து - மனைவி மக்கள் முதலிய சுற்றத்தார்களுடன் கூடி, ஊண் ஆர்வார் - இன்சுவையுணவுகளை ஆர உண்பர்.

(ப-போ-ரை.) வீட்டை இழந்தவர்களுக்கும், கண்ணையிழந்தவர்களுக்கும், சேர்ந்திருந்த செல்வத்தை இழந்தவர்களுக்கும், விளைந்த நெல்லை யிழந்தவர்கட்கும், பசுமந்தையை இழந்தவர்களுக்கும், இரவிலும் வருந்திமுயன்று பொருளையீட்டி உணவுகளைச் சமைத்துக் கொடுத்தவர், பலவாகிய யானைப்படையையுடைய அரசர்களாய் மதிக்கப்பட்டு, மனைவி மக்கள் முதலியவர்களுடன் கூடி நுகர்பொருளை நுகர்ந்திருப்பர்.

(க - து.) இருக்க இடம் இல்லாதார் முதலியவர்கட்கு உழன்று தேடியேனும் உணவு முதலியன உதவி செய்கின்றவர், இம்மையிற் செல்வராய் இன்ப நுகர்வார்.

இல் - மனைவியென ஆகுபெயராகக் கொள்வாருமுளர். எல் - இரவுமாம். இழந்தா ரென்பதை இயல்பாகவே இல்லாதாரென் றுரைப்பினுமாம். நான்கனுருபை ஏனையவற்றிற்குங் கூட்டுக. எண்ணியென்பதற்குச் செயப்பாட்டுவினைப் பொருளுரைக்க. (52)

கடம்பட்டார் காப்பில்லார் கைத்தில்லார் தங்கான்
முடம்பட்டார் மூத்தார் மூப்பில்லார்க்—குடம்பட்
டுடையரா யில்லுளூ ணீத்துண்பார் மண்மேல்
படையராய் வாழ்வார் பயின்று.

(இ - ள்.) கடம்பட்டார்க்கு - கடன்பட்டவர்களுக்கும், காப்பு இல்லார்க்கு - தம்மைக் காப்பவர் எவரும் இல்லாதவர்களுக்கும், கைத்து இல்லார்க்கு - செல்வம் இல்லாதவர்களுக்கும், தம் கால் முடம்பட்டார்க்கு - தம்முடைய கை கால்கள் முடம்பட்டவர்களுக்கும், மூத்தார்க்கு - கிழத்தனம் அடைந்தவர்களுக்கும், மூப்பு இல்லார்க்கு - பெற்றோர் முதலிய மூத்தோர்கள் இல்லாதவர்களுக்கும், உடம்பட்டு உடையராய் - உள்ளமொத்து அன்புடையராய், இல்லுள் - வீட்டில், ஊண் ஈத்து உண்பார் - உணவுகொடுத்து உண்பவர், மண்மேல் - உலகத்தில், பயின்று - உறவினருடன் அளாவி, வாழ்வார் - மகிழ்ச்சியோடு வாழ்வார்கள்.

(ப-போ-ரை.) கடன்பட்டவர்களுக்கும், தம்மைக் காப்பவர் ஒருவரும் இல்லாதவர்களுக்கும், பொருளில்லாதவர்கட்கும், தங்கால் முடம்பட்டவர்க்கும், முதிர்ந்தவர்களுக்கும், பெற்றோர் முதலிய பெரியார்க ளில்லாதவர்க்கும் மனமியைந்து அன்புடையவர்களாய்த்

தம் வீட்டில் உணவு கொடுப்பித்து உண்பவர், பூமியின்மீது நால் வகைப் படைகளையுமுடைய மன்னர்களாய் மனைவிமக்களுடன் கூடி இன்பமுடன் வாழ்வார்கள்.

(க - து.) கடன்பட்டவர் முதலானவர்க்கு உணவுகொடுத்து உதவி செய்பவர், மன்னராய் இன்பம் மிக்கு வாழ்வார்.

காப்பு - காப்பவர் ; தொழிலாகுபெயர். கைத்து, கையிலிருப்ப தென்பது பொருள் ; கை, பகுதியெனவும், து ஒன்றன் படர்க்கை விகுதியெனவும், த் சந்தியெனவுங் கொள்க. 'கால் முடம் பட்டா' ரென்பது சினைவினை முதலின்மே லேற்றி யுரைக்கப்பட்டது ; காலெனவே இனம்பற்றிக் கைகளையும் உரைத்துக்கொள்க. மண் மேல் - மேல் ஏழனுருபு. "புண்பட்டார் போற்றுவா ரில்லாதார்" என்ற **சிறுபஞ்ச மூலச்** செய்யுட் கருத்துடன் இச்செய்யுளை ஒப்ப நோக்குக. (53)

பார்ப்பார் பசித்தார் தவசிகள் பாலர்கள்
கார்ப்பார் தமையாதுங் காப்பிலார்—தூப்பால
நீண்டாரா லெண்ணாது நீத்தவர் மண்ணாண்டு
பண்டாரம் பற்றவாழ் வார்.

(இ - ள்.) பார்ப்பார் - அந்தணர், பசித்தார் - பசித்தவர், தவசிகள் - தவஞ்செய்கின்றவர், பாலர்கள் - குழந்தைகள், கார்ப்பார் - பிறரால் வெறுக்கப்படுகின்றவர்கள், தமை காப்பு-தம்மைக் காத்துக் கொள்ளுதற்குரிய ஆதரவு, யாதும் இல்லார் - சிறிதும் இல்லாதவர்கள், தூப்பால நீண்டார் - அழுக்கற்ற நல்லொழுக்கத்தில் மிக்கவர்கள் என்பார்க்கு, எண்ணாது நீத்தவர் - பயன் கருதாமல் அவர் துன்பங்களை நீக்கியவர்கள், மண் ஆண்டு - உலகத்தை அரசாண்டு, பண்டாரம் பற்ற - செல்வம் தம்மைச் சூழ்ந்திருக்க, வாழ்வார் - இன்பத்துடன் வாழ்வார்கள்.

(ப-பொ-ரை.) பார்ப்பாரும், பசித்தவர்களும், தவஞ்செய்கின்றவர்களும், பாலர்களும், உடம்பை வெறுக்கின்றவர்களும், தங்களைக் காத்தற்குரிய ஆதரவு ஒன்று மில்லாதவர்களும், தூய்மையாகிய தன்மைய யுடையனவாகிய அறநெறிகளில் மிக்கவர்களும் ஆகிய இவர்களுடைய துன்பங்களை யாதொரு பயனையும் விரும்பாமல்

போக்கினவர்கள், பூமியை ஆண்டு செல்வம் தம்மைச் சூழ்ந்திருக்க இன்புடன் வாழ்வார்கள்.

(க - து.) அந்தணர் முதலியோருடைய துன்பங்களைப் பயன் கருதாமல் நீக்கினவர்கள் செல்வராய் வாழ்வார்.

கார்த்தல் - உறைத்தல்; வெறுக்கப்படுதல் தமைக் காப்புயாதுமில்லார் என்க. தூப்பால வென்பது, "தூய்மையான பான்மையுடைய நெறிக' ளெனப் பொருள்படுதலின், இதனைப் பண்புத்தொகை யெனக் கொள்க. தூப்பாலவற்றிலென ஏழனுருபு விரித்துக்கொள்க. பயன் கருதாது நீத்தாரென்றற்கு 'எண்ணாது நீத்தா' ரென்றார். என்றலின், 'இரக்கத்தால் நீத்தா' ரென்பது பெறுதும். பண்டார மென்பது, நிதியறை. நீண்டார் என்பது நிண்டார் எனக்குறுகிற்று. (54)

ஈன்றாரீன் காற்றளர்வார் சூலார் குழவிகள்
மான்றார் வளியான் மயங்கினார்க்—காணரேன்
றாணீய்த் துறுநோய் களைந்தார் பெருஞ்செல்வம்
காணீய்த்து வாழ்வார் கலந்து.

(இ - ள்.) ஈன்றார்க்கு - பிள்ளையைப் பெறுகின்றவர்க்கும், ஈன்கால் - பிள்ளையைப் பெறுகின்ற காலத்தில், தளர்வார்க்கு - வேதனைப் படுகின்றவர்க்கும், சூலார்க்கு-கருவுற்றிருக்கின்றவர்க்கும், குழவிகட்கு - குழந்தைகளுக்கும், மான்றார்க்கு - அறிவு மயங்கினவர்களுக்கும், வளியால் மயங்கினார்க்கு - வாதநோயால் வருந்துகின்றவர்க்கும், ஆனார் என்று-அவர்களைக் காப்பாற்றுதற்கு அமைந்தவர்களென்று பிறர் சொல்லும்படி, ஊண் ஈய்த்து - உணவு கொடுத்து, உறுநோய் களைந்தார் - அவர்களுக்கு உண்டான நோய்களை நீக்கியவர்கள், பெருஞ்செல்வம் ஈய்த்து - மிக்கபொருளை வறியார்க்குக் கொடுத்து, கலந்து வாழ்வார்-தம் உறவினர்களுடன் கூடி மகிழ்ச்சியாய் வாழ்வார்கள்.

(ப-பொ-ரை.) ஈன்றவர்கட்கும், ஈனுங்காலத்து நோயாற்றளர்வார், சூலையுடையார், பிள்ளைகள், பித்தேறினார், வாதநோயாலறிவு கெட்டார், ஓம்புதற் கமைந்தாரென் றாணுதவி யுறுநோயைக் களைந்தார்; பிறர்க்குத் தனங்களை யீய்ந்து பெருஞ் செல்வங்களை நுகர்ந்து வாழ்வார்.

(க - து.) ஈன்றூர் முதலானவர்களுக்கு உணவு கொடுத்தல், நோய் நீக்குதல் முதலான அறச்செயல்களைச் செய்தல் வேண்டும்.

ஈன்கால், வினைத்தொகை; மான்றூர், மால் பகுதி. வளி, வாதமென்னும் பொருட்டாதலை, "வளிமுதலா வெண்ணிய மூன்று" என்னுந் திருக்குறளுக்கு ஆசிரியர் பரிமேலழகருரைத்த உரையா னறிக. வளி, காரண வாகுபெயர். ஆனூர், ஆனவர்; ஆவது - துணையானவ ரென்க. என் றென்னுஞ் செய்தனெச்சத் தைச் செயவனெச்சமாய்த் திரித்துக்கொள்க. ஈய்த்தென்பதில், யகரமெய் விரித்தல் விகாரம். (55)

தளையாளர் தாப்பாளர் தாழ்ந்தவர் பெண்டீ
ருளையாள ரூணொன்று மில்லார்—கிளைஞராய்
மாவலந்த நோக்கிஞ யூணீய்ந்தார் மாக்கடல்சூழ்
நாவலந்தீ வாள்வாரே நன்கு.

(இ - ள்.) மா அலர்ந்த - மான்கள் மயங்குதற்கு ஏதுவாகிய, நோக்கிஞய் - பார்வையையுடைய பெண்ணே! தளையாளர் - தாம் செய்த குற்றத்திற்காகக் காலில் தளையிடப்பட்டவர்கள், தாப்பாளர்- ஒறுக்கப்பட்டு நைகின்றவர்கள், தாழ்ந்தவர் - மேல் நிலையிலிருந்து முன் வினையினுல் தாழ்வடைந்தவர்கள், பெண்டீர் - பெண்மக்கள், உளையாளர் - இல்லாமை, நோய் முதலியவற்றுல் வருந்துதலை யுடையவர்கள், ஊண் ஒன்றும் இல்லார் - சாப்பாடு சிறிதும் இல்லாதவர்கள் என்பார்க்கு, கிளைஞராய்-உறவினர்போலாகி, ஈய்ந்தார்-உணவு கொடுத்தவர்கள், மா கடல் சூழ்-பெரிய கடல் சூழ்ந்த, நாவலந்தீவு- இவ்விந்திய நாடு முழுமையும், நன்கு ஆள்வார் - நன்றாய் அரசாட்சி செய்வார்கள்.

(ப - போ - ரை.) தளையீடுண்டார், தாப்பாளர், புலையர், பெண்டுகள், பிணியாலுழன்றூர், வறியர் என்றிப் பெற்றிப்பட் டார்க்குக் கிளைஞரா யூணீய்ந்தார்; மானைப் பிணித்த நோக்கை யுடையாய்! பெரிய கடல் சூழ்ந்த மண்ணையாள்வார்.

(க - து.) தளையாளர் முதலியவர்களுக்கு உணவு கொடுத்தல் அறமாம்.

மாவலந்த என்பதை மானை வருத்துகின்ற எனலும், மாவடுவின் பிளவை வென்ற எனலுமாம்.

தாப்பு, புல்விகுதித் தொழிற்பெயர்; தாப்பாளர் தாக்கலுடையவர்கள்; ஆவது அடித்தும் உதைத்தும் ஒறுக்கப்பட்டவர்களென்பது, தாம்பு + ஆளர் என்று பிரித்துக் கயிற்ருற் கட்டுண்டவர் என்க. பெண் மக்கள் பார்வையைக் கண்டு அவர்களைத் தம்மினம் போலுமென மான்கள் மயங்கினவென்றதற்கு, 'மாவலந்த நோக்கினு' யென்ருர். உளை - முதனிலைத் தொழிற்பெயர். (56)

கருஞ்சிரங்கு வெண்டோழுநோய் கல்வளி காயும்
பெருஞ்சிரங்கு பேர்வயிற்றுத் தீயார்க்—கருஞ்சிரம
மாற்றியூ ணீத்தவை தீர்த்தா ரரசராய்ப்
போற்றியூ ணுண்பார் புரந்து.

(இ - ள்.) கரும்சிரங்கு நோய் - கொடிய சிரங்கு நோயும், வெள்தொழு நோய் - வெள்ளைக்குட்ட நோயும், கல்நோய் - கல்லடைப்பு நோயும், வளிநோய் - வாத நோயும், காயும் - வருத்துகின்ற, பெரும் சிரங்குநோய் - கழலை நோயும், பேர்வயிற்றுத் தீ நோயார்க்கு-பெரிய வயிற்றெரிச்சல் நோயுமாகிய இவற்றை யுடையார்க்கு; அரும் சிரமம் - அவர்களது பொறுத்தற்கரிய துன்பத்தை, ஆற்றி - தணித்து, ஊண் ஈந்து-அவர்களுக்கு உணவைக்கொடுத்து, அவை தீர்த்தார் - அந்நோய்களை நீக்கியவர்கள், அரசராய் போற்றி- மன்னவராய் யாவராலும் போற்றப்பட்டு, புரந்து உண்பார் - உலகாண்டு வாழ்வார்.

(ப - பொ - ரை.) கருஞ்சிரங்கும், வெள்ளிய தொழுநோயும், கல்லெரிப்பும், வாதமும், காய்ந்திடர் செய்யுங் கழலையும், பெருவயிற்றுப் பெருந்தீயு மென இவ் ஆறு திறத்தாராகிய பிணியுடையார்க்குமரிய வருத்தத்தைத் தவிர்த் தூணீய்ந் தந்நோய்களைத் தீர்த்தாரே; பின்பரசராய்ப் பிறந்துலகினைக் காத்து விரும்பிய நுகர்ச்சியை நுகர்வார்.

(க - து.) நோயாளர்க்கு நோய் நீக்கலும் உணவு கொடுத்தலும் வேண்டும்.

கருமை, கொடுமை; "கருவில் ஓச்சிய" (பெரும்பாண், எச) என்னும் பெரும்பாணுற்றுப்படையில் இப்பொருள் காண்க. நோய் என்பதைப் பிற விடங்களினுங் கூட்டுக. போற்றி, செயப்பாட்டு வினைப்பொருளது. (57)

காமாடார் காமியார் கல்லா ரினங்சேரா
ராமாடா ராய்ந்தார் நெறிநின்று—தாமாடா
தேற்றுரை யின்புற வீய்ந்தார்முன் னிம்மையான்
மாற்றுரை மாற்றி வாழ்வார்.

**(இ - ள்.)** முன் - முற்பிறப்பில், காம் ஆடார் - காமத்தை நுகராமல், காமியார் - பிறர் பொருளை விரும்பாமல், கல்லார் இனம் சேரார் - படிக்காதவர்கள் கூட்டத்தைச் சேராமல், ஆம் ஆடார் - நீரில் விளையாடாமல், ஆய்ந்தார் நெறிநின்று - பெரியோர்களின் ஆராய்ச்சி நெறிநின்று, தாம் ஆடாது-தாம் வழுவாமல் ஒழுகி, ஏற்றுரை - தம்மை அண்டி இரப்பவர்களுக்கு, இன்புற ஈய்ந்தார் - அவர்கள் மகிழ்ச்சி யடையும்படி கொடுத்தவர்களே, இம்மையான் - இப்பிறப்பில், மாற்றுரை மாற்றி - பகைவர்களைப் புறந்தரச் செய்து, வாழ்வார் - அரசர்களாய் வாழ்பவராவார்கள்.

**(ப - போ - ரை.)** காமநுகராது, பொருளின்மேற் காதலியாது, கல்லாரினஞ் சேராது, நீரில் விளையாடாது, கற்றார் நிற்கு நெறியின்க ணின்று, தாம் வழுவா திரந்தேற்றுரை யின்புறும் வகை முற்பிறப்பின்க ணீய்ந்தார் இப்பிறப்பின்கண் பகைவரை வென்றரசராய் வாழ்வார்.

**(க - து.)** முற்பிறப்பில் நல்லொழுக்கத்தினின்று பிறர்க்குதவி செய்பவர்களே, இப்பிறப்பில் அரசர்களாய் வாழ்கின்றவராவார்கள். காமம், கடைக்குறை; ஆம், நீர்; முன் - ஆகுபெயர். (58)

வணங்கி வழியொழுகி மாண்டார் சொற்கொண்டு
நுணங்கியநூ னோக்கு நுழையா—விணங்கிய
பானோக்கி வாழ்வான் பழியில்லா மன்னனாய்
நூனோக்கி வாழ்வா னுனித்து.

**(இ - ள்.)** வணங்கி - வணக்க முடையவர்களாய், வழி ஒழுகி-நல்வழியிலே நடந்து, மாண்டார் சொல் கொண்டு-சான்றோரறிவுரைகளை மேற்கொண்டு, நுணங்கிய நூல் - நுட்பமான அறிவு நூல்களை, நோக்கி - ஆராய்ந்து, நுழையா - அந்நூற்பொருள்களில் தன் அறிவைச் செலுத்தி, இணங்கிய பால் நோக்கி-பொருத்தமான பகுதிகளை ஆராய்ந்து, வாழ்வான் - அவற்றின்படி வாழ்கின்றவன்,

பழி இல்லா மன்னனாய் - வடுவில்லா வேந்தனாய், நூல் நுனித்து நோக்கி - அறிவு நூல்களையும் நுட்பமாய் ஆய்ந்துணர்ந்து, வாழ் வான் - பெருவாழ்வில் வைகுவான்.

**(ப-பொ-ரை.)** பிறர்க்குப் பணிந்து, நெறியே யொழுகி, மாட்சிமைப்பட்டார் சொற்களை யுகர்ந்துகொண்டு, நுண்ணிய நூல்களை யோதி, நுண்ணிதாக வறிந்து பொருந்திய பான்மையை நோக்கி யொழுகுவான், குற்றமில்லா வரசனாய் நுண்ணிய நூல்களை யறிந்து மறுமையின்கண் வாழ்வான்.

**(க - து.)** இம்மையில் வணக்கமும், ஒழுக்கமும், சான்றோர் மதிப்பும், ஆராய்ச்சியும் உடையவன்; மறுமையில் இக்கல்வியுடன் பொருளும் ஒருங்கெய்தி வாழ்வான்.

நுணங்கலும் நுனித்தலும் நுட்பமாத லென்க. நுண்ணென்பதும் நுனியென்பதும் முறையே அவற்றிற்குப் பகுதிகளாம். நுணங்கி யாராயவேண்டிய பொருளை நுணங்கிய வென்றது, காரியத்தைக் காரணமாகக் கூறிய உபசார வழக்கு. (59)

பெருமை புகழறம் பேணாமை சீற்றம்
அருமைநூல் சார்பில்லார் சாரி—னிருமைக்கும்
பாவம் பழிபகை சாக்காடே கேடச்சம்
சாபம்போற் சாருஞ் சலித்து.

**(இ - ள்.)** பெருமை - பெரிய நிலைமையும், புகழ் - புகழும், அறம் - அறமும், சீற்றம் பேணாமை - சினத்தை விரும்பாமையும், அருமைநூல் - அரிய நூலுணர்ச்சியும், சால்பு - பெருந்தன்மையும், இல்லார் - இல்லாதவர்களை, சாரின் - சேர்ந்தால், இருமைக்கும் - இம்மை மறுமை யிரண்டிலும், பாவம் - தீவினையும், பழி - பழியும், பகை - பகையும், சாக்காடு-சாவும், கேடு - பொருளழிவும், அச்சம் - அச்சமும், சாபம்போல் - சான்றோர்கள் இடுகின்ற ஆணைமொழியைப்போல், சலித்து சாரும் - தேர்ந்தெடுக்கப்பட்டார்போல் வந்து சேரும்.

**(ப - பொ - ரை.)** பெருமையும், புகழும், அறம் பேணாத சினமும், அருமை நூலும், சால்புக் குணமுமில்லார் சாரின், இம்மை மறுமையென்னு மிரண்டிற்கும் பாவமும், பழியும், பகையும்,

சாக்காடும், கேடும், அச்சமு மென்னு மிவ் ஆறு திறமு முனிவராற் சாபமிட்டாற்போலச் சென்று சாரும் வெகுண்டு.

(க - து.) கீழோரைச் சார்ந்தால் பழி பாவம் முதலியன வந்தெய்தும்.

சிற்றம் பேணுமை யென்று கொள்க. 'சாபம் போல்' என்றார் கட்டாயஞ் சாருமென்றற்கு. சலித் தென்றார், நல்லன வெல்லாங் கழித்துத் தீயன வெல்லாம் தெரிந்தெடுத்தாற்போல் திரண்டு சேரு மென்றற்கு. சாக்காடே என்பதிலுள்ள ஏகாரத்தைச் சாப முதலிய மூன்றனோடும் பின்னுள்ள கேடுமுதலிய இரண்டனோடும் கூட்டுக. "இல்லார்ச் சாரின்" என்பது பாடமாயின் இல்லாரை ஒருவன் சார்ந்தால் அவனைப் பழி முதலிய அவ் ஆறு திறந்தனவும் சாரும் என்க. (60)

ஆர்வமே செற்றங் கதமே யறையுங்கால்
ஓர்வமே செய்யு முலோபமே—சீர்சாலா
மானமே மாய வுயிர்க்கூன மேன்னுமே
ஊனமே தீர்ந்தவ ரோத்து.

(இ - ள்.) அறையுங்கால் - சொல்லுமிடத்து, ஊனம் தீர்ந்தவர் - குற்றமற்ற சான்றோர்களுடைய, ஓத்து - அறிவு நூல்கள், ஆர்வம் - அவாவும், செற்றம் - பகையும், கதம் - சினமும், ஓர்வம் - ஒருபாற் சார்தலும், செய்யும் உலோபம் - மேற்கொள்ளப்படும் ஈயாத்தன்மையும், சீர்சாலா - சிறப்பு நிரம்பாத, மானம் - பெருமையும் என்பன, மாய உயிர்க்கு - நிலையாத மாந்தர்க்கு, ஊனமே - கேடு தருவனவேயாம், என்னும் - என்று சொல்லும்.

(ப-போ-ரை.) சுற்றத்தார்மே லன்பும், செற்றமும், கோபமும் சொல்லுங்காற் பாங்கோடுதலும், உள்ளத்தாற் செய்யப்படு முலோபமும், சீர் நிரம்பாத மானமு மென்று சொல்லப்பட்ட ஆறு திறமு மாயத்தையுடைய வுயிர்கட்குக் குற்றமென்று சொல்லும் குற்றந்தீர்ந்தார் சொல்லிய நூல்கள்.

(க - து.) அவா முதலியன தீது தருமென்று அறிவு நூல்கள் கூறும்.

ஏகாரம், எண். ஓர்வம், ஓரம் ஒருபாற்சார்தல், பாங்கோடுதல். உலோபம் - ஈயாத்தன்மை ; என்றுமே, ஊனமே யென்பவற்றில் ஏகாரம் அசை. உயிர் - மாந்தர். (61)

கூத்தும் விழவு மணமுங் கொலைக்களமு
மார்த்த முனையுள்ளும் வேறிடத்தும்—ஓத்தும்
ஒழுக்கு முடையவர் செல்லாரே செல்லின்
இழுக்கு மிழவுந் தரும்.

(இ - ள்.) ஓத்தும் ஒழுக்கும் உடையவர் - கல்வியும் அதற்குத்தக ஒழுக்கமும் உடைய சான்றோர்கள், கூத்தும்-கூத்தாடு மிடத்திலும், விழவு - திருவிழா நடக்குமிடத்திலும், மணம் - திருமணம் நிகழுமிடத்திலும், கொலைக்களமும் - கொலை பயிலு மிடத்திலும், ஆர்த்த முனையுள்ளும் - ஆரவாரிக்கும் போர்க்களத்திலும், வேறு இடத்தும் - இவற்றைப் போன்ற வேறிடங்களிலும், செல்லார் - போகார், செல்லின் - அங்ஙனம் போவார்களாயின், இழுக்கும் இழவும் தரும் - அவர்களுக்குத் தாழ்வையும் பொருளழிவையுங் கொடுக்கும்.

(ப-போ-ரை.) கூத்தாடு மிடத்தும், விழாச் செய்யுமிடத்தும், மணஞ் செய்யுமிடத்தும், ஆர்த்த போர்க்களத்தும், பகைவரிடத்தும், இதுபோலும் வேறிடத்தும் ஒழுக்கமுடையவர் செல்லார். செல்வராயின் உயிர்க்கிடையூறும் பொருளிழவுந் தரும்.

(க - து.) கூத்தாடுமிடம் முதலியவற்றிற்குச் செல்லுதல் கீழ்மைத் தன்மையையும் பொருளழிவையும் உண்டாக்கும்.

முனையுள்ளும் என்பதிலுள்ள உள் ஏழனுருபு ; இதனை இதன் முன்னுள்ள மற்றைய நான்கனோடுங் கூட்டுக. ஓத்து, ஓது என்னும் முதனிலையின் றிரிபு. இது தொழிலாகுபெயராய் ஈண்டுக் கல்வியை யுணர்த்திற்று. கூத்து முதலாயினவற்றிற்கும் உள்ளென்னும் ஏழனுருபு வருவித்துரைக்க. செல்லுதல் இழுக்கும் இழவும் தருமென்க. ஆர்தல் - கட்டுதல். உம் - எண்ணுப் பொருளன. இழுக்கு-முதனிலைத் தொழிற் பெயர். (62)

ஊணொடு கூறை யெழுத்தாணி புத்தகம்
பேணொடு மெண்ணு மெழுத்திவை—மாணொடு
கேட்டெழுதி யோதிவாழ் வார்க்கீய்ந்தா ரிம்மையான்
வேட்டெழுத வாழ்வார் விரிந்து.

(இ - ள்.) இம்மையான்-இப்பிறப்பில், வேட்டு எழுத - புலவர் பெருமக்கள் தனது வரலாற்றை விரும்பி எழுத, விரிந்து - வாழ்வு பெருகி, வாழ்வார் - வாழ்கின்றவர்கள், பேணொடும் - விருப்பத் தோடும், மாணொடும் - மாட்சிமைப்பட்ட நல்லியல்பு நற்செயல்க ளோடும், எண்ணும் - கணக்கும், எழுத்தும் - இலக்கணமுமாகிய, இவைகேட்டு - இவற்றை ஆசிரியர்களிடத்தில் பாடங்கேட்டு, எழுதி-ஏட்டில் எழுதியும், ஓதி - படித்தும், வாழ்வார்க்கு - வாழ்கின்ற மாணாக்கர்களுக்கு, ஊணொடு - உணவோடு, கூறை - உடையும், எழுத்தாணி - எழுத்தாணியும், புத்தகம் - சுவடியும், ஈய்ந்தார் - தமது முற்பிறப்பிற் கொடுத்துதவினவர்களே யாவர்.

(ப-போ-ரை.) ஊணும், ஆடையும், எழுத்தாணியும், பொத் தகமும் என்கின்ற நான்கினையும், விருப்பத்துடனே யெண்ணும், எழுத்து மென்னு மவற்றையு மாணாக்கர் தொழிலினாற் கேட் டெழுதி யோதி வாழ்வார், முற்பிறப்பின்கட் கொடுத்தா ரிப்பிறப் பின்க ணுலகத்தார் விரும்பித் தம தாணை விரும்பியெழுத மன்னராய் வாழ்கின்றார்.

(க - து.) ஊக்கத்தோடு கற்கும் மாணாக்கர்களுக்கு ஊண் உடை முதலியன கொடுத்துதவுகின்றவர்கள் செல்வராய் வாழ்வர்.

ஒடு, உடனிகழ்ச்சிப் பொருளன. மாண் - மாட்சிமை, ஈண்டு மாணாக்கர்க்குரிய தொழில்கள். மாணாக்கர்க்குரிய மாட்சிமையாவன-தலை மாணாக்கர்க்குரிய நல்லியல்புகளும், 'பொழுதொடு செல்லல்' முதலான நற்செயல்களுமென்க. இவை தம்மை யெல்லாம்,

"அன்னங் கிளியே நன்னிற நெய்யரி
யானை யானே றென்றிவை போலக்
கூறிக் கொள்ப குணமாண் டோரே."

'கோடன் மரபு கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்

முன்னும் பின்னு மிரவினும் பகலினு
மகலா னாகி யன்பொடு கெழீஇக்
குணத்தொடு பழகிக் குறிப்பின் வழிநின்
றுசற வுணர்ந்தோன் வாவென வந்தாங்
கிருவென விருந்தே டவிழென வவிழ்த்துச்
சொல்லெனச் சொல்லிச் செல்லெனச் சென்று
பருகுவ னன்ன வார்வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை வல்ல னாகிப்
போற்றிக் கோட லதனது பண்பே."

என்னும் ஆசிரியர் நச்சினார்க்கினியரின் தொல்காப்பியப் பாயிர விருத்தி மேற்கோணூற்பாக்களால் நன்கறியற்பாலன. இம்மையான் - உருபு மயக்கம். (63)

உயர்ந்தான் தலைவனென் றொப்புடைத்தா னோக்கி
உயர்ந்தா னூலோதி யோடுங்கி—உயர்ந்தான்
அருந்தவ மாற்றச் செயின்வீடா மென்றார்
பெருந்தவஞ் செய்தார் பெரிது.

(இ - ள்.) பெருந் தவம் - அரிய தவத்தை, பெரிது செய்தார் - மிகவும் முயன்று ஆற்றிய சான்றோர், ஒப்புடைத்தால் நோக்கி-தக்க முறையில் ஆராய்ந்து, உயர்ந்தான் - எல்லா வகைகளிலும் இயல்பாகவே உயர்ந்திருப்பவன், தலைவன் என்று-கடவுளென் றுணர்ந்து, உயர்ந்தான் நூல் - அக்கடவுளியல்பைப் பற்றிய அறிவு நூல்களை, ஓதி ஒடுங்கி - கற்று அடங்கி, உயர்ந்தான் அருந்தவம் - அவ்விறைவனை நோக்கிய அரிய தவங்களை, ஆற்ற செயின் - மிகுதியும் செய்வானாயின், வீடு ஆம் - அவனுக்கு வீடுபேறுண்டாகும், என்றார்-என்று அறிவுறுத்தருளினர்.

(ப-போ-ரை.) எல்லாரினுமுயர்ந்தவன் றலைவனாவானென் றுள்ளங்கொண்டு, மாற்றவர்க்குச் சொன்ன நன்மையானே யொக்க வாராய்ந்து, உயர்ந்தவனாற் சொல்லப்பட்ட வாகமத்தையோதி, அவ்வாகமத்திற் சொன்ன வகையானே யடக்க முடையனாய், அவ்வுயர்ந்தவன் சொல்லிய வரிய தவத்தை மிகவுஞ் செய்தால், பிறப்பில்லாத வீடாமென்று சொல்லினர், மிகவும் பெருந் தவஞ்செய்தார்.

(க - து.) கடவுணெறியி லொழுகுவார்க்கே வீடுபேறுண் டாகுமென்பது சான்றோர் கருத்து.

ஒப்புடைத்து, இஃது ஒரு சொன்னீர்மைத்தாகலின், குறிப்பு வினையாலணையும் பெயரென்க. கடவுள் தெளிந்து அவனைப் பாராட்டும் அறிவு நூல்களை ஓதியடங்கி அவனுக்குத் தவஞ்செய்வார் வீடடைவாரென்பது பொருள். 'உயர்ந்தா னருந்தவ' மென்ற விடத்து இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் விரித்துரைத்துக் கொள்க. வீடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். அறிவுநூல்களை யறிதலும், அறிந்தாங்கு அடங்கி நிற்றலும் அருந்தவமியற்றலும் ஒன்றினொன் றருமையாதல் நோக்கி ஓதி யொடுங்கி யருந்தவஞ் செயின், என்றார். (64)

காலனா ரீடறுத்தல் காண்குறின் முற்றுணர்ந்த
பாலனார் நூலமர்ந்து பாராது—வாலிதா
ஊறுபா டில்லா வுயர்தவந் தான்புரியின்
ஏறுமோ மேலுலக மோர்ந்து.

(இ - ள்.) காலனார் ஈடு அறுத்தல் - கூற்றுவன் வலிமையை நீக்குதற்குரிய வழியை, காண்குறின் - அறிய விரும்பினால், முற்றுணர்ந்த பாலனார் - முற்றுமுணர்ந்த வகைமையையுடைய ஆண்டவனுடைய, நூல் அமர்ந்து - நூல்களை விரும்பிக் கற்று, பாராது - வருத்தம் நோக்காது, வாலிதா - தூய்மை யுடையதாக, ஊறுபாடு இல்லா-கெடுதியில்லாத, உயர்தவம்-சிறந்த தவத்தினை, ஓர்ந்து புரியின் - திருவருளுணர்ந்து ஒருவன் செய்வானாயின், மேல் உலகம் ஏறும் - மேலான வீடுபேற்றுலகத்திற் செல்வான்.

(ப-பொ-ரை.) காலனாரது வலியை யறுத்தும் பிறப்பறுக்கலுறின் முற்றுணர்ந்த தன்மையாரையு மவராற் சொல்லப்பட்ட வாகமத்தையும் விரும்பி யரிதென்று பாரா தூறு பாடில்லாத வுயர்ந்த தவத்தை யொருவன் செய்வானாயின் வீட்டுலகத்தின்க ணேறு மேனோக்கி.

(க - து.) ஆண்டவ னறிவுநூல்களை யோதித் தவஞ்செய்வார் வீடுபேறடைவர்.

காலனார், விகுதிமேல் விகுதி உயர்வு கருதி வந்தது. ஈடு - வலிமை மேலது. காண்குறின், கு எழுத்துப் பேறு. 'உறு, படு'

வென்னும் முதனிலைத் தொழிற்பெயர்கள் புணர்ந்து ஒரு சொற்றன்மைப்பட்டுக் கெடுதி யென்னும் பொருளுணர்த்தின. ஆம் - அசை. உயர்தவம் - உயர்வாகிய தவம், பண்புத்தொகை. (65)

பொய்தீர் புலவர் பொருள்புரிந் தாராய்ந்த
மைதீ ருயர்கதியின் மாண்புரைப்பின்—மைதீர்
சுடரின்று சொல்லின்று மாறின்று சோர்வின்
றிடரின் றினிதுயிலு மின்று.

(இ - ள்.) பொய்தீர் புலவர் - பொய்மை நீங்கிய புலவர்கள், பொருள் புரிந்து ஆராய்ந்த - மெய்ப்பொருள் விரும்பி யாராய்ந்த, மைதீர் உயர் கதியின் - குற்ற மற்ற வீடுபேற்றின், மாண்பு உரைப்பின் - மாட்சிமை சொல்லு மிடத்து, மைதீர் சுடர் இன்று - அங்கு இருள் கெடுக்கும் ஞாயிறு இல்லை, சொல் இன்று - பேச்சு இல்லை, மாறு இன்று - நிலை மாறுதல் இல்லை, சோர்வு இன்று - தளர்ச்சியில்லை, இடர் இன்று - துன்பம் இல்லை, இனிது துயிலும் இன்று - இனிய தூக்கமும் இல்லை.

(ப - பொ - ரை.) பொய்தீர்ந்த வறிவுடையார் பொருளாக விரும்பி யாராய்ந்த குற்றந்தீர்ந்த வீட்டுலகின் மாட்சிமையை யுரைப்போமாயின்; ஒளியில்லை, உரையில்லை, மாறுபாடில்லை, கேடில்லை, துன்பமில்லை, இனிய துயிலு மில்லை.

(க - து.) வீடுபேற்றிற் பகலிரவு முதலாயின இல்லையென்க.

பொருள், மெய்ம்மை; 'பொருளுரை' யென்னும் மணிமேகலையிற்போல வென்க. சுடரின்றென்பது, பகலில்லை யென்றபடி; எனவே அருத்தாபத்தியால் இரவில்லையென்பது முதலாயினவுங் கொள்க. இனிது துயிலு மென்பது ஈறுகெட்டுப் புணர்ந்தது. இச்செய்யுள் வீடுபேற்றிலக்கணத்தை நன்கெடுத்துரைத்ததென்க.

"பொய்யில் புலவர் புரிந்துறை மேலுலகம்
ஐயமொன் றின்றி யறிந்துரைப்பின்—வெய்ய
பகலின் றிரவின்று பற்றின்று துற்றின்
றிகலின் றிளிவரவு மின்று"

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாட்டு இங்கு நினைவு கூரற்பாலது. (66)

கூரம்பு வெம்மண லீர்மணி தூய்கலும்
ஈரும் புகையிரு ளோடிருணூல்—ஆராய்ந்
தழிகதி யிம்முறையா ஞன்ரு ரறைந்தார்
இழிகதி யிம்முறையா னேழு.

(இ - ள்.) கூர் அம்பு - கூரான அம்புகள் எய்யும் இடமும், வெம்மணல் - சூடான மணல் நிறைந்த இடமும், ஈர்மணி - மிகவுங் குளிர்ச்சியான மணிகள் உருளுமிடமும், தூங்கலும் - தூக்கம்போல் மயக்கம் வருவிக்குமிடமும், ஈரும் புகை - உயிர்களை வருத்துகின்ற புகை கலந்த இடமும், இருளோடு-சிறிது இருள் பரவிய இடமும், இருள் - பேரிருள் சூழ்ந்த இடமுமென, இம்முறையான் - இவ் வகைப்பட்ட, இழி கதி எழு - குற்றஞ்செய்த உயிர்கள் இறங்கும் எழு தீக்குழிகளை, நூல் ஆராய்ந்து - அறிவு நூல்களை ஆராய்ந்து, அழி கதி ஆன்ருர்-உயிர்கள் அழிதற்கு ஏதுவான இந்நரகங்களினின் றும் பிழைத்த சான்றோர்கள், இம்முறையான்-இம்முறைமைப்படி, அறைந்தார் - கூறினார்கள்.

(ப - போ - ரை.) கூரிய வம்பும், வெம்மணலும் குளிர்ந்த மணியு, மொழுகியவன்று மீரத்தக்க புகையு, மிருளிலிருளு மென நூலால் நிரம்பினர் ஆயி னழியுங் கதிகளிம் முறையினின்று மொழிந்த வருந்தவர் சொல்லின ரிழிகதியாகிய நகரங்க ளிம் முறை யானேழாக.

(க - து.) அம்புள்ள இடம் முதலாகத் தீவாய்க் குழிகள் எழென்ப.

அம்பு முதலியன எழும் தானி ஆகுபெயர்களென்க. உம்மை எண். இருளோடு, இருளென்றவிடத்து ஒடு அவ்விரண்டின் வேற் றுமையைக் காட்டி பிரித்தற்கு வந்தது. அழி கதியும் இழி கதியும் வினைத்தொகைகள். ஆன்ருர் - அகன்ருர் என்பதன் மரூஉ. (67)

சாதல் பொருள்கொடுத்த லின்சொற் புணர்வுவத்தல்
நோதற் பிரிவிற் கவறலே—ஓதலின்
அன்புடையார்க் குள்ளன வாறு குணமாக
மேன்புடையார் வைத்தார் விரித்து.

(இ - ள்.) சாதல் - நண்பர்கள் இறந்தவிடத்துத் தாமும் பிரிவாற்ருது இறத்தலும், பொருள் கொடுத்தல் - அவர்களுக்கு இல்லாமை வந்தபோது பொருள்கள் உதவிசெய்தலும், இன்சொல் - இன்சொல் கூறுதலும், புணர்வு உவத்தல் - அவர்களுடன் கூடியிருத்தலை விரும்புதலும், நோதல் - அவர்கள் வருந்தும்போது தாமும் வருந்துதலும், பிரிவில் கவறலே - அவர்கள் பிரியுங்காலத்தில் உள்ளங் கலங்குதலுமான, ஆறு குணம் - இந்த ஆறு இயல்புகளும், அன்பு உடையார்க்கு - மெய்யன்புடைய உண்மையான நண்பர்களுக்கு, உள்ளனவாக ஓதலின் - இருப்பனவாகச் சான்ருேர் கூறுதலால், மென்புடையார் - மென்மை மிக்க புலவர்கள், விரித்து வைத்தார் - தம் நூல்களில் இங்ஙனமே விளக்கிவைத்தார்கள்.

(ப - போ - ரை.) சாவிற்சாதலும், பொருள் கொடுத்தலும், இன்சொற் சொல்லுதலும், புணர்ச்சி விரும்புதலும், நோவில் நோதலும், பிரிவின் கலங்குதலுமெனு மிவ்வாறு குணமும் நீங்காத வன்புடையார்க் குள்ளனவாக மெல்லிய திறப்பாட்டை யுடையார் விரித்துரைத்துவைத்தார்.

(க - து.) சாவின் சாதல் முதலியன உள்ளன்புடையார் செயல்களாம்.

ஓதலின் என்பதில் இன் சாரியை; ஆல் உருபு தொக்கதென்க. மென்புடையார் எனப் பொதுப்படக் கூறினமையின் அன்புடைய நாயகன் நாயகிக்கும் கொள்க. (68)

எடுத்தன் முடக்க னிமிர்த்த னிலேயே
படுத்தலோ டாடல் பகரின்—அடுத்துயிர்
ஆறு தொழிலென் றறைந்தா ருயர்ந்தவர்
வேறு தொழிலாய் விரித்து.

(இ - ள்.) உயிர் அடுத்த - உடம்படுத்த உயிர்களைச் சார்ந்த, தொழில் பகரின் - தொழில்களைச் சொல்லுமிடத்து, எடுத்தல் - உறுப்புக்களை யெடுத்தலும், முடக்கல் - அவற்றை முடக்குதலும், நிமிர்த்தல் - நிமிரச் செய்தலும், நிலே - நிலேக்கச் செய்தலும், படுத்தலோடு - படுத்தலும், ஆடல் - ஆடலுமாகிய, ஆறு என்று - ஆறுகுமென, உயர்ந்தவர் - அறிவிற் சிறந்தவர்கள், வேறு தொழில் ஆய் - வேறு வேறு தொழில்களாக, விரித்து அறைந்தார் - விளக்கிக் கூறினர்கள்.

(ப-போ-ரை.) உறுப்பினை யெடுத்து முடக்கலும், நிமிர்த்தலும், நிற்றலும், கிடத்தலும், ஆடுதலுமெனத்தொழிலாறுவகைப் படும். பகர்வேமாயினித்தொழில்களையடுத்துயிர் தனது வருத்த முறுந் தொழிலென்றவற்றை யறிந்தார் சொன்னூரொன்றொன்றனோடு வேறுபட்ட தொழிலாக விரித்து.

(க - து.) உயிர்களை எடுத்தல் முதலாயின, உடம்பெடுத்த உயிர்களின் தொழில்களென்க.

அடுத்துயிர் என்பதில் அகரம் விகாரத்தாற்றொக்கது. எடுத்தல் முதலிய நான்கு தொழில்களை மட்டும் உறுப்புகட்கென்று உணர்ந்துகொள்க. (69)

ஐயமே பிச்சை யருந்தவர்க் கூணுடை
ஐயமே யின்றி யறிந்தீந்தான்—வையமும்
வானும் வரிசையாற் றுளு நாளுமே
யீனமே யின்றி யினிது

(இ - ள்.) ஐயம் - ஐயமும், பிச்சை - பிச்சையும், அருந்தவர்க்கு - அரிய முயற்சியை யுடையவர்களுக்கு, ஊண் - உணவும், ஆடை - ஆடையுமாகிய இவற்றை, ஐயம் இன்றி - ஐயுறவு இல்லாமல், அறிந்து ஈந்தான்-அவரவ ரியல்புணர்ந்து கொடுத்தவன், வையமும் வானும் - இம் மண்ணுலகத்தையும் வானுலகத்தையும், நாளும்-எந்நாளும், ஈனம் இன்றி - குறைவில்லாமல், வரிசையான் இனிது ஆளும் - முறைமையோடு நன்றாய் அரசாள்வான்.

(ப-போ-ரை.) இறந்தவர்க் கையமும், பிச்சையும், அருந்தவர்க்கூணு, முடையில்லாதார்க் குடையு மென்றிந் நான்கினையுங் கொடைப்பயன்களை யறிந் தையமின்றித் துணிந்து கொடுத்தான் ; வையத்தையும் வானத்தையு முறைமையானே நாடோறுமாளுங் குறைவின்றி யினிதாக.

(க - து.) ஐயம் முதலியவற்றை இயல்பறிந்து கொடுப்பவன் இம்மை மறுமை நலங்களை யெய்துவான்

ஏற்போர்க் கிடுவது ஐயமெனவும், துறவோர் முதலியோர்க் கிடுவது பிச்சையெனவுங் கொள்க. தான், அசை ; நாளுமென்னும் உம்மை முற்று. (70)

நடப்பார்க்கூ ணல்ல பொறைதாங்கி ஞர்க்கூண்
கிடப்பார்க்கூண் கேளிர்க்கூண் கேடின் — றுடற்சார்ந்த
வானகத்தார்க் கூணே மறுதலையார்க் கூணமைத்தான்
தானகத்தே வாழ்வான் றகை.

(இ - ள்.) நடப்பார்க்கு ஊண் - வழி நடப்பவர்க்கு உணவும், நல்ல பொறை - மிக்க சுமையை, தாங்கினார்க்கு ஊண் - தாங்கிக் களைத்தவர்க்கு உணவும், கிடப்பார்க்கு ஊண் - நோயிற்கிடப்பவர்க்கு உணவும், கேளிர்க்கு ஊண் - உறவினர்க்கு உணவும், உடல் சார்ந்த- தன் உடம்பைச் சார்ந்த, வானகத்தார்க்கு ஊண் - வானுலகிலுள்ள தென்புலத்தார்களுக்கு உணவும், மறுதலையார்க்கு ஊண் - அயல் நாட்டிலிருந்து வந்தவர்களுக்கு உணவும், கேடு இன்றி அமைத்தான்- கெடுதலில்லாமல் அமைத்துக் கொடுத்தவன், அகத்து - தனக்குரிய மனையில், தக வாழ்வான் - செம்மையாய் வாழ்வான்.

(ப - பொ - ரை.) வழிபோய் வருந்தினார்க் கூணும், சுமை யெடுத்து வருந்தினார்க்கூணும், நோய்கொண்டு கிடப்பார்க்கூணும், கேளாயினார்க்கூணும், இறந்து போய வானகத்தார்க்கூணு மமைத் தவன்றா னின்பத்தோடு வாழ்வான் றகுதிபட்டு.

(க - து.) வழிநடப்பவர் முதலானவர்களுக்கு உணவு கொடுப் பவன் இம்மையில் நல்வாழ்வு பெறுவான். 'நல்ல' மிகுதிப் பொரு ளது ; 'நன்று பெரிதாகும்' என்பது **தொல்காப்பியம்**. 'வானகத் தார்க்கு ஊண்' என்பது நீர்க்கடனாற்றுதல். 'மறுதலையா' ரென் பதற்கு இடநோக்கி வேற்று நாட்டாரென்று பொருளுரைக்கப்பட் டது. தென்புலத்தார் - படைப்புக்காலத்து அயனாற் படைக்கப் பட்ட கடவுட்சாதியர், தென்திசையி லிருப்பவர். (71)

உணராமை யாற்குற்ற மோத்தான் வினையாம்
உணரான் வினைப்பிறப்புச் செய்யும்—உணராத
தோண்டிருந் துன்பந் தொடரும் பிறப்பினான்
மண்டிலமு மாகு மதி.

(இ - ள்.) உணராமையால் குற்றம் ஆம் - அறியாமையால் குற்றங்களுண்டாகும் ; ஓத்தான் வினையாம் - நூலுணர்ச்சியால் நல் வினைகள் விளையும், உணரான் வினை - அறிவுநூல்களை யுணராதவன்

செயல்கள், பிறப்புச் செய்யும் - பிறப்பையுண்டாக்கும்; பிறப்பினுல் உணராத - பிறப்பால் அறியப்படாத, தொண்டு இரும் துன்பம்-ஒன்பது பெரிய துன்பங்கள், தொடரும் - தொடர்ந்து வரும், மண்டிலமும் ஆகும்-அதனல் அடிக்கடி அப்பிறவிச் சூழலிற் சுழலலுமாகும். மதி - ஆகவே நீ அதனை நன்கு கருத்திருத்துக.

(ப-பொ-ரை.) பேதைமையாற் காமம் வெகுளி மயக்கமாகிய முக்குற்றமுளவாம், கல்வியாற் சீலமுளவாம், அறிவிலாதான் செய்யும் வினைகள் பிறப்பினையாக்கும். பிறப்பினுனுணராத தொண்டான் வரும் பெருந்துன்பந் தொடர்ந்து வரும், பின்னையும் பிறப்பாலே பஞ்ச பரிவத்தானமாமென்றவாறு. இதனுட்டுன்ப மென்ப தொன்பது. அவ்வொன்பதாவன: உயிரும் உயிரில்லாதனவும், புண்ணியமும் பாவமுமுற்றுச் செறிப்புங கட்டு முதிர்ப்பும் வீடுமெனவிவை.

(க - து.) அறியாமையாற் குற்றமும், நூலுணர்ச்சியால் நல்வினையும், அஃதின்மையாற் பிறப்பும், அப்பிறப்பால் துன்பமும், அதனுன் மேன்மேலும் பிறவிச்சுழற்சியும் விளையுமென்பது. எனவே அறிவுநூல்களைப் பழுதறவோதி அறிவைப் பெருக்கிக்கொள்ளல் வேண்டுமென்பது கருத்து.

தொண்டு, ஒன்பது ஒரு பத்தில் ஒன்று தோண்டித்தொளைக் கப்பட்டதென்பது பொருள். ஒன்பது துன்பங்களாவன உயிரும் உயிரில்லாதனவும் புண்ணியமும் பாவமும் முற்றுச் செறிப்பும் கட்டும் முதிர்ப்பும் வீடு மென்பனவாமென்ப. மண்டிலம் - பரிவர்த்தனை, வட்டமாய் ஓடுதல். (72)

மனைவாழ்க்கை மாதவ மேன்றிரண்டு மாண்ட
வினைவாழ்க்கை யாக விழைப—மனைவாழ்க்கை
பற்றுத லின்றி விடுதல்முற் சோல்லுமேல்
பற்றுதல் பாத்திற வம்.

(இ - ள்.) மனைவாழ்க்கை - இல்லற வாழ்க்கையும், மாதவம் - சிறந்த தவவொழுக்கமும், என்று இரண்டும் - என்று கூறப்படும் இரண்டையும், மாண்ட வினைவாழ்க்கையாக-சிறந்த நல்வினைக்குரிய வாழ்க்கைகளாகவே கொண்டு, விழைப - அறிஞர்கள் விரும்பு

வார்கள், மனைவாழ்க்கை - மனைவாழ்க்கை யென்பது, பற்றுதல்-இவ் வுலகப் பொருள்களிற் பற்றுடையனாய் வாழ்தலாம், பாத்தில் தவம்-நீக்குதல் கூடாத தவவொழுக்கமாவது, இன்றி விடுதல் - அப்பற்று உள்ளத்தி லில்லாதபடி விடுதலும், முன்சொல்லும்மேல் - முதலில் வைத்துக் கூறப்படும் வீடுபேறென்பதில், பற்றுதல் - பற்றுவைத் தொழுகலுமாம்.

(ப-பொ-ரை.) மனை வாழ்க்கையு மாதவமென்று சொல்லப் பட்ட விரண்டு மாட்சிமைப்பட்ட நல்வினை வாழ்க்கையாக விரும்பு வார்கள். அவற்றில் மனைவாழ்க்கையாவது பொருளின்மேற் பற் றுடையனா யொழுகுதலாம். இதன்கண் முற்சொல்லிய மாதவ மாவது பொருள்கண்மேற் பற்றுதலின்றி நீங்குதல். இனி யோக மாகிய பாத்திறவமாவ துலகி னுச்சிமேற் பற்றுதலாகிய வீட்டைத் தரும்.

(க - து.) பற்றுவைத் தொழுகும் மனைவாழ்க்கையும், பற் றின்றி யொழுகுந் தவவாழ்க்கையும் அறிஞர்க்கு நல்வாழ்க்கைகளே யாம்.

மேல், பண்பாகு பெயர். பாத்து - பகுத்தல். விடுதலும் பற்று தலுமென எண்ணும்மைகொள்க. மேல் என்பதை இடவாகு பெய ராக்கி யோகமாகிய பாத்தில் தவமாவது உலகின் உச்சிமேற் பற்றுத லாகிய வீட்டைத் தரும் எனலுமாம். (73)

இடைவனப்புந் தோள்வனப்பு மீடின் வனப்பும்
நடைவனப்பு நாணின் வனப்பும்—புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல வெண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு.

(இ - ள்.) இடைவனப்பும் - இடுப்பினழகும், தோள்வனப் பும் - தோள்களினழகும், ஈடின் வனப்பும் - செல்வத்தினழகும், நடைவனப்பும் - நடையினழகும், நாணின் வனப்பும் - நாணத்தி னழகும், புடைசால் - பக்கங்கள் தசைகொழுவிய, கழுத்தின் வனப் பும் - கழுத்தினழகும், வனப்பு அல்ல - உண்மை அழகாகா ; எண் ணொடு எழுத்தின் வனப்பே - மக்கட்கு இலக்கணத்தோடு கூடிய இலக்கியக் கல்வியழகே, வனப்பு - உண்மை யழகாகும்.

(ப-போ-ரை.) இடையினழகும், தோளினழகும், பெருமையினழகும், நடையினழகும், நாணுடைமையினுன் வருமழகும், புடையமைந்த கழுத்தினழகும் அழகல்ல, ஒருவர்க்கெண்ணுமெழுத்து மறிதலாகிய வழகே யழகு.

(க - து.) மக்கட்குக் கல்வியழகே உண்மையழகாம். ஓடு, எண்; ஈண்டு எடுத்துக்காட்டப்பட்ட வனப்புகள் ஆண்பெண் இருபாலார்க்கும் ஒத்திருத்தல் உணரற்பாலது. ஏகாரம், தேற்றப் பொருளது. (74)

அறுவர் தந்நூலு மறிந்துணர்வு பற்றி
மறுவரவு மாருன நீக்கி—மறுவரவின்
மாசா ரியஞ மறுதலைச்சோல் மாற்றுதலே
ஆசா ரியன தமைவு.

(இ - ள்.) அறுவர்தம் நூலும் - அறுசமயத்தாரின் அறுவகைச் சமய நூல்களையும், அறிந்து உணர்வுபற்றி-கற்று ஞான மடைந்து, மறுவரவு ஆன - குற்றமுடையனவான கருத்துக்களையும், மாறு ஆன - மாறுபட்டனவான கருத்துக்களையும், நீக்கி - கழித்து, மறுவரவு இல் - குற்றமில்லாத, மாசாரியஞ - சிறந்த ஒழுக்கத்தையுடையவனுய், மறுதலைச் சொல் - நன்மைக்கு மாருன மறுப்புச் சொற்களை, மாற்றுதலே - போக்குதலே, ஆசாரியனது அமைவு - குருவி னமைதியாகும்.

(ப-போ-ரை.) அறுசமயத்தார் நூலையு மறிந்ததனுலே கூரிய வுணர்வுடையனுயவற்றுட் குற்றமுடைய பொருள்களையு மறுதலைப் பட்ட பொருள்களையு நீக்கி மறித்துப் பிறத்தலில்லாத பெரிய சரிதையை யுடையனு யதன்மாட்டு மறுதலைச்சொல் வராமற் சொல்லுதலாசாரியனுக்கியல்பு.

(க - து.) சமய நூல்கள் பலவு முணர்ந்து, தவறு நீக்கி யொழுகும் ஒழுக்கமுடையனுய்த் தனக்கு மாருவார் கூறும் மறுப்புரைகளை மாற்றி நிறுத்த வல்ல ஆற்றலுடையவனே ஆசிரியனுவானென்க.

அறுவர், தொகைக் குறிப்பு; மறுவரவு, தொழிலாகு பெயர். 'மறுவரவு இல் மாசாரியஞ' என்பதற்கு மறித்துப் பிறத்தலில்லாத

பெரிய சரிதையை யுடையவனுய் என்பதுமொன்று. மாருன, வினையாலணையும் பெயர். சாரியன், முதற் குறைந்தது; ஆசார முடையவனென்பது பொருள். ஏகாரம், பிரிநிலை. அறுசமய மாவன :—உலகாயதம், புத்தம், சமணம், மீமாம்சை, பாஞ்சராத் திரம், பட்டாசாரியர். (75)

ஒல்லுவ நல்ல வுருவவேற் கண்ணினுய்
வல்லுவ நாடி வகையினுல்—சோல்லின்
கோடையினுற் போகஞ் சுவர்க்கந் தவத்தால்
அடையாத் தவத்தினுல் வீடு.

(இ - ள்.) ஒல்லுவ - ஒப்பனவும், நல்ல உருவ - அழகிய உருவினையுடையனவுமான, வேல் கண்ணினுய் - வேல்போன்ற கண்களையுடைய பெண்ணே, சொல்லின் - சொல்லுமிடத்து, வல்லுவ நாடி - கற்றற்குக் கூடுமாயினவான அறிவுநூல்களை யாராய்ந்து, வகையினுல் - ஏற்ற வகையினுற் செய்யப்படும், கொடையினுல் போகம் - ஈகையால் இம்மையின்பமும், தவத்தால் சுவர்க்கம்-பயன் கருதிய தவத்தினுல் விண்ணுலகமும், அடையாத தவத்தினுல் - பற்றடையாத தவவொழுக்கத்தினுல், வீடு - வீடுபேறுமாம்.

(ப-பொ-ரை.) தம்மோடொத்தவாய்த் திருத்தக்க வேல் போன்ற கண்ணையுடையாய்! வல்லநூல்களை யாராய்ந்து திறம்படச் சொல்லுவேனுயிற் கொடையாற் போகமும் தவத்தினுற் றுறக்கமும், வேறுபடா தறிவோடு கூடிய மிக்க தவத்தினுல் வீடும்பெறும்.

(க - து.) ஈகையால் இம்மையின்பமும், தவத்தால் விண்ணுலக நுகர்ச்சியும், மெய்யுணர்வால் வீடுபேறு முண்டாமென்பது.

ஒல்லுதல், இணங்குதல் ; எனவே ஒப்பாதலென் றுரைக்கப் பட்டது. 'ஒல்லுவ, வல்லுவ' வென்னு மிரண்டனுள், முன்னது தெரிநிலை வினையாலணையும் பெயரெனவும், பின்னது குறிப்பு வினையாலணையும் பெயரெனவும் உணர்க ; அற்றுயின் ஒல்லுவவென்பதன் வகரவொற்று எதிர்கால முணர்த்தும் இடைநிலை யெனவும், வல்லுவ வென்பதன் வகரவொற்று உடம்படு மெய்யெனவும் உரைக்க, தவமிரண்டனுள்ளும் முன்னது பயன் கருதிய தவமெனவும் பின்னது மெய்யுணருந் தவமெனவும் அறியற்பாலன. (76)

நாற்கதியுந் துன்ப நவைதீர்த்தல் வேண்டுவோன்
பாற்கதியின் பாற்பட வாராய்ந்து—நூற்கதியின்
எல்லை யுயர்ந்தார் தவமுயலின் மூன்றைந்தேழ்
வல்லைவீ டாகும் வகு.

(இ - ள்.) *நால்கதியும் - நால்வகைப் பிறப்புக்களிலும், துன்ப நவை - துன்பமென்னும் இழுக்கை, தீர்த்தல் வேண்டுவான் - ஒழித்தலை விரும்புகின்றவன், பால்கதியின் - அந்நால்வகைப் பிறப்புக்களின் நிலைமைகளால், பால்பட ஆராய்ந்து - வகைப்பட ஆராய்ந்து, நூல்கதியின் எல்லை உயர்ந்தார் - நூலாலுணர்த்தப்படும் வரம்பினின்றும் உயர்ந்தவர்களான சான்றோர்களின், தவம் முயலின் - மெய்த்தவத்தினை முயல்வனாயின், மூன்று - அதுதொட்டு அவனுக்கு மூன்றாம் பிறப்பிலேனும், ஐந்து - ஐந்தாம் பிறப்பிலேனும், எழ் - எழாம் பிறப்பிலேனும், வல்லை - உறுதியாக, வீடு ஆகும் - வீடுபேறுண்டாகுமென, வகு - பகுத்துணர்வாயாக.*

(ப-போ-ரை.) *தேவர் கதி, நரகர் கதி, விலங்கு கதி, மக்கள் கதியென்னு நான்கு கதியினுமுள்ள துன்பமே, யத்துன்பந்தீர்த்தல் வேண்டுவான் பகுதிப்பட்ட கதிகளின்கூறு பிறழாமலாராய்ந்து நூல்வழியா னெல்லை காண்கின்ற முனிவரது தவத்தை முயல்வனாயின் மூன்றாம் பிறப்பின்கணாதலேழாம் பிறப்பின்கணாதல் விரைந்து வீடாகுமென்று வகுத்துச் சொல்லுக.*

(க - து.) *பிறவித் துன்பத்தை ஒழித்தற்கு விரும்புகின்றவன் மெய்யுணர்ந்து தவம் புரிதல்வேண்டும்.*

*நூலளவா லுணரப்படுதன் மேலும் நுகர்ச்சியளவாற் றவம் புரியா நிற்பரென்றற்கு, ‘நூற்கதியின் எல்லை யுயர்ந்தார்’ எனப்பட்டது. எல்லை யுயர்ந்தார், ஐந்தன்றொகை.* (77)

தாயிழந்த பிள்ளை தலையிழந்த பெண்டாட்டி
வாயிழந்த வாழ்வினூர் வாணிகம்—போயிழந்தார்
கைத்தூண் பொருளிழந்தார் கண்ணிலவர்க் கீய்ந்தார்
வைத்து வழங்கி வாழ்வார்.

(இ - ள்.) *தாய் இழந்த பிள்ளை - தன்தாயை இழந்த மகவுக்கும், தலை இழந்த பெண்டாட்டி - தன்தலைவனை இழந்த மனைவிக்*

கும், வாய் இழந்த வாழ்வினர் - பேச்சிழந்த வாழ்க்கையை யுடையவர்களான ஊமைகளுக்கும், வாணிகம் போய் இழந்தார் - வாணிகம் புரிந்து முதற்பொருளை யிழந்தவர்களுக்கும், கைத்து ஊண் பொருள் - உணவுக்கு ஆதரவான செல்வப் பொருளை, இழந்தார் - இழந்தவர்களுக்கும், கண் இல்லவர்க்கு - கண்ணில்லாத குருடர்களுக்கும், ஈய்ந்தார்-வேண்டுவன கொடுத்தவர்கள், வைத்து வழங்கி வாழ்வார் - பொருள்களை மிச்சமாய் வவத்துப் பிறர்க்குக் கொடுத்துத் தாமுந் துய்த்து இனிது வாழ்வார்.

(ப-பொ-ரை.) தாயை யிழந்த குழவியும், தலைவனை யிழந்த பெண்டாட்டியும், வாயில்லாத மூங்கைகளும், வாணிகம் போய்ப் பொருளிழத்தாரும் உண்ணுதற் காதாரமாய பொருளையிழந்தாரும் கண்ணில்லாதாருமென்னு மிவர்கட்குப் பொருள் கொடுத்தார் மேலைக்கு வைத்து வழங்கி வாழ்வார்.

(க - து.) தாயில்லாத பிள்ளை முதலானவர்களுக்கு வேண்டுவன கொடுத்துதவல் வேண்டும்.

நான்கனுருபைப் பிறவற்றிற்குங் கூட்டுக. எண்ணும்மை விரித்துரைக்க. வாணிகம்போய் என்பது, வாணிகத்தின் மேற் சென்றென்றற்கு. ஆவது அத்தொழில் புரிந்தென்பதாம். (78)

சாக்காடு கேடு பகைதுன்ப மின்பமே
நாக்காடு நாட்டறை போக்குமென—நாக்காட்ட
நட்டார்க் கியையிற் றமக்கியைந்த கூறுடம்
பட்டார்வாய்ப் பட்டது பண்பு.

(இ - ள்.) சாக்காடு - சாவும், கேடும் - இடையூறும், பகை - பகைமையும், துன்பம் - வருத்தமும், இன்பமே - மகிழ்ச்சியும், நாக்கு ஆடுநாடு அறை - நாவினுற் சொல்லப்படுகின்ற நட்டாரது பழிச்சொல்லில், போக்கும் என-பொருந்துதலான பழியுமென, நாக்காட்ட - நாவினுற் பேசப்படுவனவான இவைகள், நட்டார்க்கு இயையின் - நண்பர்களுக்குப் பொருந்தினுல், தமக்கு இயைந்த கூறு- அவற்றுள் தமக்குரிய பங்கை, உடம்பட்டார் வாய் பட்டது - ஏற்க உள்ள மொத்தவர்கள்பால் காணப்படும் இயல்பே, பண்பு - நல்லியல்பாம்.

(ப-பொ-ரை.) சாக்காடுங் கேடும் பகையும் துன்பமுமின்ப முஞ் சொல்லப்படுகின்ற நாட்டறைபோக்குமென்று சொல்லப் பட்ட வினை நட்டோர்க்கு வருமாயின் மற்றொன்று நாவாடாது தமக்கிபைந்த கூறுவுடம்பட்டார் கண்ணேயுள்ள குணம்.

(க - து.) பிறர்க்கு வருஞ் சாக்காடு முதலியவற்றைத் தமக்கு வந்தாற்போற் காணுமியல்பே, நல்லியல்பெனப்படு மென்க.

நாக்குக்கு, ஆடுதலென்பதே பேசுதலென்க; நாடு நாட்டாரைக் குறித்தலின், ஆகுபெயர்; அறை தொழிலாகு பெயராய்ச் சொல்லை யுணர்த்திற்று. நாட்டறைபோக்கு மெனப்பட்டது. ஈண்டுப் பழியையென் றுணர்ந்து கொள்க. நாக்காட்ட, வினையாலணையும் பெயர். (79)

புலையாளர் புண்பட்டார் கண்கெட்டார் போக்கில்
நிலையாளர் நீர்மை யிழந்தார்—தலையாளர்க்
கூண்கொடுத் தூற்று யுதவினர் மன்னராய்க்
காண்கொடுத்து வாழ்வார் கலந்து.

(இ - ள்.) புலையாளர் - தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்களுக் கும், புண்பட்டார் - உடம்பிற் புண்பட்டவர்களுக்கும், கண்கெட் டார் - குருடர்களுக்கும், போக்கில் நிலையாளர் - அயல்நாடுகளுக் குச் செல்வதிலேயே நிலையா யிருப்பவர்களுக்கும், நீர்மை இழந்தார் - தங்கள் மேல் நிலைமையை யிழந்தவர்களுக்கும், தலையாளர் - சிறந்த நிலையினை யுடையவர்களுக்கும், ஊற்று ஆய் - ஆதரவாய், ஊண் கொடுத்து உதவினர் - உணவு கொடுத்து உதவி செய்தவர்கள், மன் னர் ஆய் - அரசர்களாய், கொடுத்து - வறியார்க்கு வழங்கி, கலந்து வாழ்வார் - உறவினருடன் கூடி மகிழ்ச்சியாய் வாழ்வார்கள்.

(ப-பொ-ரை.) தாழ்வையுடையவர்களுக்கும், உடலிற் புண்பட் டவர்களுக்கும், நாடு சுற்றி வருவதில் நிலைகொண்டிருப்பவர்களுக் கும், மேன்மைத்தன்மை யிழந்தவர்களுக்கும், ஆதரவாய் உணவைக் கொடுத்துதவி செய்தவர்கள்; அரசர்களாய் அடுத்து எற்போர்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து நண்பர் முதலியவருடன்கூடி இன் புற்று வாழ்வார்.

(க - து.) புலையாளர் முதலியவர்களுக்கு உணவு கொடுத்து உதவிசெய்தவர்கள், மறுமையில் மன்னராய் வாழ்வார்.

தலையாளர்க்கு என்பதிலுள்ள நான்கனுருபைப் புலையாளர் முதலிய ஐந்தனொடுங் கூட்டுக. 'ஊற்று'யென்றார், தமக்கு இடுக்கு வந்த காலத்தும் பிறர்க்கு உதவல் வேண்டுமென்றற்கு. மேன்மேலுதவுவதற்கென்றும் உரைத்துக்கொள்க. ஊற்றுயுதவி என்றியைந்து ஊற்றுநீர் போலுதவி செய்து எனலுமாம். காண் முன்னிலையசை. (80)

முற்றும்.

---

## செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அவாவறுக்க | 12 | குடியோம்பல் | 18 |
| அழப்போகா | 35 | குணநோக்கான் | 23 |
| அறுநால்வராய் | 2 | குறுகான் சிறியாரைக் | 40 |
| அறுவர்தந்நூலு | 69 | கூத்தும் விழவு | 58 |
| அஃகுநீ | 26 | கூரம்பு | 63 |
| ஆர்வமே செற்றங் | 57 | கோலைக்களம் | 13 |
| இடர்தீர்த்த | 6 | கொலை புரியான் | 4 |
| இடைவனப்புங் | 63 | கொல்லானுடன் | 41 |
| இல்லற நூலேற்ற | 1 | கொல்லான் | 20 |
| இல்விழந்தார் | 49 | சாக்காடுகேடு | 72 |
| இழுக்கானியநெறி | 43 | சாதல்பொருள் | 63 |
| இளமை கழியும் | 21 | சாவதெளிதரிது | 38 |
| இன்சொலளாவ | 9 | சீதையுரையான் | 33 |
| ஈன்றுநீன் | 52 | சூதுவவான் | 41 |
| உடன்படான் | 10 | செங்கோலான் | 11 |
| உணராமையாற்குற்ற | 66 | சென்ற புகழ் | 3 |
| உண்ணீர் வளங்குளங் | 48 | தவமெளிது | 5 |
| உயர்ந்தான் | 60 | தனையாளர் | 53 |
| உரையான் | 31 | தனக்கென்று | 7 |
| உலையாமை | 39 | தாயிழந்த பிள்ளை | 71 |
| ஊணுண்டுகூறை | 59 | துறந்தார்கட் | 17 |
| எடுத்தன்முடக்க | 64 | துறந்தார் துறவாதார் | 34 |
| எழுத்தினு | 37 | நடப்பார்க் கூணல்ல | 6 |
| எள்ளேபருத்தியே | 47 | நாற்கதியுந்துன்ப | 71 |
| ஐயமே பிச்சை | 65 | நிலையளவி | 28 |
| ஒல்லுவ நல்ல | 70 | நிறையுடைமை | 8 |
| கடம்பட்டார் | 50 | பாடகஞ்சாராமை | 25 |
| கண்போல்வார் | 16 | பார்ப்பார் பசித்தார் | 51 |
| கருஞ்சிரங்கு | 54 | பிணி பிறப்பு | 24 |
| களியான்கள் | 44 | புலையாளர் புண்பட்டார் | 73 |
| கற்றுரைக் கற்ற | 10 | பெரியார் சொற் | 45 |
| காமாடார் | 55 | பெருமை புகழறம் | 56 |
| காலனுரீடறுத்தல் | 61 | பொய்தீர் புலவீர் | 62 |
| காவில்லார் | 35 | பொய்யான் | 15 |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| பொய்யான் பொய் | 42 | மின்னேரிடை | 20 |
| பொய்யுரையான் | 32 | மையேர் | 27 |
| போகம் பொருள் | 19 | யானை குதிரைபொன் | 46 |
| மத்தமயிலன்ன | 30 | வணங்கி வழியொழுகி | 55 |
| மனைவாழ்க்கை | 67 | வாளஞ்சான் | 22 |
| மாண்டமைந்தா | 26 | விளையாமை | 14 |
| மாண்டவர் | 29 | வேற்றரவஞ்சேரான் | 45 |


---

## அருஞ்சொல் விளக்க அகரவரிசை

[எண் - பாட்டு எண்]


அசனம் - உணவு 50
அடு - போர்செய் 18
அம்பலம் - மண்டபம் 51
அயல - வேண்டப்படுபவை 14
அலைக்களம் - வருத்தந் தரும் சிறைச்சாலை 12
அவம் - குற்றம் 3
அழிகதி - நரகம் 67
அறியலம் - தெரியேம் 10
அறை - பழிச்சொல் 78
அற்றார் - வறிஞர் 9
அஃகு - குறை 27
ஆடாமை - பயனிற் சொற் பேசாமை 13
ஆம் - நீர் 53
ஆயு - ஆயுள், வாழ்நாள் 32
ஆர்வம் - அவா 61
ஆற்றல் - வலிமை 25
ஆற்று - தொண்டு செய் தற். சிற. பாயிரம்
இடம்பட - கருத்துகள் தெளிவுற 8
இயை - நட்புக்கொள் 47
இயைவு - பிறவித்தொடர்பு 3
இழிகதி - நரகம் 67
இறந்தார் - கல்வி முதலிய வற்றாற் சிறந்தார் 16
இறை - தலைமை. தற். சி. பாயிரம்
இறை - பெருந்தன்மை 19
ஈடு - ஒப்பு, வலிமை 65
,, - செல்வம் 74
ஈரும் - வருத்தும் 67
ஈர்மணி - குளிர்ந்த மணி 67
ஈனம் - குறை 70
,, - குற்றம் 34
ஈன்கால் - பிள்ளை பெறும் பொழுது 55
உடன்றார் - பிணியில் வருந்துவோர் 8
உட்குடை - நாணம் 13
உண்கண் - மையணிந்த கண் 14
உலோபம் - ஈயாத்தன்மை 61
உளை - வருந்து 56
உள்ளன - உடைமை, பொருள் 33
உறையுள்-இருக்கை, இடம் 9
ஊனம் - குற்றம் 32
எஞ்சினர் - மீந்துளோர் 31
எய் - வறுமை 33

எல் - வெயில் 52
எள்ளாமை - இகழாமை 4
ஏய்க்கும் - ஒக்கும் 7
ஐங்களிறு - ஐம்பொறிக
ளெனும் யானைகள் 11
ஐந்து - ஐம்பொறிகள் 11
ஒல்லுவ - ஒப்ப, போன்ற 76
ஓத்து - மறைநூலறிவு 62
ஓராமல் - எண்ணுமல் 9
ஓரான் - விரும்பான் 20
ஓர்வம் - ஒருபாற் சார்தல் 61
கணம் - சுற்றம் 23
கண்மை - கண்ணேட்டம் 22
கதம் - சினம் 18
கரியார் - வஞ்சகர் 47
கருஞ்சிரங்கு - கருங்கிரந்தி 57
கலவி - உலகத்தோடு
கலத்தல், உலகப்பற்று 4
களி - செருக்கு 5
காம் - 'காமம்' என்பதின்
சுருக்கம் 58
காயாமை - சினவாமை 15
கார்ப்பார்-வெறுக்கப்பட்டார் 54
காலன் - இயமன் 37
கிளவி - சொல் 15
குறள் - புறங்கூறல் 28
கூடம் - கரவு, வஞ்சனை 17
கூர்த்த - மிக்க 2
கூர்ந்து - பெருகி 46
கூவல் - கிணறு 51
கூழ் - செல்வம் 23
கூறு - பங்கு 78
கூற்றம் - சொல் 1
கைத்து - செல்வம் 53
கோன்னே - வீணை 20, 37
கோலம் - அழகு 23
சாயல் - நற்சொற்கள் 23
சால - மிகுதியும் 38
சாலும் - படியும் 74
சீதை - கீழ்மை 34
சீத்து - சீர்திருத்தி 44
சூலாவு - கடுஞ்சொற்கள் 43
செயிர் - குற்றம் 45
செற்றம் - பகைமை 34, 61
சோர்வு - குற்றம். தற். சி.
பாயிரம்
தண்டம் - போர் 18
தலை - தலைவன், கணவன் 78
தளை - விலங்கு, காற்பூட்டு 56
தாழா - சோர்வுறு 24
துப்பு - செல்வம் 35
துன்னி - பொருந்தி 16
தூப்பு - தூய்மை, சுத்தம் 54
தோக்கு - தொகுத்து.
தற். சிற. பாயிரம்
தொழுநோய் - குட்ட நோய் 57
நச்சாமை - விரும்பாமை 12
நவை - குற்றம் 77
நாவலந்தீவு - இந்தியநாடு 56
நாவில்லார் - ஊமையர் 63
படர் - பசிப்பிணி 4
பண் - யாழிசை 15
பண்டாரம் - கருவூலம்,
பொருள் வைக்குமிடம் 4
பரி - விரும்பு 47
பறி - வெறுத்திடு 47
பாடு - பெரும்புகழ் 4
பாடு - துன்பச்செயல் 21
பாடு - பயன்படுதல் 41
பார்த்து - உரிமை 25
பாத்து - பிரிவு 73
புரக்கும் - வளர்க்கும் 30
புலை - இழிவு 38
புல்லான் - இணங்கான் 42
புழை - புலம், தங்குமிடம் 11
பூண்டு - காத்து 30
பெருஞ்சிரங்கு - கழலை 57
பேண் - விருப்பம் 63
பொறை - சுமை 71
மகரம் - முதலை
வடிவுடைய காதணி 43
மடம் - அறியாமை 8

மடி - சோம்பல் 17
மண் - நாடு 46
மண்டிலம் - பிறவிச் சுழல் 72
மதி - அறிவு 26
மத்தம் - களிப்பு 31
மறலே - சிற்றறிவினன் 23
மறுதலே - தீமை (இவண் தீமை செய்வார்) 16
மறுதலே - எதிரான 29
மறுதலேயார் - வெளியூரார் 71
மறுவரவு - குற்றம் 75
மறை - மறுத்தல் 6
மாண்டவர் - சான்ருேர் 30
மாண்டு - புகழ்பெற்று 26
மாற்ருர் - பகைவர் 58
மாற்று அரவம் - பகைவர் சொல் 48
மான்வேட்டம் - விலங்குகளே வேட்டையாடல் 18
மான்ருர் - பித்தர் 55
மூச்சாரிகை - தேர், யானே, குதிரை 12
முடி - அரசு 17
முருந்து - மயிலிறகின் அடி 7
முள் - கூர்மை 7
முனே - போர்க்களம் 62
மூங்கை - ஊமை 19
மேன்பு - மென்மைமிகு புலமைத்திறன் 68
மை - குற்றம் 66
யாக்கு - நண்பராக்கு 8
யாக்கும் - பழக்குவிக்கும் 12
வகுத்து - புகழ்பெற்று 49
வயிற்றுத்தீ - வயிற்றெரிச்சல், யானேத்தீ என்னும் கடும் பசியுமென்பர் 57
வலி - வன்மை 21
வல்லே - உறுதியாக 77
வழிப்புரை - வழிப்போக்கர் தங்குமிடம் 51
வழிவந்தார் - உயர்குடிப் பிறந்தார் 1
வளமை - செல்வம் 21
வளி - வாதநோய் 55
வள் - பணம் 50
வன்கண்மை - ஆண்மை 17
வார்குத்து - வெள்ளநீர் தங்கிச் சுழியெழும் நீர்நிலே 12
வால் - தூய்மையான 44
வானகத்தார் - வானுல கத்திலுள்ளார், இவண் தென்புலத்தார் 71
விண்டவர் - உலகப் பற்றுக் களே நீக்கியவர், சான்ருேர் 4
விழைவு - கலவி
வீந்து - அழிந்து 10
வீழப்படுவர் - விரும்பப் படுவர் 36
வெகுடல் - சினத்தல் 27
வெங்கோலான் - கொடுங்கோ லரசன் 10
வெஃகல் - பிறர்பொருள் கவர்தல் 27
வேறல் - வெல்லல் 39
வேற்று அரவம் - தீச்சொல் 49
வைசிரவண்ணன் - குபேரன் 48

ஏலாதி

அருஞ்சொல் விளக்க அகரவரிசை

முற்றும்.

கழக வெளியீடு, ௨௨௯

பெருவாயின் முள்ளியார்

இயற்றிய

# ஆசாரக் கோவை

★

வித்துவான்

திரு பு சி புன்னைவனநாத முதலியாரவர்கள்

எழுதிய

**விருத்தியுரையுடன்**

★

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. சென்னை-1.
1960

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

புத்தனேரி சிதம்பரநாத முதலியார்
புன்னைவனநாத முதலியார் (1889)

Ed 1 Sep 1939

Reprints
April 1949, Nov 1954, April 1960

O31,1C62
KO

AASARAK - KOVAI

Appar Achakam, Madras-1.—Copies 1600.

# பதிப்புரை

"ஆசாரக்கோவை" என்னும் இந்நூல் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இவை என்பது யாங்கள் வெளியிட்டிருக்கும் **சிறுபஞ்சமூல** முகவுரையான் அறியலாம். இந்நூல் கடைச்சங்க மருவிய நூல்களுள் ஒன்றாகலான், இதனாசிரியர் **பெருவாயின் முள்ளியா**ருடைய காலம் அச்சங்க காலத்திற்குப் பிற்பட்டதன்றென்பது நன்கு போதரும். தற்சிறப்புப்பாயிரச் செய்யுள் நீங்கலாக, இதன்கண் நூறு வெண்பாக்கள் உள்ளன. இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா, குறள் வெண்பா, பஃறொடை வெண்பா முதலிய வெண்பா வகையெல்லாம் இந்நூலின்கண் உண்டு. இந்நூலாசிரியர் **சைவசமயத்தைச்** சார்ந்தவர் என்பதும், இவர் ஊர்ப்பெயர் **வண்கயத்தூர்** என்பதும் தற்சிறப்புப் பாயிரச் செய்யுளான் விளங்குகின்றன.

இந்நூற் பாக்களிற் சில **பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி** முதலிய இலக்கியங்களிலும், **நன்னூல், இலக்கண விளக்கம்** முதலான இலக்கண நூல்களின் உரைகளிலும் மேற்கோளாக எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

இந்நூலுக்கு மூலநூல் ஆரிடம் என்னும் வடநூலெனத் தற்சிறப்புப் பாயிரத்தால் அறியக்கிடக்கின்றது. இதன்கண் கூறிய ஆசாரங்கள் பெரும்பான்மையும் சுக்ர ஸ்மிருதியிலுள்ளவென்று வடநூற் புலவர் கூறுவர். ஆசாரங்களை எடுத்து நுவல்வது குறித்தே இந்நூலுக்கு "ஆசாரக்கோவை" எனப் பெயர் இடப்பெற்றது.

இந்நூலில் உண்ணல், உடுத்தல், உறங்கல், நீராடல் முதலியன பத்தழகுடனே கூறப்பட்டிருக்கின்றன. இன்னின்ன செய்யற்பாலன வென்றும், அவற்றால் இன்னின்ன நலமுண்டாமென்றும், இன்னின்ன செய்யற்பாலன வல்லவென்றும், செய்யின்

இன்னின்ன கேடுகளுண்டாமென்றும் இதன்கண் தெள்ளத் தெளிய விளக்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலின்கண் பல பாக்களில் 'முந்தையோர் கண்ட முறை', 'யாவரும் கண்ட நெறி', 'பேரறிவாளர் துணிவு', 'நல்லறிவாளர் துணிவு' என்பன போன்ற தொடர்கள் காணப்படுவது கொண்டு இதன்கண் கூறப்பட்ட ஆசாரங்கள் பேரறிஞர் பலர் தம் அனுபவத்தால் ஆராய்ந்து கண்டவையேயாம் என்பது பெறப்படுகிறது.

இந்நூலுக்குப் பாளையங்கோட்டை அர்ச் சவேரியர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர், வித்துவான் திருவாளர் பு. சி. **புன்னைவனநாத முதலியாரவர்கள்** எழுதிய **விருத்தியுரையுடன்,** **பழைய பொழிப்புரையுஞ்** சேர்த்து இதனை வெளியிடுகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# ஆசாரக் கோவை

## மூலமும் விருத்தியுரையும்

### நல்லொழுக்கங்கட்குக் காரணம்

நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல்லோ
டின்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற வறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து.

(**இதன் பொருள்.**) நன்றி அறிதல் - தனக்குப் பிறர்செய்த நன்றியை மறவாமையும், பொறையுடைமை - பொறுமையும், இன்சொல் ஓடு - இன்சொல்லும், எ உயிர்க்கும் - எல்லா உயிர்க்கும், இன்னாத - துன்பந்தருபவற்றை, செய்யாமை - செய்யாதிருத்தலும், கல்வி ஓடு - கல்வியும், ஒப்புரவு - ஒப்புரவை, ஆற்ற - மிக, அறிதல் - அறிதலும், அறிவுடைமை - அறிவு உடைமையும், நல்இனத்தார் ஓடு - நல்ல இயல்புள்ளவர்களுடன், நட்டல் - நட்புச் செய்தலும், இவை எட்டும் - என்ற இவ்வெட்டுவகையும், சொல்லிய - அறிஞர்களாற் சொல்லப்பட்ட, ஆசார வித்து - ஒழுக்கங்கட்குக் காரணம்.

(**பழைய பொழிப்புரை.**) தனக்குப் பிறர்செய்த நன்றியறிதலும், பொறையும், இன்சொல்லும், எல்லா உயிர்க்கும் இன்னாதன செய்யாமையும், கல்வியும், ஒப்புரவை மிக வறிதலும், அறிவுடைமையும், நல்லினத்தாரோடு நட்டலும் என இவ்வெட்டுவகையும் நல்லாராற் சொல்லப்பட்ட ஆசாரங்கட்குக் காரணம்.

(**கருத்துரை.**) நன்றியறிதல் பொறையுடைமை முதலிய எட்டும் நல்லொழுக்கங்கட்குக் காரணம்.

நன்றி - நன்மை : பண்புப்பெயர். இன்சொல் - இனிமை + சொல். எ + உயிர்—"எகரவினா முச்சுட்டின் முன்னர் உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்" என்ற (நன்னூல் - உயிர் : சூ. கசுரு)

விதிப்படி எவ்வுயிர் என்றுயிற்று. ஒப்புரவு - பெரியோரால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஞானம்; ஒப்பு + உரவு : அஃதாவது உலக நடை. நட்டல் : நள் என்னும் பகுதியடியாகப் பிறந்த தொழிற்பெயர்.

இச் செய்யுள் "பாதம் பலவரிற் பஃறொடை வெண்பா" என்பதற் கிணங்க நான்கடியின் மிக்குவந்தது. (க)

ஒழுக்கம் பிழையாதவரடையும் உறுதி

பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை
இலக்கணத்தா லிவ்வெட்டு மெய்துப என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்.

(இ-ள்) என்றும் - எப்பொழுதும், ஒழுக்கம் பிழையாதவர் - ஒழுக்கத்தில் தவருதவர், பிறப்பு - நற்குடிப்பிறப்பு, நெடு வாழ்க்கை - நீண்ட வாழ்நாள், செல்வம் - பொருட் செல்வம், வனப்பு - அழகுடைமை, நிலக்கிழமை - நிலத்துக்கு உரிமை, மீக் கூற்றம் - சொல்லின் மேன்மை, கல்வி - படிப்பு, நோய் இன்மை - பிணியில்லாமை, இ எட்டும் - இந்த எட்டு வகையினையும், இலக் கணத்தால் - அவற்றிற்குரிய இலக்கணங்களுடன், எய்துப - அடைவர்.

(ப. பொ - ரை.) நற்குடிப்பிறப்பு; நெடிய வாணுள், செல் வம், அழகுடைமை, நிலத்துக்குரிமை, சொற்செலவு, கல்வி, நோயின்மை என்று சொல்லப்பட்ட இவ்வெட்டினையும் இலக் கணத்தோடு நிரம்பப்பெறுவர் என்றும் ஆசாரம் தப்பாமல் ஒழுகுவார்.

(க - ரை.) ஒழுக்கந் தவருதவர்கள் மேற்கூறிய எட்டு வகையையும் எய்துவர்.

ஆசாரம் - நன்றியறிதல் பொறையுடைமை முதலிய எட்டு. நற்குடிப் பிறப்பு - நல்ல குடியிற் பிறத்தல். ஆசாரமுடையவரே மேலாவர். வருணத்தா லுயர்வுதாழ்வின்று, ஒழுக்கத்தால் உயர் விழிவு என்க. மேலும் ஒழுக்க முடையவர் நோயடையாதவராய்ச் செல்வங் குன்றுதவராய்ச் சிறப்பர். பிறப்பு, வாழ்க்கை : தொழிற் பெயர்கள் செல்வம் : தொழிலாகுபெயர். வனப்பு : பண்புப் பெயர். மீக்கூற்றம் - மேலான சொல். கூற்றம் : கூறு என்னும் பகுதியடியாகப் பிறந்த தொழிற்பெயர். மீ - மேல். பிறப்பு முதல் நோயின்மைவரை பெயர்ச்செவ்வெண். இச்செய்யுள் தனிச் சொலின்றிப் பலவிகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

### தக்கணை முதலிய தவருது நடத்தல்

தக்கணை வேள்வி தவங்கல்வி யிந்நான்கும்
முப்பா லொழுக்கினுற் காத்துய்க்க—உய்க்காக்கால்
எப்பால மாகா கெடும்.

(இ - ள்.) தக்கணை - ஆசிரியர்க்குத் தட்சணை கொடுத்தலும், வேள்வி - யாகம் பண்ணுதலும், தவம் - தவஞ்செய்தலும், கல்வி - கல்வியும், இந்நான்கும் - என இந்நான்கினையும், முப்பால் ஒழுக்கினுல் - மூன்றுவகைப்பட்ட நெறியாலே, காத்து உய்க்க - பாதுகாத்து நடத்துக, உய்க்காக்கால் - நடாத்தாக்கால், எப்பாலும் - எவ்வுலகத்தின்கண்ணும், ஆகா கெடும் - பயனுகாவாய்க் கெடும்.

(ப. பொ - ரை.) குரவர்க்குத் தக்கணை கொடுத்தலும், யாகம் பண்ணுதலும், தவஞ்செய்தலும், கல்வியும் என்ற இந்நான்கினையும் மூன்றுவகைப்பட்ட விதியாலே பாதுகாத்து நடாத்துக. நடாத்தாக்கால் எவ்வுலகத்தின் கண்ணும் தனக்குப் பயனுகாவாய் இந்நான்கும் கெடும்.

(க - ரை.) தக்கணை முதலிய பொருள்களைக் காலதாமதமின்றிச் செய்து முடிக்கவேண்டும்.

முப்பால் - மூன்றுபால்; மூன்று - அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்று. பால்: பகுதி. வேள்வி : வி விகுதிபெற்ற தொழிற்பெயர். உய்க்க: விகுதிபெற்ற வியங்கோள்: உய்க்காக்கால்: எதிர்மறை வினையெச்சம். இஃது **இன்னிசைச் சிந்தியல் வெண்பா**, மூன்றடியால் வந்தமையின்.

"வேண்டிய வீரடி யார்குற ளாமிக்க மூவடியாற்
றூண்டிய சிந்தியல் நான்கடி நேரிசை தொக்கதனில்
நீண்டியல் பாதத்துப் பஃறொடையாம்." (ரு)

என்பது விதி.

### வைகறையிற் செய்யவேண்டியவை

வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதில்
தந்தையுந் தாயுந் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை.

(இ - ள்.) வைகறை - விடியற்காலமாகிய, யாமம் - பின் சாமத்திலே, துயில் எழுந்து - தூக்கத்தினின்று விழித்தெழுந்து, தான் செய்யும் - தான் மறுநாள் செய்யவேண்டிய, நல் அறமும் - நல்ல அறச்செயல்களையும், ஒள் பொருளும் - ஒள்ளிய பொருளுக்கு வருவாயான செயல்களையும், சிந்தித்து - ஆராய்ந்து பார்த்து, வாய்வதில் - வாய்ப்புடைத்தாவதோடு, தந்தையும் - தகப்பனையும், தாயும் - தாயையும், தொழுது எழுக - தொழுது எழுந்து ஒரு செயலைச் செய்க, என்பதே - என்று சொல்லப்படுவதே, முந்தையோர் - அறிவுடைய பழமையோர், கண்ட - செய்து வைத்திருக்கிற, முறை - முறையாம்.

(ப. போ - ரை.) வைகறையாகிய பின்யாமத்திலே துயிலெழுந்து தான் பிற்றைஞான்று செய்யும் நல்லறத்தையும் ஒள்ளிய பொருட்கு வருவாயாகிய காரியத்தையும் ஆராய்ந்து சிந்தித்து, பின்னைக் கங்குல் புலர்ந்தால் பழுதின்றித் தந்தையையும் தாயையும் தொழுதெழுந்து ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குக என்று சொல்லப்படும் ஒழுக்கம், அறிவுடைய பழையார் சொல்லிய முறைமை.

(க - ரை.) மறுநாட் செய்யப்புகுங் காரியத்தை வைகறையிலெழுந்து சிந்தித்துப் பின் பெற்றோரை வணங்கி அச் செயலைத் தொடங்குக.

வைகறை - வைகுறு. மாலையாமமும் இடையாமமுங் கழிந்து அக்கங்குல் வைகுறுதல். அது கங்குல்வைகிய அறுதியாதல் நோக்கி வைகறையுமாம். விடியுமுன் பத்துநாழிகையளவு காலம் இது. பண்டையோர் ஒரு நாளை மாலை, யாமம், வைகறு, எற்பாடு, விடியல், நண்பகல் என அறுபொழுதாகப் பகுத்துள்ளார். யாமம் - ஏழரை நாழிகை; அஃதாவது மூன்று மணிக்காலம். இதனையே "வைகறை யாமம்" என்றார்.

முந்தை - முந்து : பகுதி, ஐ : சாரியை. ஒண் பொருள் - அறத்தாற் செய்யப்படும் பொருள். வாய்வது - உண்மை. வாய்வதில் - உண்மையில், பழுதின்றி. பொழிப்புரைக்கிணங்க வாய்வதில் என்பதற்குப் பின்னைக் கங்குல் புலர்ந்தால் என்ற பொருளும் உரைக்கப்படும். இதுவும் பல விகற்ப இன்னிசை வெண்பா. இவ் வெண்பாவின் அடிகள் **மதுரைக்காஞ்சி** புரையிலும், **பிரயோக விவேக** உரையிலும் எடுத்தாளப்பட்டுள்ளன. 'சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே' என்றபடி தந்தையே ஒருவன் ஏற்றத்துக்குக் காரணமாதல் கருதி 'தந்தை தாய்ப் பேண்' என்ற முறைக்கு இயையவே 'தந்தையுந் தாயும்' என்றார். (௪)

### எச்சிலுடன் தீண்டலாகாதவை

எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்பார் தீத்தேவர்
உச்சந் தலையோ டிவையென்ப யாவருந்
திட்பத்தால் தீண்டாப் பொருள்.

(இ - ள்.) பசு பார்ப்பார் தீ தேவர் உச்சந்தலையோடு இவை-பசு பார்ப்பார் நெருப்பு தேவர் உச்சந்தலை ஆகிய இவற்றை, எச்சிலார் - எச்சிலையுடையராய், யாவரும் தீண்டார் என்ப - யாவரும் தீண்டார் என்று சொல்வர்; திட்பத்தால் - யாப்புற, தீண்டாப்பொருள் - எல்லாரும் எச்சிலோடு தீண்டப்படாத பொருளும் இவை.

(ப. பொ - ரை.) பசு பார்ப்பார் தீ தேவர் உச்சந்தலையோடே கூட இவையிற்றை எச்சிலையுடையராய் யாவரும் தீண்டார் என்று சொல்லுவர்; எல்லாரும் யாப்புற எச்சிலோடு தீண்டப்படாத பொருளும் இவை.

(க - ரை.) பசு முதலிய ஐந்து பொருள்களை எவரும் எச்சிலுடன் தீண்டலாகாது.

திணைவிரவி எண்ணுப்பன்மைபற்றி அஃறிணை முடிபேற்றது. யாப்பு-உறுதி. "அழலை யந்தணரைப் பசுவினை மிச்சில் அடைந்துளோர் தீண்டிடலாகா" காசிகண்டம். "தெய்வம்" என்றும், "உச்சந்தலையோ டியாவதும்" என்றும் பாடம் தீண்டார் என்பதில் ஆகார எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது. (கூ)

### எச்சிலுடனே காணலாகாதவை

எச்சிலார் நோக்கார் புலைதிங்க ணாயிறுநாய்
தக்கவீழ் மீனோடே யிவ்வைந்துந் தெற்றெென
நன்கறிவார் நாளும் விரைந்து.

(இ - ள்.) புலை - புலையும், திங்கள் - மதியும் (சந்திரனும்), நாயிறு - சூரியனும், நாய் - நாயும், தக்க - அழகிய, வீழ்மீனோடு - வீழ்மீனுடன், இவ் ஐந்தும் - சொல்லப்பட்ட இவ்வைந்தினையும், நன்கறிவார் - நன்மையானவற்றை அறிந்துள்ளவர், எச்சிலார் - எச்சிலையுடையவராய், நாளும் - எந்நாளும், விரைந்து - விரைவாய், தெற்றென - தெளிய, நோக்கார் - கண்ணால் நோக்கமாட்டார்.

(ப. பொ - ரை.) புலையும் திங்களும் நாயிறும் நாயும் அழகிய வீழ்மீனோடு சொல்லப்பட்ட ஐந்தினையும் எச்சில

யுடையார் விரைந்து தெளிய நாளும் கண்ணால் நோக்கார் நன் கறிவார்.

(க - ரை.) நன்கறிவார் புலை முதலிய ஐந்தையும் கண்ணாற் காணார்.

புலை - புலையவன். நாயிறு - சூரியன். வீழ்மீன் - எரிநாள் விண்ணினின்றும் வீழும் மீன். மின்னுவது மீன். (சு)

## நால்வகை எச்சில்

எச்சில் பலவு முளமற் றவற்றுள்
இயக்க மிரண்டு மிணைவிழைச்சு வாயில்
விழைச்சிவை எச்சிலிந் நான்கு.

(இ - ள்.) எச்சில் பலவும் உள - எச்சில்கள் பலவகை யுள, அவற்றுள் - அவைகளுள், இயக்கம் இரண்டும் - மல மூத்திரங் கள் இயங்கிய இயக்கம் இரண்டொடுகூட, இணைவிழைச்சு - இணை விழைச்சும், வாயில் விழைச்சு - வாயினால் வழங்கிய விழைச் சும், இவை எச்சில் - என இவை எச்சிலாவன; இ நான்கு - இவ் வெச்சில் நான்கையும் பாதுகாக்க

(ப. பொ - ரை.) எச்சில்கள் பல எச்சில்களும் உள. அவற் றுள் மல மூத்திரங்கள் இயங்கிய இயக்கம் இரண்டொடுகூட இணைவிழைச்சும் வாயினால் வழங்கிய விழைச்சும் என இவை எச்சிலாவன. இவ்வெச்சில் நான்கினையும் பாதுகாக்க.

(க - ரை.) பலவகை எச்சில்களில் மலசலங்கழித்தல் புணர்ச்சி அதரபானம் இந்நான்கையும் காக்க

மற்று : அசை. இயக்கம் : அம் ஈற்றுத்தொழிற்பெயர் விழைச்சு - விருப்பம். இணைவிழைச்சு - புணர்ச்சி. (எ)

## எச்சிலுடன் செய்யத்தகாதவை

நால்வகை யெச்சிலும் நன்கு கடைபிடித்
தோதா ருரையார் வளராரே யெஞ்ஞான்றும்
மேதைக ளாகுறு வார்.

(இ - ள்.) நால்வகை எச்சிலும் - மேற்கூறப்பட்ட நான்கு எச்சிலையும், நன்கு கடைப்பிடித்து-மிகக் கடைப்பிடித்து, ஓதார்- ஒன்றனையும் ஓதார், உரையார் - வாயால் ஒன்றனையுஞ் சொல்லார், வளரார் - கண்துயிலார், எ ஞான்றும் - எக்காலத்தும், மேதைகள் ஆகுறுவார் - மதியுடையவராக வேண்டுவோர்.

(ப. போ - ரை.) கூறப்பட்ட இந்நான்கு எச்சிலையும் மிகக் கடைப்பிடித்து ஒன்றனையும் ஓதார், வாயாலொன்றைச் சொல்லார், கண் துயிலார் எஞ்ஞான்றும் மதியுடையவராக வேண்டுவோர்.

(க - ரை.) நால்வகை எச்சிலு முண்டானவிடத்து ஒன்றும் படித்தலாகாது, வாயா லொன்றையுஞ் சொல்லலாகாது, தூங்கலாகாது.

கடைப்பிடித்தல் - கைக்கொண்டொழுகல். வளர்தல்-கண் வளர்தல், தூங்கல். மேதை- அறிவு ; எதிர்மொழி : பேதை. ஓதார் உரையார் வளரார் என்பவற்றில் இடையிலுள்ள எதிர்மறை ஆகார இடைநிலை புணர்ந்துகெட்டது. எ + ஞான்று—எஞ்ஞான்று; ஞான்று - பொழுது. (அ)

## காலைமாலைக் கடவுள் வணக்கம்

நாளந்தி கோறின்று கண்கழீஇத் தெய்வத்தைத்
தானறியு மாற்றாற் றொழுதெழுக அல்கந்தி
நின்று தொழுதல் பழி.

(இ - ள்.) நாள் அந்தி - சிறுகாலையில், கோல் தின்று - ஒரு கொம்பாலே பல் துடைத்து, கண்கழீஇ - கண் கழுவி, தான் தெய்வத்தை - தான் வணங்குங் கடவுளை, அறியும் ஆற்றால் - அறியும் நெறியால், தொழுது எழுக - தொழுக, பின் ஒரு கருமத்தைத் தொடங்குக ; அல்கு அந்தி - மாலைப் பொழுதின்கண், நின்று தொழுதல் - தான் வணங்குங் கடவுளை நின்று வணங்குதல், பழி - குற்றமாம்.

(ப. போ - ரை.) சிறு காலையின்கண் ஒரு கோலாலே பற்றுடைத்துக் கண்கழுவித் தான் வணங்குந் தெய்வத்தைத் தானறியும் நெறியால் தொழுக. மாலைப்பொழுதின்கண் தான் வணங்குந் தெய்வத்தை நின்று தொழுதல் குற்றமாம்; இருந்து தொழுக.

(க - ரை.) விடியற்காலத்தில் பல் துடைத்துச் சுத்தஞ் செய்து கடவுளை வழிபட்டுப் பின் ஒரு கருமஞ்செய்க. மாலைக் காலத்தில் வீற்றிருந்தே கடவுளை வழிபடுக.

நாள் அந்தி - நாட்காலை, சிறுகாலை ; அந்தி - கூடுதல், பொருந்துதல் ; அஃதாவது பகலுமிரவுங் கூடுகின்ற காலம். சந்தி - மாலை வேளை. அல்கு - குறை. அல்குதல் - வெளிச்சம் குறைதல். கோல் - பற்குச்சு. தானறியுமாற்றால் - சமயமரபின் படி. கழீஇ : சொல்லிசையளபெடை. (க)

### இன்றியமையாது நீராடுதல்

தேவர் வழிபாடு தீக்கனா வாலாமை
உண்டது கான்றல் மயிர்களைதல் ஊண்பொழுது
வைகு துயிலோ டிணைவிழைச்சுக் கீழ்மக்கள்
மெய்யுறல் ஏனை மயலுறல் ஈரைந்தும்
ஐயுறா தாடுக நீர்.

(இ - ள்.) தேவர் வழிபாடு - தன்னால் வழிபடப்பெறுந் தெய்வத்தைத் துதித்தற் கண்ணும், தீக்கனா - தீய கனவைக் கண்டவிடத்தும், வாலாமை - தூய்மை குன்றிய காலத்தும், உண்டது கான்றல் - உண்டதை வாந்திசெய்த விடத்தும், மயிர் களைதல் - மயிர் களைந்த விடத்தும், ஊண்பொழுது - உண்ணும் பொழுதும், வைகு துயிலோடு - பொழுதேறத் தூங்கிய விடத்தும், இணைவிழைச்சு - புணர்ச்சியான காலத்தும், கீழ் மக்கள் மெய்யுறல் - கீழ்மக்கள் உடம்பு தீண்டியவிடத்தும், ஏனை மயல் உறல் - மலசலங் கழித்தவிடத்தும், ஈரைந்தும் - என இப்பத் திடத்தும், ஐயுறாது - சந்தேகங் கொள்ளாமலே, நீர் ஆடுக - நீரா டல் செய்க.

(ப. பொ - ரை.) தன்னால் வணங்கப்படுந் தேவரை வழி படுதற் கண்ணும், தீக்கனாக் கண்டவிடத்தும், தூய்மையின்மை யுண்டான விடத்தும், உண்டதனைக் கான்றவிடத்தும், மயிர் களைந்தவிடத்தும், உண்ணும்பொழுதும், பொழுதேற உறங்கிய விடத்தும், இணைவிழைச்சு உண்டாயின விடத்தும், கீழ்மக்கள் உடம்பு தீண்டியவிடத்தும், மூத்திர புரீடங்கள் கான்ற விடத்தும் என இப்பத்திடத்தும் ஐயுறாதே நீராடுக.

(க - ரை.) கடவுள்வழிபாடு முதலிய பத்துச் சமயங்களிலும் இன்றியமையாது நீராடல் வேண்டும்.

வாலாமை - தூய்மையின்மை. வால் - தூய்மை வைகு - தங்கு. வைகுதுயில் - படுக்கையில் நெடும்பொழுது தங்கிய துயில். கான்ற இடத்தும் - கழித்த போதும். மூத்திரபுரீடங்கள் - சலமலங்கள். ஆடுக : வியங்கோள், விதித்தற்பொருள். தீக்கனா - தீமை அல்லது துன்பத்தைத் தருங் கனவு. கான்றல் : தொழிற் பெயர், கால் : பகுதி.
(கO)

### ஆடையணிதல்

உடுத்தலால் நீராடார் ஒன்றுடுத் துண்ணார்
உடுத்தாடை நீருட் பிழியார் விழுத்தக்கார்

ஒன்றுடுத் தென்றும் அவைபுகா ரேன்பதே
முந்தையோர் கண்ட முறை.

(இ - ள்.) விழுத்தக்கார்-சிறப்புப் பொருந்தியவர், உடுத்து அலால் நீராடார் - ஓர் ஆடையை உடுத்தல்லது நீராடமாட்டார், ஒன்று உடுத்து - இரண்டு உடுத்தன்றி ஒன்றை உடுத்து, உண்ணார் - உண்ண மாட்டார், உடுத்த ஆடை - உடுத்த உடையை, நீருள் பிழியார் - நீரிற் பிழியமாட்டார், ஒன்று உடுத்து - ஓராடையுடுத்து, அவை புகார் - அவையின்கண் செல்லார், என்பது - என்று சொல்லப்படுவது, முந்தையோர் - பழையார், கண்ட முறை - கண்ட முறைமை.

(ப. பொ - ரை.) ஒன்றனை யுடுத்தல்லது நீராடார், இரண்டு உடுத்தன்றி ஒன்றுடுத்து உண்ணார், உடுத்த ஆடையை நீரின்கண் பிழியார், சீர்மைதக்கார் ஓராடையையுடுத்து அவையின்கண் செல்லார் என்று சொல்லப்படுவது பழையார் கண்ட முறைமை

(க - ரை.) நீராடல் உண்ணல் அவைபுகல் ஆகிய காலங்களில் உடையுடுத்தவேண்டிய முறையில் உடுத்துக.

விழுத்தக்கார் - சீர்மை பொருந்தியவர். விழுமம் - சிறப்பு. "உடுத்தாடை யில்லாதார் நீராட்டும்" என்பது திரிகடுகம். அலால் : தொகுத்தல் விகாரம். உடுத்த ஆடை என்பதில் அகரந் தொக்கு உடுத்தாடை என வந்தது. (கக)

### தவிர்க்க வேண்டுவன

தலையுரைத்த எண்ணெயா லெவ்வுறுப்புந் தீண்டார்
பிறருடுத்த மாசுணியுந் தீண்டார் செருப்புக்
குறையெனினுங் கொள்ளா ரிரந்து.

(இ - ள்.) தலை உரைத்த எண்ணெயால் - தலையின்கண் தேய்த்த எண்ணெயினால், எவ்வுறுப்பும் தீண்டார் - யாதோர் உறுப்பும் தீண்டார், பிறர் உடுத்த-, மாசுணியும் - அழுக்காடையும், தீண்டார்-, இரந்து - பிறர் இரந்து, குறை எனினும் - தமக்குக் காரியமென்று வேண்டிக்கொண்டாலும், செருப்பு - பிறர் தொட்ட செருப்பும், கொள்ளார் - காலில் அணிந்துகொள்ளார்.

(ப. பொ - ரை.) தலையின்கண் தேய்த்த எண்ணெயால் யாதோர் உறுப்புந் தீண்டார், பிறர் உடுத்த அழுக்காடையும் தீண்டார், பிறர் தொட்ட செருப்பும், பிறர் இரந்து தமக்குக் காரியமென்று வேண்டிக்கொள்ளினுங் கொள்ளார்.

(க - ரை.) தலையிற்றேய்த்த எண்ணெயை வழித்து மற்ற உறுப்புக்களிற் பூசுதல், அடுத்தவராடையைத் தீண்டுதல் முதலியன செய்தலாகாது.

எண்ணெய்: எள் + நெய். மாசுணி: மாசு + உணி. மாசு-அழுக்கு, உணி - உண்ணப்பட்டது : உண் : பகுதி, இ : செயப்படு பொருள் விகுதி. குறை - முடிக்கப்படுங் கருமம். இஃது இன்னிசைச் சிந்தியல் வெண்பா. (கஉ)

### செய்யத்தகாதன

நீருள் நிழற்புரிந்து நோக்கார் நிலமிராக்
கீறார் இராமரமுஞ் சேரார் இடரெனினும்
நீர்தோடா தெண்ணெ யுரையார் உரைத்தபின்
நீர்தோடார் நோக்கார் புலை.

(இ - ள்.) நீருள் - நீரின்கண், நிழல்புரிந்து - தம் நிழலை விரும்பி, நோக்கார் - பாரார், நிலம் - நிலத்தை, இரா - இருந்து, கீறார் - கீறமாட்டார், இரா - இரவில், மரமும் - ஒரு மரத்தின் கண்ணும், சேரார் - சேர்ந்திரார், இடர் எனினும் - நோய் கொண்டு இடர்ப்பட்டாராயினும், நீர் தொடாதே - நீரைத் தொடாமலே, எண்ணெய்-எண்ணெயை, உரையார்-உடம்பின்கண் தேயார், உரைத்தபின் - அவ்வெண்ணெய் தேய்த்தபின், நீர் தொடார் - தம் உடம்பின்மேல் நீரைத் தெளித்துக்கொள்ளாது, புலை - புலையை, நோக்கார் - தம் கண்ணால் நோக்கார்.

(ப. பொ - ரை.) நீரின்கண் தம் நிழலை விரும்பி நோக்கார், நிலத்தை இருந்து கீறார், இரவின்கண் ஒரு மரத்தின் கண்ணும் சேரார், நோய் கொண்டு இடர்ப்பட்டாராயினும் நீரைத் தொடாதே எண்ணெய் உடம்பின்கண் தேயார், அவ்வெண்ணெயைத் தேய்த்தபின் தம் உடம்பின்மேல் நீரைத்தெளித்துக் கொள்ளாது புலையைத் தம் கண்ணால் நோக்கார்.

(க - ரை.) தண்ணீரில் நிழல் பார்த்தல், சும்மா தரையைக் கீறுதல் முதலியன ஆகா.

நிழல் - உடம்பு நிழல். புரிதல் - விரும்பல். முதல் இரா - இருந்து ; செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இரண்டாவது இரா - இரவு. புலை - கீழ்மகன் ; பண்பாகு பெயர். தண்ணீரில் நிழலை நோக்குதல் செல்வக் கேடாதலின் நீருள் நிழற்புரிந்து நோக்கார் என்றார். நிலத்திற் கீறுதல் தோற்றார் செய்யுங்குறி. மரங்கள் பகலில் உட்கொண்ட கெட்ட காற்றை

இரவில் வெளி விடுவனவாதலின் இரா மரம் சேரார் என்ருர். எண்ணெய் தேய்த்துக் கொள்ளலாகாத நாட்களில் எண்ணெய் தேய்க்க நேரின் கஞ்சியேனும் நெய்யேனும் நீரேனும் கலந்து விட்டால் குற்றமில்லையென்னு முறைபற்றி நீர் தொடா தெண் ணெயுரையார் என்ருர். தொடார் : முற்றெச்சம். (கரு)

## நீராட்டியல்பு

நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்
நீந்தா ருமியார் திளையார் விளையாடார்
காய்ந்த தெனினுந் தலையொழிந் தாடாரே
ஆய்ந்த அறிவி னவர்.

(இ - ள்.) நெறிப்பட்டார் - ஒருமுறைப்பட்டார்; நீராடும் போழ்தில் - நீராடும் பொழுதில், எ ஞான்றும் - ஒரு நாளும், நீந்தார் - நீந்தமாட்டார், உமியார் - எச்சிலை யுமிழமாட்டார், திளையார் - அழுங்கி யிருக்கமாட்டார், விளையாடார் - விளையாடு தலுஞ் செய்யார் ; ஆய்ந்த அறிவினர் - ஆராய்ந்த அறிவுடையவர், காய்ந்தது எனினும் - எண்ணெய் தேய்த்துக்கொள்ளாமல் தலை காய்ந்திருந்தாலும், தலை ஒழிந்து - தலை ஒழிய, ஆடார் - கழுத் தளவாய் அமிழ்ந்து குளியார்.

(ப. போ - ரை.) ஒருமுறைப்பட்டார் நீராடும்போழ்தின் கண் ஒரு நாளும் நீந்தார், நீரின்கண் உமியார், நீரைக் குடைந்து திளையார், விளையாடுவதுஞ் செய்யார், எண்ணெய் பெருது தலை காய்ந்த தெனினும் தலையொழிய நீராடார் ஆய்ந்த அறிவினர்.

(க - ரை.) குள முதலியவற்றில் நீராடுங்காலத்து நீந்துதல் எச்சிலுமிழ்தல் முதலிய அருவருக்கத்தக்க செயல்களைச் செய்ய லாகாது. கழுத்துவரை குளிக்கலாகாது.

நெறிப்பட்டார் - நூல்வழி யொழுகுபவர் ; நல்லொழுக்க முடையார். திளைத்தல் - அழுங்குதல். நீராடல் - முழுகுதல். போழ்து - பொழுது என்பதன் மரூஉ. உமியார் ; உமி : பகுதி ; இது உமிழ் என்றும் வரும்.

## தன்னுடல்போற் போற்றத்தக்கவை

ஐம்பூதம் பார்ப்பார் பசுத்திங்கள் நாயிறு
தம்பூத மெண்ணு திகழ்வானேல் தன்மெய்க்கண்
ஐம்பூத மன்றே கெடும்.

(இ - ள்.) ஐம்பூதம் - நிலம் முதலான ஐம்பூதங்களையும், பார்ப்பார் - பார்ப்பாரையும், பசு - பசுவையும், திங்கள் ஞாயிறு - சந்திரனையும் சூரியனையும், தம்பூதம் எண்ணாது - தம் உடம்பு போலக் கருதிப்போற்றாது, இகழ்வானேல் - இகழ்வானாயின், தன் மெய்க்கண் - தன் உடம்பின்கண் உள்ள, ஐம்பூதம் - ஐந்து பூதத்தையுடைய தெய்வங்கள், அன்றே கெடும் - அன்றே கெட்டகன்றுபோம்.

(ப. போ - ரை.) நிலம் முதலாயின ஐம்பூதங்களையும் பார்ப்பாரையும் பசுக்களையும் திங்களையும் ஞாயிற்றையும் தன் உடம்பு போலக் கருதிப் போற்றா திகழ்வானாயின் தன் உடம்பின் கண் உள்ள ஐந்து பூதத்தையுமுடைய தெய்வங்கள் அன்றே கெட்டகன்றுபோம்.

(க - ரை.) பஞ்ச பூதம் முதலியவைகளை இகழ்வானாயின் ஒருவன் உடம்பின்கணுள்ள ஐந்து பூதத்தையுடைய தெய்வங்கள் அன்றே நீங்கும்.

தன்பூதம் என்பது எதுகை நோக்கித் தம்பூதம் என வந்தது. பூதம் கருவியாகு பெயராய் அவற்றாலாகிய உடம்பை யுணர்த்திற்று. தம்பூதம் என்னாது என்றும் பாடம். மெய்க்கண் ஐம்பூதம் என்பதற்கு உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற பூதங்கள் ஐந்தும் எனவுங் கூறலாம். ஐம்பூதங்களாவன: மண், நீர், அனல், வளி, வான். அன்று, ஏ, என்பன முறையே விரைவும் துணிவுங் குறித்தன. (கரு)

### ஐம்பெருங்குரவர் வழிபாடு

அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவரிவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
யாவருங் கண்ட நெறி.

(இ - ள்) அரசன் - அரசனும், உவாத்தியான் - உவாத்தியும், தாய் தந்தை - தாயும் தந்தையும், தம்முன் - தனக்கு மூத்தோனும், இவர் - என இவர்கள், நிகர் இல் குரவர் - தமக்கு நிகரில்லாக் குரவராவார், இவரை - இவர்களை, தேவரைப்போலத் தொழுது எழுக - தேவரைப்போலத் தொழுது எழுக, என்பது - என்று சொல்லப்படுவது, யாவரும் - எல்லாரும், கண்ட - வரையறுத்துக் கூறிய, நெறி - வழி.

(ப. போ - ரை.) அரசனும் உவாத்தியும் தாயும் தந்தையும் தனக்கு மூத்தோனும் என இவர்கள் தமக்கு நிகரில்லாத குரவ

ராவார். இவர்களைத் தேவரைப்போலத் தொழுதெழுக என்று சொல்லப்படுவது எல்லா நல்லாரும் உரைத்துச் சொல்லிய நெறி.

(க - ரை.) அரசன் முதலிய ஐங்குரவரையும் தேவரைப் போலத் தொழுது எழுக.

தம்முன் - தனக்கு முன்னே பிறந்தவன். முன் : காலவாகு பெயர். குரவர் - பெரியோர். இச்செய்யுளில் இரண்டாமடி ஒரு சீர் குறைந்து வந்தமையால் சவலை வெண்பா. (கசு)

### நல்லறிவாளர் செயல்

குரவ ருரையிகந்து செய்யார் விரதங்
குறையுடையார் தீர மறவார் நிறையுவா
மேற்கோலுந் தின்னர் மரங்குறையார் என்பதே
நல்லறி வாளர் துணிவு.

(இ - ள்.) குரவர் உரை - முன்பு கூறப்பட்ட குரவர்கள் சொல்லிய சொல்லை, இகந்து - கடந்து, செய்யார் - ஒன்றனையுஞ் செய்யார், குறை விரதம் உடையார் - முடியாத குறை விரத முடையார், தீர - மிக, மறவார் - அதனை மறந்து ஒழுகார், நிறை உவா மேல் - மதிநிறைந்த உவாவின்கண், கோலும் தின்னர் - பல் துடைப்பதும் செய்யார், மரம் குறையார் - அவ்வுவாவின்கண் மரங்களையும் வெட்டார், என்பது - என்று சொல்லப்படுவது, நல் அறிவாளர் - நல்லறிவாளர், துணிவு - தொழில். ஏ : அசை.

(ப. பொ - ரை) முன்பு கூறப்பட்ட குரவர்கள் சொல்லிய சொல்லைக் கடந்து ஒன்றனையுஞ் செய்யார், முடியாது கிடந்த குறை விரதமுடையார் மிகவதனை மறந்தொழுகார், மதிநிறைந்த உவாவின்கண் தம் பல் துடைப்பதும் செய்யார், அவ்வுவாவின் கண் மரங்களையுங் குறையார் என்று சொல்லப்படுவது நல்லறி வாளர் தொழில்.

(க - ரை.) குரவர் சொற்கடந்து செய்தல், நிறையுவாவில் பல் துடைத்தல், மரங்குறைத்தல் முதலியவற்றைச் செய்யார் நல்லறிவாளர்.

உவா - பூரணை: நிறையுவா. மறையுவா-அமாவாசை. இகந்து: இக:பகுதி. மென்கோல் தின்னல் - கொம்பாற் பல் துடைத்தல். 'இகழ்ந்து செய்யார்' என்றும், 'மெல்கோலுந் தின்னர்' என்றும் பாடம். துணிவு - உறுதி: தொழிற்பெயர். குறைத்தல் - வெட்டல். (கஎ)

## உணவுகொள் முறைமை

நீராடிக் கால்கழுவி வாய்பூசி மண்டலஞ்செய்
துண்டாரே யுண்டா ரேனப்படுவர் அல்லாதார்
உண்டார்போல் வாய்பூசிச் செல்வ ரதுவெறுத்துக்
கோண்டா ரரக்கர் குறித்து.

(இ - ள்.) நீர் ஆடி - குளித்து, கால் கழுவி - காலைக்கழுவி, வாய்பூசி - வாயைத் துடைத்து, மண்டலம் செய்து - உண்கலத்தைச் சுற்றி நீரிறைத்து, உண்டார் - உண்டவர், உண்டார் எனப்படுவர் - உண்டாராவர், அல்லாதார் - இப்படியொழிய உண்டவர், உண்டார் போல் - உண்டாரைப்போல, வாய்பூசி - வாயைக் கழுவி, செல்வர் போவார், அது - அவருண்பதை, அரக்கர் - அசுரர், குறித்து வெறுத்து எடுத்துக் கொண்டார் - கருதிச் சினந்து எடுத்துக்கொள்வார்.

(ப. போ - ரை.) குளித்துக் கால்கழுவி வாய்பூசி உண்ணுமிடம் மண்டலஞ்செய்து உண்டார்; உண்டாராவர். இப்படியொழிய உண்டவர்கள் உண்டாரைப்போல வாய்பூசிப் போவார் ஊணை அரக்கர் எடுத்துக்கொண்டார்.

(க - ரை.) உண்கலத்தினின்றும் உணவை யெடுத்துண்ணுமுன் நீராடல் கால்கழுவல் முதலியன செய்துண்பதே, உண்பதாம்.

மண்டலம் - வட்டம். மண்டலஞ் செய்தலாவது - உண்ணுமுன் மறைமுறையில் மந்திரங்கூறி நீர்வலஞ் செய்தல்; "அருமறையால் நீர்வலஞ்செய் தடிசில் தொட்டு" என்பது காசிகண்டம். பூசல் - துடைத்தல். எடுத்துக்கொண்டார் என இறந்த காலத்தாற் கூறியது துணிவுபற்றி: காலவழுவமைதி. குறித்து - நீராடுதல் முதலியன செய்யாமையைக் கருதி. (கஅ)

## கால்கழுவியபின் செய்யவேண்டியவை

காலினீர் நீங்காமை யுண்டிடுக பள்ளியும்
ஈரம் புலராமை யேறற்க வேன்பதே
பேரறி வாளர் துணிவு.

(இ - ள்.) காலின் நீர் - கால் கழுவின நீரின், நீங்காமை - ஈரம் புலர்வதற்முன்னே, உண்டிடுக - உண்ணத்தொடங்குக, பள்ளியும் - படுக்கையிடத்திலும், ஈரம் - கால் கழுவின ஈரமா

னது, புலராமை - காய்வதற்குமுன்னே, ஏறற்க - ஏருதொழிக, என்பது - என்று சொல்லப்படுவது, பேர் - பெரிய, அறிவாளர் - அறிவுடையவரது, துணிவு - கொள்கையாம்.

(ப. போ - ரை.) கால் கழுவி நீர் உலர்வதற்கு முன்னே உண்ணத் தொடங்குக, பாயலின் கண்ணும் கால் கழுவிய ஈரம் புலர்ந்தாலன்றி ஏருதொழிக என்று சொல்லப்படுவது பேரறிவாளர் துணிவு.

(க - ரை.) கால் கழுவின ஈரங் காய்வதன்முன் உணவு கொள்க, கால் கழுவின ஈரங் காய்ந்தபின்னே பள்ளி ஏறுக.

புலராமை, நீங்காமை: எதிர்மறை வினையெச்சங்கள். உண்டிடுக: உடன்பாட்டு வியங்கோள். ஏறற்க: எதிர்மறை வியங்கோள். பள்ளி - படுக்குமிடம். (கசு)

### உண்ணும் முறைமை

உண்ணுங்கா னேக்குந் திசைகிழக்குக கண்ணமர்ந்து
தூங்கான் துளங்காமை நன்கிரீஇ யாண்டும்
பிறிதியாது நோக்கா னுரையான் தொழுதுகொண்டு
உண்க உகாஅமை நன்கு.

(இ - ள்.) உண்ணுங்கால் - ஒருவன் உண்ணும்பொழுது, நோக்கும்திசை - தான் பார்க்கப்படும் திசையானது, கிழக்குக்கண் - கிழக்கு முகமாக, அமர்ந்து - பொருந்தி, தூங்கான் - தூங்காமல், துளங்காமை - அசைந்தாடாமல், நன்கு - நன்ருக, இரீஇ - இருந்து, யாண்டும் - எவ்விடத்தும், பிறிதுயாது - வேருென்றனையும், நோக்கான் - பார்க்காமல், உரையான் - பேசாமல், தொழுது - உண்கின்ற உணவைத் தொழுது, கொண்டு - கையாலெடுத்து, உகாமை - சிந்தாமல், நன்கு - நன்ருக, உண்க - உண்பானுக.

(ப. போ - ரை.) உண்ணும்போது நோக்கப்படும் திசை கீழ்த்திசையாங்கண் பொருந்தி தூங்காது புடைபெயராது நன்ருக இருந்து, எவ்விடத்தும் பிறிதொன்றினையும் நினையாது, நோக்காது, சொல்லாது, உண்கின்ற உணவினைத் தொழுது சிந்தாமல் உண்க.

(க - ரை.) உணவுட்கொள்வோன் கிழக்கு நோக்கி ஆடாமல் அசையாமல் உணவிலே கருத்துடையனு யுண்க. கிழக்கு மங்கலத் திசையாதலின் கிழக்கு நோக்கி எனப்பட்டது.

" சித்திரை அசனம் எண்ணெய் சிறைமயிர் சிரைத்த லின்ன
உத்தமக் கிழக்கு நன்றும் ஓங்குயிர் வளருந் தெற்கு
சித்தமே கலங்கு மேற்குத் திசைகேடு நான்கு மூலை
அத்தமும் உயிரும் போக்கும் ஆனதோர் வடக்குத்தானே."

என்ற நீதிசாரச் செய்யுள் ஈண்டுக் கருதற்பாலது. மனக்கவலை யாற் பிறிதொன்றினை நினைப்பின் உணவின் சுவைப்பயன் அறியப் படாதாதலின், நினையாது என்பது பொழிப்புரையிற் சேர்க்கப் பட்டது. உண்கின்ற உணவு அன்ன லட்சுமியென வழங்கப் படும். இனித் தொழுது என்பதற்குக் கடவுளைத் தொழுது எனலுமாம். உண்ணுங்கால் - உண்ணும்பொழுது எனின், பெய ரெச்சத்தொடர். கால் - காலம் என்பதன் குறைவு. தூங்கான் நோக்கான் உரையான் : முற்றெச்சங்கள். இரீஇ : சொல்லிசை யளபெடை. நன்கு : பண்புப்பெயர். பிறிதியாது என்பதில் இகரம் குற்றியலிகரம். உகாஅமை:உயிரள பெடை. 'தொழுது கொண்டுகாஅமை நன்கு" என்பது சீவகசிந்தாமணி முத்தியிலம் பகம் 101 ஆம் செய்யுளுரையில் மேற்கோளாகக் காட்டப் பட்டுள்ளது. (உ0)

## உணவு கொடுத்துண்டல்

விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை
இவர்க்கூண் கொடுத்தல்லா லுண்ணரே யென்றும்
ஒழுக்கம் பிழையா தவர்.

(இ - ள்.) விருந்தினர் - விருந்தினரும், மூத்தோர் - மிக முதி யரும், பசு - பசுக்களும், சிறை - பறவைகளும், பிள்ளை - பிள்ளை களும், இவர்க்கு - என்று சொல்லப்பட்ட இவர்கட்கு, ஊண் கொடுத்து அல்லால் - உணவு கொடுத்தல்லாமல், உண்ணார் - உண்ணமாட்டார், என்றும் - எக்காலத்திலும், ஒழுக்கம் - நல் லொழுக்கத்தினின்றும், பிழையாதவர் - தவறாத பெரியோர்கள்.

(ப. பொ - ரை.) விருந்தினரும் மிக மூத்தோரும் பசுக் களும் சிறைகளும் பிள்ளைகளும் என்று சொல்லப்பட்ட இவர் கட்கு உணவு கொடுத்தல்லது உண்ணார் என்றும் ஒழுக்கம் பிழையாதார்.

(க - ரை.) விருந்தினர் முதலியவர்கட்கு உணவு கொடா மல் தாம் முன்னர் உண்ணலாகாது.

விருந்தினர் - புதியவர்; விருந்து - புதுமை; இது ஆகுபெய ராய்ப் புதியராய் வந்தார்மேனின்றது. அவர் இரு வகையார்,

பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும், அஃதின்மையிற் குறியாது வந்தாரும் என. சிறை - சிறகுகளுடையது; பறவை: சினையாகு பெயர். மூத்தோர், மூ : பகுதி. உயர்திணையோடு அஃறிணை கலந்து மிகுதியால் உயர்திணைமுடிபேற்ற வழுவமைதி. (உக)

### உண்ணுந் திசை

ஒழிந்த திசையும் வழிமுறையா னல்ல
முகட்டு வழியூண் புகழ்ந்தா ரிகழ்ந்தார்
முகட்டு வழிகட்டிற் பாடு.

(இ - ள்) ஒழிந்த திசையும் வழிமுறையால் நல்ல - முன் சொன்ன கிழக்குத்திசையும் அக் கிழக்குத்திசைக்கு இடையூறுளதாயின் மற்றைத்திசைகளும் நல்லவாம்; முகட்டுவழி ஊண்-வாயிலின் நேர் இருந்து உண்ணுதலை, புகழ்ந்தார் - ஆமெனப் புகழ்ந்தார்கள், முகட்டுவழி - வாயிற்படிக்கு நேராக; கட்டில்பாடு - கட்டிலிட்டுப் படுத்தல், பழித்தார் - ஆகாதென்று இகழ்ந்தார்கள் நல்லவர்.

(ப. போ - ரை.) முன் சொன்ன கீழைத்திசையும், அக் கீழைத்திசைக்கு இடையூறு உளதாயின் பின்னை நோக்கி யுண்டற்கு மற்றைத் திசைகளும் நல்லவாம். வாயினேரிருந் துண்டலை ஆமெனப் புகழ்ந்தார்கள். முகட்டினேர் கட்டிலிட்டுக் கிடக்கலாகாதென்று பழித்தார்கள் நல்லார்.

(க - ரை.) கிழக்கு நோக்கி யிருந்துண்ணக் கூடாதாயின் வேறு திசை நோக்கியிருந்து முண்ணலாம். வாயிற்படிக்கு நேர் கட்டிலிட்டுக் கிடக்கலாகாது.

ஊண் : முதனிலை திரிந்த தொழிற்பெயர்; உண்: பகுதி, பாடு என்பதும் அது; படு : பகுதி. முகடு என்பதற்கு வீட்டின் உத்திரம் எனக்கொண்டு முகட்டுவழி கட்டிற்பாடு என்பதற்கு அவ்வுத்திரத்தின் நேராகக் கீழே படுத்தல் என்பதுமாம். உத்திரத்தின் கீழ்ப்படுத்தல் தீக்கனுவுக்கேது. (உஉ)

### நின்றுகிடந் துண்ணுமை

கிடந்துண்ணார் நின்றுண்ணார் வெள்ளிடையு முண்ணார்
சிறந்து மிகவுண்ணார் கட்டின்மே லுண்ணார்
இறந்தொன்றுந் தின்னற்க நின்று.

(இ - ள்.) கிடந்து உண்ணார் - கிடந்துண்ணல் ஆகாது, நின்று உண்ணார் - நின்றுண்ணலாகாது, வெள்ளிடையும் உண்ணார் - வெள்ளிடையின்சண் இருந்து உண்ணல் ஆகாது, சிறந்து - விரும்பி, மிக உண்ணார் - மிகவும் உண்ணல் ஆகாது, கட்டில் மேல் உண்ணார் - கட்டில்மேலிருந்து உண்ணல் ஆகாது, இறந்து - நெறியைக் கடந்து, ஒன்றும் - யாதொன்றும், நின்று - நின்று, தின்னற்க - தின்னல் ஆகாது.

(ப - பொ - ரை.) கிடந்துண்ணல் ஆகாது, நின்றுண்ணல் ஆகாது, வெள்ளிடையின்கண்ணிருந்து உண்ணல் ஆகாது, விரும்பி மிகவும் உண்ணல் ஆகாது, நெறியைக் கடந்து மிக யாதொன்றும் நின்று தின்னல் ஆகாது.

(க - ரை) படுத்தோ நின்றோ வெளியிடையிருந்தோ உண்ணலாகாது, கட்டின்மேலிருந்துந் தின்னலாகாது.

இனிச் சிறந்த என்ற பாடங்கொள்ளின் சிறந்த உணவுகளை என்க. தின்னல் என்னும் வினை உபலட்சணத்தால் பருகுதல் நக்கல் முதலிய தன்னினத்தையுங் குறிக்கும். (உகூ)

### பெரியோர்பா லிருந்தருந்துவது

முன்றுவ்வார் முன்னெழார் மிக்குரு ரூணின்கண்
என்பெறினு மாற்ற வலமிரார் தம்மிற்
பெரியார்தம் பாலிருந்தக் கால்.

(இ - ள்.) தம்மின் பெரியார் - தம்மிலும் பெரியராயுள்ளவர், தம்பால் - தம் பந்தியில், இருந்தக்கால் - இருந்து உண்ணுமிடத்து, முன் துவ்வார் - அப்பெரியவர் உண்பதற்கு முன்னே தாம் உண்ணார், முன் எழார் - முந்தி எழுந்திரார், மிக்கு உறார் - அவர்களை நெருக்கியிரார், ஊணின்கண் - உண்ணுமிடத்து, ஆற்ற - மிகுதியாக, என்பெறினும் - யாதாயினும் பெற்றாலும், வலம் இரார் - வலப்புறம் இருந்து உண்ணார்.

(ப. பொ - ரை.) தம்மிற் பெரியார் தம் பந்தியிலிருந்து உண்ணுமிடத்து, அப்பெரியார் உண்பதற்கு முன்னே தாம் உண்ணார், முந்தற எழுந்திரார், அவர்களை நெருங்கியிரார், உண்ணுமிடத்து மிக யாதாயினும் பெறினும் வலமிருந்து உண்ணற்க.

(க-ரை.) பெரியோர்களுட னிருந்துண்ணுங்காலத்து அவர்கட்குமுன் உண்ணலும் எழுதலும் முதலியன ஆகா.

மிக்குறார் என்பது மீக்கூறார் எனச் சொற்சிதைவாக்கி 'அதிகம் பேசார்' என்பதுமாம். பெரியார் கீரவிருந்தக்கால்

என்ற பாடங்கொள்ளின், நிரல் என்பதற்கு வரிசை என்க துவ்வார்: து: பகுதி. ஊணின்கண் என்பதற்கு உண்ணும் பொருள்களில் எனலுமாம். (உச)

### சுவைப்பொருள் நுகர்முறை

கைப்பன வெல்லாங் கடைதலை தித்திப்ப
மெச்சும் வகையா லொழிந்த விடையாகத்
துய்க்க முறைவகையா லூண்.

(இ - ள்.) கைப்பன எல்லாம் - கைக்குங்கறியெல்லாம், கடை (ஆக) - கடையாகவும், தித்திப்ப (எல்லாம்) - தித்திக்கும் கறியெல்லாம், தலை (ஆக) - முதலாகவும், ஒழிந்த (எல்லாம்) - ஒழிந்த சுவைகளுள்ள கறிகளெல்லாம், இடையா - இடையாகவும், முறை வகையால் - முறைப்படி, மெச்சும் வகையால் - புகழும் வகையான், ஊண் துய்க்க - உணவை யருந்துக.

(ப - பொ - ரை.) கைக்குங் கறியெல்லாம் முடிவின் கண்ணாகவும், தித்திக்குங் கறியெல்லாம் முதலாகவும், ஒழிந்த சுவைகளுள்ள கறிகளெல்லாம் இடையாகவும் உண்க; புகழும் வகையான்.

(க - ரை.) உண்ணும்போது இனிப்பான கறிகளை முதலிலும், கசப்பான கறிகளை இறுதியிலும், ஒழிந்த சுவைக் கறிகளை இடையிலும் உண்க.

ஆக, எல்லாம் என்னுஞ் சொற்கள் தித்திப்ப கைப்ப என்பவற்றோடுங் கூட்டப்பட்டன. கைப்பன, தித்திப்ப, ஒழிந்த: பலவின்பால் வினையாலணையும் பெயர்கள். துய்க்க: ககர விற்று வியங்கோள். இச்செய்யுள் முதலடி சீவகசிந்தாமணி பதுமையாரிலம்பகம் 136 ஆம் செய்யுள் மூன்றாம் அடி "இன்மலர்த் தவிசினுச்சி யிருந்தமிர் தினிதிற் கொண்டான்" என்பதற்கு மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. (உரு)

### உண்கலம்

முதியவரைப் பக்கத்து வையார் விதிமுறையால்
உண்பவற்று ளெல்லாஞ் சிறிய கடைப்பிடித்
தன்பிற் றிரியாமை யாசார நீங்காமை
பண்பினு னீக்கல் கலம்.

(இ - ள்.) முதியவரைப் பக்கத்து வையார் - (மூத்தார் தம்மோடுண்ணும்பொழுது) அம்முதியவரைத் தம் பக்கத்தில் வைத்துண்ணுர், விதிமுறையால் - ஒழுங்குப்படி, உண்பவற்றுள் எல்லாம் - உண்ணும் கலங்களெல்லாவற்றுள்ளும், சிறிய - சிறியவற்றை, கடைப்பிடித்து - உறுதியாகக்கொண்டு, அன்பில் திரியாமை - அன்பில் மாறுபடாமலும், ஆசாரம் - ஒழுக்கம், நீங்காமை - தவருமலும் (உண்டு), கலம் - உண்கலங்களை, பண்பினுல் நீக்கல் - முறையால் நீக்கல்வேண்டும்.

(ப - போ - ரை.) தம்மின் மூத்தார் உண்ணும்பொழுது, அம்மூத்தாரைத் தம் பக்கத்து வைத்து உண்ணுர், முறைமையான் உண்ணுங்கலங்கள் எல்லாவற்றுள்ளும் சிறிய கலங்களைக் கடைப்பிடித்துத் தனக்குக் கைக்கொண்டு காதல் பிறழாத வகையும், ஒழுக்கத்தின் நீங்காத வகையும் உண்டு, வரைவோடுகூட உண்டமைந்தால் உள்ள கலங்களை முறைப்படி நீக்குக.

(க - ரை.) தம்மின் முதியாரைத் தம் பக்கம் வைத்துண்ணுமலும் உண்கலங்களிற் சிறியவற்றைப்பற்றி அன்பும் ஒழுக்கமுங் குன்ருமலும் உண்டு பின் உண்கலங்களை நீக்குக.

நீக்கல்: அல் ஈற்று வியங்கோள். தம்மின் : இன் எல்லைப் பொருள். உண்டு : சொல்லெச்சம். முதியவர் - முதுமை என்னும் பண்படியாகப் பிறந்த பெயர் ; வயது முதிர்ந்தவர். (உசு)

### வாய் துப்புரவு செய்வகை

இழியாமை நன்குமிழ்ந் தெச்சி லறவாய்
அடியோடு நன்கு துடைத்து வடிவுடைத்தா
முக்காற் குடித்துத் துடைத்து முகத்துறுப்
போத்த வகையால் விரலுறுத்தி வாய்பூசல்
மிக்கவர் கண்ட நெறி.

(இ - ள்.) இழியாமை - வாயிற்புக்க நீர் உள்புகாதபடி, நன்கு உமிழ்ந்து - நன்ருய்க் கொப்புளித்து, எச்சில் அற - எச்சில் அறும்படி, வாய் அடியோடு - வாயையும் அடியையும், நன்கு துடைத்து - நன்ருகத் துடைத்து, வடிவு உடைத்தாக - அழகு உடையதாக, முக்கால் குடித்து - முக்குடி குடித்து, துடைத்து - துடைத்துக்கொண்டு, முகத்து - முகத்திலுள்ள, உறுப்பு - கண் முதலிய உறுப்புக்களை, ஒத்த வகையால் - அவற்றிற்குத் தக்க வகைகளால், விரல் உறுத்தி - (மந்திரஞ் சொல்லி) விரல்களைச் செலுத்தி, வாய் பூசல் - வாய் துடைத்தல், மிக்கவர் கண்ட நெறி - பெரியோர் அறிந்துரைத்த ஒழுக்கங்களாம்.

(ப. போ - ரை.) வாயில் புக்க நீர் உட்புகாமை மிகவும் உமிழ்ந்து, எச்சில் அறும்படி வாயையும் அடியையும் மிகத் துடைத்து, அழகுடைத்தாக முக்காற் குடித்துத் துடைத்து, முகத்தின்கண் உள்ள உறுப்புக்களை அவற்றுக்குப் பொருந்தும் வகையால் விரல்களை உறுத்தி, அப்பெற்றியானே பூசும் பூச்சு நெறிமிக்கவர் கண்ட நெறி.

(க - ரை.) உண்டபின் வாயை நன்கு கொப்புளித்து, எச்சி லறச் சுத்தி செய்து முக்கால் குடிக்க.

முக்கால் குடித்தலாவது கடவுளின் பெயரைச் சொல்லிக் குடங்கையிட்டு உழுந்தமிழும் அளவுள்ள நீரை எடுத்து உட் கொள்ளுதல். இரண்டு கண்கள், இரண்டு செவிகள், மூக்கி னிருபுறம் ஆகிய இவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பெயரைச் சொல்லி ஒவ்வொரு விரலை யமைத்தல் விதியாதலின் ஒத்தவகை யால் விரலுறுத்தி என்றார். உறுத்தி : பிறவினையெச்சம்; உறுத்து : பகுதி. முகத்து உறுப்பு என்பதற்கு முகத்திலுள்ள கண் முதலிய உறுப்புக்கள் என்பது முறை. உண்டபின் வாய்பூசும் பூச்சு இவ்வகைத்து என்பது அடியில் வரும் சீவகசிந்தாமணிப் பதுமையாரிலம்பகம் 137 ஆவது செய்யுளாலும் விளங்கும்.

“ வாசநற் பொடியும் நீருங் காட்டிடத் தொண்டு வாய்ப்பப்
பூசறத் தங்கை நீரை மும்முறை குடித்து முக்காற்
காசறத் துடைத்த பின்றைக் கைவிர லுறப்புத் தீட்டித்
தூசினு லங்கை நீவி யிருந்தனன் தோற்ற மிக்கான்.” (௨௭)

### நீர் பருகும் முறை

இருகையால் தண்ணீர் பருகா ரொருகையாற்
கொள்ளார் கொடாஅர் குரவர்க் கிருகை
சொறியா ருடம்பு மடுத்து.

(இ - ள்.) இரு கையால் - இரண்டு கைகளாலும், தண்ணீர் பருகார் - தண்ணீர் குடியார்; ஒரு கையால் - (பெரியோர் கொடுக் கும் பொருளை) ஒரு கையினால், கொள்ளார் - வாங்கார், குரவர்க்கு- பெரியோர்க்கு, கொடார் - (ஒரு கையால்) கொடுக்கமாட்டார், உடம்பு - உடம்பில், இரு கை மடுத்து - இரண்டு கைகளையும் வைத்து, சொறியார் - சொறியமாட்டார்.

(ப. போ - ரை.) இருகையால் முகந்தும் எற்றும் தண்ணீர் குடியார், குரவர் கொடுப்பனவற்றை ஒரு கையால் வாங்கிக்

கொள்ளார்; அவருக்குத் தாம் ஒரு கையால் கொடார், உடம் பினை மடுத்து இரு கையால் சொறியார்.

(க - ரை.) தண்ணீரை இரு கையாலுங் குடிக்கலாகாது. பெரியோரிடம் ஒன்றைப் பெறும்பொழுதும் ஒன்றைக் கொடுக் கும்பொழுதும் இரு கையாலேயே வாங்கல் கொடுக்கல் செய்ய வேண்டும். உடம்பை இரு கையாலும் சொறியலாகாது.

தண்ணீர் - தண் : இயற்கையடைமொழி. கொடாஅர் வெண் பாத்தளை தட்டாமைக்கு வந்த அளபெடை. மடுத்து - அடைந்து, நெருக்கமாக. சொறிதல் - பிறாண்டுதல். (உஅ)

## அந்திப்பொழுது செய்வன தவிர்வன

அந்திப் போழுது கிடவார் நடவாரே
உண்ணார் வெகுளார் விளக்கிகழார் முன்னந்தி
அல்குண் டடங்கல் வழி.

(இ - ள்.) அந்திப்பொழுது - மாலைப்பொழுதில், கிடவார் - படுத்துத் தூங்கார், நடவார் - வழிநடந்து செல்லார், உண்ணார் - உண்ணமாட்டார், வெகுளார் - ஒருவரைச் சீறார், முன் அந்தி - மாலையின் முற்பொழுது, விளக்கு இகழார் - விளக்கு இகழாமல் ஏற்றுவர், அல்கு அந்தி - இரவில், உண்டு -, அடங்கல் - (புறம் போகாது ஓரிடத்திலே) அடங்குதல், வழி - நெறி. ஏ : அசை.

(ப. பொ - ரை.) மாலைப்பொழுதின்கண் கிடத்தலும், வழி நடத்தலும் செய்யார்; ஒருவரைச் சீறுவதுஞ் செய்யார்; அந்திப் பொழுது விளக்கு இகழாது ஏற்றுவர்; மாலைப்பொழுதின்கண் உண்ணாது அல்கலின்கண் உண்டு, புறம்போகாது ஓரிடத்தின் கண்ணே அடங்குதல் நெறி.

(க - ரை.) மாலைப்பொழுதில் படுத்தல் வழிநடத்தல் செய் யாதும், உண்ணாமலும் எவரையும் சீறாதும், விளக்கேற்றி இரவா னது முண்டு அடங்கியிருத்தல் முறை.

முன்னந்தி : இலக்கணப்போலி. அந்திமுன் எனக் கொண்டு அந்தியில் என்றுங் கூறலாம். விளக்கு : தொழிலடியாகப் பிறந்த காரணப் பெயர். விளக்கிகழார் என்பதற்குத் தீபத்தைக் கண்ட போது பழிக்காமல் தொழவேண்டும். இது "திரியழற்காணிற் றொழுப" என்னும் நான்மணிக்கடிகையடியாலும் வலியுறும். அல்கு அந்தி : ஆறாம் வேற்றுமைத்தொகை. சுருங்கிய பகலின் முடிவு, அதாவது பகலொடு இரவின் சேர்க்கை நாளந்தி, முந்திய நாளொடு பிந்திய நாளின் சேர்க்கை. 'அந்திப்பொழுதிற் கிட வார்' என்றும் பாடம். (உக)

## தூங்கும் முறை

கிடக்குங்காற் கைகூப்பித் தெய்வந் தொழுது
வடக்கொடு கோணந் தலைசெய்யார் மீக்கொள்
உடற்கொடுத்துச் சேர்தல் வழி.

(இ - ள்.) கிடக்குங்கால் - படுக்கும்பொழுது, தெய்வம்-கடவுளை, கைகூப்பித்தொழுது - கைகுவித்து வணங்கி, வடக்கொடு - வடதிசைக் கண்ணும், கோணம் - கோணத்திசையின் கண்ணும், தலைசெய்யார் - தலையை வைக்காமல், மீக்கோள் - மேலே போர்த்துக்கொள்ளும் போர்வையை, உடல்கொடுத்து - உடம்பிற்குக் கொடுத்து, சேர்தல் - படுக்கையிற் சேர்தல், வழி - ஒழுக்கமாம்.

(ப. பொ - ரை.) கிடக்கும்பொழுது தெய்வத்தைக் கைகூப்பித் தொழுது வடதிசையின் கண்ணும் கோணத்திசையின் கண்ணும் தலைவையாது, மேற்போர்ப்ப தொன்றினை உடம்பின்கண் கொடுத்துக் கிடத்தல் நெறி.

(க - ரை.) படுக்கும்பொழுது கடவுளைத் தொழுது, வடக்கும் கோணத்திசையும் தலைவையாது, போர்த்துப்படுத்தல் முறை.

கூப்பி : வினையெச்சம், கூப்பு : பகுதி. கோணத்திசை - வடகிழக்கு வடமேற்கு தென்கிழக்கு, தென்மேற்கு ஆகிய நான்குமாம். இச்செய்யுள்வரை நித்தியக் கருமமுறை சொல்லப்பட்டது. கோள்-முதனிலைதிரிந்த தொழிலாகுபெயர். மீ-மேல். (௩௦)

## ஊடறுத்துச் செல்லாமை

இருதேவர் பார்ப்பா ரிடைபோகார் தும்மினும்
மிக்கார் வழுத்திற் றொழுதெழுக ஒப்பார்க்
குடன்செல்ல லுள்ள முவந்து.

(இ - ள்.) இருதேவர் (இடை) - இரண்டு தெய்வங்களுக்கு இடையிலும், பார்ப்பார் இடை - பார்ப்பார் இடையிலும், போகார் - போகமாட்டார், தும்மினும் - (தாம் போகும்போது) ஒருவர் தும்மினாலும், மிக்கார் வழுத்தின்-பெரியார் வாழ்த்தினால், தொழுது எழுக - அவரைத் தொழுது செல்லவேண்டும், ஒப்பார்க்கு - தாம் புறப்படுகையில் தம்மோடொத்த நண்பர் எதிர்ப்பட்டால், உள்ளம் உவந்து - மனம் மகிழ்ந்து, உடன் செல்லல் - நேரே போக.

(ப. பொ - ரை.) இருதேவர் நடுவும் பார்ப்பார் பலர் நடுவும் ஊடறுத்துப்போகார்; தம்மினபொழுது மிக்கார் வழுத்தினுல் தொழுதெழுக; தம்மோடொப்பார்க்கு வழிபோம்பொழுது உடனே நேர்செல்க, தம்முள்ளம் உவந்து.

(க - ரை.) இரண்டு தெய்வங்களுக்கும் பார்ப்பாருக்கும் இடையில் செல்லக்கூடாது. பிறர் தும்மினபொழுது பெரியோர் வாழ்த்தினுல் அவரைத் தொழுக. ஒத்த நண்பன் எதிர் வருவானுனல் உடன் செல்க.

மிக்கார் வழுத்தி என்ற பாடமாயின் பெரியாரைத் தொழுது கொண்டு என்றுரைக்க. பெரியோர் கூடியிருக்கும் மன்றின் நடுவில் ஊடறுத்துப் போகலாகாது என்பது "எனறூடறுத்துச் சென்றுலும் மன்றூடறுத்துச் செல்லற்க" என்ற பழமொழியாலும் விளங்கும். உடன் செல்லல் - நேராகச் செல்க. செல்லல்: உடன்பாட்டு வியங்கோள். (கக)

இருபுலனுஞ் சோரா இடம்

புற்பைங்கூழ் ஆப்பி சுடலை வழிதீர்த்தந்
தேவ குலநிழ லானிலை வெண்பலியென்
றீரைந்தின் கண்ணு முமிழ்வோ டிருபுலனுஞ்
சோரா ருணர்வுடை யார்.

(இ - ள்.) உணர்வு உடையார் - அறிவுடையோர், புல் - புல்லின் கண்ணும், பைங்கூழ் - பயிருள்ள நிலத்தினும், ஆப்பி - பசுவின் சாணத்தின் மேலும், சுடலை - சுடுகாட்டிலும், வழி - வழியிலும், தீர்த்தம் - தீர்த்தமுள்ள இடத்திலும், தேவகுலம் - தேவாலய இடங்களிலும், நிழல் - நிழலுள்ள இடத்திலும், ஆன்நிலை - பசுக்கள் நிற்குமிடத்திலும், வெண்பலி - சாம்பலிலும், என்ற ஈர் ஐந்தின் கண்ணும் - என்று சொல்லப்பட்ட இப் பத்திடங்களிலும், உமிழ்வோடு - எச்சிலுமிழ்தலையும், இரு புலனும் - மலசலங் கழித்தலையும், சோரார் - ஒழுக்கார்

(ப. பொ - ரை.) புல்லின்கண்ணும், விளைநிலத்தின்கண்ணும், ஆப்பியின் கண்ணும், சுடலையின் கண்ணும், வழியின் கண்ணும், தீர்த்தத்தின் கணணும், தேவர் கோட்டத்தின் கண்ணும், நிழலின் கண்ணும், ஆநிரை நிற்கும் இடத்தின் கண்ணும், சாம்பலின் கண்ணும் என ஈரைந்தின்கண்ணும் உமிழ் நீரையும் மூத்திர புரீடங்களையும் சோரார் உணர்வுடையார்.

(க - ரை.) புல் முளைத்திருக்குமிடம் வயலிடம் முதலிய இடங்களை யுமிழ்ந்தும் மலசலங் கழித்தும் அசுத்தம் செய்த

லாகாது. ஆ + பீ = ஆப்பி - "ஆமுன் பகரவீ யனைத்தும்வரக் குறுகும்". (நன். சூ - கஎஎ.) குலம் - மனை, வீடு. பைங்கூழ் - முன்பயிரை யுணர்த்தி அது தானியாகு பெயராய்ப் பயிர் நிலத்தை யுணர்த்தி யது. தீர்த்தம் - தூயநீர். நிலை, சுடலை: தொழிலாகுபெயர். புலன் - அவற்றின் காரியத்திற்குக் கருவியாகுபெயர். (௩௨)

## இருபுலன் கழிக்குந் திசை

பகற்றெற்கு நோக்கா ரிராவடக்கு நோக்கார்
பகற்பெய்யார் தீயினு ணீர்.

(இ - ள்.) பகல் - பகற்பொழுதில், தெற்கு நோக்கார் - தெற்கு நோக்காமலும், இரா - இரவில், வடக்கு நோக்கார் - வடக்கு நோக்காமலும் இருந்து மலசலங்கழிப்பார்; பகல் - பகற் பொழுது, தீயினுள் - தீயில், நீர் பெய்யார் - நீரூற்றி யவிக்கார்.

(ப - பொ - ரை.) பகல் தெற்கு நோக்கியும் இரா வடக்கு நோக்கியும் இருந்து மூத்திர புரீடங்களைச் சோரார். பகற் பொழுதின்கண் தீயினுள் நீர் பெய்யார்.

(க - ரை.) மலசலங் கழிப்பவர் பகல், தெற்கு நோக்கியும் இரவு, வடக்கு நோக்கியும் இருந்து கழித்தலாகாது.

தீ - ஓமத்தீ, வேள்வித்தீ. சோர் - ஒழுக்கு. (௩௩)

## இதுவுமது

பத்துத் திசையு மனத்தான் மறைத்தபின்
அந்தரத் தல்லா லுமிவோ டிருபுலனும்
இந்திர தானம் பெறினு மிகழாரே
தந்திரத்து வாழ்துமேன் பார்.

(இ - ள்.) தந்திரத்து - நூன்முறையால், வாழ்தும் என் பார் - ஒழுகுதும் என்பவர், பத்து திசையும் - பத்துத் திசையினை யும், மனத்தால் மறைத்தபின் - மறைத்தாராக மனத்தினால் கருதி, அந்தரத்து அல்லால் - வேறோரிடத்தின்கண்ணே சோர்கின்றா ராகக் கருதியல்லது, உமிவோடு - உமிழ் நீரையும், இரு புலனும் - மூத்திர புரீடங்களையும், இந்திரதானம் பெறினும் - இந்திரன் உறையுமிடம் பெற்றாராயினும், இகழார் - சோரார்.

(ப - பொ - ரை.) திசைபத்தினையும் மறைத்தாராக மனத் தாற் கருதிப் பத்துத்திசையின் கண்ணும் அன்றியிலே வேறோ

ரிடத்தின் கண்ணே சோர்கின்றாராகக் கருதியல்லது உமிழ் நீரை யும் மூத்திர புரீடங்களையும் இந்திரன் உறையுமிடம் பெற்றாரா யினும் சோரார் நூன்முறையான் ஒழுகுதும் என்பார்.

(க - ரை.) திசை பத்தையும் மறைத்ததாகப் பாவித்து அந் தரத்திற் செய்வதாக நினைத்து எச்சி லுமிழ்தலும் மலசலங் கழித் தலும் செய்க.

பத்துத்திசை - நாற்றிசை, கோணத்திசை நான்கு ஆகிய எட்டுடன், மேல் கீழ் ஆகிய இரண்டும் சேர்ந்த பத்துத்திசை. அந்தரம் - ஆகாயம். தானம் - இடம், பதம். பெறினும் : உம் உயர்வு சிறப்பு. வாழ்தும் : தும் விகுதிபெற்ற தன்மைப் பன்மை வினைமுற்று. (௩௪)

வாய்பூசலாகா இடங்கள்

நடைவரவு நீரகத்து நின்றுவாய் பூசார்
வழிநிலை நீருள்ளும் பூசார் மனத்தால்
வரைந்துகோண் டல்லது பூசார் கலத்தினாற்
பெய்பூச்சுச் சீரா தெனின்.

(இ - ள்.) நீரகத்து நின்று - நீரிடத்துநின்றும், நடைவரவு நின்று - நடவாநின்றும், வாய்பூசார் - வாயலம்பார், வழி - வழியில், நிலைநீர் உள்ளும் - தேங்கியிருக்கும் நீரிலும், பூசார்-வாயலம்பார், மனத்தால் - மனதினால், வரைந்துகொண்டு அல்லது - வரை யறுத்துக் கொண்டல்லாமல், பூசார் - வாயலம்பார், கலத்தினால் - கலத்தால் முகந்து, பெய் பூச்சு-சிலர் பெய்யப் பூச, சீராதெனின்- முடியாதாயின்.

(ப - பெர - ரை.) நீரகத்தின் கண்ணின்றும் நடவாநின் றும் தம் வாயைப் பூசார். ஓடுநீர் பெற்றிலராயின் நிலை நீருள்ளும் அப்பெற்றி பூசார். அந்நீர் அருந்தும்போதும் பூசும்போதும் மனத்தான் வரையறுத்துக் கொண்டலலது பூசார், அதுவுஞ் செய்வது கலத்தான் முகந்து சிலர் பெய்யப் பூச முடியா தாயின்.

(க - ரை.) தண்ணீரில் நின்றுகொண்டும் நடந்துகொண் டும் வாயலம்பாது ஒரு கலத்தில் மொண்டே வாயலம்பவேண்டும்.

நடைவரவு நீரகத்து நின்றும் என்பதை நடைநின்றும் வரவு நீரகத்து நின்றும் என்று பிரித்து, நடவாநின்றும் ஓடுகின்ற நீரில் நின்றும் என்றும் பொருள் கூறலாம். நீரகத்து - நீர் + அகம் +

அத்து ; அகம் : ஏழனுருபு, அத்து : சாரியை. நிலைநீர் : இரண்டனுருபும் பயனும் உடன்தொக்க தொகை. பெய்பூச்சு - பெய்யப்பூசுதல், பெய் : பெய்ய என்பதன் விகாரம். பூச்சு : முதனிலை திரிந்த தொழிற் பெயர். "பெய்பூச்சுத் தாராதெனின்" என்றும் பாடம். (௩௫)

## காட்சியவர் நற்செயல்

சுடரிடைப் போகார் சுவர்மே லுமியார்
இடரெனினு மாசுணி கீழ்தம்மேற் கொள்ளார்
படைவரினு மாடை வளியுறைப்பப் போகார்
பலரிடை யாடை யுதிராரே யென்றுங்
கடனறி காட்சி யவர்.

(இ - ள்.) சுடர் இடை போகார்-விளக்குக்கும் ஒருவர்க்கும் நடுவூடறுத்துப்போகார், சுவர்மேல் - சுவரின்மேல், உமியார் - உமிழார், இடர் எனினும்-தமக்குக் குளிரான் இடர் வரினும், மாசுணி-பிறர் உடுத்த அழுக்கு உடையை, தம் கீழ் மேல் கொள்ளார் - தங்கீழ்ப்படுப்பதும் மேற் போர்ப்பதும் செய்யார், படைவரினும் - படை வந்ததாயினும், ஆடை வளி - தாம் உடுத்த ஆடையின் காற்று, உறைப்பப் போகார்-பிறர்மேல் படும்படி செல்லார், பலர் இடை ஆடை உதிரார் - பலர் நடுவினின்று உடையை உதறார் என்றும் - எஞ்ஞான்றும், கடன் அறி - கடப்பாட்டை அறிந்த, காட்சியவர் - அறிவுடையார்.

(ப - பொ - ரை.) ஒருவர்க்கும் விளக்கிற்கும் நடுவூடறுத்துப் போகார், சுவரின்மேல் உமியார், தமக்குக் குளிரான் இடர் வரினும் பிறருடுத்த மாசுணியைத் தங்கீழ்ப்படுப்பதும் மேற் போர்ப்பதும் செய்துகொள்ளார். படை வந்ததாயினும் தாமுடுத்த ஆடைக் காற்றுப் பிறர்மேல் உறைப்பப் போகார் ; பலர் நடுவண் நின்று உடையை உதறார் : எஞ்ஞான்றும் கடப்பாட்டை அறிந்த அறிவுடையார்.

(க - ரை.) விளக்குக்கும் ஒருவர்க்கு மூடே செல்லுதல், சுவரில் உமிழ்தல், பிறரழுக்குடையணிதல், அடுத்தவர்மேல் தம் ஆடைக்காற்றுப்படச் செல்லுதல், பலரிடைத் தம் ஆடையை உதறுதல் ஆகியவற்றைச் செய்தலாகாது,

மாசு + உணி—அழுக்கால் உண்ணப்பட்டது. "மாசுணி தங் கீழ்மேற் கொள்ளார்" என்றும் பாடம். (௩௬)

## நரகஞ் செலுத்துவன

பிறர்மனை கட்களவு சூது கொலையோ
டறனறிந்தா ரிவ்வைந்து நோக்கார்—திறனிலரென்
றெள்ளப் படுவதூஉ மன்றி நிரயத்துச்
செல்வழி யுய்த்திடுத லால்.

(இ - ள்.) திறன் இலர் என்று - நல்லொழுக்க மில்லாதவரென்று, எள்ளப்படுவதூஉம் அன்றி - இகழப்படுவதுமல்லாமல், நிரயத்து - நரகத்துக்கு, செல்வழி - செல்லும் வழியில், உய்த்திடுதலால் - செலுத்துதலால், அறன் அறிந்தார் - ஒழுக்கம் அறிந்தவர், பிறர் மனை - பிறருடைய மனையாளை விரும்புவதும், கள் - கட்குடிப்பதும், களவு - களவு செய்வதும், சூது - சூதாடுதலும், கொலையோடு - கொலை செய்தலும், இவ் ஐந்தும் - இவ்வைந்தையும், நோக்கார் - மனத்தாலும் நினையார்.

(ப - பொ - ரை.) பிறர் மனையாளும், கள்ளும், களவும், சூதும், கொலையும் என்றிவ்வைந்தினையும், அறனறிந்தார் செய்வேமென்று கருதார். கருதுவாராயின் திறப்பாடிலரென்று பலரால் இகழப்படுதலுமன்றியே, நரகத்தின்கண் செல்லும் நெறியில் இவை செலுத்துதலான்.

(க - ரை.) பிறர்மனை நயத்தல், கள்ளுண்ணல், களவுசெய்தல் கொலைசெய்தல், சூதாடல் இவை இகழ்ச்சிக்கும் நரகத்துக்குங் காரணமாதலால் இவைகளை மனத்திலும் நினைத்தல் ஆகாது.

மனை - மனைவி : இடவாகு பெயர். அறன், திறன் : அறம் திறம் என்பவற்றின் போலி. படுவதூஉம் - இன்னிசை யளபெடை. படுவது : தொழிற்பெயர். எள்ள - இகழ, எள் : பகுதி. ‘செல்வுழி யுய்த்திடுதலான்’ என்றும் பாடம். களவு : தொழிற்பெயர், கள் : பகுதி. மனத்தாற் கருதுதலும் பாவமாதலின் நோக்கார் என்பதற்கு நினையார் என்று பொருளுரைக்கப்பட்டது. (௩௭)

## சிந்திக்க லாகாதவை

பொய்குறளை வெளவ லழுக்கா றிவைநான்கும்
ஐயந்தீர் காட்சியார் சிந்தியார்—சிந்திப்பின்
ஐயம் புகுவித் தருநிரயத் துய்த்திடுந்
தெய்வமுஞ் செற்று விடும்.

(இ - ள்.) ஐயம் தீர் காட்சியார் - சந்தேகந் தீர்ந்த அறிவுடையவர், பொய் - பொய் பேசுதலும், குறளை - கோட்சொல்லுதலும், வெளவல் - பிறர் பொருளைக் கைக்கொள்ளுதலும், அழுக்காறு - பொறாமை கொள்ளுதலும், இவை நான்கும் - என இவை நான்கினையும், சிந்தியார் - நினையார், சிந்திப்பின் - நினைப்பாராயின், ஐயம் புகுவித்து - இம்மையில் பிச்சை யெடுக்கும்படி வறுமை யடையச்செய்து, அரு நிரயத்து - மறுமையில் அருமையான நரகத்திலும், உய்த்திடும் - செலுத்திவிடும், தெய்வமும் செற்றுவிடும் - தெய்வமும் அழித்துவிடும்.

(ப. பொ - ரை.) பொய்யும் குறளையும் பிறர் பொருளைத் தாம் வெளவவேண்டுங் காதலும் பிறராக்கத்தின்கண் பொறாமையும் என இவை நான்கினையும் ஐயந்தீர்ந்த அறிவினையுடையார் நினையார் நினைப்பாராயின் பிச்சை புகுவித்து நரகத்தின் கண்ணேயும் புகுவிக்கும் ; தெய்வமும் கெடுத்துவிடும்.

(க - ரை.) பொய் குறளை பேசுதலும், பொறாமை யுறுதலும், பிறர் பொருள் வெளவுதலும் வறுமையுறுவித்துத் தெய்வத்தின் கோபத்துக்கும் ஆளாக்கும்.

அழுக்காறு - அழுக்கறு : பகுதி, முதனிலை திரிந்த தொழிற்பெயர் ; அழுக்கு - பொறாமை, எதிர்மறை யிலக்கணையாய் அழுக்கருமையாகிய பொறாமைக்காயிற்று. குறளை - குறள்: பகுதி, சிறுமை. ஐயம் என்பது திரிபு, அறியாமை என்னும் அதன் இனத்தையும் குறித்தது. செற்று - செறு: பகுதி. (௩௮)

### மனைப் பலியூட்டல்

தமக்கென் றுலையேற்றார் தம்பொருட்டேன் கொள்ளார்
அடுக்களை யெச்சிற் படாஅர் மனைப்பலி
ஊட்டினமை கண்டுண்க ஊண்.

(இ - ள்.) தமக்கு என்று உலை ஏற்றார் - தமக்கென்று உலை வையார், தம் பொருட்டு - தங்காரணத்தால், ஊன் கொள்ளார் - ஊனைக் கொள்ளார், அடுக்களை - அட்டிலின்கண், எச்சில்படார் - எச்சிற்படுத்தார், மனைப்பலி - மனையுறை தெய்வங்கட்குப் பலி, ஊட்டினமை கண்டு- ஊட்டியதை யறிந்த பின்னர், ஊண் உண்க- தாமும் உண்க

(ப. பொ - ரை.) தமக்கென் றுலை யேற்றார், தெய்வப் பொருட்டன்றித் தங்காரணத்தால் கொன்ற ஊனைக் கொள்ளார், அட்டிலின்கண் எச்சிற்படுத்தார் ; மனையுறை தெய்வங்கட்குப் பலியூட்டினமை அறிந்த பின்னைத் தாம் உண்க.

(க - ரை.) தமக்கு என்று உலைவைத்தலும் ஒருயிரைக் கொன்றுண்ணுதலும் ஆகா. மடைப்பள்ளியை எச்சிலாக்காது வீட்டுத் தெய்வங்கட்கு உணவளித்த பின்னரே உண்க.

பொருட்டு 4ஆம் வேற்றுமைச் சொல்லுருபு. பலி - தெய்வங்கட்கு இடும் உணவு. (௩௯)

### இளங்கிளைஞர் உணவு

உயர்ந்ததின் மேலிரார் உள்ளழிவு செய்யார்
இறந்தின்னு செய்தக் கடைத்துங் குரவர்
இளங்கிளைஞர் உண்ணு மிடத்து.

(இ - ள்) இளம் கிளைஞர் - தமக்கு இளைய சுற்றத்தார் உண்ணும் இடத்து - சாப்பிடும் பொழுது, குரவர் - பெரியோர், உயர்ந்ததின்மேல் இரார் -, உள் அழிவு செய்யார் - மனமழிவன வற்றையுஞ் செய்யார் ; இறந்து - முறைமை கடந்து, இன்னு - இன்னுதவற்றை, செய்தக் கடைத்தும் - மற்றிவ் விளங்கிளைஞர் செய்த காலத்தும்.

(ப. பொ - ரை.) தமக்கிளைய சுற்றத்தார் உண்ணுமிடத்துக் குரவராயினுர் உயர்ந்ததின் மேலிரார், இளங்கிளைஞர் மனமழிவனவற்றையும் செய்யார், முறைமை கடந்து மற்றவ் விளங்கிளைகள் இன்னுத செய்த காலத்தும்.

(க - ரை ) சிறுவர்கள் உண்ணுமிடத்துப் பெரியோர் உயர் பீடத்திலிருத்தலும், அவர்கள் மனம் நோகும்படி ஏதாவது செய்தலும் ஆகா.

உள்ளழிவு - உள்ளழிதற்குக் காரணமானது. 'இளங்கிளைகள்' என்றும் பாடம். இறந்து - இற : பகுதி ; கட. இன்னு : எதிர்மறைப் பலவின்பாற் பெயர். செய்தக் கடை - வினையெச்சம். கிளைஞர் - ஞ் : பெயரிடைநிலை. (௪0)

### நுண்ணிய நூலறிவினர் செயல்

கண்ணெச்சில் கண்ணூட்டார் காலோடு கால்தேயார்
புண்ணிய மாய தலையோ டுறுப்புறுத்த
நுண்ணிய நூலறிவி னுர்.

(இ - ள்.) கண் எச்சில் - ஒருவன்தன் கண்ணிற்கு மருந்தெழுதிய கோல்கொண்டு, கண் ஊட்டார் - அவ்வெச்சில் கழி

யாது, தம் கண்ணிற்கு அம்மருந்து ஊட்டார், காலொடு கால்-தங் காலோடு காலை, தேயார் - தேய்க்கமாட்டார், புண்ணியமாய - புண்ணியமான பொருள்களை, தலையோடு - தலையுடன், உறப்பு - மற்ற உறுப்பின் கண்ணும், உறுத்த - உறுத்துக, நுண்ணிய - நுட்பமான, நூல் அறிவினர் - நூலை யுணர்வார்.

(ப. பொ - ரை.) ஒருவன் தன் கண்ணிற்கு மருந்து எழுதிய கோல்கொண்டு அவ்வெச்சில் கழியாது தங்கண்ணிற்கு அம்மருந்து ஊட்டார். தங் காலோடு கால் தேயார். புண்ணியமாய பொருள்களைத் தம் தலையின்கண்ணும் மற்றை உறுப்பின் கண்ணும் உறுத்துக ; நுண்ணிய நூலை யுணர்வார்.

(க - ரை.) ஒருவர் கண்ணெழுதிய கோலைச் சுத்தம் செய்யாமல் பிறர் கண்ணிற் செலுத்தக்கூடாது. காலொடு கால் தேய்க்கலாகாது. புனிதமான பொருள் கிடைத்தால் அதனைத் தலையிலும் கண் முதலிய உறுப்புக்களிலும் ஒற்றிக்கொள்க.

கண்ணெச்சில் - கண்ணின் எச்சில் : ஆறும் வேற்றுமைத் தொகை. உறுத்த : அகரவீற்று வியங்கோள். " நுண்ணிய நூலுணர்வினர் " என்றும் பாடம். ஊட்டல் - எழுதுதல். ஆய : ஆகிய என்பதன் விகாரம் ; யகரவொற்று இறந்தகால இடைநிலை. (சக)

### மனைவியை நீங்கியிருக்குங்காலமும் நீங்காதுறையுங் காலமும்

தீண்டாநாள் முந்நாளும் நோக்கார்நீ ராடியபின்
ஈராறு நாளும் இகவற்க என்பதே
பேரறி வாளர் துணிவு.

(இ - ள்.) தீண்டா - (தம் மனைவியர்க்குப் பூப்பு நிகழ்ந்தால்) மெய்யுறலாகாத, முந்நாள் - நாள் மூன்றின் கண்ணும், நோக்கார் - அவரை நோக்கார், நீராடியபின் - தலைமுழுகினபின், ஈர் ஆறு நாளும் - பன்னிரண்டு நாள் அளவும், இகவற்க - அகலாதொழிக, என்பது - என்று சொல்லப்படுவது, பேரறிவாளர் - மிக்க ஆராய்ச்சியாளர், துணிவு - கொள்கை.

(ப பொ - ரை.) தம் மனைவியர்க்குப் பூப்பு நிகழ்ந்தால், மெய்யுறலாகாத நாள் மூன்றின் கண்ணும் அவரை நோக்கார், நீராடிய பின்பு பன்னிரண்டு நாளும் அகலாதொழிக என்று சொல்லப்படுவது பேரறிவாளர் துணிவு.

(க - ரை.) மனைவியர்க்கு மாதப்பூப்பு - மாதவிலக்கம் நிகழ்ந்தால் மூன்று நாளளவும், அவர் முகத்தைக் கணவன் காண

லாகாது. மூன்று நாளுங் கழிந்து தலைமுழுகின பின் பன்னிரண்டு நாளளவும் அவரைப் பிரிதலாகாது.

தீண்டா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மூந்நாள் - மூன்று + நாள். ஈராறு - இரண்டு + ஆறு. இகவற்க : எதிர்மறை வியங்கோள்.

" பூப்பின் புறப்பா டீரா றுநாளும்
நீத்தகன் றுறையா ரென்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான."

என்பது தொல்காப்பியம் பொருள் - கற்பியல் ௪௬ ஆம் சூத்திரம். அஃதாவது, பூப்புத் தோன்றிய மூன்று நாளும் கூட்டமின்றி அணுக இருந்து அதன் பின்னர்ப் பன்னிரண்டு நாளும் கூடியுறைக என்றதாம். பூப்புப் புறப்பட்ட ஞான்றும் மற்றை நாளுங் கருத் தங்கில் அது வயிற்றில் அழிதலும், மூன்றுநாள் தங்கில் அது சில்வாழ்க்கைத்தாதலும் பற்றி மூந்நாளும் கூட்டமின்று என்றார். கூட்டமின்றியும் நீங்காதிருத்தலின் பரத்தையிற் பிரிந்தானெனத் தலைவி நெஞ்சத்துக்கொண்ட வருத்தம் அகலும். அகலவே, அக் கரு மாட்சிமைப்படுமாயிற்று. இது மகப்பேறுக் காலத்துக்குரிய நிலைமை கூறிற்று.

இலக்கண விளக்க வாசிரியர் வைத்தியநாத நாவலரும் அகத்திணையியல் 87 ஆம் சூத்திரமாக,

" பூத்த காலைப் புனையிழை மனைவியை,
நீரா டியபின் ஈராறு நாளும்,
கருவயிற் றுறூஉங் காலமாதலின்,
பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன்."

என்றனர். (௪௨)

### உடனுறைவுக்காகாக் காலம்

உச்சியம் போழ்தோ டிடையாமம் ஈரந்தி
மிக்க இருதேவர் நாளோ டுவாத்திதிநாள்
அட்டமியும் ஏனைப் பிறந்தநாள் இவ்வனைத்தும்
ஒட்டார் உடனுறைவின் கண்.

(இ - ள்.) உச்சி அம் போழ்தோடு - உச்சியம் பொழுதும், இடையாமம் - நடுக்கங்குலும், ஈர் அந்தி - மாலையும் காலையும், மிக்க இரு தேவர் நாளோடு - மிகுந்த சிவன் விண்டு ஆகிய இரு தேவர் நாளாகிய ஆதிரையும் ஓணமும், உவா திதி நாள்-உவாவும், அட்டமியும்-அட்டமியும், ஏனை பிறந்த நாள்-தாம் பிறந்த நாளும்,

இ அனைத்தும் - இந்நாட்களின்கண், உடன் உறைவின் கண் - தம் மனைவியரோடு சேர்ந்திருக்க, ஒட்டார் - நல்லார் உடன்படார்.

(ப. போ - ரை.) உச்சியம்பொழுதும் நடுக்கங்குலும், மாலை யுங் காலையும், மிக்க இருதேவர் நாளாகிய ஆதிரையும் ஓணமும், உவாவும், அட்டமியும், தாம் பிறந்த நாளும், என இந்நாட்களின் கண் தம் மனைவியரோடு உடனுறைதலின்கண் நல்லார் உடன் படார்.

(க - ரை) நடுப்பகலிலும் நள்ளிரவிலும் மாலையிலுங் காலை யிலும் திருவாதிரையிலும் திருவோணத்திலும், அமாவாசை பௌர்ணமியிலும் அட்டமியிலும் பிறந்தநாளிலும் கலவி யாகாது.

உச்சி - நடு, நண்பகல். பொழுது என்பது போழ்து என மருவியது. அந்தி - காலை மாலை. உவா - அமாவாசை பௌர் ணமி. அட்டமி - பௌர்ணமி, அமாவாசை இவற்றின் பின்வரும் எட்டாவது நாள். ஒட்டார் - பொருந்தார், இணங்கார். "பிறந்த நாள் இவ்வெட்டும்" என்றும் பாடம். (௩௫)

மணை முதலியவை

நாழி மணைமேல் இரியார் மணைகவிழார்
கோடி கடையுள் விரியார் கடைத்தலை
ஓராது கட்டிற் படாஅர் அறியாதார்
தந்தலைக்கண் நில்லா விடல்.

(இ - ள்.) நாழி - நாழியை, மணைமேல் - மணைமீது, இரி யார் - இருத்தார், மணை - மணையை, கவிழார் - கவிழ்த்து வையார், கோடி - புத்தாடையை, கடையுள் - தலைக்கடையின்கண், விரியார் - பரப்பார், கடைத்தலை - பலரும் புகும் கடைத்தலைக்கண், ஓராது - ஆராயாமல், கட்டில் படார் - கட்டிலில் படுக்க மாட்டார்; அறியா தார் தம் தலைக்கண் - தம்மை அறியாதவரெதிரில், நில்லாவிடல் - நிற்றலொழிக.

(ப. போ - ரை.) நாழியை மணைமேல் இருத்தார், மணை யைக் கவிழ்த்துவையார், புத்தாடையைத் தலைக்கடையின்கண் விரியார், பலரும் புகுதுங் கடைத்தலைக்கண் ஆராயாது கட்டிற் படார்; தம்மை அறியாதவர் முன்பு நில்லாது விடுக.

(க - ரை.) அளக்கும் படியை மணைமேல் வைத்தலும், மணை யைக் கவிழ்த்து வைத்தலும், புத்தாடையைத் தலைக்கடையில்

விரித்தலும், தலைக்கடையிற் கட்டிலிட்டுப் படுத்தலும் ஆகா. தம்மை யறியாதா ரெதிரில் நிற்காதிரு.

நாழி: முகத்தலளவை யாகுபெயர். இரியார்: பிறவினை விகுதி குன்றிவந்தது; இரு: பகுதி, இ: சாரியை. நில்லா விடல் - நில்லாமல் விடல். அறியாதார் தந்தலைக்கண் நில்லா விடல் என்பதற்கு அறியாதார் கடைக்கண் நில்லாது விடுக எனினு மாம். (சச)

### பந்தலிற் பரப்பத்தகாதவை

துடைப்பந் துகட்காடு புல்லிதழ்ச் சேத்தல்
கருங்கலங் கட்டில் கிழிந்ததனோ டைந்தும்
பரப்பற்க பந்த ரகத்து.

(இ - ள்.) துடைப்பம் - பெருக்குமாறும், துகள் காடு - துகளோடு கூடிய செத்தையும், புல் இதழ் - பூவின் புறவிதழும், செத்தல் - பழமையான, கருகலம் - கரிச்சட்டியும், கிழிந்த கட்டில் அதனோடு - கிழிந்த கட்டிலும், ஐந்தும் - ஆகிய இவ்வைந்தையும், பந்தர் அகத்து - மணப்பந்தலின்கீழ், பரப்பற்க - பரப்பாதொழிக.

(ப. பொ - ரை.) தூறால் சீக்குந் துடைப்பமும், துகளோடு கூடிய தூறாலும், பூவின் புறவிதழும், பழங் கருங்கலங்களும், கிழிந்த கட்டிலும் என இவ்வைந்தும் மணப்பந்தரின் கீழ்ப் பரப்பாதொழிக.

(க - ரை.) திருமணப்பந்தலின் கீழ்த் துடைப்பம், செத்தை, பூவின் புறவிதழ், பழங்கரிப்பானை, கிழிந்த கட்டில் என்னு மிவைகளைப் பரப்பலாகாது.

தூறால் - செத்தை. செத்தல் - பசுமையற்றது; பழைமை. புல்லிதழ் - மலரின் மேற்புறத்துள்ள இதழ்; புறவிதழ். அகவிதழ், அல்லியெனப்படும். பந்தல் - பந்தர்: ஈற்றுப்போலி. (சரு)

### இல்லம் பேணும் முறை

காட்டுக் களைந்து கலங்கழீஇ யில்லத்தை
ஆப்பிநீ ரெங்குந் தெளித்துச் சிறுகாலை
நீர்ச்சால் கரக நிறைய மலரணிந்(து)
இல்லம் பொலிய அடுப்பினுள் தீப்பெய்க
நல்ல துறல்வேண்டு வார்.

(இ - ள்.) நல்லது உறல் - நன்மை யடைதலை, வேண்டுவார் - விரும்புவார், சிறுகாலை-அதிகாலை துயில் எழுந்து, இல்லம்-வீடு, பொலிய - விளங்கும்படி, காடு களைந்து - செத்தைகளைப் போக்கி, கலம் கழீஇ - கருங்கலங்களைக் கழுவி, ஆப்பிநீர் - ஆப்பி நீராலே, இல்லத்தை எங்கும் - தம் மனையெங்கும், தெளித்து—, நீர்ச்சால்-நீர்நிறைக்கும் சாலையும்; கரகம் - கரகங்களையும், நிறைய-நிறையும்படி, மலர் அணிந்து - பூ அணிந்து, அடுப்பினுள் தீ பெய்க-அடுப்பினுள் தீயுண்டாக்குக.

(ப. பொ - ரை.) சிறு காலையே துயிலெழுந்து, இல்லத்துள்ள தூரலைக் களைந்து, கருங்கலங்களைக் கழுவி, தம் மனை ஆப்பி நீராலே எங்குந் தெளித்து. நீர்ச்சாலையும கரகத்தையும் நிறைய மலரணிந்து, இல்லத்துப் பொலியும்படி அடுப்பினுள் தீயுண்டாக்குக; நல்ல செல்வத்தை யுறல் வேண்டுவோர்.

(க - ரை.) நல்ல செல்வத்தை யடையவேண்டுவோர் வைகறையில் எழுந்து வீட்டை விளக்கிக் கலங்களைக் கழுவி வீடு முழுவதும் சாணநீர் தெளித்து, நீர்ச்சால், கரகங்களை மலரணிந்து, பின்பு அடுப்பினுள் தீ மூட்டுதல் வேண்டும்.

காடு - செத்தை. கரகம் - வட்டில், கமண்டலம். மலரணிதல் - மங்கலக்குறி. மணத்துக்காக வெனின், மலர் பாதிரி சண்பகம் போன்ற பூக்கள். காலம் என்பது காலை என வந்தது. (சசு)

### ஓதற்குதவாத காலம்

அட்டமியும் ஏனை உவாவும் பதினான்கும்
அப்பூமி காப்பார்க் குறுகண்ணு மிக்க
நிலத்துளக்கு விண்ணதிர்ப்பு வாலாமை பார்ப்பார்
இலங்குநூல் ஓதாத நாள்.

(இ - ள்.) அட்டமியும் - எட்டாநாளும், ஏனை-அது ஒழிந்த, உவாவும் - அமாவாசையும் பௌர்ணமியும், பதினான்கும் - பதினான்காநாளும், அ பூமி - தாந் தங்கிய பூமியை, காப்பார்க்கு - காக்கு மரசர்க்கு, உறுகண்ணும் - துன்பம் வருங்காலமும், மிக்க-மிகுதியான, நிலம் துளக்கு - பூமியின் அதிர்ச்சியுள்ள நாளும், விண் அதிர்ப்பு - மேக முழக்கமுள்ள நாளும், வாலாமை - தாம் தூயரல்லாத நாளும், ஆகிய இந்நாள்களில், பார்ப்பார் - அந்தணர், இலங்கு நூல் - விளங்கா நின்ற மறைநூலை, ஓதாதநாள்-படிக்கலாகாத நாட்களாம்.

(ப. பொ - ரை.) அட்டமிநாளும், உவாநாளும், பதினான்கா நாளும், தாமுறையும் பூமிகாக்கும் அரசர்க்கு உறுகண்ணுள்ள

நாளும், தமக்குத் தூய்மை போதாத நாளும் என இந்நாட்கள் பார்ப்பார் வேதமோதாத நாட்கள்.

(கு - ரை.) அட்டமி அமாவாசை பௌர்ணமி சதுர்த்தசி அரசர்க் குறுகண்வேளை பூகம்பம் இடிமுழக்கம் தூய்மையின்மை என்னு மிவை வேதமோதலாகா நாட்கள்.

அ : சிறப்புப்பற்றிவந்த சுட்டு. இது பண்டறி சுட்டு, உலகறி சுட்டு என்றும் வழங்கப்பெறும். உறுகண் - கலக்கமடைந்த கண்; கலக்கமடைதல், துன்பமுண்டாயினுதலால் உறுகண் துன்பம் எனப்பட்டது. வேதம் என்று மழியாது ஒருதன்மைத்தாயிருப்பதால், இலங்குநூல் எனப்பட்டது. அதிர்ப்பு : தொழிற் பெயர். இச்செய்யுட்பொருள் அடியில் வருங் காசிகண்டச் செய்யுளில் அமைந்திருத்தலறிக.

"உருமுமண் வாரி யுற்கைவீழ்ந் திடுநாள்
சுழல்வளி யுற்றநா ளோர்ப்ப
எரிபடு நாளி லரையிருட் போதிற்
பின்னவ ரிருந்திடு மிடத்தில்
அரசருக் கிடையூ றுற்றுழி யவர்கட்
கசுபம்வந் துற்றிடு நாளில்
மருவிய பதினுன் கிருவா நந்தை
அட்டமி யோதல்மாண் பன்றே." (சஎ)

பெருஞ்சோ றளிக்குங் காலம்

கல்லியாணந் தேவர் பிதிர்விழா வேள்வியென்(று)
ஐவகை நாளும் இகழா தறஞ்செய்க
பெய்க விருந்திற்குங் கூழ்.

(இ - ள்.) கல்லியாணம் நாள் - தான் செய்யுங் கல்லியாண நாளின்கண்ணும், தேவர் (நாள்) - தேவர்க்குச் சிறப்பு நாளின் கண்ணும், பிதிர்நாள் - பிதிரர்கட்குச் சிறப்புச் செய்யும் நாளின் கண்ணும், விழா நாள்- விழா நாளின் கண்ணும், வேள்வி நாள் - வேள்வி செய்யும் நாளின் கண்ணும், என்ற ஐவகை நாளும் - என்ற ஐவகைப்பட்ட காலத்தும், இகழாது - இகழாதே, அறம் செய்க- கொடையறஞ் செய்க, விருந்திற்கும் - விருந்தினர்க்கும், கூழ் பெய்க - சோறிடுக.

(ப. போ - ரை.) தான் செய்யும் கலியாண நாளின்கண்ணும், தேவர்க்குச் சிறப்புநாளின் கண்ணும், பிதிர்கட்குச் சிறப்புச் செய்யும் நாளின்கண்ணும், விழாநாளின்கண்ணும் யாகம் செய்யும்

நாளின் கண்ணும் இகழாதே கொடையறஞ் செய்க; விருந்தினர்க் குஞ் சோறிடுக.

(க - ரை.) கலியாண நாள் முதலிய ஐவகை நாட்களிலும் தானம் செய்வதுடன் விருந்தினர்க்குஞ் சோறிடுக.

தேவர்நாள் - தெய்வத்திற்குச் செய்யப்படும் திருவிழாநாள். பிதிர்கள் - இறந்துபோன பெரியோர் அல்லது படைப்புக் காலந் தொட்டு விளங்கும் ஒருவகைத் தேவர். (சஅ)

### குடிமை முதலியவற்றிற்குத் தக்க செயல்

உடைநடை சோற்சோர்வு வைதலிந் நான்கும்
நிலைமைக்குங் கல்விக்கும் ஆண்மைக்குந் தத்தங்
குடிமைக்குந் தக்க செயல்.

(இ - ள்.) உடை - உடுத்தலும், நடை - நடத்தலும், சொற் சோர்வு - சொல் தவறுதலும், வைதல் - திட்டுதலும், இந் நான்கும்-ஆகிய இந்த நான்கையும், தம் தம் - தங்கள் தங்களுடைய, நிலைமைக்கும் - பதவிக்கும், கல்விக்கும் - படிப்புக்கும், ஆண்மைக் கும் - ஆற்றலுக்கும், குடிமைக்கும் - குடிப்பிறப்புக்கும், தக்க - தகுதி யுடையனவாக, செயல் - செய்யக்கடவர்.

(ப. போ - ரை.) உடையும் நடையும் சொற்சோர்வும் வைதலும் என இந்நான்கும், தாம் அரசனால் சிறப்புறப் பெற்ற மைக்கும், தன் ஆண்மைக்கும், தம் கல்விக்கும், குடிப்பிறப்புக் கும் தக்க தகுதியாகச் செய்க.

(க - ரை) உடை நடை முதலியவற்றைத் தத்தம் நிலைமை கல்வி முதலியவற்றுக்குத் தகுந்தபடி செய்க.

சொற்சோர்வு - சொல்லினது சோர்வு: ஆறும் வேற்றுமைத் தொகை; சொல் சோர்தல், அஃதாவது தவறுதல்: எழுவாய்த் தொடர். ஆண்மை: மை விகுதி தன்மைப்பொருள் குறித்தது. தக்க: வினையுரியாய் வந்தது. நிலைமை - தானம் அல்லது பதம். 'சொற் செலவு' என்றும் பாடம். (சகூ)

### கேள்வியுடையோர் செயல்

பழியா ரிழியார் பலருள் ளுறங்கார்
இசையாத நேர்ந்து கரவார் இசைவின்றி
இல்லாரை யெள்ளி இகழ்ந்துரையார் தள்ளியுந்
தாங்கருங் கேள்வி யவர்.

(இ - ள்.) தாங்க அரும் - தாங்குதற்கு அரிய, கேள்வியவர் - நூற்கேள்வி யுடையவர், தள்ளியும் - இறந்தும், பலருள் - பலர் நடுவிலிருந்தும், பழியார் - ஒருவரைத் தூற்றார், இழியார்-இகழ்ந்து பேசார், உறங்கார் - படுத்துத் தூங்கார், இசையாத - தமக்குப் பொருந்தாத செயல்களை, நேர்ந்து - செய்கிறோம் என்று ஒப்புக் கொண்டு, கரவார் - பின்னர் அதைச் செய்யாது ஒளியார், இசைவு இன்றி - முறையில்லாமல், இல்லாரை - வறியவரை, எள்ளி - ஏளனம் பண்ணி, இகழ்ந்துரையார் - இழிவாகப் பேசார்.

(ப. பொ - ரை.) பலர் நடுவண் இருந்து பிறரைப் பழித் துரையார், இழித்துரையார், பலர் நடுவண் உறங்கார், தமக்குச் செய்யப் பொருந்தாதவற்றைப் பிறர்க்குச் செய்கிறேமென்று உடன்பட்டுச் செய்யாதொழியார், தகுதியின்றி வறியாரை இகழ்ந்து முறைமை கடந்து உரையார், பிறரால் மாறுபடற்கரிய கேள்வியார் இறந்தும்.

(க - ரை.) கல்வி கேள்வியுடையர் பலர் நடுவிலிருந்து பழித் திழித்துப் பேசார், உறங்கார், ஒன்றைச் செய்வதாக ஒப்பிப் பின் செய்யாதிரார், ஏழைகளை யிகழ்ந்துரையார்.

> "செயக்கடவ வல்லனவுஞ் செய்துமன் னென்பார்
> நயத்தரு நாகரிக மென்னும்."

என்பதன் கருத்துணர்க.

பலருள்: இடைகழி விளக்காய் நின்றது. இது தாப்பிசைப் பொருள்கோள். இசையாத: பலவின்பால் வினையாலணையும் பெயர். தாங்கரும் - மாறுபடற்கரிய எனவுமாம். (ருo)

### தம்மொளி வேண்டுவோர் செய்யத்தக்கன

> மின்னொளியும் வீழ்மீனும் வேசையர்கள் கோலமுந்
> தம்மொளி வேண்டுவார் நோக்கார் பகற்கிழவோன்
> முன்னொளியும் பின்னொளியு மற்று.

(இ - ள்.) தம் ஒளி வேண்டுவார் - தமது உடல் ஒளி விரும்பு வோர், மின் ஒளியும் - மின்னலின் ஒளியையும், வீழ் மீனும் - விழுகின்ற எரிநட்சத்திரத்தையும், வேசையர்கள் - வேசியரது, கோலமும் - ஒப்பனையையும், நோக்கார் - பாரார், பகல் கிழ வோன் - பகலுக்குரியனான ஞாயிற்றினது, முன் ஒளியும் - காலை யொளியும், பின் ஒளியும் - மாலை யொளியும், அற்று - அங்ஙனமே பார்க்கத் தகாதனவாம்.

(ப. போ - ரை.) மின்னொளியையும், வீழ்மீனையும், வேசையர்கள் கோலத்தையும் தமது விளக்கத்தை வேண்டுவோர் நோக்கார், பகற்கிழவோனுடைய காலை யொளியையும் மாலை யொளியையும் அப்பெற்றியே நோக்கார்.

(க - ரை.) தம் உடல் ஒளி கெடாதிருக்க வேண்டுவோர் மின்னல் எரிமீன் வேசைக்கோலம் காலை மாலை வெயில் இவைகளை யுற்றுப் பார்த்தல் கூடாது.

கிழமை - உரிமை; உரிமையானவன் கிழவன், கிழவன் - செய்யுளில் கிழவோன் ஆயிற்று. அற்று: குறிப்புமுற்று. ஒளி - விளக்கம். ஒளி - வெயில். (கூக)

அசையாத உள்ளத்தவ ரொழுக்கம்

படிறும் பயனிலவும் பட்டி யுரையும்
வசையும் புறனும் உரையாரே யென்றும்
அசையாத உள்ளத் தவர்.

(இ - ள்.) என்றும் - எக்காலத்தும், அசையாத - ஒழுக்கத்தினின்றுந் தவறாத, உள்ளத்தவர் - மனமுடையோர், படிறும் - வஞ்சனைச் சொல்லையும், பயனிலவும் - பயனற்ற சொல்லையும், பட்டி உரையும் - நாவடக்கமில்லாத சொல்லையும், வசையும் - பழிச்சொல்லையும், புறனும் - புறங்கூறுதலையும், உரையார் - சொல்லார்.

(ப. போ - ரை.) வஞ்சனையுரையும், பயன்படாத உரையும், வாய் காவாது வேண்டிய உரைக்கும் உரையும், பிறரைப் பழியுரைக்கும் உரையும், இவை யாவும் சொல்லார், என்றுந்தளராத உள்ளத்தவர்.

(க - ரை.) வஞ்சனைமொழி பயனில்சொல் முதலியவற்றை ஒழித்தல் வேண்டும்.

பட்டி - கள்ளம், இங்கு நாவடக்க மின்மையைக் குறித்தது. புறங்கூறல் - முன்னின்று புகழ்ந்து பின்னின்றிகழ்ந்துரைத்தல். படிறு - வஞ்சனை : பண்பாகு பெயராய் வஞ்சனையாகிய சொல்லைக் குறித்தது. 'பட்டியுரையாம் வசையும்' என்று பாடம். (கூஉ)

நெறிப்பட்டார் பயிலாதன

தெறியோடு கல்லேறு வீளை விளியே
விகிர்தங் கதங்கரத்தல் கைபுடை தோன்ற
உறுப்புச் சேகுத்தலோ டின்னவை யெல்லாம்
பயிற்றார் நெறிப்பட் டவர்.

(இ - ள்.) நெறிப்பட்டவர் - ஒழுக்கமுடையோர், தெறியொடு - தெறித்தலும், கல் எறு - கல் எறிதலும், வீளை - கனைத்தல் முதலியன செய்தலும், விளியே - அழைத்தலும், விகிர்தம் - ஒருவன் செய்வதுபோலத் தானும் அவனை யிகழ்ந்து செய்தலும், கதம் - கோபமும், காத்தல் - ஒளித்தலும், கை புடை - கை தட்டலும், தோன்ற - பிறர்க்கு வெளிப்படும்படி, உறுப்பு செகுத்தலோடு - தன் உறுப்புக்களை அழித்தலும், இன்னவை எல்லாம் - ஆகிய இவற்றையெல்லாம், பயிற்றார் - பழகிச்செய்யார்.

(ப. போ - ரை.) தெறித்தலும் கல்லெறிதலும், வீளை செய்தலும், தூரப்போகின்ற ஒருவனை அழைத்தலும், ஒருவன் செய்கையும் சொல்லும் முதலாயினவற்றைத் தானும் அவ்வகை இகழ்ந்து செய்துகாட்டலும், வேகமுடையனாதலும், ஒளித்தலும், கையொடு கை புடைத்தலும், பிறர்க்கு வெளிப்படக் கண்ணிடுதல் முதலாயின செய்து தன்னுறுப்பைச் செகுத்தலும், இப்பெற்றிப் பட்டவையெல்லாம் பயின்று செய்யார் வழிப்பட்டார்.

(க - ரை.) ஒரு பொருளை விசிறி யெறிதல் கல்லெறிதல் முதலிய தீய பழக்கங்களைச் செய்யலாகாது.

பயிற்றார்: பயிற்று என்னும் பிறவினைப் பகுதியடியாகப் பிறந்த எதிர்மறைப் பலர்பால் வினைமுற்று. செகுத்தல் - அழித்தல்; செகு: பகுதி. எறு: எறி என்பதன் விகாரம். (ருக)

### விருந்தினர்க்கு ஊணொடு செய்யுஞ் சிறப்பு

முறுவல் இனிதுரை கால்நீர் மணைபாய்
கிடைக்கையோ டிவ்வைந்து மென்ப தலைச்சென்றார்க்கு
ஊணொடு செய்யுஞ் சிறப்பு.

(இ - ள்.) தலை - தம்மிடத்து, சென்றார்க்கு - வரும் நண்பர் முதலாயினார்க்கு, ஊண் ஒடு - உணவளித்தலோடு, செய்யும் சிறப்பு - செய்யுஞ் சிறப்புக்கள், முறுவல் - புன்சிரிப்புடன், இனிது உரை - இனியமொழி பேசலும், கால் நீர் - கால்கழுவ நீர் அளித்தலும், மணை - உட்கார மணைகொடுத்தலும், பாய் - படுக்கப் பாய் கொடுத்தலும், கிடக்கையோடு - தங்க இடங்கொடுத்தலும், இ ஐந்தும் என்ப - இவ்வைந்தும் என்றார் அறிவுடையோர்.

(ப. போ - ரை.) முறுவலோடு கூடிய இனிதுரையும், கால் கழுவ நீரும், இருக்க மணையும், கிடக்கப் பாயும், கிடக்கும் இடமும் என இவ்வைந்தும் என்று சொல்லுப, தம்மிடத்துச் சென்றார்க்கு உணவுடனே செய்யும் சிறப்புக்கள்.

(க - ரை.) தம் வீட்டுக்குவரும் விருந்தினர்க்கு உணவளித்த லுடன் இன்முகம் இன்சொல்லுடன், கானீர் முதலியன உதவிச் சிறப்பிக்கவேண்டும்.

கால் நீர் - பாத்யம்; கைகழுவு நீர் - அர்க்கியம். இவை சோடச உபசாரங்களிற் சில.

"விருந்தின ஞக ஒருவன்வந் தெதிரில்
வியத்தல்நன் மொழியினி துரைத்தல்
திருந்துற நோக்கல் வருகென வுரைத்தல்
எழுதல்முன் மகிழ்வன செப்பல்
பொருந்துமற் றவன்தன் அருகுற இருத்தல்
போமெனிற் பின்செல்வ தாதல்
பரிந்துநன் முகமன் வழங்கலிவ் வொன்பான்
ஒழுக்கமும் வழிபடு பண்பே."

"தவிசுதாள் விளக்கப் புனல்தமக் கியன்ற
அடிசில்பூந் தண்மலர்ப் பாயல்
உவகையின் உறையும் இடனுகர் தெண்ணீர்
ஒண்சுடர் எண்ணெய்வெள் ளிலைகாய்
இவைகளோன் பதுந்தான் மனைவயின் அடைந்தோர்
மகிழ்வுற இனிதினில் அளித்தல்
நவையற இல்வாழ் வடைந்துளோன் பூண்ட
கடனென நான்மறை நவின்ற."—காசிகண்டம். (ருச)

அறிவினர் விரும்பாத இடங்கள்

கறுத்த பகைமுனையுங் கள்ளாட்டுக் கண்ணும்
நிறுத்த மனமில்லார் சேரி யகத்தும்
குணநோக்கிக் கோண்டவர் கோள்விட் டுழியும்
நிகரில் அறிவினர் வேண்டார் பலர்தோகு
நீர்க்கரையும் நீடு நிலை.

(இ - ள்.) நிகர் இல் அறிவினர் - ஒப்பற்ற அறிவுடையவர், கறுத்த - கோபித்த, பகை முனையும் - பகைக்கின்ற போர்முகத்திலும், கள் ஆட்டு கண்ணும் - கள் குடித்து ஆடுமிடத்திலும், நிறுத்த - நிலை நிறுத்திய, மனம் இல்லார் - மனமில்லாத வேசையருடைய, சேரி அகத்தும் - தெருவிலும், குணம் நோக்கி - தங் குணங்களை யாராய்ந்து, கொண்டவர் - நட்புக்கொண்டவர், கோள் - கோட்பாட்டை, விட்ட உழியும் - நீக்கினவிடத்திலும், பலர் தொகும் - பலர் ஒன்று கூடும், நீர் கரையும் - தண்ணீர்த் துறையிலும், நீடு நிலை - நெடிதாக நிற்கையை, வேண்டார் - விரும்பார்.

(ப. பொ - ரை.) வெகுண்ட பகைமுனையின் கண்ணும், கள்ளால் களித்தாடுமிடத்தும், பொதுமகளிர் சேரிக்கண்ணும், தங்குணங்களை யாராய்ந்து தம்மை விரும்பிக்கொண்டார் கோட்பாடு விட்டவிடத்தும், பலர் தொகும் நீர்க்கரையிடத்தும் நெடிதாக நிற்கையை ஒப்பில்லாத அறிவினை யுடையார் விரும்பார்.

(க - ரை.) போர்க்களம், கட்குடித்தாடுமிடம், பரத்தையர் சேரி முதலிய இடங்களில் தங்கியிருப்பது சரியன்று.

கறுத்த - கோபித்த 'கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள' என்றதனால் அறிக. பகை: பண்பாகு பெயர். நிறுத்த: பிற வினைப் பெயரெச்சம். சேரி - இ: வினை முதற்பொருள் விகுதி: பல வீடுகள் சேர்ந்திருப்பது. நீடுநிலை : வினைத்தொகை (ருரு)

## தொல்வரவிற் றீர்ந்த தொழில்

முளிபுல்லுங் கானமுஞ் சேரார்தீக் கூட்டார்
துளிவிழக் கால்பரப்பி யோடார் தெளிவிலாக்
கானந் தமியர் இயங்கார் துளியஃகி
நல்குர வாற்றப் பெருகினுஞ் செய்யாரே
தொல்வரவின் றீர்ந்த தொழில்.

(இ - ள்.) முளி புல்லும் - முற்றிய புல்லினிடத்தும், (முளி) கானமும் - முற்றிய காட்டினிடத்தும், சேரார் - சேர்ந்திரார், தீக்கு ஊட்டார் - (அவற்றை) நெருப்புக்கு உணவாகச் செய்யார், துளிவீழ - மழை பெய்கையில், கால் பரப்பி - காலைப் பரப்பி வைத்து, ஓடார் - ஓடமாட்டார், தெளிவு இலா - தமக்குத் தெளிவில்லாத, கானம் - காட்டில், தமியர் - தனியராக, இயங்கார் - சஞ்சரியார், துளி அஃகி - மழை குறைந்ததனால், நல்குரவு - வறுமையானது, ஆற்ற - மிகுதியாக, பெருகினும் - பெருகினாலும், தொல் வரவின் - தொன்று தொட்டுவந்த தமது குலநெறியினின்றும், தீர்ந்த தொழில் - நீங்கிய செய்கையை, செய்யார் - (அறிவுடையோர்) செய்யமாட்டார்.

(ப. பொ - ரை.) முற்றிய புல்லின் கண்ணும், முற்றிய காட்டின்கண்ணும் சேர்ந்திரார்; அவற்றைத் தீக்கு உணவாக ஊட்டார்; மழை பெய்யாநிற்கக் காலைப் பரப்பி ஓடார்; தேற முடியாத காட்டுள் தமியராய்ப் போகார்; மழை குறைந்து பெய்யாதொழிதலால் வறுமை மிகப் பெரிதாயிற்றாயினும், தங்குடியொழுக்கத்தை நீங்கிய தொழில்களைச் செய்யார்.

(க - ரை.) உலர்ந்த புற்றரையிலும் முதிர்ந்த காட்டிலும் தங்குதலும், அவற்றைத் தீயிட்டுக் கொளுத்துதலும், மழை பெய்கையில் காலைப் பரப்பியோடுதலும்; வழிதுறை தெரியாத காட்டில் தனியாகப் போதலும், வறுமைவந்த காலத்து நல்லொழுக்கந் தவறுதலும் தகாத காரியங்களாம்.

அஃகி - அஃக என்னும் காரணப்பொருளில் வந்த செயவெனெச்சத் திரிபு. பெருகினும் - உம்: இழிவு சிறப்பு. நல்குரவு - நல்கு உரவு, நல்குதலாகிய வல்லமை. இங்குக் கொடுக்கும் ஆற்றலில்லாத வறுமையைக் குறித்தது: எதிர்மறை யிலக்கணை. (கசு)

நோய்வேண்டாதார் செய்யலாகாதவை

பாழ்மனையுந் தேவ குலனுஞ் சுடுகாடும்
ஊரில் வழியெழுந்த வொற்றை முதுமரனுந்
தாமே தமியர் புகாஅர் பகல்வளரார்
நோயின்மை வேண்டு பவர்.

(இ - ள்.) நோய் இன்மை வேண்டுபவர் - பிணியில்லாதிருத்தலை விரும்புவோர், பாழ் மனையும் - பாழான வீட்டினுள்ளும், தேவகுலனும் - கோயில்களுக்குள்ளும், சுடுகாடும் - சுடுகாட்டிலும், ஊர் இல்வழி - ஊரில்லாத இடத்தில், எழுந்த - உண்டாகிய, ஒற்றை - ஒன்றாகிய, முதுமரனும் - முற்றிய மரத்திடத்தும், தாமே தமியர் - ஒன்றியாக, புகாஅர் - போகார், பகல் - பகற் பொழுதில், கண்வளரார் - தூங்கார்

(ப. பொ - ரை.) குடியில்லாத மனையகத்தும், தேவாலயங்களுக்குள்ளும். சுடுகாட்டுள்ளும், ஊரில்லாத இடத்து உளதாயின தனி முதுமரத்தின்கண்ணும், அறிவின்றித் துணையோடல்லது தாமே போகார், பகலுறங்கார் நோயின்மை வேண்டுவோர்.

(க - ரை.) பாழ்வீடு, சுடுகாடு, தனித்த பாழ்மரம் இவற்றினிடத்துத் தனித்துச் சேராமலும் பகலில் தூங்காமலுமிருப்பது, நோயில்லாதிருப்பதற்கு ஏது.

இல்வழி: பண்புத்தொகை. ஒன்று - ஒன்றை: மென்றொடர் வன்றொடராய் தனிமொழியில் ஐகாரச்சாரியை வந்தது. தமியர்: குறிப்பு முற்றெச்சம். புகாஅர்: வெண்டளை பிழையாமைக்கு வந்த அளபெடை. முதுமரம் - ஆலமரமுமாம். (கஎ)

### பிறர் ஓரிடம் புறப்படுகையிற் செய்யலாகாதவை

எழுச்சிக்கண் பிற்கூவார் தும்மார் வழுக்கியும்
எங்குற்றுச் சேறீரோ வென்னாரே முன்புக்(கு)
எதிர்முகமா நின்று முரையா ரிருசார்வுங்
கோள்வர் குரவர் வலம்.

(இ - ள்.) எழுச்சிக்கண்-ஒருவர் எழுந்து போகும்பொழுது, பின் கூவார் - பின்னே நின்று அழையார், தும்மார் - தும்மல் செய்யார், வழுக்கியும் - மறந்தும், எங்கு உற்று சேறீர்-எவ்விடம் நோக்கிப் போகின்றீர், என்னார் - என்று கேளார், முன்புக்கு - அவர் முன் சென்று, எதிர்முகம் ஆ நின்றும் - எதிர்முகமாக நின்று கொண்டும், உரையார் - ஒன்றைச் சொல்லார், இரு சார்பும் - அவர்க்கு இருபுறத்திலும் (நின்று பேசுவர்), குரவர்- அப்பெரியாரை, வலம் கொள்வர் - வலஞ்செய்து போவர்.

(ப. பொ - ரை.) பிறர் எழுந்துபோகத் தொடங்கின பொழுது அவரைப் பின்னேநின்று அழையார். அப்பொழுது தும்முவதுஞ் செய்யார். மறந்தும் எங்குப் போகிறீர் என்று சொல்லார். முன்னே புக்கு எதிர்முகமாக நின்றும் ஒன்றைச் சொல்லார். அவர்க்கு இருமருங்கு நின்று சொல்வார். தம் குரவர் போம் பொழுது வலங்கொண்டுபோக.

(க - ரை.) ஒருவர் எழுந்து போம்பொழுது அவரை அழைத்தல், எங்கே போகிறீர் என்று கேட்டல் செய்யலாகாது. பெரியோர் பக்கம் நின்று பேசுக, வலங்கொண்டுபோக.

கூவார் - கூ: பகுதி. தும்மார் - தும்மு: பகுதி. சேறீர் - செல்: பகுதி, த்: எழுத்துப்பேறு, இர்: முன்னிலைப் பன்மை விகுதி, பகுதி முதல் நீண்டு தகரம் றகரமாயிற்று. கொள்வர் என்பதை இடை நிலைத் தீவகமாகவுங் கூறலாம். (௩அ)

### நியவொழுக்கங்கள் சில

உடம்புநன் றென்றுரையார் ஊதார் விளக்கும்
அடுப்பினுள் தீநந்தக் கொள்ளா ரதனைப்
படக்காயார் தம்மேற் குறித்து.

(இ - ள்.) (ஒருவரைப் பார்த்து) உடம்பு - உடல், நன்று என்று - நன்றாயிருக்கிறதென்று, உரையார்-சொல்லார், விளக்கும் ஊதார் - விளக்கையும் ஊதி அவியார், அடுப்பினுள் தீ - அடுப்பி லுள்ளநெருப்பை, நந்த-அவியும்படி, கொள்ளார் - எடுக்கமாட்டார்,

தம்மேல் பட - அந்நெருப்பின் சுடர் தம் மேலே படும்படி, குறித்து - (குளிர்கெட) நினைந்து, அதனைக் காயார் - அந்நெருப் பினிடத்து இருந்து குளிர் காயார்.

(ப. பொ - ரை.) பிறரைப் பார்த்து உடம்பு நன்றாயிருக் கிறது என்று சொல்லார், விளக்கினையும் வாயால் ஊதி யவியார், அட்டிலடுப்பின்கண் நெருப்பவியச் செய்யார், அந்நெருப்பின் சுடர் தம் மேற்படக் குளிர்கெடக் காயார்.

(க - ரை.) ஒருவருடம்பு நன்றாயிருக்கிற தென்பதும்' விளக்கை வாயாலூதல், அடுப்பு நெருப்பை அவித்தல் முதலிய வையும் தீயொழுக்கங்களாம்.

நந்தல் - வளர்தல், கெடுதல் : இங்குக் கெடுதல் என்னும் பொருளது. (கூசு)

பெரியோருடன் செல்லும்பொழுது செய்யத்தகாதன

யாதொன்றும் ஏறார் செருப்பு வெயின்மறையார்
ஆன்றவிந்த மூத்த விழுமியார் தம்மோடங்(கு)
ஓராறு செல்லு மிடத்து.

(இ - ள்) ஆன்று - (அறிவால்) மிகுந்து, அவிந்த - அமைதி யடைந்த, மூத்த - ஒழுக்கத்தாலும் ஆண்டாலு முதிர்ந்த, விழு மியார் - மேலோர், தம் ஓடு - தம்முடன், ஓர் ஆறு செல்லும் இடத்து - ஒருவழியில் போகும்போது, யாது ஒன்றும் ஏறார் - எதன்மேலும் ஏறிச் செல்லார், செருப்பு ஏறார் - செருப்பைக் காலிற் பூணார், வெயில் மறையார் - வெயிலை மறைக்கும்படி செல் லார். அங்கு : அசை

(ப. பொ - ரை.) யாதொன்றும் ஏறிப்போகார், செருப்புத் தொடார், ஒன்றனால் பிறர் தம்மேல் வெயில்மறைக்கப் போகார், ஆன்றவிந்த மூத்த விழுமியார் தம்முடன் கூட வழிபோமிடத்து.

(க - ரை.) பெரியோர் தம்முடன் செல்லும்பொழுது வாக னத்தில் ஏறிச் செல்லுதலும் காலிற் செருப்பணிந்தும் குடை பிடித்தும் செல்லுதலும் கூடா.

ஆன்று ; சான்று என்பதன் மரூஉ. சால் : பகுதி. அகன்று என்பதன் மரூஉ என்பாரு முண்டு. அவிந்த - தீக்குணங் கள் கெட்ட, அடங்கப்பெற்ற. 'ஆன்றமைந்த' என்றும் பாடம். (கூ0)

## நூன்முறையாளர் துணிவு

வான்முறை யான்வந்த நான்மறை யாளரை
மேன்முறைப் பால்தங் குரவரைப் போலொழுகல்
நூன்முறை யாளர் துணிவு.

(இ - ள்.) வால் முறையால் வந்த-தூய ஒழுக்கத்தால் வந்த, நால் மறை ஆளரை - நான்கு மறைகளையுமுடைய அந்தணரை, மேல் முறைப் பால் - மேன்மையாகிய முறைத்தன்மையை யுடைய, குரவரைப்போல் - தம்முடைய பெரியோரைப்போல, ஒழுகல் - (எண்ணி) நடத்தல், நூல்முறை ஆளர் - நூல்முறை யுணர்ந்தவர்களுடைய, துணிவு - கொள்கை.

(ப போ - ரை.) வாலிய முறையான் வந்த நான்மறை யாளரை மேலாகிய முறைத் தன்மையையுடைய தங் குரவரைப் போல் கொண்டொழுகுதல் நூல்முறையாளர் துணிவு.

(க - ரை.) குலத்தாலும் ஒழுக்கத்தாலும் சிறந்த அந்தண ரைத் தம்முடைய குரவர்போற் கொண்டு ஒழுகவேண்டும்.

மறை - மறைவான பொருள்களையுடையது. ஐ: வினை முதற் பொருள் விகுதி. வான் முறை என்று கொண்டு மேலான முறை என்றுரைக்கலாம். பால் - தன்மை. (கூக)

## குரவர்க்குச் செய்யும் ஒழுக்கம்

கால்வாய்த் தொழுவு சமய மெழுந்திருப்பு
ஆசார மென்பர் குரவர்க் கிவையிவை
சாரத்தாற் சொல்லிய மூன்று.

(இ - ள்.) கால்வாய் - காலின்கண், தொழுவு - தொழுத லும், சமயம் - அவர் நன்றென்ற சமயத்தின்கண் நிற்றலும், எழுந்திருப்பு - அவரைக் கண்டவளவில் எழுந்திருத்தலும், இவை - ஆகிய இவை, குரவர்க்கு - பெரியோர்க்கு, ஆசாரம் என்பர் - செய்யும் ஒழுக்கம் என்று சொல்வர், சாரத்தால் சொல் லிய - சாரமாக எடுத்துச் சொல்லப்பட்டன, இவை மூன்று - இம் மூன்றுமேயாம்.

(ப. போ - ரை.) காலின்கண் தொழுதலும், அவர் நன் றென்ற சமயத்தின்கண் நிற்றலும், அவரைக் கண்டால் எழுந் திருத்தலும் என இவை குரவர்க்குச் செய்யும் ஆசாரம் என்று சொல்லுவர் நல்லார்; குரவர்க்குச் செய்யும் ஆசாரங்கள் பலவற் றுள்ளும் சாரத்தாற் சொல்லப்பட்ட இம் மூன்றுமேயாம்.

(க - ரை.) குரவர்க்குச் செய்யும் ஆசாரங்கள் அவரைக் காலின்கண் வணங்குதல், எழுவென எழுதல், கண்டவுடன் எழுந்திருத்தல் ஆகிய மூன்று.

வாய் : எழனுருபு. சமயம் என்பதைக் கொள்கை, மதம் என்று கொண்டு குரவர் எது சமயம் நன்றென்று கூறுவரோ அதனைக் கைக்கொண்டு நிற்றலும் ஆம். (௬௨)

திறங்கண்டார் கண்ட நெறி

துறந்தாரைப் பேணலும் நாணலுந்தாங் கற்ற
மறந்துங் குரவர்முற் சொல்லாமை மூன்றுந்
திறங்கண்டார் கண்ட நெறி.

(இ - ள்.) துறந்தாரை - துறவிகளை, பேணலும் - போற்றுதலும், நாணலும் - பழிக்குஅஞ்சுதலும், தாம் கற்ற - தாம் கற்றவைகளை, குரவர் முன் - பெரியோர் முன்பு, மறந்தும் சொல்லாமை - மறந்துஞ் சொல்லாதிருத்தலும், மூன்றும் - ஆகிய மூன்றும், திறம் கண்டார் - தெளியக் கற்றவர்கள், கண்ட நெறி - அறிந்த ஒழுக்கம்.

(ப. பொ - ரை.) அருந்தவரைப் பாதுகாத்தலும், பழி நாணலும், தாங் கற்றவற்றைக் குரவர்முன் மறந்தாயினுஞ் சொல்லாமையும என இம்மூன்றும் திறப்பட வறிந்தார் அறிந்த நெறி.

(க - ரை.) அருந்தவரைப் பேணலும், பழி நாணலும், குரவர்முன் தாங்கற்ற திறத்தை யெடுத்துரையா திருத்தலும் சிறந்த வொழுக்கங்கள்.

பேண் - போற்று. நாணல் - பழிக்கஞ்சிப் பின் வாங்கல், அடங்குதலுமாம். பழி என்பது சொல்லெச்சம். கற்ற : பலவின்பால் வினையாலணையும் பெயர். திறம் - நூலின் சாரமுமாம். சொல்லாமை என்பதன் ஈற்றும்மை விகாரத்தால் தொக்கது. துறத்தல்-அகப்பற்று புறப்பற்று இரண்டையும் ஒழித்தல். (௬௩)

பிறப்பினுட் போற்றியெனப்படுவார்

பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தார் இளையார் பசுப்பெண்டிர் என்றிவர்கட்(கு)
ஆற்ற வழிவிலங்கி னாரே பிறப்பிடைப்
போற்றி யெனப்படு வார்,

(இ - ள்.) பார்ப்பார் - அந்தணரும், தவரே - தவசியரும், சுமந்தார் - சுமையுடையவரும், பிணிப்பட்டார் - நோய் கொண்டவரும், மூத்தார் - பெரியோர்களும், இளையார் - பிள்ளைகளும், பசு - பசுக்களும், பெண்டிர் - பெண்களும், என்ற இவர்கட்கு - என்று சொல்லப்பட்ட இவர்களுக்கு, ஆற்ற - மிகவும், வழி விலங்கினரே - வழிவிட்டுப் போனவர்களே, பிறப்பினுள் - தாங்கொள்ளும் பிறப்புத்தோறும், போற்றி எனப்படுவார் - பிறரால் வாழக்கடவர் என்று சொல்லப்படுவார்.

(ப. போ - ரை.) பார்ப்பாரும், தவசியரும், சுமந்தாரும், பிணிப்பட்டாரும், மூத்தாரும், பிள்ளைகளும், பசுக்களும், பெண்டிரும் என்று சொல்லப்பட்ட இவர்க்கு மிகவும் வழி கொடுத்து விலகிப் போயினரே, தாம் பிறந்த பிறப்புத்தோறும் பிறராற் போற்றி யென்று சொல்லப்படுவார்.

(க - ரை.) பார்ப்பார் தவசியர் முதலியவர்களைக் கண்டால் வழிவிட்டுச் செல்வதே நெறி.

இச்செய்யுள் இருதிணையும் கலந்து மிகுதியால் உயர்திணை முடிபைப் பெற்ற திணைவழுவமைதி.

பார்ப்பார் சுமந்தார் முதலியவற்றில் எண் ஏகாரங்கள் தொக்கன. சுமந்தார் - கருப்பமுற்ற பெண்டிர் எனலுமாம். போற்றி - போற்றப்படுவது, போற்றப்படுபவர் எனப் பொருள் தரும். இ: செயப்படுபொருள் விகுதி. இனி, வியங்கோளாகவுங் கூறிப் போற்றுக என்பதுமாம். 'பிறப்பிடை' என்றும் பாடம். (சுச)

### இன்னவருடன் தனித்திருத்தலாகாதெனல்

ஈன்றாள் மகள்தன் உடன்பிறந்தாள் ஆயினும்
சான்றார் தமித்தா உறையற்க ஐம்புலனுந்
தாங்கற் கரிதாக லான்.

(இ - ள்.) ஐம்புலனும் - ஐந்து புலன்களையும், தாங்கற்கு அரிது ஆகலான் - தடுக்க அரியதாதலால், சான்றார் - அறிவால் மிகுந்தோர், தன் - தம்முடைய, ஈன்றாள் - தாயுடனாயினும், மகள் - மகளுடனாயினும், உடன் பிறந்தாள் - உடன் பிறந்தவளுடனாயினும், தமித்து ஆ - தனிமையாக, உறையற்க - தங்காதிருக்கக் கடவர்.

(ப. போ - ரை.) தாயுடனாயினும், மகளுடனாயினும், தன் உடன்பிறந்தாளுடனாயினும் தனித்தாக உறையார், ஐம்புலன்களையுந் தடுக்கல் அரிதாகலான்.

(க - ரை.) ஐம்புலன்களையும் அடக்கி நடத்த லருமையாதலின் தாய் முதலியவர்களுடனும் தனித்திருத்தல் தகாது.

ஐம்புலன் சுவையொளியூறோசை நாற்றம் என்பன. தமித்து: தமி என்னும் பகுதியடியாகப் பிறந்த குறிப்புமுற்று, இங்கு வினையுரியாயிற்று. சான்றோர் என்னும் பன்மையொடு தன் என்னும் ஒருமை பொருந்தாதாதலின் தனித்தனி கொண்டு அங்ஙனம் கூறினர் என்றுவது, அல்லது ஒருமைப் பன்மை வழுவமைதியென்றுவது கொள்க. உறையற்க : எதிர்மறை வியங்கோள். "நற்றாய் புதல்வி யுடன்றோன் றிய நங்கை யேனும், உற்றோ ருழியிற் றனியெய்தி யுறைத லாகா" என்னுங் காசிகண்டச் செய்யுளடிகள் இச்செய்யுட் பொருளை முற்றுங்கொண்டு சிறப்பது காண்க. "உரையற்க" என்ற பாடங்கொண்டு மேற்குறித்தவர்களுடன் தனித்திருந்து உரையாடாதிருக்க எனலுமாம். (சுஓ)

அரசருடன் பழகுமளவு

கடைவிலக்கிற் காயார் கழிகிழமை செய்யார்
கோடையளிக்கட் போச்சாவார் கோலநேர் செய்யார்
இடையறுத்துப் போகிப் பிறனொருவற் சேரார்
கடைபோக வாழ்துமேன் பார்.

(இ - ள்.) கடை போக - இறுதியளவுஞ் செல்ல, வாழ்தும் என்பார் - வாழக்கடவோம் என்று கருதுவோர், கடை - அரசருடைய வாயிலில், விலக்கில் - தம்மைத் தடுத்தால், காயார் - வெகுளார், கழி - மிகுந்த, கிழமை செய்யார் - உரிமையை அவ்வரசர் பொறாதபடி செய்யார், கொடை கண் - தமக்கு என்று கொடுக்குமிடத்தும், அளிகண் - அரசர் தம்மை அன்பு பாராட்டுமிடத்தும், பொச்சாவார் - மறவார், நேர் - அரசருக்கு ஒப்பாக, கோலம் செய்யார் - தம்மை அணிசெய்துகொள்ளார், இடை அறுத்து போகி - வேத்தவையில் ஊடறுத்துச் சென்று, பிறன் ஒருவன் - மற்றொருவனை, சேரார் - சேர்ந்திரார்.

(ப. பொ - ரை.) அரசர் வாயிலின்கண் தடையுண்டானல் வெகுண்டு காயார், அரசரோடு மிகக் கிழமையை அவர் பொறாத வகை செய்யார், தமக்கு ஒன்று உதவுமிடத்தும், அவர் தம்மைத் தலையளிக்குமிடத்தும், தமக்கு அவை அமையா என்றிகழார், அரசரொக்கக் கோலஞ் செய்யார், அரசர் இருந்த அவையின் கண் ஊடறுத்துப் போகார், பிறனொருவனைச் சேர்ந்திரார்; முன்பு போலப் பின் கடை போக வாழ்தும் என்று கருதுவார்.

(க - ரை.) அரசருடன் பழகுவோர் அவரிடம் எந்த அள வில் நடந்துகொள்ளல் நலந்தருமோ அவ்வளவில் நடப்பதே முறையென்க.

கடை - கடைசியிடம்; வீடு முதலியவற்றின் கடைசியிடம் வாயில். இது முன் வாயில் பின் வாயில் எனப்படும். முன் வாயில் தலைக்கடை, பின் வாயில் புறக்கடை எனப்படும். கடை விலக்கில் ஏழாம் வேற்றுமைத்தொகை. பொச்சாவார் - தம் நிலையை மறந்து இகழார். கழி : உரிச்சொல். தலையளி - முகமலர்ந்தினிய கூறல். (சுசு)

### சொல்லுமிடத்துக் குற்றமாவன

தமக்குற்ற கட்டுரையுந் தம்மிற் பெரியார்
உரைத்ததற் குற்ற உரையுமஃ தன்றிப்
பிறர்க்குற்ற கட்டுரையுஞ் சொல்லற்க சொல்லின்
வடுக்குற்ற மாகி விடும்.

(இ - ள்.) தமக்கு உற்ற - தமக்குப் பொருந்திய, கட்டு உரையும் - உறுதி மொழியையும், தம்மில் பெரியார் - தம்மில் பெரியராக அரசனால் நன்கு மதிக்கப்பட்டவர்கள், உரைத்தற்கு - சொல்லியதற்கு, உற்ற உரையும் - பொருந்திய சொல்லையும், அஃது அன்றி - அதுவன்றியும், பிறர்க்கு உற்ற - பிறர்க்குப் பொருந்திய, கட்டுரையும் - உறுதிச்சொல்லையும், சொல்லற்க - அரசனிடத்துச் சொல்லாதொழிக, சொல்லின் - சொன்னால், வடு - வசையுண்டாகத்தக்க, குற்றம் ஆகிவிடும் - குற்றமாய்விடும்.

(ப. போ - ரை.) தமக்குற்ற கட்டுரைகளும், தம்மிற் பெரிய ராக அரசனாற் சிறப்புச் செய்யப்பட்டார் உரைத்த உரைகளும், அஃதன்றியே பிறர்க் குறுதியாகிய கட்டுரைகளும், அரசர்க்குச் சொல்லற்க. சொல்லுவராயின் தமக்கு வடுப்படுங் குற்றமாம்.

(க - ரை.) அரசனிடத்தில் தமக்குப் பொருந்திய உறுதிச் சொல், அரசனாற் சிறப்புச் செய்யப்பட்டவர் உறுதிமொழி, பிறர்க் குறுதியாகிய கட்டுரை இவற்றைச் சொல்லுதல் பெருங்குற்றமாம்.

கட்டுரை - உயிர்க்கு உறுதிபயக்கும் மொழி. தம்மில் - இல்: ஐந்தனுருபு, எல்லைப்பொருள். வடு - தழும்பு: 'நாவினாற் சுட்ட வடு' என்ற திருக்குறளடிக்குப் பொருள் விரித்த பரிமேலழகியார் 'ஆறிப்போதலால் தீயினாற் சுட்டதனைப் புண்ணென்றும், ஆறாது கிடத்தலால் நாவினாற் சுட்டதனை வடுவென்றுங் கூறினார். தீயும் வெவ்வுரையுஞ் சுடுதற்றொழிலான் ஒக்குமாயினும், ஆறுமையாற் தீயினும் வெவ்வுரை கொடிது' என்று கூறியிருத்தல் காண்க. (சுஎ)

## நன்னெறி

பெரியார் உவப்பன தாமுவவார் இல்லஞ்
சிறியாரைக் கொண்டு புகாஅர் அறிவறியாப்
பிள்ளையே யாயினுமி ழித்துரையார் தம்மோ(டு)
அளவளா வில்லா விடத்து.

(இ - ள்.) பெரியார் - பெரியோர்கள், உவப்பன - விரும்புகின்றவற்றை, தாம் உவவார் - தாம் விரும்பார், இல்லம்-வீட்டினுள், சிறியாரைக் கொண்டு - கீழ்மக்களை அழைத்துக்கொண்டு, புகாஅர் - நுழையார், அறிவு அறியா - அறிவு இன்னதென்றறியாத, பிள்ளையே ஆயினும் - சிறு பிள்ளையாயிருந்தாலும், தம் ஓடு - தம்முடன், அளவளாவு இல்லா இடத்து - நெருங்கிக் கலத்தல் இல்லாவிடின், இழித்து உரையார் - இழிவாகப் பேசார்.

(ப, போ - ரை.) பெரியராயுள்ளார் உவந்தனவற்றைத் தாம் உவவார் ; தம்மில்லத்தின்கண் கீழ்மக்களைக் கொண்டு புகார் ; அறிவினையறியாத பிள்ளையேயாயினும், உயர்த்தன்றி இழித்துச் சொல்லார், தம்மோடு அளவளாவு இல்லாத விடத்து.

(க - ரை.) பெரியார் உவந்தவற்றைத் தாம் விரும்புதலும், வீட்டுட் சிறியாரை யழைத்துச் செல்லுதலும், தம் பழக்க மில்லாதவர் சிறுவராயிருப்பினும் இகழாதிருத்தலும் நன்னெறி.

அளவளாவு : அளாவு அளாவு என்பதன் மரூஉ, நன்றாகக் கலத்தல். இல்லம் - அம்: சாரியை. இல்லாவிடத்து - இடத்து: விகுதி. (௬௮)

## அரசன் செயலில் வெறுப்படையாமை முதலியன

முனியார் துனியார் முகத்தெதிர் நில்லார்
தனிமை யிடத்துக்கண் தங்கருமஞ் சொல்லார்
இனியவை யாமறிது மென்னார் கசிவின்று
காக்கைவெள் ளென்னும் எனின்.

(இ - ள்.) முனியார் - அரசன் செய்வனவற்றை வெறுக்கார், துனியார் - அவனொடு கலகங்கொள்ளார், முகத்து எதிர் நில்லார் - முகத்துக்கு எதிரில் நில்லார், தனிமை இடத்து கண் - அரசன் தனியாய் நிற்குமிடத்தில், தம் கருமம் சொல்லார் - தமது

செய்கையைச் சொல்லார், இனியவை - இனிய பண்டங்களை, யாம் அறிதும் - நாங்கள் நுகர்ந்து அறிவோம், என்னார் - என்று சொல்லார், காக்கை - காகம், வெள்ளென்னும்எனின் - வெண்ணிறமுடையது என்றாலும், கசிவு இன்று - அன்பின்றி (வெறுக்கார்).

(ப. போ - ரை.) அரசன் செய்வனவற்றை வெறார், அவனோடு கலாயார், விலங்கவன்றி நேர்முகத் தெதிர்நில்லார், அரசன் தனியே நின்ற இடத்தின்கண் தம் கருமம் சொல்லார், இனியவான பொருள்களை யாங்கள் நுகர்ந்தறிவேம் என்று அரசர்க்குச் சொல்லார், காக்கை வெள்ளென்றிருக்கு மென்று அரசன் சொல்லினானாயினும் அவன்மேல் அன்பின்றி வெறார்.

(க - ரை.) அரசன் செய்வனவற்றை வெறுத்தல், அவனோடு கலாய்த்தல், முகத்தெதிர் நிற்றல், தங்கருமங்கூறல் இனியவிவை நுகர்ந்தறிவேமென்றல் ஆகா.

இன்றி என்பது செய்யுளில் இன்று என வந்தது. முனி - வெறு, கசிவு - கசிதல்: தொழிற்பெயர். (சுகூ)

அரசர் முன்னர்ச் செய்யத்தகாதவை

உமிவும் உயர்ந்துழி யேறலும் பாக்கும்
வகையில் உரையும் வளர்ச்சியும் ஐந்தும்
புணரார் பெரியா ரகத்து.

(இ - ள்.) உமிவும் - எச்சில் உமிழ்தலும், உயர்ந்த உழி - உயர்வாகிய இடத்தில், ஏறலும் - ஏறியிருத்தலும், பாக்கும் - தாம்பூலம் போடுதலும், வகை இல் உரையும் - தகுதியில்லாததைச் சொல்லுதலும், வளர்ச்சியும் - தூங்குதலும், ஐந்தும் - ஆகிய இவ்வைந்தையும், பெரியார் அகத்து - அரசர் முன்பு, புணரார் - செய்யார்.

(ப. போ - ரை.) உமிதலும், உயர்ந்தவிடத் தேறியிருத்தலும், பாக்குத் தின்னலும், கூறுபாடில்லாத வுரையும், உறங்குதலும், இவ்வைந்தும் அரசர் முன்பு செய்யார்.

(க - ரை.) அரசர் முன்னிலையில் உமிழ்தல் வெற்றிலை தின்னல் முதலிய செய்கைகளைச் செய்தலாகாது.

பாக்கு - உபலக்கணமாக வெற்றிலை சுண்ணாம்புகளாகிய தன்னினத்தையும் உணர்த்திற்று. வளர்ச்சி - வளர்தல்; ஈண்டுக் கண்வளர்தல், தூங்குதல். உயர்ந்த உழி என்பது புணரு

மிடத்து நிலை மொழியீற்று அகரந்தொக்கது. பெரியார் - ஆற்ற லாற் பெரியார், தவத்தாற் பெரியார் என்றிருவகையார்; அவர் களுள் இங்கு ஆற்றலாற் பெரியராகிய அரசர் குறிக்கப்படு கிறார். (௭0)

அரசர்முன் பல்காற் பயின் றுரையாதன

இறைவர்முன் செல்வமுங் கல்வியுந் தேசுங்
குணனுங் குலமுடையார் கூறார் பகைவர்போற்
பாரித்துப் பல்காற் பயின்று.

(இ - ள்) குலம் உடையார் - நற்குடிப் பிறப்புடையார், செல்வமும் - செல்வத்தையும், கல்வியும் - கல்வியையும், தேசும் - விளக்கத்தையும், குணனும் - குணங்களையும், இறைவர் முன் - அரசர் முன்பு, பல்கால் - பலமுறை, பயின்று - படித்து, பகைவர் போல் - பகைவரைப்போல, பாரித்து - பரப்பி, கூறார் - சொல் லார்.

(ப. பொ - ரை.) அரசர் முன்பு தம் செல்வமும், கல்வியும், தமது விளக்கமும், குணனும் குடிப்பிறந்தார் தமக்குத் துன்பஞ் செய்யும் பகைவர்போல் பரப்பிப் பல்கால் பயின்றுரையார்.

(க - ரை.) ஒருவர் தங் கல்வி, செல்வம், குணம் முதலிய வற்றை அரசர் முன்ன ரெடுத்துரைத்து அதனாற் கெடுதியடையா திருக்கவேண்டும்.

பகைவர்போற் கூறார் என்றதற்கு அங்ஙனங் கூறுதலால் தமக்குத்தாமே பகைவராவர் என்றுவது அல்லது அவ்வாறு கூறுதலைத் தமக்குப் பகைவர்போல எண்ணிக் கூறுதொழிக என்றுவது கொள்க தற்புகழ்ச்சி கூடாதென்க. அரசன் இறை வன் (கடவுள்) அமிசனுயிருந்து உலகங் காத்தலால் இறைவன் எனப்பட்டான். தேசாவது - விளக்கம்; அஃதாவது தான் தன்னிடத்திருக்கவும், தனது ஆணை எங்குஞ் செல்வதற்கும், தன்னிடத்து யாவரும் மேன்மை பாராட்டுதற்குங் காரணமான கம்பீரத்தன்மை. பாரித்தல் - பெருக்கிக் கூறுதல். (௭௧)

அரண்மனை ஆலயம் முதலிய இடங்களிற் பெரியாரை வணங்காதிருத்தல்

பெரியார் மனையகத்துந் தேவ குலத்தும்
வணங்கார் குரவரையுங் கண்டால் அணங்கொடு
நேர்பெரியார் செல்லு மிடத்து.

(இ - ள்.) பெரியார் மனை அகத்தும் - அரசர் மாளிகையிலும், தேவ குலத்தும் - தேவாலயங்களிலும், குரவரையும் - பெரியாரையும், கண்டால்—, வணங்கார் - தொழார், அணங்கொடு - தெய்வங்களும், நேர் பெரியார் - அத்தெய்வங்களை யொத்த அரசர்களும், செல்லும் இடத்து - வெளியிற் செல்லுமிடத்தும் (கண்டாலும் வணங்கார்.)

(ப. பொ - ரை.) அரசர் மனையகத்தும் தேவராலயங்களுள்ளும் குரவரையுங் கண்டால் வணங்கார், தெய்வங்கள் புறம் போந் தெழுந்தருளு மிடத்தும், அரசர் புறம் போதுமிடத்தும் கண்டாலும் வணங்கார்.

(க - ரை.) அரண்மனை, ஆலயம், தெய்வவிழாக்காலம், அரசர் ஊர்வலம் வருதற்காலம் இவற்றில் பெரியாரைக் கண்டால் வணங்கா தொழிக.

செல்லுமிடத்தும் என்ற உம்மை தொக்கது. குரவரையும்; உம்: உயர்வு சிறப்பு. அணங்கு - நோய், அழகு, தெய்வம் எனப்படும் நேர் செல்லுமிடத்து எனக் கூட்டி ஊர்வலஞ் செல்லுமிடத்தும் எனவுங் கொள்க. (எஉ)

பெரியார்முன் செய்யின் பழியாவன

நகையோடு கோட்டாவி காறிப்புத் தும்மல்
இவையும் பெரியார்முன் செய்யாரே செய்யின்
அசையாது நிற்கும் பழி.

(இ - ள்.) நகையொடு - சிரிப்பும், கொட்டாவி - கொட்டாவி விடுதலும், காறிப்பு - காறியுமிழ்தலும், தும்மல் - தும்முதலும், இவையும் - ஆகிய இவற்றையும், பெரியார் முன் - அரசர் முன்பு, செய்யார்—, செய்யின் - செய்தால், பழி நிற்கும் - பழி நிலைக்கும், அசையாது - குறையாது.

(ப. பொ - ரை.) சிரிப்பும் கொட்டாவியும் காறியுமிழ்தலும் தும்மலும் என, இவையும் அரசர் முன்பு செய்யார், செய்வாராயின், நிற்கும் பழி குறையாது.

(க - ரை.) அரசர் எதிரில் சிரித்தல் கொட்டாவி விடுதல் முதலியவற்றைச் செய்யற்க. செய்தாற் பழியே.

கொட்டு ஆவி : வினைத்தொகை. கொட்டுதல் - விடுதல். இதனை ஆவிகொட்டு என்பதன் இலக்கணப் போலியுமாமென்பர். பழி அசையாது நிற்கும் என்று - பழிமாறாது நிலைக்கும்

என்க. காறிப்பு: காறு என்னும் பகுதியடியாகப் பிறந்த தொழிற் பெயர். (எங)

நன்மாணுக்கர் செய்கை

நின்றக்கால் நிற்க அடக்கத்தா லென்றும்
இருந்தக்கால் ஏவாமை ஏகார் பெருந்தக்கார்
சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டீக மீட்டும்
வினவற்க சொல்லொழிந்தக் கால்.

(இ - ள்.) பெருந்தக்கார் - சிறந்த குணமுள்ள மாணுக்கர், என்றும் - எப்பொழுதும், அடக்கத்தால் - (ஆசிரியர் முன்பு) அடங்கியிருத்தல் வேண்டுதலின், நின்றக்கால் - ஆசிரியர் பாடஞ் சொல்லா திருந்தால், நிற்க - தாம் சும்மா இருக்கக் கடவர், இருந்தக்கால் - அவர் தம் முன்பு இருந்தபோது, ஏவாமை - அவர் கட்டளையிடாமலிருக்க, ஏகார் - தாம் எழுந்து போகாதிருக்கக் கடவர், சொல்லின் - அவர் பாடம் முதலியவை சொல்லின், செவி கொடுத்து கேட்டு - காது கொடுத்துக் கேட்டு, ஈக - ஒப்புவிக்கக்கடவர்; ஒழிந்தக்கால் - அவர் ஒன்றுஞ் சொல்லாவிட்டால், மீட்டும் - தாம் மீளவும், வினவற்க - அவரைக் கேளாதிருக்கக் கடவர்.

(ப. பொ - ரை.) நன் மாணுக்கர் என்றும் ஆசிரியர் முன் அடங்கி யொழுகவேண்டுதலின், அவர் பாடஞ் சொல்லுதலை நிறுத்தினல் தாமும் நிற்கக்கடவர். அவர்முன் இருந்தபோது அவர் எழுந்துபோ என ஏவுதற்குமுன் எழுந்து போகார். அவர் பாடம் முதலியவற்றைச் சொல்லின் செவிதாழ்த்துக் கேட்க, அவர் யாதொன்றும் சொல்லாவிடின் தாமும் வினவாதிருக்கக் கடவர்.

(க - ரை.) நன் மாணுக்கர் ஆசிரியர் இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப் போவென்ப் போய், செவி வாயாகக் கேட்டவை விடாதுளத்தமைக்க முயல்வர்.

நின்றக்கால் ஒழிந்தக்கால் இருந்தக்கால் - என்பன எதிர்கால வினையெச்சங்கள். பெருந்தக்கார் - பெருமையாகிய தகுதியுடையார். (எச)

பெரியாரவையிற் செய்யத்தகாதன

உடுக்கை இகவார் செவிசொறுண்டார் கைம்மேல்
எடுத்துரையார் பெண்டிர்மேல் நோக்கார் செவிச்
கொள்ளார் பெரியா ரகத்து. [சொல்லுங்

(இ - ள்.) பெரியார் அகத்து - பெரியோர் கூடியுள்ள அவையில், உடுக்கை - உடையை, இகவார் - அவிழ்க்கார், செவி சொறுண்டார் - காதைச் சொறியார், கைமேல் எடுத்து உரையார் - கையை உயரத் தூக்கிப் பேசார், பெண்டிர்மேல் நோக்கார் - பெண்களைப் பாரார், செவி சொல்லும் - (பிறர் தம்) காதிற் சொல்லும் பேச்சையும், கொள்ளார் - கேளார்.

(ப. பொ - ரை.) பெரியாரவைக்களத்தில் ஆடையைக் களையார், காதைச் சொறியார், கைமேலெடுத்துப் பேசார், மாதர்களை நோக்கார், பிறர் தம் செவியிற் சொல்லுஞ் சொல்லையுங் கேளார்.

(க - ரை.) பெரியோர் அவையிற் காதைச் சொறிதல், ஆடையைக் களைதல், கையுயர்த்திப் பேசுதல் முதலியன செய்யலாகாதன.

உடுக்கை : தொழிலாகு பெயர். பெண்டிர்மேல் : வேற்றுமை மயக்கம். 'செவிச்சொல்லுங் கேளார்,' 'செவி சுறண்டார்' என்றும் பாடபேதங்கள் உள.

(எடு)

### ஒருவரிடத்தில் ஒன்றைச் சொல்லும் முறை

விரைந்துரையார் மேன்மேல் உரையார்பொய் யாய
பரந்துரையார் பாரித் துரையார் ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னாலே பொருளடங்கக் காலத்தாற்
சொல்லுக செவ்வி யறிந்து.

(இ - ள்.) விரைந்து உரையார் - விரைவாகப் பேசார், மேல் மேல் உரையார் - அடிக்கடி பலதடவை பேசார், பொய் ஆய - பொய்யாகியவற்றை, பரந்து உரையார் - விரித்துச் சொல்லார், பாரித்து உரையார் - விரிவாக்கிச் சொல்லார், எனைத்தும் ஒருங்கு - எல்லாவற்றையும் ஒன்ருக, சில் எழுத்தின் - சிறிய சொற்ளுேடு ரால், பொருள் அடங்க - சொல்லவேண்டிய பொருள்கள் அடங்கும்படி, காலத்தால் - காலத்துக்கு எற்றபடி, செவ்வி அறிந்து - கேட்போர் சமயம் அறிந்து, சொல்லுக - சொல்லக்கடவர்.

(ப. பொ - ரை.) கடுகியுரையார், மேன்மேலுரையார், பொய்யாய சொற்களைப் பரக்க உரையார், தாம் உரைக்கத்தக்க சொற்களைப் பரப்பியுரையார், கூறவேண்டிய எனைத்தினையும் ஒருமிக்கச் சில்லெழுத்தினுனே பொருள் விளங்கும் வகை காலத்தோடுபடுத்து அவன் செவ்வியறிந்து சொல்லுக.

(க - ரை.) ஒருவரிடத்தில் ஒன்றைச் சொல்லும்பொழுது விரைதல் மேல்மேலுரைத்தல் முதலிய செய்யாது, சில்லெழுத்திற் பொருளடங்கப் பேசுதல்வேண்டும்.

ஆய - இறந்தகாலப் பலவின்பால் வினையாலணையும் பெயர். சில + எழுத்து = சில்லெழுத்து, "பல சில வெனுமிவை" என்ற சூத்திரத்துக்கியைப் புணர்ந்தது.

செவ்வி - தக்க காலம். எழுத்து : கருவியாகு பெயர். காலத்தால் : வேற்றுமை மயக்கம்.

"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்ரு தவர்."

என்ருர், செந்நாப்போதாரும். (எசு)

குலமாதர் செய்கை

தம்மேனி நோக்கார் தலையுளரார் கைந்நொடியார்
எம்மேனி யாயினும் நோக்கார் தலைமகன்
தன்மேனி யல்லாற் பிற.

(இ - ள்.) (குலமாதர்) தன் தலைமகன் - தம் கணவரது, மேனி - உடல் வடிவத்தை, அல்லால் - அன்றி, பிற எ மேனி ஆயினும் - வேறு ஆடவர் உடல் எத்துணை அழகுடையதாயினும், நோக்கார் - பாரார், தம் மேனி - தமதுடம்பழகை, நோக்கார் - பார்த்துக்கொள்ளார், தலை உளரார் - தலை மயிரைக் கோதார், கை நொடியார் - கையை நொடித்தல் முதலியன செய்யார்.

(ப. போ - ரை.) நற்குலப் பெண்டிர் தம் கணவரது உடலின் வடிவத்தையன்றி ஏனை ஆடவரது மேனி எத்துணை அழகுடையவேனும் பாரார்; தம் உடலின் வடிவத்தையும் நோக்கார்; தலை மயிரைக் கோதார்; கைந்நொடித்தல் முதலியன செய்யார்.

(க - ரை.) குலமாதர் தம் கணவருடல் வடிவையன்றிப் பிறர் வடிவழகு காண வொருப்படார், தலைமயிர் கோதல் கைந்நொடித்தல் முதலிய தீப்பழக்கங்களுங் கொள்ளார்.

தலை - கூந்தலுக்கு: இடவாகு பெயர். கை + நொடி என்பது "தனி ஐ நொதுமுன் மெலிமிகலும்" என்ற விதிப்படி நகரம் மிக்கது. தலைமகன் - தனித்தனி ஒவ்வொருவரைக் குறிக்க வந்த ஒருமை, அதற்கேற்பத் தன் என்றுங் கூறப்பட்டது. உளர்தல் - தடவுதல். (எஎ)

### அரசவையிற் செய்யலாகாதவை

பிறரோடு மந்திரங் கொள்ளார் இறைவனைச்
சாரார் செவியோரார் சாரிற் பிறிதொன்று
தேர்வார்போல் நிற்க திரிந்து.

(இ - ள்.) பிறரொடு - மற்றவருடன் (இருந்து எதையும்), மந்திரங்கொள்ளார் - மறைவாக ஆராயார், இறைவனை - அரசனை, சாரார் - சாரகில்லார், செவி ஓரார் - (அரசன் பிறருக்குச் சொல்வனவற்றை) காதுகொடுத்துக் கேளார், சாரின் - நிற்க நேர்ந்தால், பிறிது ஒன்று - வேறொன்றை, தேர்வார்போல் - ஆராய்வார்போல, திரிந்து - முகம் மாறி, நிற்க - நிற்கக்கடவர்.

(ப. போ - ரை.) பிறரோடுகூட இருந்து ஒன்றனை ஆராயார், அரசனைச் சாரகில்லார், அரசன் பிறனொருவனுக்குச்சொல்லுஞ் சொல்லைத் தஞ்செவியில் ஓரார், அரசன் ஒன்றனை ஒருவனுக்குச் சொல்லும்பொழுது குறுகாநின்றாரெனின், பிறிதொன்றனை ஆராய்வோர்போல முகந்திரிந்து நிற்க.

(க - ரை.) அரசவையில் வேறொருவனிடமிருந்து ஒன்றையாராய்தல், அரசன் அருகினிற்றல், மறைகேட்டல் முதலியன செய்தல் ஆகா.

மந்திரம் - மறைவான பொருள். பிறிது: பிற என்னும் இடைச்சொல்லடியாகப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர்.

"செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து."—திருவள்ளுவர் (எ௮)

### திறப்பட்டார் முச்செயல்

துன்பத்துள் துன்புற்று வாழ்தலும் இன்பத்துள்
இன்ப வகையான் ஒழுகலும்—அன்பிற்
சேறப்பட்டார் இல்லம் புகாமையும் மூன்றும்
திறப்பட்டார் கண்ணே உள.

(இ - ள்.) துன்பத்துள் - துன்பக்காலத்தில், துன்புற்று வாழ்தலும் - அத்துன்பத்தில் அமைவுற்று வாழ்தலும், இன்பத்துள் - இன்பக்காலத்தில், இன்ப வகையான் - பிறர்க்கு இன்பம் செய்யும் வகையால், ஒழுகலும் - இன்புற்று நடத்தலும், அன்பின்-

அன்பினின்றும், செறப்பட்டார் - வேறுபட்டவருடைய, இல்லம் புகாமை - வீட்டில் நுழையாமையும், இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், திறப்பட்டார் கண்ணே - ஒருவழிப்பட்ட பெரியோரிடத்தே, உள - உண்டு.

(ப. போ - ரை.) துன்பக்காலத்தில் அத்துன்பத்துள் அமைவுற்று வாழ்தலும், இன்பக்காலத்தில் பிறர்க்கு இன்பு செய்யும் வகையான் இன்புற்று நடத்தலும், அன்பினின்றும் வேறுபட்டாரில்லம் புகாமையாகிய இம்மூன்றும் ஒரு திறப்பட்டார் கண்ணே உளவாம்

(க - ரை.) துன்பக்காலத்தில் துன்பத்தைப் பொறுத்திருத்தலும், இன்பக்காலத்தில் பிறர்க்கும் இன்பமுண்டாக நடத்தலும், அன்பற்றவர் வீடு அடையாமையும் ஒருவழிப்பட்டார் செய்கையாம்.

'துன்பத்துட் டுன்புற்று வாழ்தல்' என்பதற்குப் பிறர்க்குத் துன்பம் வந்த காலத்து அதற்காகத் தாமும் துன்புற்று வாழ்தலும் என்றலுமாம். அன்பிற் செறப்பட்டார் என்பதற்கு அன்பில் அழிவடைந்தவர் என்பதுமாம். உள : பலவின்பாற்குறிப்பு வினைமுற்று. (எகூ)

குரவர் பெயரா முதலியன கூறுமை

தெறுவந்துந் தங்குரவர் பேருரையா ரில்லத்து
உறுமி நெடிதும் இராஅர்—பெரியாரை
என்று முறைகொண்டு கூறுர் புலையரையும்
நன்கறிவார் கூறுர் முறை.

(இ - ள்.) நன்கு அறிவார் - உயிர்க்கு நன்மையை அறிந்தவர், தெறுவந்தும் - வெகுண்டாராயினும், தம் குரவர் பேர் உரையார் - தம் பெரியோர் பெயரை வாயாற் சொல்லார், இல்லத்து - வீட்டில், உறுமி - மனையாளைக் கோபித்து, நெடிதும் இரார் - நீண்ட பொழுது அங்கிரார், பெரியாரை -, என்றும் - எப்பொழுதும், முறைகொண்டு கூறுர் - முறைமை பாராட்டி (இழிவுபடக்) கூறுர், புலையரையும் - கீழ்மக்களையும், முறை கூறுர் - முறைமை பாராட்டிப் பேசார்.

(ப. போ - ரை.) நன்கறிவார் தாம் வெகுண்டாராயினும் தங்குரவர் பெயரைச் சொல்லார்; தம்மில்லத்தின்கண் தம் மனைவியை மிகவும் கழறியுரைத்து நெடிதிரார்; தம்மிற் பெரியாரை

முறைப் பெயர் கொண்டு சொல்லார்; புலையரையும் முறைப்பெயா கொண்டு கூறார்.

(க - ரை.) வெகுண்ட விடத்தும் தங்குரவர் பெயரைக் கூறுதலும், நெடுநேரம் மனையாளைக் கடிந்து பேசலும், பெரியார் புலைய ரிவர்களை முறைப்பெயரிட் டழைத்தலும் ஆகா.

தெறுவந்து-அழியவந்து; அழிதற்குக் காரணமான கோபம் உண்டாகி. தெறு: முதனிலைத் தொழிற்பெயர். உறுமி: ஒலிக் குறிப்புச்சொல். இல்லத்துறுமி என்பதற்கு மனையாளைக் கோபித்து என்பதாயின், இல்லம்: இடவாகுபெயர். பேர்: பெயர் என்பதன் மரூஉ. (அ0)

ஆன்றோர் செயலாகாதன

புழைக்கடைப்பு காரரசன் கோட்டி உரிமை
இவற்றுக்கண் செவ்வியார் நோக்காரே அவ்வத்
தொழிற்குரியர் அல்லா தவர்.

(இ - ள்.) அ அத்தொழிற்கு - அந்த அந்தத் தொழிலுக்கு, உரியர் அல்லாதார் - உரிமையுடையவ ரல்லாதவராகிய, செவ்வி யார் - நற்குணமுடையோர், புழை கடை - ஒருவர் வீட்டின் புழைக்கடை வாயால், புகார் - அவர் வீட்டில் நுழையார், அரசன் கோட்டி - அரசன் (கூத்து முதலியவற்றால் இன்புற்று) அவை கூடியிருக்குமிடமும், உரிமை - மனைவியரோ டிருக்குமிடமும், இவற்றுக்கண் - ஆகிய இவ்விடங்களில், நோக்கார் - போய்ப் பாரார்.

(ப. போ - ரை.) பிறர் மனையின்கண் புழைக்கடை வாயி லால் புகார், அரசன் கோட்டிகொண்டு கூத்து முதலாயின இன்புறாநின்றவிடத்தும், உரிமை மகளிரோ டிருந்தவிடத்தும் செவ்வியராயுள்ளா ரென்றும் நோக்கார்; அந்தந்தத் தொழிற் குரிய ரல்லாதார்.

(க - ரை.) வேறொருவர் வீட்டில் புழைக்கடை வாயிலாற் போதலும், அரசன் களியாட்டிடத்தும் அந்தப்புறத்திடத்தும் செல்லுதலும் ஆன்றோர் செயலாகா.

புழைக்கடை - துவாரத்தின் கடை. வீடுகளை இடையீடாக எற இடம் விட்டுக் கட்டுவது தமிழ்நாட்டு வழக்கம். இவ்விடை யிடம் வீட்டுக்குப் புழைபோன்றது. அதன்கடை, புழைக்கடை; இஃது ஆகுபெயராய் வீட்டின் பின்புறத்துள்ள நிலத்தைக் குறிப்பதாயிற்று. கோட்டி - கூட்டம். உரிமை - பண்பாகு பெயராய் மனைவியை யுணர்த்திற்று. (அக)

## மனைவி மனம் மாறுபடுதல்

வண்ண மகளிர் இடத்தோடு தம்மிடம்
ஒள்ளியம் என்பார் இடங்கொள்ளார் தெள்ளி
மிகக்கிழமை உண்டெனினும் வேண்டாவே பெண்
உவப்பன வேறாய் விடும். [டிர்க்கு

(இ - ள்) ஒள்ளியம் என்பார் - அறிவுடையோம் என்று சொல்பவர், வண்ணம் மகளிர் இடத்தொடு - தம்மை அழகு செய்து கொள்ளும் விலைமகளிரிடத்தோடு (சேர்ந்த), தம் இடம் - தம் மிடத்தை, இடம் கொள்ளார் - சிறந்த இடமாகக் கொள்ளார், தெள்ளி - தெளிவுற்று, மிக கிழமை உண்டு எனினும் - (அவ் விடத்துடன் தமக்கு) மிகுந்த உரிமையுடையதாயினும், வேண்டா - விரும்பப்படுவனவல்ல, பெண்டிர்க்கு - நம் மனைவியர்க்கு, உவப்பன - விரும்பப்படுவன, வேறு ஆய் விடும் - வேறுபட்டுப் போம்.

(ப. பொ - ரை.) அறிவுடையோர் என்று சொல்லப்படுவோர் கோலஞ்செய்யு மகளிரிடத்தோடு சேர்ந்த தம்மிடத்தைச் சிறந்த இடமாகக் கொள்ளார். தெளிவுற்று மிகுந்த உரிமையுள தாயினும் விரும்பப்படுவனவல்ல. தம் மனைவியர்க்கு விரும்பப் படுவன வேறுபடும் ஆதலால்.

(க - ரை.) பொது மகளிர் வீட்டினருகிற் குடியிருப்புக் கொள்ளின் தம் மனைவியர் மனவிருப்பம் மாறுபடும்.

வண்ணம் - அழகு. 'விலைமகட்கு அழகுதன் மேனி மினுக்கு தல்' ஆதலின். தம்மை யழகு செய்யு மகளிர் விலைமகளிர் எனப் பட்டனர். ஒள்ளியம்: தன்மைப்பன்மை வினைமுற்று. வேண்டா: செயப்பாட்டுப் பொருளில் வந்தது. தெள்ளி: வினை யெச்சம். (அஉ)

## இறுதிவரை ஒருதன்மையான வாழ்வுடையார்

நிரல்படச் செல்லார் நிழன்மிதித்து நில்லார்
உரையிடை யாய்ந்துரையார் ஊர்முனிவ செய்யார்
அரசர் படையளவுஞ் சொல்லாரே யென்றுங்
கடைபோக வாழ்துமென் பார்.

(இ - ள்.) என்றும் - எப்பொழுதும், கடைபோக - இறுதி யளவும் (ஒரு தன்மையாகச்) செல்ல, வாழ்தும் என்பார் - வாழக்

கடவோம் என்பார், நிரல்பட - வரிசைப்பட, செல்லார் - போகார் நிழல் மிதித்தும் - ஒருவருடைய நிழலை மிதித்தும், நில்லார் - நிற்க மாட்டார், உரை இடை - பேசும்பொழுது, ஆய்ந்து - (முன்னர் ஆராய்ந்தன்றி) ஆராய்ந்து, பேசார்—, ஊர்முனிவ - ஊரார் வெறுக்கத்தக்கவைகளை, செய்யார்—, அரசர் படை அளவும் - அரசர் படைத்தொகையையும், சொல்லார் - (பகைவர்க்குச்) சொல்லமாட்டார்.

(ப. பொ - ரை.) ஒருவர் பக்கத்தில் வரிசைப்படப் போகார், ஒருவருடைய நிழலை மிதித்து நில்லார், முன்னர் ஆராய்ந் தன்றிப் பேசும்போது ஆராய்ச்சிசெய்து பேசார், ஊரிலுள்ளோர் வெறுக்கத் தக்கவைகளைச் செய்யார், அரசரது படையளவைப் பகைவர்க்குச் சொல்லார், எப்போதும் ஒரு தன்மையராய் வாழ் தும் என்பார்.

(க - ரை.) ஒருவர் பக்கத்திற் போகும்போது ஒரு வரிசைப் படப்போதல், ஒருவர் நிழலை மிதித்து நிற்றல், பேசும்போது இடையில் நினைந்து பேசுதல், ஊரார் வெறுப்பன செய்தல், அரசர் படை யளவுரைத்தல் இவை ஆகாதன.

ஊர் : இடவாகு பெயர். இடை : ஏழனுருபு. முனிவ: பல வின்பால் வினையாலணையும் பெயர். (அ௫)

பயின்றனவென் றிகழத்தகாதன

அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும்
முழையுறை சீயமும் என்றிவை நான்கும்
இளைய எளிய பயின்றனவென் றெண்ணி
இகழின் இழுக்கந் தரும்.

(இ - ள்.) அளை உறை பாம்பும் - புற்றில் வாழும் பாம்பும், அரசும் - அரசரும், நெருப்பும் - தீயும், முழை உறை - குகையில் தங்குகின்ற, சீயமும் - சிங்கமும், என்ற இவை நான்கும் - என்ற இவை நான்கையும், இளைய (என்று) - இளையனவென்றும், எளிய (என்று) - எளியன வென்றும், பயின்றன (என்று)-பழகின வென் றும், எண்ணி - நினைத்து, இகழின் - இகழ்ந்தால், இழுக்கந் தரும்- துன்பத்தைத் தரும்.

(ப. பொ - ரை.) புற்றில் வாழ் அரவும் அரசனும் தீயும் குகையில் வாழ் சிங்கமும் என்கின்ற இந்நான்கினையும் இளைய வென்றும், எளியவென்றும், பழகியவென்றும் எண்ணி யிகழின், துன்பந் தருவனவாம்.

(க - ரை.) பாம்பு அரசன் நெருப்பு சிங்கம் இந்நான்குடன் நெருக்கமாயும் எச்சரிக்கையில்லாமலும் பழகலாகாது.

இளைய எளிய பயின்றன : வினையாலணையும் பெயர்கள். பயின்றன - பயில் : பகுதி. "வேந்த ருங்கொடுந் தீயும்வெவ் விடம்பொழி பகுவாய்ப் பாந்தளுஞ் சரி" என்ற பஞ்சதந்திரச் செய்யுள் இச்செய்யுட் பொருளது. "இளைதென்று பாம்பிகழ்வா ரில்" என்பது பழமொழி. (அச)

மன்னரின் மேம்பட்ட செய்யாமை

அறத்தோடு கல்யாணம் ஆள்வினை கூரை
இறப்பப் பெருகியக் கண்ணுந்—திறப்பட்டார்
மன்னரின் மேம்பட்ட செய்யற்க செய்யின்
மன்னிய செல்வங் கெடும்.

(இ - ள்.) திறப்பட்டார் - அறிவுடையோர், இறப்ப பெருகிய கண்ணும் - தம்மிடத்துச் செல்வம் மிகப் பெருகினாலும், அறத்தொடு - அறச்செயல்களையும், கலியாணம் - கலியாணங்களையும், ஆள்வினை - செய்யும் முயற்சிகளையும், கூரை - வீட்டையும், மன்னரின் - அரசர் செய்வதிலும், மேம்பட - அதிகமாக, செய்யற்க - செய்யாதொழிக, செய்யின் - செய்வாராயின், மன்னிய - பொருந்திய, செல்வம் கெடும் - செல்வம் கெட்டுவிடும்.

(ப. பொ - ரை.) அறிவுடையோர் தம்மாட்டுச் செல்வம் மிகப் பெருகியவிடத்தும், அறத்தினையுங் கல்யாணத்தினையும் முயற்சியையும் வீட்டினையும் அரசர் செய்யின் மேம்படச் செய்யாதொழிக; செய்வாராயின் தம்மாட்டுற்ற செல்வம் கெடும்.

(க - ரை.) எத்தகைய செல்வரும் அறம் மணம் முயற்சி வீடு இவ்வகையில் அரசரினும் மேம்படச் செய்யலாகாது.

ஆள்வினை : வினைத்தொகை. கூரை : சினையாகுபெயர். இறப்ப : உரிச்சொல். (அரு)

பெரியோரை உண்டது கேளாமை

உண்டது கேளார் குரவரை மிக்காரைக்
கண்டுழிக் கண்டால் மனந்திரியார் புல்லரையும்
உண்டது கேளார் விடல்.

(இ - ள்.) மனம் திரியார் - மனம் வேறுபடாதவர், குர வரை மிக்காரை-ஐங்குரவரையும் சான்றோரையும், கண்டால்—, கண்டுழி - கண்டவிடத்து, (அவர்களை நோக்கி), உண்டது கேளார் - நீங்கள் உண்டது யாதென வினவார், (ஆதலால்), புல்ல ரையும் - கீழோரையும், உண்டதுகேளார் விடல் - உண்டது யாதென்று வினவா தொழிக.

(ப. பொ - ரை) ஐங்குரவரையும் சான்றோரையும் கண் டால் மனம் வேறுபடாதவர்கள் அவரை நோக்கி, 'நீவிர் உண் டது யாது' என வினவார். ஆதலால் கீழோரையும் 'நீவிர் உண் டது யாது' என்று வினவா தொழிக.

(க - ரை.) ஐங்குரவரையும் பெரியோரையும் கண்டால், 'நீங்கள் உண்டது என்ன' என்று கேட்கலாகாது. ஆதலால் கீழோரையும் கேட்க வேண்டா. (அசு)

### கட்டிலிற் கிடந்தாருக்குச் செய்யத்தகாதன

கிடந்தாரைக் கால்கழுவார் பூப்பெய்யார் சாந்தும்
மறந்தானும் எஞ்ஞான்றும் பூசார் கிடந்தார்கண்
நில்லார்தாங் கட்டின் மிசை.

(இ - ள்.) எ ஞான்றும் - எப்பொழுதும், கட்டில்மிசை - கட்டில் மீது, கிடந்தாரை - படுத்திருப்பவரது, கால் கழுவார் - காலைக் கழுவார், பூபெய்யார் - அவருக்குப் பூப்புனையார், மறந் தானும் - அவருக்கு மறந்தாவது, சாந்தும் பூசார் - சந்தனம் பூசார், கிடந்தார்கண் - கிடந்தார் அருகில், நில்லார் - நிற்றலுஞ் செய்யார்.

(ப. பொ - ரை.) எப்போதுங் கட்டிலின்மீது படுத்திருப் பவரது காலைக்கழுவார், அவருக்குப் பூப்புனையார், அவருக்கு மறந்தாவது சந்தனம் பூசார், அருகில் நிற்றலுஞ் செய்யார்.

(க - ரை.) ஒருவர் கட்டிலின்மேற் படுத்திருந்தால் அப் போது அவருடைய காலைக் கழுவுதலும், அவருக்குப் பூச்சூடுத லும், சந்தனம் பூசுதலும், அவரருகில் நிற்றலும் ஆகா.

"கிடந்தாரைக் கால்கழுவார்" என்னும் முடிபை "முதலை ஐயுறின் சினையைக் கண்ணுறும், அதுமுதற் காயின் சினைக்கு ஐயாகும்" என்ற சூத்திரப்படி முடித்துக் கொள்க. கிடந்தாரைப் பூப்பெய்யார் என்பதில் கிடந்தாரை : நான்கனுருபு மயக்கம்.

"நில்லாராங் கட்டின்மிசை" என்று பாடம்கொண்டு கிடந்தவர்கள் கட்டிலின்மேலே மிதித்தேறி நில்லார் என்க. (௬எ)

### உதவிப் பயனுரையாமை முதலியன

உதவிப் பயனுரையார் உண்டி பழியார்
அறத்தோடு தானேற்ற நோன்பு வியவார்
திறத்துளி வாழ்துமேன் பார்.

(இ-ள்.) திறத்து-பெரியோருடைய ஒழுக்கத்தை, உள்ளி-நினைந்து, வாழ்தும் என்பர்-(அவரைப்போல) வாழக்கடவோம் என்று விரும்புவோர், உதவி பயன்-உதவியின் பயனை, உரையார்-தாமே எடுத்துச் சொல்லார், உண்டி-உணவை, பழியார்-இகழ்ந்துரையார், அறத்தொடு-அறச்செயலையும், தாம் நோற்ற நோன்பு-தாம்செய்த விரதத்தையும், வியவார்-தாமே புகழ்ந்துரையார்.

(ப. பொ-ரை.) தாமொருவருக்குச் செய்த நன்றியின் பயனைச் சொல்லார், தமக்கு ஒருவரிட்ட உணவை இகழ்ந்துரையார், தாம் செய்த அறத்தையும் விரதத்தையும் புகழ்ந்துரையார், பெரியோருடைய ஒழுக்கத்தினை நினைத்து அவ்வாறு வாழ்துமென்றெண்ணுவோர்.

(க-ரை.) தாம் பிறர்க்குச் செய்த உதவியைத் தாமே பாராட்டுதலும், பிறர் இட்ட உணவை யிகழ்தலும், தம் அறச்செய்கையையும் நோன்பையும் தாமே புகழ்தலும் தகா.

"தான்புரி தவத்தைக் கொடையினைப் புகழின்
தழைவுறு தஃகும்." —காசிகண்டம்

உதவிப்பயன் - உதவியினது பயன்: ஆறும் வேற்றுமைத் தொகை. உதவியினால் வரும் பயன் எனின், மூன்றும் வேற்றுமையுருபும் பயனும் உடன்தொக்கதொகை. நோற்ற; நோல்: பகுதி. உளி: உள்ளி என்பதன் தொகுத்தல். (௬அ)

### கிட்டாதவற்றை விரும்பாமை முதலியன

எய்தாத வேண்டார் இரங்கார் இகழ்ந்ததற்குக்
கைவாரா வந்த இடுக்கண் மனமழுங்கார்
மெய்யாய காட்சி யவர்.

(இ-ள்.) எய்தாத - தமக்குக் கிடைத்தற்கரியவற்றை, வேண்டார் - விரும்பார், இகழ்ந்ததற்கு - தம்மால் இகழப்

பட்டனவற்றிற்கு, இரங்கார் - வருந்தார், கைவாரா வந்த - அகற்றற்கரிய, இடுக்கண் - துன்பம் நேர்ந்தவிடத்து, மனம் அழுங்கார் - மனம் கலங்கார், மெய்யாய - உண்மையான, காட்சியவர் - அறிவினையுடையவர்.

(ப. போ - ரை.) தமக்குக் கிடைத்தற்கரியவற்றை விரும்பார், தம்மால் இழக்கப்பட்டனவற்றிற்கு வருந்தார், அகற்றற்கரிய இடுக்கண் உற்றுழி அதற்கு மனங்கலங்கார், உண்மையான அறிவினையுடையவர்.

(க - ரை.) கிடைத்தற்கரியவற்றை விரும்புதலும், இழந்த பொருட்கு வருந்துதலும், அரிய துன்பத்திற்கு மனங் கலங்குதலும் பயனற்ற செயல்களாம்.

கைவாரா: ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். கைவரு பகுதி - அகப்படு. கைவாரா இடுக்கண் - நன்மை பயவாத இடுக்கண். "கிட்டா தாயின் வெட்டென மற" 'கற்றூர்முற் றோன்று கழிவிரக்கம்" "கழிந்ததைத் தானிரங்கான் கைவாரா நச்சான்" எனப் பிறர் கூறுவதுங் காண்க. இடுக்கண்: இடுங்குகண் என்பதன் மரூஉ. "கையார வந்த இடுக்கண்" என்றும் பாடம். (௪௧)

### தலைப்பூ மோத்தல் முதலியன

தலைக்கிட்ட பூமேவார் மோந்தபூச் சூடார்
பசுக்கோடுப்பிற் பார்ப்பார்கைக் கொள்ளாரே யென்றும்
புலைக்கெச்சில் நீட்டார் விடல்.

(இ - ள்.) என்றும் - எப்பொழுதும், தலைக்கு இட்ட பூ - ஒருவர் தலையில் முடித்த பூவை, மேவார் - தாம் முடியார், மோந்த பூ - மோந்த பூவையும், சூடார் - அணியார், பார்ப்பார் - பிராமணர், பசு கொடுப்பின் - பசுவினைக் கொடுத்தால், கைக்கொள்ளார் - வாங்கார், புலைக்கு - புலையருக்கு, எச்சில் - எச்சிலை, நீட்டார் - கொடார், விடல் - (ஆதலால் இவைகளை) விடுக.

(ப. போ - ரை.) எப்போதும் ஒருவர் தலையில் முடித்த பூவைத் தாம் முடியார், ஒருவர் மோந்த பூவையும் சூடார், பிராமணர் பசுவினைக் கொடுத்தால் அதனை வாங்கார், புலையருக்கு எச்சிலைக்கொடார், (ஆதலால்) இவைகளை விடுக.

(க - ரை.) ஒருவர் தலையில் முடித்த பூவைத் தந்தலையில் முடித்தலும், மோந்த பூவைச் சூடுதலும், பிராமணரிடம் பசுக் கொடை பெறலும் கூடா; புலையருக்கு எச்சில் கொடுத்தலும் ஆகாது.

விடல்: உடன்பாட்டு அல் ஈற்று வியங்கோள். மேவார், சூடார், கொள்ளார், நீட்டார் இவற்றை முற்றெச்சமாகக்கொண்டு விடல் என்பதனோடு கூட்டி யுரைத்தலுமாம். 'தலைக்கிட்ட பூ மோவார்', என்ற பாடங்கொண்டு பிறர் தலைக்குச் சூடிய பூவை மோவார் என்க. (கூ0)

### காட்டுள் நடந்துகொள்ளும் முறை

மோட்டுடைப் போர்வையோ டேக்கழுத்துந் தாளிசைப்புங்
காட்டுளே யாலும் பழித்தார மாந்தம்மின்
மூத்த உளவாக லான்.

(இ - ள்.) காட்டுளேயானும் - காட்டினிடத்திலேனும், தம்மின் மூத்த - தம் மூத்தோர், உளவாகலான் - உளராயிருப்பாராயின், (அவர் முன்) மோட்டுடைப் போர்வையோடு - உடலின் மீது போர்த்தலும், ஏக்கழுத்தும் - இறுமாந்திருத்தலும், தாள் இசைப்பு - இரு தாளையும் சேர்த்திணைத் திருத்தலும், பழிதாரமாம் - பழியின் எல்லையாம்.

(ப. பொ . ரை.) காட்டினிடத்திலேனும் தம் மூத்தோர் உளரா யிருப்பாராயின், அவர்முன் உடலின்மீது போர்த்தலும், இறுமாந்திருத்தலும், இருதாளையுஞ் சேர்த்து இணைத்திருத்தலும் பழியின் எல்லையாம்.

(க - ரை.) காட்டிலும் தமக்கு மூத்தோர் எதிரில் உடலின் மீது போர்த்தலும் செருக்குற்றிருத்தலும் அட்டணைக்காலிட் டிருத்தலும் ஆகா.

பழித்தார் மரம் தம்மின், என்ற பாடங்கொண்டு மரங்கள் தம்மின் மூத்த உளவாகலான் பழித்தார் என்று முடிக்க. ஏக்கழுத்தம் - எடுத்த கழுத்து; அஃதாவது தலையெடுப்பு (இறுமாப்பு). தாரம் - எல்லை. மோடு - உயர்வு; இங்கு இடைக்குமே லுயர்ந்த உடலைக் குறித்தது. மோட்டுடைப் போர்வையோடு என்பதற்கு உடம்பின்மேல் உடையைப் போர்த்தலும் எனவுங் கூறலாம். மூத்த: பலவின்பால் வினையாலணையும் பெயர். (கூக)

### அந்தணர் வாய்ச்சொல் கேட்டல்

தலைஇய நற்கருமஞ் செய்யுங்கா லென்றும்
புலையர்வாய் நாள்கேட்டுச் செய்யார்—தொலைவில்லா
அந்தணர்வாய்ச் சொற்கேட்டுச் செய்க அவர்வாய்ச்சொல்
என்றும் பிழைப்ப தில.

(இ - ள்.) தலைஇய - மேலான, நல் கருமம் - நற்செயல் களை, செய்யுங்கால் - செய்யுமிடத்து, என்றும் - எப்போதும், புலையர்வாய் - புலையரிடத்து, நாள் கேட்டு செய்யார் - நாள் கேட்டுச் செய்யார், தொலைவு - கேடு, இல்லா - இல்லாத, அந் தணர்வாய் - அந்தணரிடத்து, நாள்கேட்டு செய்க - நாள்கேட்டே நற்கருமம் செய்க, அவர் வாய் சொல் - அவர் வாய்மொழி, என் றும்—, பிழைப்பது - பிழைபடுவன, இல - அல்ல.

(ப. போ - ரை.) அறிவுடையோர் மேலான நற்கருமங் களைச் செய்யுமிடத்து எப்போதும் புலையரிடத்து நாட் கேட்டுச் செய்யார். கேடில்லாத அந்தணரிடத்து நாட் கேட்டே நற் கருமஞ் செய்க; அவர் வாய்ச்சொல் என்றும் பிழைபடுவனவல்ல வாம் ஆதலால்.

(க - ரை.) நற்கருமம் செய்பவர் அந்தணர்வாய் நாட் கேட்டுச் செய்தலே நன்மையானது.

அந்தணர்: காரண விடுகுறிப்பெயர். புலையர் - வள்ளுவர்; சோதிடங்கூறுங் கீழ்வகுப்பார் என்பர். பிழைப்பதில என்பதைச் சொல் என்ற பால்பகா அஃறிணைப் பெயரின் பயனிலையாகக் கொள்க. சொல்: சாதி யொருமை. 'நிலையியைந்த நற்கருமம்' என்றும் பாடம். (கஉ)

**மன்றத்து நின்றுஞற்றல் முதலிய ஆகாச் செயல்**

மன்றத்து நின்றுஞற்றூர் மாசு திமிர்ந்தியங்கார்
என்றுங் கடுஞ்சொ லுரையார், இருவராய்
நின்றுழியுஞ் செல்லார் விடல்.

(இ - ள்.) மன்றத்து நின்று - சான்றோர் அவையிலிருந்து, உஞற்றார் - அங்கக் குறும்பு செய்யார், மாசு - அழுக்கை, திமிர்ந்து - உதிர்த்துக்கொண்டு, இயங்கார் - செல்லார், என்றும் - எப்பொழுதும், கடு சொல் உரையார் - கடுமையான சொல்லைச் சொல்லார், இருவராய் நின்ற உழியும் - இரண்டுபேராய் நின்று பேசுமிடத்தும், செல்லார் - போகார், விடல் - (ஆதலால் இவற்றை) விட்டுவிடுக.

(ப. போ - ரை.) அறிஞர், சான்றோர் அவைக்களத்து யாதொரு அங்க சேட்டையுஞ் செய்யார், மாசுள்ளவற்றைத் திமிர்ந்துகொண்டு நடவார், எக்காலத்தும் கடுஞ்சொற்கள் உரை யார், இருவராயிருந்து பேசுமிடத்தும் போகார், ஆதலால் இவற்றை ஒழிக.

(க - ரை.) பெரியோர் அவையில் யாதொரு அங்க சேட்டை யுஞ் செய்தலாகாது; நடக்கும்பொழுது அழுக்கைத் தேய்த்து நடக்கலாகாது; கடுஞ்சொற் கூறலாகாது; இருவராகவிருந்து பேசுமிடத்திற் போதலாகாது.

'சொல்லார்விடல்' என்ற பாடத்துக்கு இருவராகச் சிலர் வேறே நின்றுழியும் சொல்லாதொழிக என்றுரைக்க. திமிர்ந்து - தேய்த்து. உஞற்றூர் - உஞற்று + ஆ + ஆர் என்று பிரித் துரைக்க. (கஙு)

ஐயமில் காட்சியார் செயல்

கைசுட்டிக் கட்டுரையார் கான்மே லெழுத்திடார்
மெய்சுட்டி இல்லாரை உள்ளாரோ டொப்புரையார்
கையிற் குரவர் கொடுப்ப இருந்தேலார்
ஐயமில் காட்சி யவர்.

(இ - ள்.) ஐயம் இல் - ஐயமற்ற, காட்சியவர் - அறிவுடை யவர், கைசுட்டி - பெரியோர்முன் கையால் ஒன்றைக் குறித்துக் காட்டி, கட்டுரையார் - பேசார், கான்மேல் - காலின்மேல், எழுத்து இடார் - எழுதார், இல்லாரை - கல்வி முதலியவை யில்லாதவர்களை, உள்ளாரோடு - அவற்றை யுடையாரோடு, மெய் சுட்டி - மெய்யே என்று சாதித்து, ஒப்பு உரையார் - ஒப்புமை கூறார், குரவர் - பெரியோர், கொடுப்ப - கொடுப்பவற்றை, இருந்து - உட்கார்ந்துகொண்டு, கையில் ஏலார் - கையில் வாங்கார்.

(ப. பொ - ரை.) ஐயமற்ற அறிவுடையோர் தங்குரவர் முன் கையைச் சுட்டிக்காட்டிப் பேசார், காலின்மேல் எழுதார், கல்வி முதலியவற்றை யுடையாரோடு அவற்றை இல்லாரை மெய் யெனச் சாதித்து ஒப்பிட்டுக் கூறார், குரவர் கொடுப்பதை உட்கார்ந்திருந்து ஏற்கார்.

(க - ரை.) பெரியோர்க்குமுன் கையைச் சுட்டிக்காட்டிப் பேசுதலும், காலால் எழுதுதலும், அறிவொழுக்கங்கள் இல்லாரை அவற்றையுடையார்க்கு ஒப்பாகச் சொல்லிச் சாதித்தலும், பெரி யோர் கொடுப்பதை இருந்து வாங்குவதும் தகாத செயல்கள்.

'காலாலெழுத்திடார்' என்ற பாடங்கொள்ளின், காலால் எழுத்திட்டுக் காட்டார் என்க. காட்சி - அறிவு. சுட்டுதல் - குறித்துக்காட்டல். கொடுப்ப : பலவின்பால் வினையாலணையும் பெயர்; கொடுக்க என்ற பொருளாயின் செயவெனெச்சம். ஏலார் - ஏல் : பகுதி. (கச)

### பொன்போற் போற்றத்தக்கவை

தன்னுடம்பு தாரம் அடைக்கலம் தன்னுயிர்க்கென்(று)
உன்னித்து வைத்த பொருளோ டிவைநான்கும்
பொன்னினைப் போல்போற்றிக் காத்துய்க்க உய்க்காக்கால்
மன்னிய ஏதந் தரும்.

(இ - ள்.) தன் உடம்பு - தன்னுடைய உடம்பும், தாரம் - மனைவியும், அடைக்கலம் - அடைக்கலமாக வைத்த பொருளும், தன் உயிர்க்கு என்று - தன் உயிர்க்கு உதவியாகுமென்று, உன்னித்து - நினைத்து, வைத்த பொருளோடு - சேர்த்துவைத்த பொருளும், இவைநான்கும் - இந்த நான்கையும், பொன்னினைப் போல் - பொன்னைக் காப்பதுபோல, போற்றி - காத்து, உய்க்க - ஆதரித்துப் பாதுகாத்து ஒழுக, உய்க்காக்கால் - அவ்விதம் பாது காத்து ஒழுகாவிடின், மன்னிய - மிகுந்த, ஏதம் - துன்பத்தை, தரும் - கொடுக்கும்.

(ப. பொ - ரை.) தன் உடலும், மனைவியும், தன்னிடத்தில் அடைக்கலமாக ஒருவன் வைத்த பொருளும், தன்னுயிர்க்கு உதவியாக எண்ணிச் சேர்த்துவைத்த பொருளும் ஆகிய இந் நான்கினையும் பொன்னைப்போலக் காத்தொழுக. அவ்வாறு ஒழுகாவிடத்து மிகுந்த துன்பத்தைத் தரும்.

(க - ரை.) தன்னுடைய மனைவி, அடைக்கலப் பொருள், தான் சேர்த்துவைத்த பொருள் இவற்றை அருமையாகப் பாது காக்க வேண்டும்.

"எண்ணி நினைத்த பொருளோடு" என்றும், 'எண்ணித்து வைத்த பொருளோடு' என்றும், 'அன்றே விழுமந் தரும்' என் றும் பாடபேதம் உண்டு. அடைக்கலம் - அடை + கலம், அடை தலையுடைய பொருள். உய்க்காக்கால் : வினையெச்சம். இது 'உய்யாக்கால்' என்றும் பாடம்.
(கடு)

### எறும்பு முதலியபோற் கருமஞ்செய்தல்

நந்தெறும்பு தூக்கணம் புள்காக்கை யென்றிவைபோல்
தங்கருமம் நல்ல கடைப்பிடித்துத் தங்கருமம்
அப்பெற்றி யாக முயல்பவர்க் காசாரம்
எப்பெற்றி யானும் படும்.

(இ - ள்.) நந்து எறும்பு - ஆக்கமுள்ள எறும்பும், தூக்கணம் புள் - தூக்கணங்குருவியும், காக்கை - காக்கையும், என்ற

இவைபோல் - என்று சொல்லப்பட்ட இவைகளின் செய்கை போல, நல்ல - நல்லனவாகிய, தம் கருமம் - தங் கருமத்தை, கடைபிடித்து - சோராமல் கைக்கொண்டு, தம் கருமம் - தங் கருமத்தை, அ பெற்றி ஆக - அம்மூன்றின் தன்மைபோல், முயல் பவர்க்கு - செய்பவர்க்கு, ஆசாரம் - (இல்வாழ்க்கையின்) ஒழுக் கம், எ பெற்றியானும் - எத்தன்மையானும், படும் - சிறப்புறும்.

(ப. பொ - ரை.) ஆக்கமுள்ள எறும்பும், தூக்கணம் பறவையும், காக்கையும் என்று சொல்லப்பட்ட இவைகளின் செய்கைபோல நல்லனவாகிய தங் கருமத்தைச் சோராமற் கொண்டு, கிடையாத காலத்திற்கு உதவக்கிடைத்த காலத்தில் உணவிற்குரியவற்றைச் சேர்த்தலும், குளிர்காற்று முதலிய வற்ருல் இடையூறு உருத வகையாக இல்லம் இயற்றிக்கொள்ளு தலும், சுற்றத்தாரை விளித்துண்கையுமாகிய இக் கருமங்களைச் செய்பவர்க்கு இல்வாழ்க்கையின் ஒழுக்கம் எத்தன்மையானுஞ் சிறப்புறும்.

(க - ரை.) எறும்பு, தூக்கணங் குருவி, காக்கை இவற்றின் செய்கையைக் கடைப்பிடித்தவர்க்கு இல்வாழ்க்கையின் ஒழுக்கம் எவ்விதத்திலும் சிறக்கும்.

நந்தல் - பெருகுதல். நந்து எறும்பு - ஆக்கம் பெருகிய எறும்பு. இவற்றிற்கு ஆக்கம் தத்தங் கருமத்தை நன்ருகச் செய் தல். நந்துகின்ற எறும்பு என்ற முறையிற் கொள்ளின் வினைத் தொகையாம்.

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள"—திருக்குறள். (கூசு)

### பெரியோர்முன் ஒன்றைச் சொல்லும் முறை

தொழுதானும் வாய்புதைத் தானுமஃ தன்றிப்
பெரியார்முன் யாது முரையார் பழியவர்
கண்ணுளே நோக்கி யுரை.

(இ - ள்.) பெரியார் முன் - (அறிஞர்) பெரியார் முன்பு, யாதும் - ஒன்று உரைக்கவேண்டின், தொழுதானும் - வணங்கி நின்றேனும், வாய் புதைத்தானும் - வாய்புதைத்து நின்றேனும், அஃது அன்றி - உரைப்பரேயன்றி, உரையார் - வேறு வகையிற் சொல்லார், (ஆதலால்) அவர்கண் - நீ அவர்முன், பழி உள்ளே நோக்கி - குற்றம் யாதும் உளவாகாமல் ஆராய்ந்து, உரை - உரைப்பாயாக.

(ப. பொ - ரை.) அறிஞர், பெரியார் முன் யாதேனும் ஒன்று உரைக்கவேண்டின், வணங்கி நின்றேனும் வாய்புதைத்து நின்றேனும் உரைப்பபேயன்றி வேறு வகையின் உரையார்; ஆதலால் நீ அவர்முன் குற்றம் யாதும் உளவாகாமல் ஆராய்ந்து உரைப்பாயாக.

(க - ரை) பெரியோரிடத்திலொன்றைப் பேசும் பொழுது வணங்கி நின்றாவது வாய்பொத்தி நின்றாவது சொல்வதன்றி வேறு விதமாகச் செல்லலாகாது. அவர்முன் குற்றம் யாதும் உண்டாகாமல் ஆராய்ந்து சொல்க.

'வழியவர்' என்றும் பாடம். உரை என்பதற்கு நீ தோன்றா எழுவாய். (௬எ)

### புகத்தகா இடங்கள்

சூதர் கழகம் அரவம் அருக்களம்
பேதைகள் அல்லார் புகாஅர் புகுபவேல்
ஏதம் பலவுந் தரும்.

(இ - ள்.) சூதர் கழகம் - சூதாடும் இடத்திலும், அரவம் அருகளம் - ஆரவாரம் நீங்காத இடத்திலும், பேதைகள் அல்லார் - மூடரல்லாதவர், புகாஅர் - நுழையார், புகுபவேல் - நுழைவாரானல், ஏதம் பலவும் தரும் - பல துன்பங்களையும் உண்டாக்கும்.

(ப. பொ - ரை.) சூதாடுமிடத்தும், ஆரவாரம் நீங்காத இடத்தும், அறியாமையை யுடையரல்லார் புகார்; புகுவராயின் பல துன்பங்களும் உளவாம்.

(க - ரை.) சூதாடுமிடத்திலும் ஆரவார மிகுந்த இடத்திலும் அறிவுடையோர் செல்லார்.

"அரவ மமர்களம்"

என்றும் பாடம்.

"சூதும் வாதும் வேதனை செய்யும்."

ஆதலாலும்,

"கள்ளுண விரும்புதல் கழகஞ் சேர்தல்மால்
உள்ளுறப் பிறர்மனை நயத்தல் ஒன்னலார்க்(கு)
எள்ளரு ஞாட்பினுள் இரியல் செய்திடல்
வள்ளியோய் அறநெறி வழுக்கும் என்பவே."

"ஐயநீ யாடுதற் கமைந்த சூதுமற்
றெய்துநல் குரவினுக் கியைந்த தூதுவெம்
பொய்யினுக் கருந்துணை புன்மைக் கீன்றதாய்
மெய்யினுக் குறுபகை என்பர் மேலையோர்."

என்றும் ஆன்றோர் கூறுமாற்றால், சூதர் கழகம் புகுதல் ஏதந்தரு மென்றார். (கஅ)

### நடுக்கற்ற காட்சியார் செய்யாதன

உரற்களத்து மட்டிலும் பெண்டிர்கள் மேலும்
நடுக்கற்ற காட்சியார் நோக்கார் எடுத்திசையார்
இல்லம் புகாஅர் விடல்.

(இ - ள்.) நடுக்கு அற்ற காட்சியார் - சோர்வற்ற அறிவுடையவர், உரல் களத்தும் - ஆரவாரஞ் செய்யுமிடத்தும், அட்டிலும் - மடைப்பள்ளியிலும், பெண்டிர்கள் மேலும் - பெண்கள் உறையிடத்தும், நோக்கார் —, எடுத்து இசையார் - எடுத்துரையார், இல்லம் புகார் - இல்லத்துட் புகார்; ஆதலால் நீ விடுக..

(ப. பொ - ரை.) சோர்வற்ற அறிவையுடையவர் ஆரவாரஞ் செய்யுமிடத்தும் மடைப்பள்ளியிலும் பெண்டிர்கள் உறையிடத்தும் நோக்கார், எடுத்துரையார், இல்லத்துட் புகார்; ஆதலால் நீ விடுக.

(க - ரை) ஆரவாரஞ் செய்யுமிடத்தைப் பார்த்தலும், மடைப் பள்ளியில் எடுத்துரைத்தலும், பெண்டிர்கள் உறைகின்ற இடத்துப் புகுதலும் ஆகா.

"எடுத்திசையார் இல்லம் புகாஅ விடல்" என்பதற்கு வாருமென்று அன்பாக அழையாத மனையிடத்தும் புகுதலொழிக என்றுரைத்தலுமாம்.

அட்டில் - அடு + இல். நடுக்கு : நடுங்கு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். (கக)

### ஆசாரத்தினின்றும் விலகியவர்

அறியாத தேயத்தான் ஆதுலன் மூத்தான்
இளையான் உயிரிழந்தான் அஞ்சினன் உண்பான்
அரசன் தொழில்தலை வைத்தான் மணாளனென்(று)
ஒன்பதின்மர் கண்டீர் உரைக்குங்கால் மெய்யான
ஆசாரம் வீடுபெற் றார்.

(இ - ள்.) அறியாத தேயத்தான் - அறியாத நாட்டவனும், ஆதுலன் - வறியவனும், மூத்தான் - ஆண்டில் முதிர்ந்தவனும், இளையான் - சிறுவனும், உயிர் இழந்தான் - உயிரிழந்தவனும், அஞ்சினான் - அஞ்சினவனும், உண்பான் - உண்பவனும், அரசர் தொழில் - அரசரது கட்டளையை, தலைவைத்தான் - தாங்கின வனும், மணாளன் - மணமகனும், என்ற ஒன்பதின்மர் - என்ற இந்த ஒன்பது பேரும், உரைக்குங்கால் - சொல்லுமிடத்து, ஆற்ற வும் - மிகுதியும், ஆசாரம் - ஒழுக்கத்தினின்றும், வீடு பெற்றார் - நீங்குதலை யடைந்தவராவர்.

(ப. போ - ரை.) அறியாத தேசத்தான், வறியோன், மூத் தோன், சிறுவன், உயிரிழந்தவன், பயமுற்றவன், உண்பவன், அரசர் தொழிலில் தலைவைத்தவன், மணமகன் என்னும் இவ்வொன்பதின்மரும் உண்மையா யுரைக்குமிடத்து ஆசார மிலிகளாவர்.

(க - ரை.) அறியாததேசத்தான் முதலிய ஒன்பதின்மருக் கும் ஆசாரக் கட்டுப்பாடில்லை.

கண்டீர் : முன்னிலையசை. வீடு - விடுதல்: முதனிலை திரிந்த தொழிற்பெயர். 'உரைக்குங்கால் ஆற்றவும்' 'உலகத்தில் ஆற்றவும்' என்றும் பாடம். ஆசாரம் - ஒழுக்கம். மணவாளன் : மணாளன் என மரீ இயது. ஒன்பதின்மர் என்பதில் முற்றும்மை தொக்கது. இங்ஙனங் கூறியது நூல்செய்வோர் மரபும் நூலின் முறையுமா மென்றறிக. (க00)

ஆசாரக்கோவை

மூலமும் விருத்தியுரையும்

முற்றிற்று.

14273
031:1B1
N4;1
UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

UNIVER… MADURAI

# செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| அட்டமியும் | ௩௯ | கால்வாய்த் | ௫௦ |
| அந்திப்பொழுது | ௨௯ | கிடச்குங்காற் | ௨௭ |
| அரசன் உவாத்தியான் | ௧௬ | கிடந்தாரைக் | ௬௮ |
| அளையுறை | ௬௬ | கிடந்துண்ணார் | ௨௧ |
| அறத்தொடு | ௬௭ | குரவருரை | ௧௭ |
| அறியாத | ௭௭ | கைசுட்டிக் | ௭௩ |
| இருகையால் | ௨௫ | கைப்பன | ௨௩ |
| இருதேவர் | ௨௭ | சுடரிடைப் | ௩௧ |
| இழியாமை | ௨௪ | சூதர்கழகம் | ௭௬ |
| இறைவர்முன் | ௫௭ | தக்கணே | ௭ |
| ஈன்றாள் | ௫௨ | தமக்குற்ற | ௫௪ |
| உச்சியம் | ௩௬ | தமக்கென் | ௩௩ |
| உடம்புநன் | ௪௮ | தம்மேனி | ௬௧ |
| உடுக்கை இகவார் | ௫௯ | தலைஇய | ௭௧ |
| உடுத்தலால் | ௧௨ | தலைக்கிட்ட | ௭௦ |
| உடைநடை | ௪௧ | தலையுரைத்த | ௧௩ |
| உண்டது | ௬௭ | தன்னுடம்பு | ௭௪ |
| உண்ணுங்கா | ௧௯ | தீண்டாநாள் | ௩௫ |
| உதவிப்பயன் | ௬௯ | துடைப்பந் | ௩௮ |
| உமிவும் | ௫௬ | துறந்தாரைப் | ௫௧ |
| உயர்ந்ததின் | ௩௪ | துன்பத்துள் | ௬௨ |
| உரற்களத்து | ௭௭ | தெறியொடு | ௪௩ |
| எச்சிலார்தீ | ௯ | தெறுவந்துந் | ௬௩ |
| எச்சிலார்நோ | ௯ | தேவர்வழி | ௧௨ |
| எச்சில்பலவு | ௧௦ | தொழுதானும் | ௭௫ |
| எய்தாத | ௬௯ | நகையொடு | ௫௮ |
| எழுச்சிக்கண் | ௪௮ | நடைவரவு | ௩௦ |
| ஐம்பூதம் | ௧௫ | நந்தெறும்பு | ௭௪ |
| ஒழிந்ததிசையும் | ௨௧ | நன்றியறிதல் | ௫ |
| கடைவிலக்கிற் | ௫௩ | நால்வகை | ௧௦ |
| கண்ணெச்சில் | ௩௪ | நாழிமணே | ௩௭ |
| கல்லியாணர் | ௪௦ | நாளந்தி | ௧௧ |
| கறுத்த | ௪௫ | நிரல்படச் | ௬௫ |
| காட்டுக்களைந்து | ௩௮ | நின்றக்கால் | ௫௯ |
| காலினீர் | ௧௮ | நீராடிக் | ௧௮ |

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| நீராடும் | ௧௫ | பொய்குறளை | ௩௨ |
| நீருள் | ௧௪ | மன்றத்து | ௭௨ |
| பகற்றெற்கு | ௨௯ | மின்னொளியு | ௪௨ |
| படிறும் | ௪௩ | முதியவரைப் | ௨௩ |
| பத்துத்திசையு | ௨௯ | மூளிபுல்லுங் | ௪௬ |
| பழியா | ௪௧ | முறுவல்இனிதுரை | ௪௪ |
| பார்ப்பார் | ௫௧ | முனியார் | ௫௫ |
| பாழ்மனையுந் | ௪௭ | முன்றுவ்வார் | ௨௨ |
| பிறப்பு | ௬ | மோட்டுடைப் | ௭௧ |
| பிறரொடு | ௬௨ | யாதொன்று | ௪௯ |
| பிறர்மனை | ௩௨ | வண்ணமகளி | ௬௫ |
| புழைக்கடைப்பு | ௬௪ | வான்முறை | ௫0 |
| புற்பைங்கூழ் | ௨௮ | விருந்தினர் | ௨0 |
| பெரியா | ௫௫ | விரைந்துரையார் | ௬0 |
| பெரியார்மனை | ௫௭ | வைகறை | ௭ |

# அருஞ்சொல் அகரவரிசை

அஃகுதல் - குறைதல்
அட்டில் - மடைப்பள்ளி
அணங்கு - தெய்வம்
அரவம் - ஆரவாரம்
அல்கு அந்தி - மாலைப்பொழுது
அழுக்கு - பொறாமை
அழுங்குதல் - கலங்குதல்
அளை - புற்று
ஆசாரம் - ஒழுக்கம்
ஆதுலன் - வறியவன்
ஆள்வினை - முயற்சி
ஆன்நிலை - பசுக்கள் நிற்குமிடம்
இகந்து - கடந்து
இடுக்கண் - துன்பம்
இணைவிழைச்சு - புணர்ச்சி
இலங்குநூல் - மறைநூல்
இல்லார் - வறியவர்
இருதேவர் நாள் - சிவன், திருமால் நாளாகிய ஆதிரையும் ஓணமும்
இழுக்கம் - துன்பம்
இறந்து - நெறிகடந்து
உகுதல் - சிந்துதல்
உஞற்றுதல் - குறும்புசெய்தல்
உமிதல் - உமிழல்
உய்த்து - செலுத்தி
உவா - பூரணை, அமாவாசை
உளர்தல் - தடவுதல்
உளி - உள்ளி, நினைந்து
உறுகண் - துன்பம்
உறுத்துதல் - செலுத்துதல்
உறைதல் - தங்குதல்
உன்னித்து - நினைத்து
எள்ளி - ஏளனம்பண்ணி
ஏக்கழுத்தம் - இறுமாப்பு
ஏதம் - துன்பம்
ஒட்டார் - பொருந்தார்
ஒப்புரவு - உலகநடை
ஒழுக்கு - நெறி
ஒள்ளியம் - அறிவுடையோம்
கசிவு - அன்பு
கட்டுரை - உறுதிமொழி
கண்வளர்தல் - தூங்குதல்
கதம் - வேகம்
கருங்கலம் - கரிச்சட்டி
கறுத்த - கோபித்த
காட்சி - அறிவு
காயார் - வெகுளார்
கான்றல் - வாந்திபண்ணல்
கிழமை - உரிமை
குரவர் - பெரியோர்
குறளை - கோட்சொல்லல்
கோடி - புத்தாடை
கோட்டி - அவை, சபை
சிறை - பறவை
சீயம் - சிங்கம்
சுடலை - சுடுகாடு
செகுத்தல் - அழித்தல்
செத்தல் - பழைமை
செவ்வி - தக்கசமயம்
செறல் - கோபித்தல்
சொறிதல் - பிறாண்டுதல்
சோரல் - ஒழுக்கல்
சோர்வு - தவறுதல்
தந்திரம் - நூன்முறை
தம்முன் - தமையன்
திட்பம் - உறுதி
திமிர்தல் - பூசுதல்
திளைத்தல் - அழுங்குதல்
துய்க்க - அருந்துக
துவைத்த - சேர்த்துவைத்த
துனியார் - கலகங்கொள்ளார்
தேறுவருதல் - வெகுள்தல்
தேசு - விளக்கம்

தேர்தல் - ஆராய்தல்
தொலைவு - கேடு
நடுக்கு - சோர்வு
நந்தல் - பெருகுதல்
நந்துதல் - அவிதல்
நல்குரவு - வறுமை
நாள் அந்தி - விடியற்காலை
நான்மறையாளர் - அந்தணர்
நிரயம் - நரகம்
நிரல் - வரிசை
நிலத்துளக்கு - பூமி யதிர்ச்சி
நிறையுவா - பூரணை
பகற்கிழவோன் - ஞாயிறு
படிறு - வஞ்சனைச்சொல்
பட்டிஉரை - நாவடக்கமில்லாத சொல்
பரந்து - விரித்து
பள்ளி - படுக்குமிடம்
பாரித்து - விரிவாக்கி
பிழையாத - தவறாத
புலர்தல் - காய்தல்
புலை - கீழ்மகன்
புழைக்கடை - வீட்டின் பின்புறம்
பூசல் - துடைத்தல்
பைங்கூழ் - பயிருள்ள நிலம்
போச்சாவார் - மறவர்
மடுத்து - அடைந்து
மண்டலம் - வட்டம்
மறையுவா - அமாவாசை
மன்றம் - சான்றோர் அவை
மாசுணி - அழுக்காடை
மீக்கூற்றம் - மேலான சொல்
மீக்கோள் - மேற்பார்வை
முகட்டுவழி - வாயிற்படி
முதுமரம் - முற்றிய மரம்
முளிபுல் - முற்றிய புல்
மேதை - அறிவு
வடு - தழும்பு, பழி
வண்ணம் - அழகு
வளர்தல் தூங்குதல்
வளி - காற்று
வாலாமை - தூய்மையின்மை
விகிர்தம் - ஒருவன் பேச்சு செயல் முதலியவற்றை அங்ஙனமே இகழ்ந்து செய்து காட்டல்
விழுமம் - சிறப்பு
விழைச்சு - விருப்பம்
வீழ்மீன் - எரிநாள்
வீளை - கனைத்தல் முதலியன செய்தல்
வெகுளல் - சீறுதல்
வெண்பலி - சாம்பல்
வெளவல் - கைக்கொள்ளல்

UNIVERSITY EXTENSION LIBRARY
22 FEB 1961